

கல்கி
KALKI
15.11.1959
30 காசு



இந்த பச்சிளம் பருவத்திலே...

அன்பிலே பிறந்து அன்பிலே வளரும் உங்கள் மழலைச் செல்வத்தின் இன்பமெல்லாம் உங்களிடத்தான் பொறுத்திருக்கிறது. அவனுக்கு எல்லையில்லா ஆனந்த மளிக்க குழந்தைகளுக்கான ஜான்ஸனின் தயாரிப்புகள் இணையற்றவை. ஏனெனில் மூன்று தலைமுறைகள் அனுபவத்தை அடிப்படையாகக்கொண்டே அவை தயாரிக்கப்படுகின்றன.

ஜான்ஸனின் பேபி சோப்: குழந்தையை குளிப்பாட்டுவதற்கு. **ஜான்ஸனின் பேபி பவுடர்:** குளிப்பாட்டிய பிறகும் அவன் ஜெட்டியை மாற்றும் பொழுதும் தூவுவதற்கு. இந்த மிக்க மென்மையான பவுடர் அவனுக்கு சுகமும் இதமும் அளிக்கும்.

இன்னும், அவனுக்கு உபயோகிக்க ஜான்ஸனின் பேபி ஆயிலும் க்ரீமும் உள்ளன.

ஜான்ஸன் அண்டு ஜான்ஸன்

60 ஆண்டுகளுக்கு மேலாக குழந்தைகளுக்கான சாதனங்களை தயாரித்து வருபவர்கள்



ஜான்ஸன் அண்டு ஜான்ஸன் ஆப் இந்தியா பிரைவேட் லிட்.

கல்கி
பொருளடக்கம்

நவம்பர் 15, 1959

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள் ; சம்பவங்களும் கற்பனையே.



மலர் 19 | இதழ் 16

தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

விகாரி௵ ஐப்பசி 29௨.

பிரதமர் நேருஜியின் பிறந்த நாள்

பிரதமரின் பிறந்த நாள் என்றால் தேசமெங்கிலும் தனியானதோர் உற்சாகம் காணப்படும். பிரதமரே தமது பிறந்த நாள் கொண்டாட்டத்தில் மிக உற்சாகமாகக் கலந்து கொண்டு யாவருக்கும் மகிழ்ச்சியூட்டுவார். ஆனால் இந்த வருஷம் அத்தகைய உற்சாகமோ, குதூகலமோ அவரிடமும் இல்லை; மக்களிடமும் இல்லை. இன்று பாரத நாட்டிலே பெருங் கவலையில் ஆழ்ந்துள்ள மனிதர் யார் என்றால் பிரதமர் நேருஜிதான்.

அவருடைய கொள்கைகள் உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் பலத்த எதிர்ப்புக்களுக்கு இடமாகி யிருக்கின்றன. போதாததற்கு, சீனர்கள் இந்திய எல்லைக்குள் புகுந்திருப்பதும், இந்தியத் துருப்புக்களைத் தாக்குவதும் தேச மக்களுக்குப் பெரும் ஆத்திரத்தை உண்டாக்கியிருக்கின்றன.

இந்த எதிர்ப்பைச் சமாளிப்பதற்காக ராணுவ தளவாடங்களையும்] யுத்த விமானங்களையும் வாங்க பிரிட்டனிலும், அமெரிக்காவிலும், பிரான்ஸிலும் முயற்சிகள் எடுத்து வருவது வெளி நாட்டாருக்குக் கேலியும் பரிகாசமுமாக இருக்கிறது என்பது சமீபத்தில் பத்திரிகைகளில் வெளியாகும் செய்திகளிலிருந்து தெரிய வருகிறது.

நமது நடுநிலைமைக் கொள்கை, பலவீனத்தின் அடிப்படையில் எழுந்ததுதான் என்று வெளிநாட்டினர் எண்ணி ஏளனம் செய்யும் அளவுக்கு வந்துவிட்டது பற்றிப் பிரதமர் நேருவின் உள்ளம் எவ்வளவு நொந்திருக்கும் என்பதை யாரும் ஊகிக்கலாம்.

சீனர்கள் இமயமலை புச்சிகளில் ஒளிந்திருந்து, கீழேயுள்ள இந்தியத் துருப்புக்களைத் தாக்குகிறார்கள். மனித சஞ்சாரமற்ற பிரதேசங்களில் (18,000 அடி உயரத்தில்) துருப்புக்களை அனுப்பிப் போர் நடத்துவது என்பது சிரமசாத்தியமான காரியம். இந்தப் பிரத்யட்ச நிலைமையுணர்ந்து நேருஜி செய்வதறியாது கையைப் பிசைந்து கொண்டிருக்கையில், உள்நாட்டில் பிரஜா சோஷலிஸ்டு கட்சிகள் போன்ற அரசியல் கட்சிகள் 'சீனர்கள்மீது ராணுவ நடவடிக்கை எடு' என்று கிளர்ச்சி செய்கிறார்கள்; ஆர்ப்பாட்டங்கள் நிகழ்த்துகிறார்கள்! இந்த நிலைமையில் பிரதமர் நேருவின் எழுபதாவது பிறந்த நாள் விழா நடைபெறுகிறது.

நேருஜி இதுகாறும் கடைப்பிடித்து வந்த நடுநிலைமைக் கொள்கை தனிப்பட்ட முறையில் மிக நல்ல நியாயமான கொள்கை. ஆனால் இப்போது அந்தக் கொள்கைக்கு ஆபத்து நேர்ந்துள்ளது.

பிரதமர் நேரு இத்தனை நாட்களும், கம்யூனிஸ்ட் சீனாவுடன் நட்புறவு கொண்டாடி வந்தார். அளவுக்கு மீறி 'பாய் பாய்' என்று கைகோத்துக் குலாவி வந்தார். பஞ்சசீலக் கொள்கைகளில் நம்பிக்கையுள்ளவர்கள் போல் அவர்களும் கையெழுத்திட்டார்கள்.

அப்போதே அமெரிக்கா, பிரிட்டன் போன்ற வல்லரசுகள், 'கம்யூனிஸ்டுகளை நம்பாதீர்கள்' என்று எச்சரிக்கை செய்தார்கள். மனத்திறல் கூடத் தீண்ட யோக்கியதையற்றவர்கள் என்று சொல்லி வந்தார்கள். நம்பிக்கைத் துரோகம் செய்பவர்கள் என்று சொல்லி வந்தார்கள். அவர்கள் எச்சரிக்கைகளையெல்லாம் புறக்கணித்துச் சீனாவுடன் உறவு கொண்டாடியதற்குப் பலன் நம் தலையிலேயே கொள்ளி வைக்க வந்துவிட்டார்கள்.

இந்திய எல்லையில் பெரும் பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். நமது காவல் படைகளைத் தாக்கி வருகிறார்கள். இவையெல்லாம் சிநேகம் கொண்டாடும் நாடு நடந்து கொள்ளுகிற முறைகளா?

இதை மேனாட்டினர் பார்த்து இப்போது என்ன சொல்கிறார்கள் தெரியுமா? 'நாங்கள் கூறியது சரியாகிவிட்டது பார்த்தீர்களா?' என்கிறார்கள், வாய் திறவாமலேயே. இனியாகிலும் இந்தியாவுக்குப் புத்தி வரும் என்று அமெரிக்கர்கள் எதிர்பார்க்கிறார்கள். கம்யூனிஸ்டுகளின் சிநேகத்தைப் புறக்கணித்து, தங்களோடு இந்தியா சேர்ந்து கொள்ளும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

இதனிடையில் அமெரிக்க ஜனாதிபதி ஐஸன்ஹோவர் இந்தியாவுக்கு அவசரம் அவசரமாக விஜயம் செய்கிறார்.

இதுகாறும் இந்தியாவில் நிலவிவந்த சூழ்நிலை அமெரிக்காவுக்கு அவ்வளவு சிநேகபாவமுள்ளதாக இல்லை. ஆனால், இன்று நாட்டின் நிலை மாறியிருக்கிறது. பல பேர்கள் "நாம் அமெரிக்காவின் சிநேகத்தை வளர்த்துக் கொண்டு, நமது ராணுவத்தைப் பலப்படுத்துவோம். எல்லைகளில் இருக்கும் சீனர்களைத் தூக்கி எறிந்து விட்டு நமது எல்லையை மீட்போம்" என்று எண்ணி வருகிறார்கள். ஜனாதிபதி ஐஸன்ஹோவருக்கு இந்திய மக்கள் மிகவும் குதூகலமாகவே வரவேற்பளிப்பார்கள்.

ஆனால் நமது நடுநிலைமைக் கொள்கை, இனி குழிதோண்டிப் புதைக்க வேண்டியதுதானா? எந்த வல்லரசுகள் பக்கமும் சேராமல் நடுநிலைமை வகிப்பது உசிதம் என்று இதுகாறும் நினைத்தது முற்றிலும் தவறா?

அமெரிக்காவும் ருஷ்யாவுமே இதைப் பற்றிச் சிந்திக்கவேண்டும். இந்தியாவின் நடுநிலைமைக் கொள்கை காரணமாகவே, அமெரிக்காவும் ருஷ்யாவும் இணக்கமாக வேலை செய்யும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. உலகம் இரண்டு கூறுகப் பிரிவுபடாமல் இரண்டு கட்சிகளுக்கும் சிநேகத்தோடு விளங்கும் நடுநிலைமை நாடுகள் சில இருப்பது, உலக சமாதானத்துக்குப் பேருதவியாகும்.

இந்தியா நடுநிலைமை வகிக்க வேண்டுமென்று அமெரிக்கா விரும்புமானால், சீனாவை, ஐ-நா.வுக்குள் வர அனுமதிக்க வேண்டும்.

அதேபோல் ருஷ்யாவும் சீனாவுக்கு அறிவு புகட்டி, இந்திய எல்லையிலிருந்து உடனடியாகச் சீனத் துருப்புக்களை வாபஸ் பெறச் செய்யவேண்டும்.

ராஜ்ய சர்க்காரா? ஜில்லா போர்டா?

இந்திய அரசியல் நிர்ணயச் சட்டத்தின்படி ராஜ்யங்கள் அதாவது முன்னாள் மாகாணங்கள் சுதந்திரமாக ஆட்சி நடத்துவதென்றும், அவை தமக்குரிய சில அதிகாரங்களைச் சம்மதித்ததின் பேரில் மத்திய அரசாங்கத்துக்குத் தந்ததாக வைத்துக்கொண்டு மத்திய அரசாங்கம் நடைபெற வேண்டும் என்றும் ஆட்சிமுறை நிர்மாணிக்கப்பட்டது.


இப்போதோ, ஐந்தாண்டுத் திட்டங்கள் ஒன்றன்பின் ஒன்றாக மத்திய அரசாங்கத்தில் நிர்ணயிக்கப்பட்டு வருகின்றன. ராஜ்ய அரசாங்கத்தின் சகல காரியங்களும் கடமைகளும் வரவு செலவுகளும் இந்த ஐந்தாண்டுத் திட்டங்களுக்குள் அடங்கிப் போய், ராஜ்ய சர்க்காருக்கு உண்மையில் எந்தவிதமான உரிமையும் கவலையும் பொறுப்புமின்றி எல்லாம் மத்திய சர்க்காரின் அதிகாரங்களுக்குள் அடங்கிப் போய் நிற்கின்றன. ஒவ்வொரு சிறு விஷயத்துக்கும் தில்லி சர்க்காரிடம் சென்று சமாளித்துத்தான் ராஜ்ய சர்க்கார் ஆட்சி நடத்த வேண்டியிருக்கிறது. மக்களின் சுதந்திரத்தைப் பறிப்பதுடன் ராஜ்ய சர்க்காரின் உரிமைகளும் பறி கொடுத்தாயிற்று. ஜில்லா போர்டு அந்தஸ்தை விடக் கேவலமாகி விட்டது இன்று ராஜ்ய சர்க்கார்களின் அந்தஸ்து.

மத்திய சர்க்காரிடம் இருக்கும் ஆதிக்கத்தை ராஜ்ய சர்க்கார்களிடம் பரவலாகப் பிரித்து அளிப்பதன் மூலமே அரசாங்கம் மக்களுக்கு நல்ல சேவை செய்ய முடியும் என்பது சுதந்திரக் கட்சியின் கொள்கை.

சொத்துரிமையும் தொழில் உரிமையும் காங்கிரஸ் சர்க்கார் பறிமுதல் செய்து வருவதைத் திருத்துவதோடு, பிரதேச ஆட்சிகளுக்குச் சுதந்திரம் வாங்கித் தருவதும் சுதந்திரக் கட்சியின் கருத்தாகும்.

மத்திய சர்க்காரின் பொறுப்பும் அதிகாரமும், இன்றியமையாத அளவுக்குச் சுருங்க வேண்டும்.

—ராஜாஜி


கிருஷ்ணமேனனை நீக்குங்கள்
வி.கே.கே. மேனன் தகுதி இல்லை
பிரதமர் தமது பிறந்த நாளைத் தனிமையான இடத்தில் கழிக்கப் போகிறாராம்
பிறந்த நாள் வாழ்த்து
பஞ்சசீலம்
சீனாத் தாக்குதல்
ஓட்டப் பந்தயம்
இந்தியா
ருஷ்யா
அமெரிக்கா
ஜனவரியில் ருஷ்ய ஜனாதிபதி இந்தியாவுக்கு வருகிறாராம்

போலீசும் பொதுமக்களும்

சென்னை, தியாகராஜநகரில் அன்றொரு நாள் மாலை பெரும் கலவரமாகி விட்டது. போலீஸ்காரர்கள் அதிக்கிரமமாக நடந்து கொண்டு விட்டதாகவும், அவர்கள் யாரோ ஒரு நபரை உயிர் போகுமளவுக்கு அடித்து விட்டதாகவும் ஊர்முழுதும் வதந்தி பரவி, ஊர்ப் பொது மக்கள் சேர்ந்துகொண்டு போலீஸ் நிலையத்தைத் தாக்கத் தொடங்கி விட்டார்கள். போலீஸார் பெரு முயற்சி செய்து கலவரத்தை அடக்கவேண்டியதாகி விட்டது.

ஊர்க் காவலுக்காக ஏற்பட்ட போலீஸ் நிலையத்திடம் பொது மக்கள் நம்பிக்கை இழந்து இப்படி நடந்து கொண்டது முற்றிலும் தவறு. போலீஸார் குற்றம் செய்திருந்தால் சட்ட முறையில் நியாயமான பரிகாரம் தேடவேண்டுமே யொழிய, பொது மக்கள் சட்டத்தைத் தங்கள் கையில் எடுத்துக் கொண்டு தாங்களே நீதி வழங்கிவிட முன் வருவது சரியல்ல. எனினும் போலீஸாரைப் பற்றியும் ஒரு வார்த்தை எச்சரிக்கை செய்ய வேண்டியதாகத்தான் இருக்கிறது.

சென்னை ராஜ்யத்தில் போலீஸ் நிர்வாகந்தான் திறம்பட இயங்குகிறது என்ற நற்பெயர் எடுத்திருக்கிறார்கள். இது போலீசில் உயர்தர உத்தியோகஸ்தர்களைக் குறித்துத்தான் சொல்லப்படுகிறது. ஆனாலும் அன்றாடம் பொதுமக்களுடன் பழகும் சாதாரண போலீஸ்காரர்களில் சிலர் ஆணவத்துடன் குரூரமாக நடந்து கொள்ளுகிறார்கள் என்ற புகார்கள் வராமல் இல்லை. அதன் விளைவாகவே பொதுமக்கள் ஆத்திரமடைந்து கிளர்ச்சி செய்யும் அளவுக்கு வந்துவிடுகிறது.

இந்தச் சந்தர்ப்பத்தில்; சென்ற 4-ம் தேதி சென்னை நீதிமன்றத்தில் நீதிபதிகள் ஒரு குற்றத்தின்மீது தீர்ப்பளித்தபோது கூறிய மொழிகளைக் குறிப்பிடுவது மிகவும் பொருத்தமாக இருக்கும்.

"சட்டத்தை நிலைநாட்டும் வேலையில் ஈடுபட்டுள்ள போலீஸ் படையினருக்கு ஏராளமான பொறுப்பு இருக்கிறது. அவர்கள் தைரியமாகவும் விழிப்புடனும் இருக்க வேண்டும் என்பதில் சந்தேகமில்லை. அவர்கள் விருப்பு வெறுப்பின்றிச் சட்டத்தை நிலைநாட்ட வேண்டும். ஏனெனில், அந்தஸ்திலுள்ளவர்களைச் சட்டம் தீண்டுவதில்லை என்ற தவறான அபிப்பிராயம் ஏற்படும்படி நடந்துகொண்டால் அதைவிட அகௌரவம் வேறு கிடையாது. ஆனால் இந்த வழக்கில் போலீஸார் நியாயமற்ற முறையில் மௌடீகமான குரூரத்தைக் கையாண்டு சட்டத்தை நிறைவேற்றினார்கள். இத்தகைய நிலையில்தான் மிகவும் கஷ்டமாகப் போகிறது. எந்த நோக்கத்தோடு சட்டம் செய்யப்பட்டதோ அந்த நோக்கமே தோல்வியடைந்து விடுகிறது!" என்று போலீஸ் இலாகாவுக்கு நீதிபதிகள் கூறியிருக்கிறார்கள்.

போலீஸ் உத்தியோகம் மிக சிரமமான உத்தியோகம். கண்டிப்பாகவும் இருக்க வேண்டும், அதே சமயம் பண்போடும் நடந்து கொள்ள வேண்டும்.

திரு பி. டி. ராஜனும் சுதந்திரக் கட்சியும்

ஜஸ்டிஸ் கட்சித் தலைவர் திரு. பி. டி. ராஜன் அவர்கள் தமது நிலையை மிகத் தெளிவாக விளக்கி, சிவகங்கையில் மிக அருமையானதோர் பிரசங்கம் செய்தார்.

சமீபத்தில் ராஜாஜியும் ஸ்ரீ ரங்காவும் மதுரை சென்றிருந்தபோது, திரு பி. டி. ராஜன் அவர்கள், "நான் உங்களுடன்தான் இருக்கிறேன்" என்று சொன்னார். இதன் பொருள் பலருக்குச் சரியாக விளங்கவில்லை. சிவகங்கை துரைசிங்க ராஜா கல்லூரியில் அதை விளக்கமாகக் கூறினார்.

"ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் யாரேனும் சுதந்திரக் கட்சியில் சேர விரும்பினால் தாராளமாகச் சேரலாம். சேர்ந்து விட்டு அப்புறம் கட்சிவிட்டுக் கட்சி மாறுவதெல்லாம் செய்ய வேண்டாம். கட்சிக் கொள்கைகளை நன்றாகப் புரிந்து கொண்டு அதில் சேருங்கள். சேர்ந்தபின் அதற்கு உண்மையாக நடந்து கொள்ளுங்கள்" என்றார்.


காங்கிரஸ்காரர்கள் 'எதிர்க்கட்சி வேண்டும்' என்று சொல்வதை முதலில் வரவேற்று விட்டு, ராஜாஜி ஒரு எதிர்க்கட்சியை உருவாக்கியவுடன், இது பணக்காரர் கட்சி என்றும் பார்ப்பனர் கட்சியென்றும் காங்கிரஸ்காரர்களே பிரசாரம் செய்வது மிகக் கேவலம். காங்கிரஸ் எவ்வளவு இழிநிலை அடைந்துவிட்டது, என்பதையே காட்டுகிறது என்று கூறிவிட்டு "ராஜாஜியின் கொள்கைகளை நூற்றுக்கு நூறாக ஒப்புக் கொள்கிறேன்" என்றும் கூறினார்.

காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சியைத் தோற்கடிப்பதற்காகக் கம்யூனிஸ்ட் கொள்கைகளைச் சுவீகரித்துக் கொண்டது. கம்யூனிஸ்ட்டுகள், உழவர்களுக்கு விளைச்சலில் 50 சத விகிதம் வாங்கித் தருவதாகத்தான் கூறினார்கள். ஆனால் காங்கிரஸ்காரர்கள் 60 சத விகிதம் அளித்திருக்கிறார்கள். எதற்கு இதைச் செய்தார்கள்? கம்யூனிஸ்ட்டுகளின் வோட்டுக்களைப் பறித்துக் கொள்வதற்காகத்தான்.

"சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகரான ராஜாஜி, தேர்ந்த அரசியல் வாதி, ராஜதந்திரி, வேதாந்தி. அவர் இந்த வயதில் புதுக் கட்சியை ஆரம்பிக்கும் இச்சிரமமான பணியை மேற்கொண்டிருக்கிறார் என்றால் அது புகழ் சம்பாதிக்கவோ, வோட்டுக்கள் சம்பாதிக்கவோ அல்ல. தேசத்துக்கும் தேச மக்களுக்கும் தாம் ஆற்றவேண்டிய கடமை என்றுதான் இதை ஆரம்பித்திருக்கிறார்."

திரு பி. டி. ராஜன், எல்லா விஷயங்களையும் நிர ஆலோசித்து, உண்மைகளைத் தைரியமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார். ராஜாஜி சொல்லி வருவதைத் திரு பி. டி. ராஜன் விளக்கியிருப்பதுபோல் யாரால் விளக்க முடியும்? இவ்வாறு பேசியதற்குத் திரு பி.டி. ராஜன் அவர்களைப் பாராட்டுகிறோம்.

உச்ச நிலைக்கு விருத்தியடைந்துள்ள உன்னத விற்பனை.



லோமா உங்கள் கேசத்தை கருமை
யுடன் விளங்கச் செய்வதுடன் அதை
எழிலுடன் பிரகாசிக்கவும் செய்கின்றது.
அதனால்தான் பெரியோரும்,
சிறியோரும், ஆடவரும், பெண்டிரும்,
எல்லோரும் ஒருமுகமாக, இந்தியாவிலும்,
மற்றும் வெளிநாடுகளிலும்
லோமாவையே விரும்பி வாங்குகிறார்கள்.

லோமா

கேசத்தைக் கருமையாக்குவதில் பாரினில் புகழ்பெற்றது.



பூரண ஏஜெண்டுகள் :
எம். எம். கம்பாத்வாலா அஹமதாபாத்—1
ஏஜெண்டுகள் :
ஸி. நரோத்தம் அன்டு கோ. பம்பாய்—2

TAM.

சென்னை ஏஜண்டுகள்: ஜே. பாலபாய் & கம்பெனி, 260, எஸ்பிளனேட், மதராஸ்-1
இலங்கை ஏஜண்டுகள்: சிர்குல் கதீச் & கோ., 41 & 43, இரண்டாம் குறுக்குத் தெரு, கொழும்பு-11

பல்வலியா?



ஸாரிடான் சாப்பிடுங்கள்

ஸாரிடான் எத்தகைய கடுமையான பல்வலியிலிருந்தும் நிவாரணமளித்து உங்களை உற்சாகம் பெறச் செய்யும். ஸாரிடான் எல்லாவித வலிகளுக்கும் விரைவில் முழு நிவாரணம் அளிக்கிறது என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

ஒரு ஸாரிடான் வில்லையின் விலை 12 நயே பைசே. பெரியவர்களுக்கு ஒரு வில்லை ஒரு பூர்த்தியான டோஸ். சிறுவர்களுக்கு ¼ வில்லையிலிருந்து ½ வில்லை வரை போதுமானது.

ஸோல டிஸ்ட்ரிப்யூட்டர்கள்: வால்டாஸ் லிமிடெட்

ஜனாதிபதிகளின் போட்டி

பிரதமர் நேருஜி சென்ற வாரம் தமது பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில், 'ருஷ்ய ஜனாதிபதி வார்ஷிலோவ் இந்தியாவுக்கு முன்னமேயே வந்திருக்க வேண்டியது. ஆனால் அவர் உடல் நிலை சரியில்லாது படுத்துவிட்ட படியால் அவர் விஜயம் தள்ளிப் போடப் பட்டது' என்று கூறினார்.

இந்தச் செய்தி வெளியாகிய இருபத்திநாலு மணி நேரத்துக்குள், ருஷ்ய ஜனாதிபதி இந்தியாவுக்கு ஜனவரி மாதத்தில் வரத் திட்டமிட்டிருக்கிறார் என்ற செய்தி வெளியாகி யிருக்கிறது.

சீனா இந்தியாவைத் தாக்கியிருப்பது, இந்திய மக்களுக்கு கம்யூனிஸ்ட்டுகளிடமும் கம்யூனிஸ்ட் நாடுகளிடமும் பெரும் அதிருப்தியை உண்டாக்கி யிருக்கிறது. இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சிக்குப் பெருத்த நஷ்டத்தையும் உண்டாக்கி யிருக்கிறது.

இந்தியா தன் நடுநிலைமைக் கொள்கையை இழந்துவிடக் கூடாது என்பதில் ருஷ்யாவுக்கு அக்கறையுண்டு. ஆனால் ருஷ்யா சீனாவை அடக்கி, இந்திய எல்லைக்குள்ளிருக்கும் அதன் வாலைச் சுருட்டிக் கொள்ளும்படி செய்யாத வரையில், இந்திய மக்கள் ருஷ்ய ஜனாதிபதி யின் வரவை எப்படி மகிழ்ச்சியுடன் வரவேற்க முடியும்? ருஷ்ய ஜனாதிபதியின் விஜயம், இந்தியாவில் உற்சாகத்தை உண்டாக்காது.

ஜனாதிபதிகள் போட்டி போட்டுக் கொண்டு இந்தியாவுக்கு வருவது போலவே, இந்தியா வைப் போரில் இழுத்துவிடாமல் இருப்பதற் குப் போட்டியிட்டார்களானால் எவ்வளவோ நன்றாக இருக்கும்!

ஆகாச வெடி

"டெல்லியில் புதுமுறையில் அமைக்கப்பட்டிருக்கும் மிருகக் காட்சி சாலையை இந்திய மந்திரி பஞ்சாப் ராவ் தேஷ்முக் திறந்து வைத்தார்."

—செய்தி

மந்திரி திறந்து வைத்ததும் எவ்வளவு மிருகங்கள் ஓடிப் போயின?

✸

"விளையாடிக் கொண்டிருந்த ஒரு சிறுவனுக்குத் தலை வழுக்கை விழுந்த முகலாயர் காலத்து நாணயம் ஒன்று கிடைத்தது."

—செய்தி

அந்த நாணயத்தின் தலை வழுக்கையைப் போக்க அதை ஒரு தைல வியாபாரியிடம் சிறுவன் கொடுத்திருக்கலாம்!

✸

"தம்முடைய ஊருக்கு பஸ் விட வேண்டுமென்று உண்ணாவிரதம் இருந்தவரின் கோரிக்கை நிறைவேறியது."

—நாங்குனேரிச் செய்தி

பஸ்களை நினைத்த இடத்துக்கு ஓடச் செய்ய முடியும் என்று அவர் உண்ணாவிரதத்தின் மூலம் நிரூபித்ததைப் பாராட்ட வேண்டியதுதான்.

✸

"குறைந்த அளவுள்ள கெஜக்கோலை உபயோகித்ததாக ஒரு ஜவுளி வியாபாரி கைது செய்யப்பட்டார்."

— கராச்சிச் செய்தி

சரியான அளவுதான் என்று கூற, இவன் ஒரு கெஜப் புளுகனாகத்தான் இருக்க வேண்டும்!

✸

"லண்டனில் பிரபல வைத்தியர் ஒருவரின் அரிய பிரசங்கத்தைக் கேட்டு, பல ஸ்திரீகள் மூர்ச்சித்து விழுந்தனர்."

—செய்தி

அப்பேர்ப்பட்ட அரிய பிரசங்கத்தைக் கேட்கக் கொடுத்து வைக்கவில்லையே என்று எவ்வளவு பேர் மூர்ச்சித்தார்களோ?

✸

"பரஸ்பர நல்லெண்ணத்தின் சின்னமாக, இந்தியாவிலிருந்து 15 லட்சம் கோணிப் பைகளை வியட்நாம் வாங்கிக் கொள்ளும்."

—தினசரி

வாங்கிச் செல்லும்போது கோணிப்பைகளை நல்லெண்ணத்தின் அறிகுறியாக அவர்கள் உதறிக் காட்ட வேண்டியதில்லை!

ராஜாஜியின் சுற்றுப்பிரயாணம்

சுதந்திரக் கட்சி சம்பந்தமான ஜில்லா மகாநாடுகளையும், பிரசாரத்தையும் ஒட்டி ராஜாஜி தென் ஜில்லாக்களில் சில ஊர்களுக்கு விஜயம் செய்கிறார். இம்மாதம் 20-ம் தேதி கும்பகோணத்தில் இருப்பார். அன்று மாலை பொதுக்கூட்டத்தில் பேசுகிறார். 21ம் தேதி திருச்சி மகாநாட்டில் கலந்துகொள்கிறார். 22-ம் தேதி திருநெல்வேலியில் சுதந்திரக் கட்சி மகாநாட்டில் உரையாற்றுகிறார். 23-ம் தேதி ராஜபாளையத்தில் ராமநாதபுரம் ஜில்லா கன்வென்ஷனுக்கும் விஜயம் செய்வார்.

டாக்டர் ஜான் மத்தாயின் மறைவு

அரசியல் கட்சிகளில் கலந்துகொள்ளாமலும், அரசியல் தத்துவங்களில் பற்றுக் கொள்ளாமலும், தேசத்துக்குச் சிறப்பான முறையில் தொண்டாற்றி மக்களின் பேரன்புக்குப் பாத்திரமான பாரதப் புதல்வர்களில் ஒருவர் டாக்டர் ஜான் மத்தாய். அவர் சில நாட்களாக நோய் வாய்ப்பட்டு, பம்பாயில் தமது 72-வது வயதில் காலமானார் என்ற செய்தி கேட்டு வருந்துகிறோம். கல்வித் துறையில் ஆரம்பித்து, சட்டத்துறையில் தொழில் நடத்தி, சுங்கவரிக் கமிஷனில் பணியாற்றி, மத்திய சர்க்கார் நிதி அமைச்சராக நிர்வாகம் நடத்தி, பின் தொழில் ஸ்தாபனங்களில் தலைமைப் பதவி ஏற்றுத் திறம்பட அவைகளை நடத்தி, இரண்டு சர்வகலாசாலைகளுக்கு உப அத்யக்ஷகராகவும்பொறுப்பேற்றுஅவர் பணிபுரிந்தார் என்றால் அவருடைய அறிவுத் திறனும், நேர்மைக்குணமும் எவ்வளவு உயர்ந்தவை என்பது விளங்கும். பதவிகளும் அதிகாரமும் எந்தச் சூழ்நிலையிலும் விடாமல் பிடித்துக்கொண்டு போற்றப்பட வேண்டியவை என்று நினைக்கும் வர்க்கத்தினரைச் சேர்ந்தவரல்ல டாக்டர் மத்தாய். நிதிமந்திரி பதவியை ராஜிநாமா செய்துவிட்டு வெளியேறியதும், திட்டக் கமிஷன் பற்றி அவருடைய அபிப்பிராய பேதங்களை வெளியிட்டதும் அவர் எந்தப் பதவியையும் பெரிதாக எண்ணவில்லை என்பதற்குச் சான்று கூறும். நாட்டுக்கு அவர் புரிந்த சேவைகளில் சிகரம்போல் விளங்குவது அவர் தலைமையில் செயலாற்றிய வரி விசாரணைக் கமிஷனின் நடவடிக்கைகளும் அதன் யாதாஸ்தும். இந்தியப்பொருளாதாரத் துறையில் அவருடைய யாதாஸ்து பல ஆண்டுகளுக்கு வேதமென மதிக்கப்படும். அவருடைய உயர்ந்த பணிகளைப் பாராட்டி பாரத சர்க்கார் 'பத்ம விபூஷண்' விருது அளித்துக் கௌரவித்தது. அவர் மறைவினால் நமது நாடு ஒரு சிறந்த அறிஞரை இழந்துவிட்டது. அவரது குடும்பத்தினருக்கு நமது மனமார்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.



பாகவதர் மறைவு

பாகவதர் என்ற சொல் அந்தக் காலத்தில் தியாகராஜ பாகவதர் ஒருவரையே குறித்தது.

அவர் திரை வானிலே வால் நட்சத்திரம் போல் எழுந்து ஜொலித்தார். அவர் நடித்த பவழக்கொடி, சிந்தாமணி, திருநீலகண்டர், அம்பிகாபதி, அசோக்குமார், ஹரிதாஸ் முதலிய படங்கள் ஒன்றன் பின் ஒன்றாக வந்து அவரைப் புகழ் ஏணியில் மேலே மேலே ஏற்றிக் கொண்டிருந்தன. அவர் ஒரு படத்தில் ஒரு பாட்டுப் பாடிவிட்டார் என்றால், அது தேசமெங்கிலும் அடுத்த வாரமே ஒலிக்க ஆரம்பித்து விடும். மாடமாளிகைகளிலும் கேட்கும். மாடு மேய்க்கும் பையனிடத்திலும் கேட்கும்! 'மாயப் பிரபஞ்சத்தில்', 'சராசரங்கள்', 'அப்பனைப் பாடும் வாயால்' என்று எத்தனை பாடல்கள் பாமரரும் பண்டிதரும் வியக்கும் வண்ணம் பாடினார். அவருடைய இனிமையான சாரீரமும், தெளிவான பேச்சும் ஜனங்களை அப்படி வசீகரித்தன. அவர் ஒரு படத்தில் நடிக்கிறார் என்றால் அப் படம் வெற்றி யடையும் என்பதில் சந்தேகமே இருக்கவில்லை. அவர் செல்லும் இடங்களில் ஆயிரக்கணக்கில் மக்கள் திரளாக வருவார்கள், அவரை ஒரே ஒரு தடவை பார்க்க வேண்டுமென்று! அப்படிப் புகழுடன் விளங்கிய தியாகராஜ பாகவதர் பிற்காலத்தில் பெரும் இன்னல்களுக்கு ஆளானார் என்பதை அறியும்போது வாழ்வின் விசித்திரத் தன்மையைக் கண்டு வியக்காமல் இருக்க முடியவில்லை.



அவருடைய எண்ணற்ற ரஸிகர்கள் ஸ்ரீ எம். கே. தியாகராஜ பாகவதர் காலமானார் என்ற செய்தியைக் கேட்டு 'அந்த அமைதி யிழந்த ஆத்மா இனியாவது அமைதி அடையட்டும்' என்றுதான் கண்கள் பனித்திடக் கூறிக் கொண்டார்கள்.

அவரது இனிய கம்பீரமான பாடல்களைக் கேட்டவர்கள் அவரை ஒரு நாளும் மறக்க மாட்டார்கள். அவரது மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு நமது அனுதாபங்கள் உரித்தாகின்றன.



தளதளக்கும் ஈனோ
★ ஜீரண உறுப்புக்களை சுத்தம் செய்கிறது
★ குளுமை அளிக்கிறது
★ வயிற்றுக் கோளாறுகளை சரிப்படுத்துகிறது
உல்லாசமூட்டும் புத்துணர்ச்சியை அளிக்கிறது
ஈனோ
'ப்ரூட் ஸால்ட்'
அருந்துங்கள்
ENO
SPARKLING ANTACID
'FRUIT SALT'
'ஈனோ' மற்றும் 'ப்ரூட் ஸால்ட்' என்ற வார்த்தைகள்

தஞ்சை மகாநாடு

எஸ்.வி.எஸ்

'சோழவளநாடு சோறுடைத்து' என்ற பெயர் உண்டு. ஆனால் சமீபத்தில் காங்கிரஸ் சர்க்கார் இந்தப் பெயரை மாற்றி யமைக்கும் பெரு முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். புரட்சிகரமான திட்டங்கள், முன்னேற்றத் திட்டங்கள் என்ற பெயரில் செந்நெல் விளையும் சோழ வளநாட்டைக் கன்னல் விளையும் நாடாக்கி வருகிறார்கள். ஆனால் சோழவள நாட்டு மக்கள், என்றென்றும் சோழ நாடு சோறு படைக்கும் நாடாகவே விளங்க வேண்டும் என்று விரும்புகிறார்கள் என்பதைச் சென்ற ஞாயிற்றுக்கிழமை வெகு தெளிவாகக் காட்டிக் கொண்டார்கள்.

சுதந்திரக் கட்சி மகாநாட்டுக்கும், பொதுக் கூட்டத்துக்கும் சோழநாட்டு மக்கள் பெருங் கூட்டமாகத் திரண்டு வந்த காட்சியைப் பார்த்தபோது, மேற்கண்ட உறுதிதான் மனத்தில் பதிந்தது.

தீபாவளியன்று சென்னை மகாநாட்டை முடித்துக் கொண்டு அவசரம் அவசரமாக எழும்பூர் ரயில்வே ஸ்டேஷனை அடைந்து, திருவனந்தபுரம் பாஸஞ்சரைப் பிடித்தோம். ஆசார்ய ரங்கா, மினு மஸானி, ராஜாஜி ஆகிய மூவரும் ஒரு கம்பார்ட்மெண்டில் ஏறிக் கொண்டார்கள். காலையிலிருந்து மாலை வரை மகாநாட்டில் உட்கார்ந்து, உட்கார்ந்து ஒரே அலுப்பு. சென்னை மகாநாடு வெற்றிகரமாக நடந்தது பற்றி எல்லாருக்கும் ஒரே திருப்தி; சந்தோஷம். இருந்தாலும் உடம்பின் அலுப்பு எங்கே விடுகிறது!

ஆனால் பொதுமக்களுக்கு இந்த அலுப்பு விஷயமெல்லாம் எங்கே தெரிகிறது? ரயில் மாயவரம் ஸ்டேஷனை நெருங்கியதுமே, சுதந்திரக் கட்சி ஆதரவாளர்கள் பெருந்திரளாக ரயில்வே ஸ்டேஷனில் கூடி விட்டார்கள்! 'ராஜாஜிக்கு ஜே! மஸானிக்கு ஜே! ஆசார்ய ரங்காவுக்கு ஜே' என்று கோஷமிடத் தொடங்கினார்கள்.

ஆசார்ய ரங்கா முதலில் எழுந்து ''ராஜாஜி தூங்குகிறார். சத்தம் போட்டு அவரை எழுப்பி விடாதீர்கள். அவருக்கு இன்னும் கொஞ்சம் ஓய்வு அளியுங்கள்!'' என்று கேட்டுக்கொண்டார். ஜனங்கள் அவர் வார்த்தையைக் கேட்டு, அப்படியே நடந்துகொண்டார்கள். மக்கள் ஸ்ரீ ரங்கா அவர்களுக்கும், ஸ்ரீ மஸானி அவர்களுக்கும் மலர்மாலைகள் அணிவித்துத் தங்கள் அன்பையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொண்டார்கள்.

இதைப் பற்றி மஸானி அவர்கள் பின்வருமாறு தமக்கே உரிய நகைச்சுவையுடன் சொன்னார்கள்.

''எனக்கு இரவெல்லாம் சரியாகவே தூக்கமில்லை. மின்சார விசிறி போட்டுக் கொண்டால் எனக்கு உடனே நீர்க் கொண்டுவிடும். அதனால், மின்சார விசிறியை நிறுத்தி விட்டேன். புழுக்கம் ஆரம்பித்து விட்டது. புழுக்கத்தில் தூக்கமே பிடிக்கவில்லை. விடியற்காலையில்தான் கொஞ்சம் தூக்கம் பிடித்தது. அப்போது, 'ராஜாஜிக்கு ஜே! மஸானிக்கு ஜே! ரங்காஜிக்கு ஜே!' என்று கோஷமிட்டு மக்கள் எழுந்திருக்கச் சொன்னவுடன், 'எழுந்திருக்கவேண்டி யிருக்கிறதே!' என்று நினைத்துக்கொண்டே எழுந்தேன். ஆனால் அந்தக் கூட்டத்தில் ஒரு அன்பர் நல்ல சூடான காப்பியுடன் எங்கள் பெட்டிக்குள் நுழைந்ததும், மக்கள் எங்களை எழுப்பித் தொந்தரவு செய்ததற்கு நன்றியே தெரிவித்துக் கொண்டேன். சூடான காப்பி சாப்பிட்டதும் ஒரு புதுத் தெம்பு பிறந்துவிட்டது'' என்று கூறினார்.

இந்தக் காப்பிப் படலம் ஒவ்வொரு முக்கியமான ஸ்டேஷனிலும் தொடர்ந்தது. தஞ்சை ஜில்லா காப்பிபோல் வேறு எங்கு கிடைக்கும்? ஒவ்வொரு ஸ்டேஷனிலும் பெரும் திரளாக மக்கள் குழுமி ராஜாஜிக்கும் ரங்கா அவர்களுக்கும் அமோக வரவேற்பு அளித்தார்கள். தஞ்சையில் சொல்ல வேண்டியதில்லை! பெரும் திரளான மக்களும் சுதந்திரக் கட்சி அமைப்பாளர்களும் கூடியிருந்து தலைவர்களை வரவேற்றார்கள்.

மகாநாடு நவம்பர் 1-ம் தேதி காலை 10-30 மணிக்குச் சரியாக ஆரம்பமாகியது. ஸ்ரீமான் சுயம்பிரகாசம் அவர்கள்தான் வரவேற்புரை வழங்கினார். மிக அருமையாகச் சில விஷயங்களைச் சொன்னார்.

ஸ்ரீமான் சுயம்பிரகாசம் அவர்கள் 1952-ல் ராஜாஜி மந்திரிசபை அமைத்தபோது சென்னை சட்டசபையில் எதிர்க்கட்சியில் இருந்தவர். பலவிதமான கேள்விகள் கேட்டுச் சென்னை சட்டசபையில் சுயம்பிரகாசமாக விளங்கினார். அவர் இப்பொழுது, சுதந்திரக் கட்சியில் சேர்ந்து வரவேற்புக் குழுத் தலைவராக இருப்பது ஒரு நல்ல அறிகுறியாகும்.

தஞ்சை பண்ணையாள் சட்டத்தைக் கொண்டு வந்த ராஜாஜி விவசாயத் தொழிலாளர்களுக்கு எதிராக ஒரு கட்சி அமைப்பாரா என்பதை நினைத்துப் பார்க்கவேண்டும் என்றார். சிறு மிராசுதார்களையும் பண்ணையாட்களையும் இணைத்து ஒரு சுமுகமான உறவு நிலைநாட்டவே, சுதந்திரக் கட்சி பாடுபடுகிறது என்றார். காங்கிரஸ் சர்க்கார் கூட்டுறவு என்ற பெயரில் கூட்டுப்பண்ணை ஏற்படுத்தி விவசாயத் தொழிலாளர்களை அடிமையாக்கி வருகிறது என்பதையும் எச்சரிக்கை செய்தார். சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் வசம் விடப்படும் விவசாயம் எவ்வளவு கேவலமாக நடைபெறும் என்பதை நேர்முக உதாரணங்கள் மூலம் விளக்கினார். அவர் பேச்சு விஷயச் செறிவுடன் நன்கு அமைந்தது.

அடுத்தாற்போல் ஆசார்ய ரங்கா பேசினார். அங்கு குழுமியிருந்த மக்களுக்கு முதலில் தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார். பின்னர் விவசாயத் துறையில் ஏற்பட்டுள்ள ஆபத்தை வெகு அற்புதமாக

விளக்கினார். பின்னர் பேசிய மஸானி அவர்கள், மிக அருமையானதோர் பிரசங்கம் செய்தார்.

மஸானி அவர்கள் ஒருகாலத்தில் தீவிர மார்க்ஸீயவாதியாக இருந்தார். அவர் இன்று சோஷலிஸம் போன்று உலகத்துக்கு ஆபத்தானதொன்றும் கிடையாது என்ற முடிவுக்கு வந்திருக்கிறார். உலக சிந்தனை யெல்லாமே இப்பொழுது சோஷலிஸத்துக்கு எதிராகப் போய்க் கொண்டிருக்கிறது என்று மிகத் தெளிவாக எடுத்துக்காட்டிப் பேசினார். கடைசியாக மஸானி காங்கிரஸுக்கும் சுதந்திரக் கட்சிக்குமுள்ள வித்தியாசத்தை ஒரு ரஸமான உதாரணம் மூலம் விளக்கினார்.

மேஜைகளில் ஹோட்டல்களில் போலும் இரண்டுவித உணவுத் திட்டம் உண்டாம். ஒன்று, என்ன என்ன உணவு வகைகள் உண்டு என்பதை வரிசைப்படுத்தி அச்சடித்த காகிதம் கொடுக்கப்படும். அதிலிருந்து நமக்குத் தேவையானதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். மற்றைய முறை, குறிப்பிட்ட உணவு வகைகள் உங்களுக்குப் பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் வழங்கப்படும். உங்களுக்குத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வாய்ப்பில்லை.

சுதந்திரக் கட்சி முந்தையது. காங்கிரஸ் கட்சி பிந்தியது.

காங்கிரஸ் உங்களுக்குப் பிடித்தாலும், பிடிக்காவிட்டாலும் இந்தச் ‘சீர்திருத்தங்’களைச் செய்வோம் என்கிறது. சுதந்திரக் கட்சி மக்களுக்குப் பிடித்த வாழ்க்கை முறை நடத்தப் பூரண சுதந்திரம் அளிக்கிறது என்றார்.

இப்படிப் பல ரஸமான விஷயங்களைச் சொல்லி அவர் அருமையான பிரசங்கம் செய்தார்.

ராஜாஜி பேசுகையில் மிக உணர்ச்சி நிரம்பிய பிரசங்கம் செய்தார். “இன்றைய இந்திய ஜனநாயகம் எப்படியிருக்கிறது என்றால், மொகலாய மன்னர்களின் ஆட்சிமாதிரி யிருக்கிறது. ஆட்சி என்னமோ மொகலாய மன்னரின் ஆட்சி என்றுதான் பெயர். சிம்மாசனத்தில் உட்காருவதும் மொகலாய மன்னர்தான். ஆனால் காரியம் என்னமோ, பிரிட்டிஷ் ரீஜண்ட் துரை உத்தரவுப்படிதான் நடக்கும். அதேபோல் ஆட்சி என்னவோ காங்கிரஸ் ஆட்சி என்று பெயர். நடப்பது என்னவோ கம்யூனிஸ்ட் கொள்கைகளை நிறைவேற்றுவதாக இருக்கிறது. உண்மையான ஜனநாயகம் தனி மனிதனின் சுதந்திர உணர்ச்சி என்னும் அஸ்திவாரத்தின்மீது இயங்குவது. ஆனால் இப்பொழுது தனி மனிதனின் சுதந்திரத்துக்கே ஆபத்து வந்திருக்கிறது” என்று எச்சரிக்கை செய்தார்.

பிறகு தஞ்சை சுதந்திரக் கட்சி கமிட்டி அங்கத்தினர் திரு ஜி. சுவாமிநாதன் அவர்கள் பம்பாய் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட 21 சுதந்திரக் கட்சிக் கொள்கைகளை இம்மகாநாடு வரவேற்பதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றினார். அந்தத் தீர்மானத்தைப் பிரேரேபித்துப் பேசியபோது, ஒவ்வொரு ராஜ்யத்துக்கும் அதிக அதிகாரங்கள் வழங்க வேண்டும் என்று சுதந்திரக் கட்சி சொல்வதை எடுத்துக்காட்டி, தமிழ் நாட்டுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று கோரி ஒரு கட்சி இயங்க வேண்டிய அவசியமோ, தமிழ்நாடு தனித்துப் போக வேண்டும் என்பதற்காக ஒரு கட்சி இயங்க வேண்டிய அவசியமோ இல்லை என்பதை வற்புறுத்தினார். நண்பர் ஜி. சுவாமிநாதன் இளைஞர்; மிக நன்றாகப் பேசினார். தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

காலை மகாநாட்டுக்கு ஏராளமான பிரதிநிதிகளும் பொது மக்களும் திரண்டு வந்து சிறப்பித்தார்கள்.

தஞ்சை ரோட்டரி க்ளப்பினர் ராஜாஜிக்கும் சுதந்திரக் கட்சித் தலைவர்களுக்கும் விருந்துபசாரம் நடத்தினர். ரோட்டரி க்ளப் தலைவர் திரு இருதயசாமி தலைமை வகித்தார்.

பிற்பகல், தஞ்சை ஜில்லா முஸ்லிம்கள் நபிநாயகம் பிறந்த நாள் விழாவைச் சிறப்பாக நடத்தினர்.

அதற்கு ராஜாஜி முக்கியமாக அழைக்கப்பட்டார். அந்தக் கூட்டத்தில் ராஜாஜியை வரவேற்றுப் பேசிய திரு அனீஸ் மிக உணர்ச்சி நிரம்பிய சொற்பொழிவு ஆற்றினார். அலி சகோதரர்களுடன் அந்நாட்களில் ராஜாஜி செய்த தேசத்தொண்டினை நினைவுகூர்ந்தார். ராஜாஜிக்கு நபி நாயகம் அருளிய மணிவாக்குகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அச்சடிக்கப்பட்டிருந்த படத்தை அளித்தார். நல்ல தூய கதர் சால்வையைப் போர்த்திக் கௌரவித்தார். கடைசியாக, ராஜாஜி எப்பணி ஏற்றாலும் எந்தக் கட்டளையிட்டாலும் முஸ்லிம் சமுதாயத்தினர் அவரைப் பின்பற்றத் தயாராக இருப்பதாகக் கூறினார்.

அந்தக் கூட்டத்தில் ராஜாஜி, நமது அரசியல் நிர்ணயச் சட்டம், சமய வேறுபாடுகளைப் பார்க்காமல் எல்லோரும் சமமாக

நடத்தப்படுவார்கள் என்று கூறுகிறது. ஆனால் நடைமுறையில் ஆட்சியாளர் இந்தச் சட்டத்தைப் பூரணமாக அமுல் நடத்துவதில்லை. முஸ்லிம் மக்கள், இந்நாட்டில் தாங்கள் சிறுபான்மையானராகி விட்டதால் சரியாக நடத்தப்படுவதில்லை என்று ஏக்கம் கொண்டிருக்கின்றனர். சுதந்திரக் கட்சி அக்குறையை நீக்க முயலும். அதிகாரத்துக்கு வந்தால், அரசியல் நிர்ணயச் சட்டத்தில் வாக்களிக்கப்பட்டுள்ளதை அமுல் நடத்தும் என்று உறுதிமொழி அளித்தார்.

சுதந்திரக் கட்சியின் கொள்கைகளில் நம்பிக்கையுள்ளவர்கள் சுதந்திரக் கட்சியில் பெருவாரியாகச் சேர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

தஞ்சை ஜில்லா கலைகளுக்கோர் உறைவிடம் என்ற பெயர் எடுத்தது. தஞ்சையின் பிரகதீசுவரர் ஆலயம் பழம் சோழ மன்னர்களின் கலைச் சிறப்புக்கு இன்றும் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. அந்தக் கலைப் பண்பாட்டை இன்றும் தஞ்சை ஜில்லாவில் காணலாம். பூ கட்டுவது, மாலை கட்டுவது, பந்தல் போடுவது எல்லாவற்றிலுமே அந்தக் கலை மணம் கமழும். அன்று திலகர் சதுக்கத்தில் மேடையை அலங்கரித்து அவர்கள் வேய்ந்திருந்த பந்தல் எவ்வளவு அழகாக இருந்தது! மின்சார விளக்குகளும், பந்தலும் சேர்ந்து ரத்தின புரியாகவே காட்சியளித்தது.

அன்று கூட்டம், சரித்திரம் காணாத புதுமையாக இருந்தது. சுமார் ஒரு லட்சம் ஜனங்கள் குழுமி யிருந்தார்கள். அப்படிப்பட்டதோர் கூட்டம் அந்த மைதானத்தில் கூடிப் பலவாண்டுகள் ஆகிவிட்டன என்று மக்கள் கூறிக் கொண்டார்கள்.

ஆசார்ய ரங்கா அவர்களின் பேச்சையோ, திரு மஸானி அவர்கள் பேச்சையோ, தலைவர் ராஜாஜியின் பேச்சையோ இங்கு நான் குறிப்பிடப்போவதில்லை. இவற்றையெல்லாம் நேயர்கள் பத்திரிகைகளில் படித்திருப்பார்கள். ஆனால் முப்பதாண்டுகளுக்கு முன் நடந்த ஒரு சம்பவத்தைப் பற்றி ராஜாஜி கூறியதை இங்கு குறிப்பிட வேண்டும்.

அப்போது பிரிட்டிஷ் அரசாங்கம் நடந்து வந்த காலம். காங்கிரஸ் கூட்டம் கூட்டுவது என்றாலே பயம். அந்த நிலையில் ராஜாஜி தஞ்சை வந்திருந்தார். கூட்டம் ஆறு மணிக்கு என்று போட்டிருந்தது. அதே திலகர் மைதானத்தில் ஐந்து மணிக்கு வந்து பார்த்தால் ஒரு ஆள் கிடையாது. பிறகு ராஜாஜி தாமே ஒரு மேஜையையும் நாற்காலியையும் கொண்டு வந்து போட்டுவிட்டுப் போனார். பிறகு ஆறு மணிக்கு வந்தால், இப்பொழுது கூடியுள்ளது போன்ற பெருங் கூட்டம் கூடியிருந்தது. துண்டுப் பிரசுரம் கிடையாது, சுவரொட்டி விளம்பரம் கிடையாது, ஒலிபெருக்கி கிடையாது. எந்த விதமான விளம்பரமும் கிடையாது. இருந்தாலும் இதேபோல் லட்சக்கணக்கான மக்கள் குழுமியிருந்தார்கள்.

அன்று சுயராஜ்யம் அடையவேண்டும் என்ற உணர்ச்சி மக்களை அப்படிப் பெருங் கூட்டமாகத் திரட்டி வந்தது.

இன்றும், அதே போன்றதோர் உணர்ச்சி மக்களிடை எழுந்துள்ளது. மக்கள் இன்றைய ஆட்சியினிடம் பெரும் அதிருப்தி யடைந்திருக்கிறார்கள். தனி மனிதனின் சுதந்திரத்துக்கு ஆபத்து வருவதை உணர்கிறார்கள். அதிலிருந்து விடுதலை பெறவே மக்கள் சுதந்திரக் கட்சிக் கூட்டத்துக்கு வருகிறார்கள்.

இந்தப் பெருங் கூட்டத்துக்குத் தஞ்சை ஜில்லா பழம்பெரு தேசபக்தர் திரு சாமித்துரைத் தேவர் அவர்கள் தலைமை வகித்தார். அவர்தான் தஞ்சை ஜில்லா சுதந்திரக் கட்சிக் கமிட்டிக்கும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

இப்படி தஞ்சை சுதந்திரக் கட்சியின் பூர்வாங்க மகாநாடும் பொதுக் கூட்டமும் சீரிய முறையில் நடந்து முடிவுற்றது.

இந்த மகாநாடு இவ்வளவு வெற்றிகரமாக முடிந்ததற்குக் காரண புருஷர்களாக விளங்கியவர்கள், நண்பர் திரு அருள்செல்வமும், திரு கந்தசாமி அவர்களும், அவர்களுடைய நண்பர் குழாமும். இவர்கள் அனைவரும் இளைஞர்கள். உற்சாகமாக இந்த இளைஞர்கள் வேலைசெய்ததைப் பார்த்தபோது, பாரத நாட்டு இளைஞர் சமுதாயம், சுதந்திரக் கட்சியின் குரலுக்கு விழித்துக் கொண்டு விட்டது என்பது உறுதியாயிற்று.

''நான் போய்விட்டு வருகிறேன். முதலில் நான் திருச்சிக்குப் போகிறேன்'' என்று குரல் வந்தது. ராஜாஜி திரும்பிப் பார்த்தார். குரல் கொடுத்தவர் தமிழ்நாட்டுச் சுதந்திரக் கட்சியின் தலைவர் திரு வேங்கடகிருஷ்ண ரெட்டியார் என்பது தெரிந்தது. தமிழ்நாட்டில் ஜில்லா தோறும் சுற்றுப்பிரயாணம் செய்து சுதந்திரக் கட்சியின் செல்வாக்கை வளர்த்துவருபவர் திரு ரெட்டியார் அவர்கள். தஞ்சை மகாநாடு முடிந்ததும் அவர் புறப்பட்ட அவசரத்தைப் பார்த்தபோது, சுதந்திரக்கட்சி வேலையில் எவ்வளவு ஆர்வமாக இருக்கிறார் என்பது தெரிந்தது.

ராஜாஜி அவரை மகிழ்ச்சியுடன் வழியனுப்பி வைத்தார். அன்றிரவு ராஜாஜியும் ஸ்ரீ ரங்காவும் ஸ்ரீ மஸானி அவர்களும் சென்னைக்குத் திரும்பினார்கள்.


அட்டைப்பட விளக்கம்:

தாமரைப் பொய்கை

அவன் ஏன் அந்தத் தாமரையை அப்படிப் பார்க்கிறான். தாமரையில் யாராகிலும் இருக்கிறார்களா? அதில் யாரையாகிலும் காண்கிறானா? ஆம், என்கிறார் கவிமணி.

தாமரைப் பொய்கையிலே — கதிரொளி
தட்டுமவ் வேளையிலே
பூமலர்ந் தோங்கிடவே — அரியென்று
போதம் நயப்பேன், அடி!

—கவிமணி



அக்கப்போர் அப்பு

அப்பு: அடாடா! கோவிந்தசாமியா, வாங்க! இந்தக் கொட்டுகிற மழையில் எதற்காக இப்படிக் கஷ்டப்பட்டு வரவேண்டும்? ஒரு வார்த்தை சொல்லி அனுப்பி யிருந்தால் நானே உடனே வந்திருக்க மாட்டேனா?

கோவி: சொல்லி அனுப்ப யாருமில்லை. அதனால்தான் நானே வந்து விட்டேன்.

அப்பு: வந்ததுதான் வந்தீர்களே, ஒரு நல்ல குடையாக எடுத்துக்கொண்டு வரக்கூடாதா? இந்தக் கிழிந்த குடைதானா கிடைத்தது?

கோவி: மழைக்கு இந்தக் குடை உபயோக மில்லை என்பது நன்றாக எனக்குத் தெரியும். ஆனால் இது வேறே ஒரு காரியத்துக்குப் பயன் படுகிறது.

அப்பு: என்ன காரியத்துக்கு?

கோவி: சாக்கடையில் விழுந்து விடாமல் இருப்பதற்குத்தான்...... உங்களுக்குத்தான் தெரியுமே, சென்னையில் இரண்டு தினங்கள் சேர்ந்தாற்போல் தூற்றல் தூறினால் ரோடுகள் வெள்ளக்காடாகி விடும். ரோடுகளின் அடியில் போடப்பட்டிருக்கும் ஜலதாரைகள் வழிந்து, அதன் மேலுள்ள இரும்பு மூடிகள் திறந்து விடும். வெள்ளத்தில் நடந்து செல்லும் பாதசாரிகள் இந்த இரும்புக் குழாயில் இறங்கி மறைந்து விடுவார்கள்! அப்புறம் வெளியே வர மாட்டார்கள். ஜலதாரைக் குள்ளே விழுந்துவிட்டால், பிடித்துக்கொண்டு வெளியே வருவதற்காகத்தான் குடையை உபயோகிக்கிறேனே தவிர மற்றப்படி......

அப்பு: நீங்கள் சொல்வதிலிருந்து, எனக்கு நமது குப்புவைப் பற்றி இப்போது கவலையா யிருக்கிறது. வெளியே சென்று வெகு நேர மாகியும் அவன் திரும்பி வரவில்லை.

கோவி: குடை கொண்டுபோனானோ, குப்பு?

அப்பு: கொண்டுபோயிருக்கிறான்.

கோவி: அப்படியானால் பயப்பட வேண் டாம். வந்துவிடுவான்.

அப்பு: சென்னையில் இரண்டு நாள் விடா மல் மழை பெய்தால் தெருக்களில் ஆறு ஓடு கிறது. வீடுகளைச் சுற்றி நீர்த் தேக்கங்கள் ஏற்படுகின்றன.

கோவி: காங்கிரஸ் நிர்வாகம் நடக்கிற தல்லவா? அதனால்தான் ரோடுகளில் கூட அணைத் திட்டங்கள் போட்டு வைத்திருக் கிறார்கள் போலிருக்கிறது. சென்னை நகரில் பூமிக்கடியில் எந்தக் காலத்திலேயோ ஜலதாரைக் குழாய்கள்-மொத்தம் 487 மைல் நீளம்-குறுக்கும் நெடுக்கும் போட்டிருக்கி றார்கள். வீடுகளிலிருந்து கழிவு நீரை வெளி யேற்றத்தான் இவை பயன்படும். மழைத் தண்ணீர் வெளியேறத் தனி ஏற்பாடுகள் இப் போதுதான் ஆரம்பமாகி யிருக்கின்றனவாம். இன்னும் ஏழெட்டு வருஷங்களில் இந்தத் திட்டம் நிறைவேறிவிடுமாம். அப்புறம் குடை யில்லாமல் நடக்கலாம், ஜலதாரையில் திடீ ரென்று இறங்கி மறைய நேராது.

கோவி: அதோ உங்கள் 'சர்வண்ட்டு' குப்பு வருகிறான் மழையில் சொட்டச் சொட்ட......

அப்பு: உன்னை ஒரு காரியத்துக்கு அனுப் பினால் திரும்பி வர இவ்வளவு நேரமா? கொண்டுபோன குடை எங்கே?

குப்பு: அதைச் சொல்லத்தான் ஆரம்பித் தேன். அதற்குள் நீங்கள் மிரட்டவே...

அப்பு: விஷயத்தைச் சொல்லு. குடை என்ன ஆயிற்று?

கோவி: 'குடையது கைவிடேல்' என்று தெரியாமலா பெரியவர்கள் சொல்லியிருக் கிறார்கள்.

அப்பு: பெரியவர்கள் சொன்னது 'குண மது' 'குடையது அல்ல' சற்றுக் குறுக்கிடா தேயும்; குப்பு என்ன சொல்லுகிறே நீ!

குப்பு: எல்லாம் சீனனோடு சண்டை போடலாமென்று குடையை......

அப்பு: சீனனோடு சண்டையா?

கோவி: அட, ராமா! உள்ள தொல்லை போதாதென்று இந்தச் சீனன் தொல்லை வேறே நமக்கு எதற்கு? ஏற்கனவே உப்பு, புளி, மிளகாய், அரிசி, எண்ணெய் எல்லாம் விலை கப கப வென்று ஏறிவிட்டன.

அப்பு: புளி விலையைச் சொல்லு...!

கோவி: இந்த நெருக்கடியான எல்லைத் தகராறு வேளையில், நமக்கு என்னதான் ராணுவ பலம் இருந்தாலும் ஜனங்களின் ஆன்ம பலம்தான் முக்கியமென்று நேரு சொன்னதாக 'போஸ்ட்'டில் பார்த்தேன்.

அப்பு: ஜனங்களின் ஆன்ம பலத்தைத் தான் காங்கிரஸ்காரர்கள் தங்களுடைய சுய நலத்துக்காக அழித்து விட்டார்களே; இல்லா விட்டால் சீனனுக்கு இவ்வளவு துணிவு கொடுத்திருக்குமா, குப்புவைக் கூட வம்புக்கு இழுக்கும் அளவுக்கு?

குப்பு: நீங்கள் எந்தச் சீனனைக் கூறுகிறீர் கள்? இமயமலை எல்லையில் உட்கார்ந்து கொண்டிருக்கிறானே, அந்தச் சீனன் அல்ல, என்னுடன் வம்புக்கு வந்தது. மாணிக்கஞ் செட்டியார் கடைக்கு மளிகை வாங்க வரும் சீனனைத்தான் நான் குறிப்பிட்டேன்! தெரு வோடு போய்க் கொண்டிருந்த என்னை அழைத்து, குடையைச் சற்று இரவல் கேட் டான். போனால் போகிறதென்று கொடுத் தேன். அதை எங்கேயோ வைத்து விட்டு மறந்து விட்டானாம். இதனால் சீனனுக்கும், எனக்கும் பெரிய சண்டை, கடைத்தெருவில்.

கோவி: சீனன் தொலைத்த குடை என் கையிலிருப்பதுதானா, நன்றாகப் பார்!


குப்பு: ஆமாம்; ஆமாம்! இதுவேதான், இது உங்களிடம் எப்படி வந்தது?

கோவி: சீனனிடம் தான் இரவல் வாங் கிக்கொண்டு வந்தேன்.

அப்பு: நானும் மறந்து விட்டேன். உங்களிட மிருப்பது என் குடையேதான்! —'கொக்கி'

சுவைமிக்க சாக்லேட்டுகளை
எல்லோரும் விரும்புகின்றனர்...






அவைகளை
ஸாத்தே
தயாரிக்கிறார்கள்




ஸாத்தே பிஸ்கட் அண்டு சாக்லேட கம். லிட்., பூனா-2

Heros' 108. TAM

















தஞ்சையில் பூர்வாங்க மகாநாடு

தஞ்சையில் சென்ற 1ம் தேதி காலை சுதந்திரக் கட்சியின் பூர்வாங்க மகாநாடும், மாலையில் திலகர் மைதானத்தில் பொதுக் கூட்டமும் நடைபெற்றன.


1. மகாநாட்டுக்கு வந்திருந்த பிரதிநிதிகளும் பொதுமக்களும். 2. திரு எம்.ஆர். மஸானி பேசுகிறார். 3. தலைவர் ஆசார்ய ரங்கா பேசுகிறார். 4. தஞ்சைத் தெருக்களில் மக்கள் ராஜாஜி வருகையை ஆவலோடு எதிர்நோக்குகின்றனர். 5. தலைவர்கள் மகாநாட்டுக்கு வருகின்றனர், 6. தஞ்சை ஜில்லா சுதந்திரக் கட்சி கமிட்டியினர்.







7. திரு ரங்காவும் திரு மணாளியும் ராஜாஜியின் பேச்சில் ஏதோ ரஸமான பகுதிக்குக் கைதட்டி மகிழ்கிறார்கள். 8. தஞ்சை ரோட்டரி கிளப். ராஜாஜிக்கும் ரங்காவுக்கும் நடுவில் நிற்பவர்தான் ரோட்டரி கிளப் தலைவர் திரு இருதயசாமி. 9. வக்கீல்கள் சங்கத்தில் திரு சடகோபாச்சாரியார் ராஜாஜியை வரவேற்றுப் பேசுகிறார். 10. திரு சுயம்பிரகாசம் அவர்கள் மகாநாட்டில் வரவேற்புரை நிகழ்த்துகிறார். 11. நபிகள் நாயக பிறந்ததின விழாவில் ராஜாஜி. 12. ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஏராளமாகக் குழுமியிருந்தனர். 13. பொதுக் கூட்டத்துக்கு அமைக்கப்பட்டிருந்த அலங்காரமான பந்தல். 14. பொதுக் கூட்டத்தின் ஒருபகுதி














ஸ்ரீமான் கூனனின் விசித்திர வியாதி

தான் கீல்வாதத்தினால் அவதிப் படுவதாக எண்ணினான் ஸ்ரீமான் கூனன். டாக்டரிடம் ஓடினான். அவனை நன்கு பரிசோதித்துப் பார்த்துக் கணித்தாரே தவிர அந்த விசித்திர வியாதியை அவரால் கண்டுபிடிக்க முடிய வில்லை. திடீரென அவருக்கு ஒரு யோசனை உதித்தது. அவன் தோள்பட்டைகளில் ஏற்பட்ட கோணலின் காரணம், சுருங்கிப் போனதால் இறுக் கமான அவன் கோட்டுதான்! தம் அபிப்பிராயத்தை வெளி யிட்டார்: ''நீங்கள் வாங்கும் ஒவ்வொரு கஜத் துணியிலும் 'ஸான்போரைஸ்ட்' முத்திரை இருக்கிறதா என்று கவனித்து வாங்கினால் பல சலவைக ளுக்குப் பிறகும் உங்கள் ஆடை கள் உடம்புக்குப் பொருந்தாத படி ஒருபோதும் சுருங்காது. இம்மாதிரி மர்ம வியாதியும் உங்களைப் பிடிக்காது.''

லேபில் மேல் **·SANFORIZED·**

என்ற முத்திரையுள்ளதா என்று பாருங்கள். உங்கள் உடைகள் உடம்புக்குப் பொருந்தாதபடி சுருங்காது.

'ஸான்போரைஸ்ட்' என்ற ரிஜிஸ்தர் செய்யப்பட்ட டிரேட் மார்க்கின் சொந் தக்காரர்களான க்ளுயட் பீபாடி அண்டு கோ. இன்கார்ப்பொரேட்ட் (வரை யறுக்கப்பட்ட பொறுப்புடன் யு. எஸ். ஏவில் இணைக்கப் பெற்றது) அவர்க ளால் இந்த விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது. இந்தக் கம்பெனியின், 'சுருங் காது' என்பதற்கான கடும் நிபந்தனைகளுக்குட்பட்டுத் தயாரிக்கப்படும் துணி களில் மட்டுமே 'ஸான்போரைஸ்ட்' டிரேட் மார்க் உபயோகிக்க அனும திக்கப் படுகிறது.

விவரங்களுக்கு: 'ஸான்போரைஸ்ட்' ஸர்வீஸ், 95, மெரீன் டிரைவ், பம்பாய்-2.

SAN-58-SA-TAM

காந்திஜியும் சோஷலிஸமும்

ராஜாஜி

சுதந்திரக் கட்சியைப் பின்பற்றினால் பாரத தேசம் அதோகதி அடைய வேண்டியதுதான் என்று நேருஜி பயமுறுத்திப் பேசினார். சுதந்திரக் கட்சியின் 21 கொள்கைகளை அவர் படித்திருக்க வேண்டும். இந்த 21 கொள்கைகளில் எந்தக் கொள்கை தேசத்தை அழிவில் ஆழ்த்திவிடும் என்பதை அவர் சொல்ல வேண்டும்.

அந்தக் கொள்கைகளில், இன்றைய சர்க்கார் கடைப்பிடிக்கும் முறைகள் உணவு உற்பத்தியைப் பாதிக்கும் என்று குறிப்பிட்டிருக்கிறது. எல்லா முன்னேற்றங்களுக்கும் அடிப்படைக் காரணமான மக்களின் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் சர்க்காரின் முறைகள் கொன்றுவிடுகின்றன என்றும் சுதந்திரக் கட்சிக் கொள்கைகளில் குறிப்பிட்டிருக்கிறது. இதை யாரும் மறுப்பதற்கில்லை.

நேருஜி நிலங்கள் துண்டாடப்படுகின்றன என்று சில சமயம் குறைப்படுகிறார். விவசாயத்துக்கு, நல்ல முறையில் சாகுபடி செய்வதற்குப் போதிய பெரிய வயல் பரப்பு வேண்டும் என்றும் அடிக்கடி சொல்லப்படுகிறது. இருந்தாலும் நேருஜி நில உச்சவரம்புச் சட்டங்களை ஏவுகிறார். அவற்றின்படி ஒரு குடும்பம் 30 ஏக்கர் நிலம் வைத்துக் கொள்ளலாம். அப்படியானால் அந்த நிலம் அடுத்த தலைமுறையில் தலைக்கு ஐந்து ஐந்து ஏக்காராகவும் அதைவிடக் குறைந்த அளவிலும் பிரிந்து போய்விடும் என்பதும் அதற்கு அடுத்த தலைமுறையில் அதைவிட இன்னும் சிறு பகுதிகளாகப் பிரிந்து போய்விடும் என்பதையும் உணரவில்லையா? நேருஜியின் உச்சவரம்புத் திட்டம், பொருளாதார ரீதியில் நஷ்டம் விளைவிக்கும் திட்டம் என்பது அவருக்குத் தெரியவில்லையா?

மூத்தவனுக்கே தந்தையின் ஸ்தாவர சொத்து என்று இங்கிலாந்தில் இருப்பதுபோல் இந்தியாவிலும் சட்டம் இருக்கிறது என்ற பிரமையில் இருக்கிறாரோ? ஏற்கனவே பரம்பரைச் சொத்துக்கள் பாகப் பிரிவினையாகிச் சிதறப்பட்டு வருகின்றன. பெண் வாரிசுகளுக்கும், சொத்துரிமை கொடுக்கப்பட்டுப் பண்ணைகள் சிதறிப் போகும் வேகத்தை இரட்டித்துவிட்டதை மறந்து விட்டாரா?

பண்ணைகளுக்கு உச்சவரம்பு கட்டுவதற்கு இப்பொழுது என்ன அவசியம் வந்தது?

ஒரு குடும்பத்திலுள்ள சகோதரர்களும், சிற்றப்பா பெரியப்பா பிள்ளைகளும் சேர்ந்து நிலத்தில் பாடுபட விரும்பாமல், ஒவ்வொருவரும் தங்கள் பாகத்தைப் பிரித்துக் கொடுக்க வேண்டும் என்றும், ஒவ்வொருவரும் தங்கள் சொந்த முறையில் விவசாயத்தில் பங்கு கொள்ள வேண்டும் என்றும் துடிக்கும்போது, ஒருவித உறவுமில்லாத பலரைக் கொண்டு பலாத்காரம் செய்தோ அல்லது ஆசைகள் காட்டியோ கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தினால் அந்த விவசாயம் வெற்றிகரமாக நடக்குமா? பொருளாதார வகையில் லாபம் தரக்கூடிய பெரிய பண்ணைகளாக இருக்க வேண்டும் என்பது நல்ல கொள்கைதான். ஆனால் நமது வாழ்க்கை முறையையும் நம் விவசாயிகளின் நிறைமையையும், சிறிய நிலத்திலிருந்து அதிக பட்சம் மகசூல் எடுக்கும் சாமர்த்தியம் பெற்றவர்கள் என்பதையும் உணர்ந்தவர்கள் நேருஜி போற்றிவரும் திட்டத்துக்குச் சம்மதம் அளிக்க மாட்டார்கள்.

ஜவாஹர்லால் நேரு பலாத்காரக் கூட்டுப் பண்ணை ருஷ்யாவில் நடைமுறையிலிருப்பது போல் நம் நாட்டிலும் ஏற்படுத்த வேண்டுமென்றால் அதை அவர் பகிரங்கமாகச் சொல்லிவிடுவதுதான் நல்லது. அப்போது பிரச்னை மிகத் தெளிவாகிவிடும். அதற்குப் பதில் 'கூட்டுறவு' என்ற பரந்த பொருள் கொண்ட ஒரு நல்ல வார்த்தையை உபயோகப்படுத்தி, இந்தக் கொள்கைக்கு முற்றும் மாறுபட்ட காரியத்தைச் சாதித்துக் கொள்ளப் பார்ப்பது சரியல்ல! இப்போது சர்க்கார் அனுசரிக்கப் போகும் திட்டப்படி என்ன நடக்கும் என்றால் முதலில் நிலச் சொந்தக்காரர்களிடமிருந்து நில உரிமைகளைச் சர்க்கார் எடுத்துக் கொள்வார்கள். அதை ஏழைகளுக்குப் பிரித்துக் கொடுப்பது என்பது நடக்காது. ஆகவே, பலாத்காரக் கூட்டுப் பண்ணை முறைதான் சர்க்காருடைய நோக்கம். பலமான மத்திய சர்க்கார் கொண்ட ஏதேச்சாதிகார முறைக்கு இவையெல்லாம் அவசியம். இவ்வாறு மக்களின் சொத்துக்களையும் உரிமைகளையும் சர்க்காரின் உடைமையாக்கிக் கொள்ளும் முறைக்குத்தான் சோஷலிஸம் என்று பெயர்.

கொஞ்சம் பழைய சரித்திரத்தைப் படித்தால் தெரியவரும், காங்கிரஸ் காரியக் கமிட்டி தன் கொள்கைகளை நிர்ணயம் செய்யத் தொடங்கும் போதெல்லாம் காங்கிரஸில் உள்ள சோஷலிஸக் குழு தனது கொள்கைகளை நுழைக்கப் பார்த்தது. அப்போதெல்லாம் காந்திஜி அவற்றை ஒதுக்கிச் சமாளித்து வந்தார். காங்கிரஸை சோஷலிஸம் அண்டவிடாமல் பார்த்து வந்தார். சோஷலிஸக் குழுவினர் அவரிடம் வந்து பேசியபோதெல்லாம் ஒப்புரவு முறையையே வற்புறுத்தி வந்தார். சோஷலிஸத்தை ஒப்புக் கொள்ளவில்லை. இக் கொள்கை அவர் உள்ளத்தில் ஈசாவாஸ்ய உபநிஷத்தின் முதல் மந்திரத்திலிருந்து எழுந்தது. இக் கொள்கையையே அவர் வாழ்க்கையின் எல்லா அம்சங்களுக்கும் வற்புறுத்தி வந்தார்.

''மனமாற்றத்தை ஏற்படுத்துவதில் சீர்திருத்தவாதிகள் நம்பிக்கை விழந்தபோது 'சோஷலிஸம்' என்ற முறை பிறந்தது. சோஷலிஸ்டுகள் எழுப்பும் பிரச்னையைத் தீர்ப்பதில் நானுமே ஈடுபட்டிருக்கிறேன். ஆனால் என் வழி அஹிம்சை வழி. கலப்படமற்ற தூய அஹிம்சை வழி!'' என்று 20-2-1937-ல் மகாத்மாஜி ஹரிஜன் பத்திரிகையில் எழுதினார்.

"காங்கிரஸினுள் சோஷலிஸக் கட்சி எழுவதை வரவேற்கிறேன். ஆனால் அவர்கள் அறிக்கையில் கண்ட திட்டம் எனக்குப் பிடிக்கவில்லை. அது பிரத்யட்ச நிலையைப் புறக்கணித்து எழுதப்பட்டதாகத் தோன்றுகிறது. அவர்கள் கொள்கைகள் மக்களின் மேல் நம்பிக்கை வைக்காமல் அவநம்பிக்கை மீது எழுப்பப்பட்டுள்ளன. அவையெல்லாம் எனக்குப் பிடிக்கவில்லை. முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் என்றும் பகை இருந்தே தீர வேண்டும், உயர்நிலை மக்களுக்கும் ஏழைகளுக்கு மிடையே பூசல் அவசியம் இருந்தே தீரும் என்றெல்லாம் அவர்கள் கருதுகிறார்கள். மக்கள் பரம்பர நன்மையை மனத்தில் கொண்டு தொழில்களில் ஈடுபடமாட்டார்கள் என்றும் எண்ணுகிறார்கள். எனது நீண்ட நாளைய அனுபவம், சோஷலிஸ்டுகளின் இந்தக் கருத்துக்கு முற்றும் மாறுபட்டதாக இருக்கிறது" என்று காந்திஜி காங்கிரஸ் சோஷலிஸ்ட்டுகள் 1934-ல் கேட்டிருந்த கேள்விகளுக்குப் பதில் அளித்தார்.

"நிலச் சொந்தக்காரர்களுக்கும் சாகுபடி செய்யும் குடியானவருக்குமிடையே நியாய உறவும் சட்ட திட்டங்களும் ஏற்படுத்த வேண்டும் என்ற கருத்துடையவன்தான் நானும். ஆனால், நிலச் சொந்தக்காரனை அடியோடு ஒழித்து, அவனுடைய நிலத்தையெல்லாம் பறித்துக் கொள்ளும் முறைக்கு நான் உடன்பட முடியாது!" என்று அவர்கள் கேள்விகளில் ஒன்றுக்குப் பதில் அளித்தார்.

இப்படி காந்திமகான் கொடுத்த பதில்களுக்கெல்லாம் மாறுபட்ட கருத்தை, இன்றையக் காங்கிரஸ் அனுஷ்டித்து வருகின்றது. அதிலும் நமது பிரதமர் தமது சுற்றுப் பிரயாணத்தைப் பயன்படுத்திக் கொண்டு வெகு வேகமாகவும் உணர்ச்சியோடும் கட்சிப் பிரசாரம் செய்து வருகிறார்.

"நான் என்னை சோஷலிஸ்ட் என்று சொல்லிக் கொள்ளுகிறேன். எனக்கு அந்த வார்த்தை பிடித்திருக்கிறது. ஆனால் சோஷலிஸ்ட்டுகள் பிரசாரம் செய்யும் அதே சோஷலிஸத்தை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன்!" என்று சொன்னார் காந்திஜி. சோஷலிஸ்டுகள் தாங்கள் கொண்ட கருத்தைக் குறிக்க இந்த வார்த்தையை ஓயாமல் உபயோகப்படுத்தி உபயோகப்படுத்திக் கெடுத்து விட்டார்கள். சோஷலிஸம் என்பதற்குக் காந்திஜி என்ன பொருள் கொண்டாரோ, அந்தப் பொருளில் இனி உபயோகப்படுத்த இடமில்லாமல் போய் விட்டது.

"எதுவும் சர்க்கார்தான் உற்பத்திசெய்ய வேண்டும் என்ற நிலை ஏற்பட்டால், மக்கள் தார்மிக உணர்ச்சி இழந்து, ஞான சூன்யங்களாக விளங்குவார்கள். அவர்கள் தங்கள் பொறுப்புக்கள் என்னவென்பதை மறந்து போவார்கள். அதனால் நான் பறிமுதல் முறையை ஒப்புக்கொள்ள மாட்டேன். உங்கள் ஆலைகளை நீங்களே வைத்துக் கொண்டு நிர்வாகம் செய்யுங்கள் என்று முதலாளிகளுக்குச் சொல்வேன். உங்கள் நிலங்களை நீங்களே வைத்துக் கொண்டு பண்ணை நடத்துங்கள் என்று ஜமீன்தார்களுக்கும் சொல்வேன். அவர்களிடம் இருந்துவரும் சொத்துக்களுக்கு அவர்களையே ஒப்புரவு கார்யஸ்தர்களாக வாழும்படி செய்வேன்" என்று காந்திஜி சொன்னார்.

"சோஷலிஸ்டுகளும் கம்யூனிஸ்டுகளும் பொருளாதார சமத்துவம் உண்டாக்க மக்களிடைத் துவேஷ உணர்ச்சி உண்டாக்குவதே வழி என்று நம்பியிருக்கின்றனர்" என்று மிக வருத்தத்துடன் காந்திஜி சொன்னார். ஆனால் காந்திஜிக்குத் துவேஷ முறையை நினைத்தாலே அருவருப்பு! ஆனால் நாமோ இன்று துவேஷ உணர்ச்சியை வளர்ப்பதும் தூண்டிவிடுவதும் நியாயம் என்று பகிரங்கமாகச் சொல்லும் அளவுக்கு வந்து விட்டோம். ஸ்ரீமதி இந்திராகாந்தி சமீபத்தில், சந்திகர்—அ. இ. கா. க. கூட்டத்தில் இந்தத் துவேஷம் சமுதாயத்துக்கு அவசியம், இன்றியமையாதது என்று சொல்லி விட்டார். இதுதான் இன்றையக் காங்கிரஸ் திட்டங்களின் மிக மோசமான அம்சம்.

"மனிதன் தன்னைச் சமுதாயத்தின் தொண்டன் என்று கருதிக் கொண்டு, பணம் சம்பாதித்து, அந்தச் சமுதாயத்துக்காகச் செலவழித்தானானால், அந்தச் சம்பாத்தியத்தில் தூய்மை ஏற்பட்டு விடுகிறது. அவன் முயற்சியில் அஹிம்சையும் இருக்கிறது. இத்தகைய வாழ்க்கை முறைக்கு மக்களின் மனம் திரும்பினால், அப்பொழுது சமுதாயத்தில் எத்தகைய கசப்புமின்றி அமைதியாக மாறுதல் ஏற்பட்டு விடும். மனிதப் பண்பு இப்படி எங்கேயாகிலும், எப்பொழுதாகிலும் மாறியிருக்கிறதா, இதற்குச் சரித்திரச்சான்று காட்ட முடியுமா என்று என்னைக் கேட்கலாம். இத்தகைய மாறுதல்கள் தனிநபர்களின் வாழ்வில் ஏற்பட்டுத்தான் இருக்கின்றன. "சமுதாயம் முழுதிலும் இத்தகைய மாறுதல் ஏற்பட்டிருக்கிறது என்று சுட்டிக்காட்ட முடியாமல் இருக்கலாம். அஹிம்சை முறையில் சமுதாயத்தை மாற்றும் ஒரு பெரும் முயற்சி இதுவரை நடக்கவில்லை என்பதுதான் இதன் பொருள். அஹிம்சை என்பது நிச்சயமாகச் சமுதாயத்தின் ஓர் அம்சம்தான். இதை மக்களுக்கு எடுத்துச் சொல்லி அவர்கள் மனத்தில் பதியவைப்பது என் வாழ்க்கையில் நான் மேற்கொண்டுள்ள முக்கிய பணியாகும். இம்முறையில் சமுதாயத்தை மாற்ற முடியும் என்பதே நான் மேற்கொண்டுள்ள சோதனை முயற்சி. இது அற்புதங்கள் நிகழும் யுகம். அதனால் இந்த யுகத்தில் ஒரு விஷயமோ, ஒரு கருத்தோ புதியதாக இருந்தால் அதனாலேயே அது பயனற்றது என்று யாரும் சொல்லலாகாது. கனவில் காண முடியாதது, நேரில் நிகழ முடியாதவையெல்லாம், சிற்சில சமயம் நிச்சயம் நிகழும் என்று சொல்லுகிறேன்."

இவையெல்லாம் காந்திஜி கூறிய மொழிகள்.

காந்திமகான் கூறிய இந்தப் புரட்சியை உண்டாக்கவே சுதந்திரக் கட்சியின் திட்டங்கள் கொண்டு வரப்பட்டன. ஜவாஹர்லால் நேருஜி எங்களைப் பிற்போக்காளர்கள் என்று குறிப்பிட்டார். ஆனால் இது பிற்போக்குவாதிகளின் திட்டமல்ல; புரட்சித் திட்டம்.

நேருஜி கடைப்பிடிக்கும் திட்டங்களுக்கு எதிராக நாங்கள் கிளர்ச்சி செய்கிறோம்

என்பது உண்மை. அதனால் நம்முடைய வளர்ச்சி பிற்போக்கு வளர்ச்சியாகாது. நேருஜியின் சோஷலிசக் கொள்கையைக் காந்திஜி எடுத்த எடுப்பிலேயே புறக்கணித்து விட்டார் என்பது, மேலே கொடுக்கப்பட்ட காந்தியடிகளின் வாசகங்களிலிருந்து நன்கு விளங்கும். எதிர்ப்பெல்லாம் பிற்போக்கு ஆகிவிடாது. தற்போது முற்போக்குத் திட்டங்கள் என்ற பெயரில் அழிவுப் பாதையில் கொண்டு செல்லும் திட்டங்களிலிருந்து நாட்டை தடுத்துக் காப்பாற்றுவதே சுதந்திரக் கட்சி இயக்கத்தின் நோக்கம்.

''எத்தனை பேர் ஒப்புரவு தர்மத்துக்கு உட்பட்டு நடப்பார்கள் என்ற கேள்வி கேட்க வேண்டாம். தர்மகர்த்தாக் கொள்கை சத்தியம் என்றால், அந்தக் கொள்கைப்படி பல பேர்கள் வாழ்ந்தாலும் சரி, ஒரே ஒரு மனிதர் வாழ்ந்தாலும் சரியே. எண்ணிக்கையைப் பற்றி நமக்கு அக்கறை யில்லை ; அந்தத் தர்மம் பரவும்'' என்றார் காந்திஜி.

ஆகவே, காந்திஜி சொன்னாற்போல் இப்பொழுது அடிப்படைக் கேள்வி என்னவென்றால், நாம் அஹிம்சைக் கொள்கையை அங்கீகரிக்கிறோமா? சத்தியத்தில் நம்பிக்கை வைத்திருக்கிறோமா என்பதுதான்.

''சர்க்கார் வசம் எல்லா அதிகாரங்களும் குவிவதை நான் விரும்ப மாட்டேன். அதற்கு மாறாக, ஒப்புரவு பரவுவதையே நான் விரும்புவேன். ஏனெனில் சர்க்கார் உடைமையிலிருந்து விளையும் தீங்கைவிடத் தனி மனிதன் உடைமையினால் விளையும் தீங்கு மிகக் குறைவாக இருக்கும் என்பது என் அபிப்பிராயம்.'' இதைக் காந்திஜி 3-12-1938-ம் ஆண்டு ஹரிஜனில் எழுதினார். இக் கொள்கையையொட்டி மற்றொரு முக்கியமான விஷயத்தையும் குறிப்பிட்டார். ''நான் அஹிம்சையைத் தனி மனிதனிடம் இருக்க வேண்டிய நற்குணம் என்று மட்டும் கருதவில்லை. அதை ஒரு சமுதாயப் பண்பாகக் கருதுகிறேன். எல்லா நற்குணங்களையும் வளர்த்துக் கொள்வதைப் போல் இதையும் வளர்த்துக் கொள்ள வேண்டியதுதான். பரஸ்பரம் அஹிம்சையைக் கடைப்பிடிப்பதாலேயே சமுதாயத்தில் பல காரியங்கள் நிகழ்கின்றன. சமூகப் பணிகளையும் கட்டுப்படுத்திச் செவ்வனே நடத்திச் செல்வது அஹிம்சைதான். நான் கோருவது என்னவென்றால், இந்தப் பண்பைத் தேசிய விவகாரங்களிலும் கடைப்பிடிக்கும் அளவுக்கு விரிவுபடுத்த வேண்டும் என்பதுதான்.'' (ஹரிஜன் 7-1-39)

''என்னுடைய தர்மகர்த்தாக் கொள்கை ஒரு தாற்காலிக நடவடிக்கையல்ல. ஏதோ ஒன்றை மூடி மறைக்க ஏற்பட்டதல்ல. இது நிச்சயம், மற்ற எல்லாக் கொள்கைகளையும் விட இக்கொள்கை நீடூழி வாழும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. நமது சமயங்களிலும் தத்துவங்களிலும் இதற்குப் பூரண ஆதரவு உண்டு. இதைத் தவிர வேறு எந்தக் கொள்கையும் அஹிம்சைக் கொள்கைக்கு ஒத்தாற்போல் இல்லை.'' (ஹரிஜன் 16-12-39)

காந்திஜி 1935ம் ஆண்டிலேயே ''நான் சர்க்காரின் அதிகாரங்கள் வளர்வதைப் பார்த்து பயப்படுகிறேன். இது மேம்போக்காகப் பார்க்கும்போது (ஏழைகளைப் பணக்காரர்கள்) சுரண்டுவதைக் குறைப்பது போல் தோன்றினாலும், முடிவில் எல்லா முன்னேற்றங்களுக்கும் மூல காரணமான தனி மனிதனின் ஊக்கத்தையும் தனித் தன்மையையும் கொன்றுவிடும்!'' என்று சந்தேகத்துக்கிடமின்றி எச்சரிக்கை செய்திருக்கிறார்.

''எல்லா அதிகாரங்களும் ஒரே ஸ்தானத்தில் குவித்து நடத்தும் அரசாங்கத் திட்டம் சமுதாயத்தின் அஹிம்சைக் கொள்கைக்கு முற்றிலும் மாறுபட்டது!'' (ஹரிஜன் 18-1-1942)

இக் கருத்துக்களெல்லாம் அன்றைய பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராகப் பேசப்பட்டதல்ல. பொதுவாகத்தான் காந்திஜி சொன்னார். ஆனால் எதிர்காலத்தை உற்று நோக்கிச் சொன்னாற்போல் தீர்க்கதரிசனத்துடன் அமைந்துள்ளன. இந்த வார்த்தைகளில் பொதிந்துள்ள உண்மையை இன்று கண்முன் காண்கிறோம். சமீபத்தில் ராஜஸ்தானத்தில் பஞ்சாயத்துக்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டதாக ஒருநிகழ்ச்சி நடைபெற்றது. இது வெறும் கண் துடைப்பு! சோவியத் நாட்டில் ஜனநாயக ஆட்சி நடைபெறுவதாகவும், சோவியத் அதிகாரங்கள் மக்களுக்குப் பரவலாக வழங்கப்பட்டுள்ளதாகவும் 1936 ல் ஜவாஹர்லால் நேரு அவர்கள் மிக உற்சாகமாகப் பேசினார் அல்லவா? அது எவ்வளவு உண்மையோ அந்த அளவுக்குத்தான் இவையும் உண்மை.

1946ல் காந்திஜி லூயிபிஷர் அவர்களிடம் சோஷலிசம் பற்றி மிகச் சுருக்கமாகவும் தெளிவாகவும் கூறி விட்டார். ''சோஷலிசம் ஒன்று எதேச்சாதிகார ஆட்சியாக இருக்க முடியும், அல்லது வெறும் புஸ்தக வேதாந்தமாகத்தான் இருக்க முடியும்!'' என்றார்.

சமீபத்தில் ஆந்திர நாட்டில் ஜவாஹர்லால் நேரு ''நாம் ஏழைமையை எதிர்த்துப் போர் துவக்கியிருக்கிறோம். ஆனபடியால் யுத்தகாலத்தைப் போல் எல்லா அதிகாரங்களும் மத்திய சர்க்காருக்கு வழங்கப்பட வேண்டும்'' என்றார். எவ்வளவோ மூடிமறைக்கத்தான் பார்க்கிறார்கள். இருந்தாலும் எப்படியோ உண்மை வெளிப்படத்தான் செய்கிறது. திட்டம் என்ற பெயர் வைத்துக்கொண்டு, எல்லா நடவடிக்கைகளையும் மத்திய சர்க்காரிலிருந்து நடத்துவதற்கு வேண்டிய எதேச்சாதிகாரங்களைப் பெற 'ஏழைமையின்மீது போர்' என்று ஒரு கற்பனை கற்பிக்கிறார்கள்.

'யுத்தகால முறைகள்' அனுஷ்டிக்க வேண்டும் என்றெல்லாம் வார்த்தைகளை உபயோகித்தால் மக்கள் கண்மூடித்தனமாக சர்வாதிகாரத்துக்குப் பணிந்து போவார்கள் என்று இப்படிப் பேசுகிறார்கள். எதிர்த்து வரும் ராணுவப் படையின் மீது போர் தொடுப்பதற்கும் வறுமையின் மீது போர் தொடுப்பதற்கும் சம்பந்தமே இல்லை. ஹிம்சைக்கும் அஹிம்சைக்கும் எவ்வளவு வேறுபாடு உண்டோ, அவ்வளவு வேறுபாடு உண்டு.

வறுமையின்மீது போர் தொடுப்பதற்கு எதேச்சாதிகாரம் அவசியமே இல்லை.


டி.எஸ்.ஆர் & கோ
கும்பகோணம்
Padmini Priyadarssini
"GOKUL"
SANTOL
TOILET POWDER
T.S.R'S
"GOKUL"

பாவம் ராஜாராமன்!

நிர்மல்

ஓடிப்போனவனுக்கு ஒன்பதாம் இடத்தில் ராஜா !

இந்த வாக்கியம் ராஜாராமனின் மனத்தில் நன்ருக ஊறிவிட்டிருந்தது. அவனைப் பொறுத்த வரையில் ராஜா என்ற அளவுக்கு அதிர்ஷ்டம் வந்திராவிட்டாலும் பொறுப்பும், கவலையும் அற்ற ஜீவனத்துக்கு அவனுக்கு வழி அமைந்து விட்டது.

ஒரு சாதாரண ஏழைக் குடும்பத்தில்தான் அவன் பிறந்து வளர்ந்தான். அவனது தாய் அவனது நான்காவது வயதிலேயே காலமாகி விட்டாள். வழக்கம்போல் வந்து சேர்ந்த சித்தியும் நமது ராஜாராமனுக்குக் கொடூரமானவளாகவே அமைந்தாள்.

அடி, உதை, பூசை இவைகளையே தனது அன்பளிப்பாக அவனுக்கு ஈந்து மகிழ்வித்து வந்தாள் சித்தி.

பிஞ்சு மனத்தில் என்னதான் பட்டதோ ?

திடீர் யோசனை தோன்றியது.

ராஜாராமன் தனது பன்னிரண்டாம் வயதில் தன் சொந்த வீட்டை விட்டு வெளியேறிஞன். வெளியேறிஞன் என்பதை விட ஓடிப் போஞன் என்று சொன்னால்தான் தகும்.

அன்று கிளம்பியவன்தான் ! இன்று வரையில் அவன் வீடு திரும்பவில்லை.

ஆனல் அதற்குள் அவனிடம் என்ன மாறுதல் !

முதலில் ஏதோ லாரி கம்பெனி ஒன்றில் 'க்ளீன'ராகப் புகுந்தான். பின்னர் 'மெக்கானிக்'காக மாறிஞன். கடைசியில் 'லைசென்ஸ்' பெற்ற 'டிரைவர்' ஆகிவிட்டான். அவன் பார்க்காத லாரி இல்லே. ஒட்டாத கார் இல்லே. லாரி சர்வீஸ், பஸ், தனிப்பட்டவர்களின் கார் இவை அவன் ஆண்டுவந்த சொத்துக்கள்.

கொஞ்ச நாட்களுக்கு முன்னுல்தான் சென்னையில் அவனுக்குத் தெரிந்தவர்கள் சிலர் அவனை நிரந்தரமாக டாக்ஸி டிரைவர் ஆக மாறும்படி யோசனையும், சந்தர்ப்பமும் அளித்தனர். ஆனல் அவன் அதற்கு ஏனே இசையாமல் வேறு யாரோ ஒருவரின் வார்த்தைகளினல் மதுரையில் இருக்கும் நீலமேகம் பிள்ளை என்பவரின் 'வாக்ஸா'லுக்குச் சாரதியாக ஒத்துக்கொண்டான்.

ராஜாராமனுக்கு வரவரத் தனது ஏகாந்த வாழ்க்கையின் மீதும், சென்னை நகரின்மீதும் இலேசாக வெறுப்புத் தட்ட ஆரம்பித்து விட்டது. அவனுக்கு அதனல் இந்த இடமாறுதல் தேவையாகவே தோன்றியது.

இப்போது ராஜாராமன் நீலமேகம் பிள்ளையின் கறுப்பு வாக்ஸாலை அக்கறையுடன் துடைத்துக் கொண்டிருந்தான்.

"இந்தாங்க...உங்களைத்தான் !"

"என்னது ? என்னையா ?"

"ஆமாம்...காரை இங்கேயே நிறுத்திக்கிட்டுத் துடைக்கிறீங்களே, ஷெட்டிலே வைச்சிக்கிட்டுத் துடைக்கக் கூடாதா?"

ராஜாராமன் தலையை நிமிர்த்திஞன். அவன் கண்கள் உடனே மலர்ந்தன. ஒரே கணத்தில் அவன் மனத்தில் ஓர் எண்ணம் புகுந்து விட்டது.

'சந்தேகமே இல்லே! நமது இருபத்தியாறு வருஷ வாழ்க்கையில் எதிர்பாராமல் குறுக்கிடும் முதல் பெண் இவள்தான்!'

சட்டென்று தொண்டையைக் கனைத்துக் கொண்டு பேச ஆரம்பித்தான் ராஜாராமன்.

"ஏன்? இங்கே நிறுத்திக்கிட்டுத் துடைச்சா என்னவாம்? அழுக்குத் தண்ணீர் செடிகளுக்குப் போகட்டுமே என்று நினைச்சுத்தான் காரை இங்கேயே நிறுத்திக்கிட்டேன்..."

அதற்குள் அப் பெண் குறுக்கிட்டாள்.

"செடிகளுக்குத் தண்ணீர் விடறது என் வேலே. நான் அதைக் கவனிச்சிக்கிறேன். நீங்க காரை அப்படித் தள்ளிக்கிங்க..."

கையில் பக்கெட்டுடன் நிற்கும் அவள் அழகைப் பார்த்து ரசித்தான் ராஜாராமன்.

அவன் மனம் சற்று யோசித்தது.

'நீலமேகம் பிள்ளை, அவர் மனைவி, அவர்களது ஒரே மகன் சேகர் - ஆக இம்மூவர்தான் இந்த வீட்டில் இருப்பதாக நான் அறிந்தேன். இவள் யார் என்று எனக்குத் தெரியவில்லையே ?'

அவன் சிந்தனையைப் பட்டென்று கலைத்தவாறு தோன்றிஞள் எஜமானி அம்மாள்.

"இந்தா, பவானி! இன்னுமா செடிகளுக்குத் தண்ணீர் விட்டு முடியவில்லே...சீக்கிரம் வாம்மா...!"

பவானி என்னும் அந்தப் பெண் உடனே குனிந்த தலையுடன் பதில் அளித்தாள்.

"இல்லீங்கம்மா...அதோ அவர் காரைக் குறுக்கே வைச்சிக்கிட்டுத் துடைக்கிறாரேன்னுதான்..."

"ஓ, அப்படியா...இந்தாப்பா, டிரைவர்!"

ராஜாராமன் துடைப்பதை நிறுத்திவிட்டு எஜமானியை வினயத்துடன் பார்த்தான்.

"இதோ பார், அப்பா!... உன் பேரு என்ன ? வந்து..... வந்து..... ராஜாராமன் தானே ?"

"ஆமாங்க...!"

"சரி! இந்தக் காரை இங்கேயே வைச்சிக்கிட்டுத்தான் துடைக்கணுமாக்கும்... வேறு இடம் இல்லேயா, ராஜாராம் !"

"இல்லீங்க...வழிஞ்சு ஓடற தண்ணீர் இந்தச் செடிகளுக்குப் பாயட்டுமேன்னு நினைச்சுத்தான் இங்கே நிறுத்தினேன். வேணும்னுல் நான் இப்போதே காரை ஷெட்டுக்குக் கொண்டு போய் விடறேன்."

ராஜாராமன் காரை நோக்கி விரைந்தான்.

"கொஞ்சம் நில், ராஜாராம் !"

ராஜாராமன் எஜமானியை மீண்டும் ஒருமுறை திரும்பிப் பார்த்தான்.

'' இதோ பார்...நீ இந்த வீட்டுக்குப் புதிசு! அதனாலே இதெல்லாம் தெரிஞ்சுக்கணும்... இந்த வீட்டிலே யாருக்கும் ஒரு சிறு மனஸ்தாபமும் வரப்படாது. இந்தப் பெண் பவானி இந்த வீட்டிலே பதினைந்து வருஷமா வளர்ந்து வருது. அது எங்க வீட்டுப் பெண்போல. உன்மேலே ஏதாவது குறை சொல்றப்போல் நீ நடக்கக் கூடாது. ஆனால் அவளுக்கு இருக்கிற உரிமையும், சலுகையும் உனக்கும் உண்டு. தெரிந்ததா?'' என்றாள்.

பவானியை ஒருமுறை ஓரக்கண்ணால் பார்த்துவிட்டுப் பிறகு பதிலளித்தான் ராஜாராமன் :

'' அம்மா! அந்தப் பெண் உங்க சொந்த மகள் என்று சொல்றதானால் என்னை நீங்கள் உங்க சொந்த மகன் என்றே வைச்சிக்கலாம்! எங்களுக்குள்ளே தகராறு, குறைபாடு எதுவுமே வராது; போதுங்களா?''

'' நீ ரொம்ப நல்ல பிள்ளை!''

எஜமானி அம்மாள் சிரித்துக் கொண்டே உள்ளே போய் விட்டாள்.

ராஜாராமன் அழுக்குத் துணியை நன்றாகப் பிழிந்து விட்டுக் காருக்கருகே வந்து நின்றான். கிணற்றிலிருந்து நீர் எடுத்துக்கொண்டு பவானி வருவதைப் பார்த்து ரசித்தான்.

அவள் அருகில் வந்ததும், '' எஜமானி அம்மாள் மிகவும் நல்லவர். வீட்டு வேலைக்காரர்களுக்குள்ளே கூட எதுவும் பூசல் நிகழாதபடி இப்போதே எச்சரிக்கை செய்துவிட்டுப் போகிறார்கள்'' என்றான்.

அவள் பதில் பேசாமல் அவனைக் கடந்தாள். முகவாயைத் தடவிக் கொண்டே காரின் கதவைத் திறக்கப் பார்த்தான். அவன் மனத்தில் அவள்பிம்பம் நன்கு பதிந்துவிட்டது.

அப்போது அவன் முதுகில் யாரோ தட்டியது அறிந்து திரும்பினான்.

எதிரே சின்ன எஜமான் சேகர்!

பெரிதாக ஒரு கும்பிடைப் போட்டான் ராஜாராமன்.

'' ராஜாராமா!...நீ இப்போது என்னமோ சொன்னாயே...என்ன அது?'' என்றான் சேகர்.

'' ஒண்ணுமில்லீங்களே...''



''ஒன்னுமில்லையா...இதோ பார்! என்னமோ வேலைக்காரர்கள், சண்டை பூசல் என்று சொன்னயே!''

''ஓ! அதுங்களா? பாருங்க...பெரியம்மா இப்போத்தான் எனக்கு இதோ இந்தப் பெண்ணைப்பற்றிச் சொல்லிட்டுப் போனாங்க...இந்த வீட்டிலே யாருக்கும் எந்த விதமான மனஸ்தாபமும் இருக்கக் கூடாது என்று நல்ல வார்த்தைகளைச் சொன்னாங்க... அதைத்தான் நானும் திருப்பிச் சொன்னேன்!''

''நீ சொன்னதில் தப்பு எதுவும் இல்லே, அப்பா! ஆனால் இங்கே யாருமே வேலைக்காரர் இல்லே. ஏன்? நீயும் எங்கள் குடும்பத்தில் ஒருத்தனாகத் தாராளமாக இரு...உனக்கும் அந்த உரிமை இருக்கிறது! ஆனால் இனிமேல் இதோ இந்தப் பெண்ணை மட்டும் உன்னுடைய வேலைக்காரர் கூட்டத்தில் சேர்த்துக் கொண்டு விடாதே!''

''சரிங்க.''

பவானியும், சேகரும் இலேசாகச் சிரித்துக் கொண்டனர். ராஜாராமன் முகத்தில் அசடு வழியக் காரில் ஏறி உட்கார்ந்து 'ரிவர்ஸ் கியரை' இயக்கினான்.



மறுநாள் அதே நேரம்.

ராஜாராமன் காரை ஷெட்டில் நிறுத்தி விட்டுத் தோட்டத்தில் உலவிக் கொண்டிருந்தான்.

அவன் எதிர்பார்த்தது வீண் போகவில்லை. கையில் பக்கெட்டுடனும் குடத்துடனும் அன்ன நடையாக வந்துகொண் டிருந்தாள் பவானி.

அவள் கிணற்றடிக்குப் போய் நின்றதும், ராஜாராமன் அவள் அருகில் வந்தான்.

''நீ ரொம்பக் கஷ்டப்படற மாதிரி தெரியுது. நான் வேணும்னால் தண்ணீர் இழுக்கிறேன். நீ எடுத்துக் கொட்டு'' என்று கூறியவாறே உரிமையுடன் அவள் கையிலிருந்த தாம்புக் கயிற்றைப் பற்றினான். பவானியும் பதில் பேசாமல் சற்று நகர்ந்து கொண்டாள்.

ஓர் ஐந்து நிமிஷம் அவன் இழுப்பதும் அவள் கொட்டுவதுமாகப் போயிற்று.

ராஜாராமனுக்குப் பவானியைப் பற்றிய முழு விவரங்களை அறிய ஆவல் அதிகரித்தது. ஆனால் அதைப் பற்றி அவளிடம் கேட்பதற்குத் தான் அவனுக்குத் தைரியம் எழவில்லை கடைசியில் துணிந்து கேட்டுவிட்டான

''நீ தப்பா நினைச்சுக்கல்லேன்னு நான் ஒன்று கேட்கறேன். நீ பதில் சொல்லுவாயா?''

''நீங்க என்ன கேட்கப் போறீங்க?''

''ஒன்னுமில்லே... உனக்கு இந்த வீட்டிலே ரொம்ப மதிப்பும் மரியாதையும் இருக்கிற மாதிரி படுது. அதனாலே 'நீ யாரு? இந்த வீட்டிலே இவங்களோடே எவ்வளவு நாட்களாக இருக்கே'ன்னு தெரிஞ்சுக்க ஆசைப்படறேன்!'' என்றான்.

''நீங்க இந்த வீட்டு டிரைவர். நான் இந்த வீட்டு வேலைக்காரப் பெண்.'' நீங்கள் வந்து சேர்ந்து நாலு நாட்களாகின்றன. நான் இங்கே வந்து சேர்ந்து பதினேந்து வருஷங்களாகின்றன.''

''சரிதான்! எஜமானி அம்மாளுக்குப் பெண் குழந்தை எதுவும் இல்லாததனாலே உன்னைத் தன் சொந்த மகள் போல் பார்த்துக்கிறாங்க! அப்படித்தானே!'' என்று ராஜாராமன் அதிசயத்துடன் கூறினான்.

''அப்படித்தான் வைச்சுக்குங்க.''

''ஆமாம்! இவ்வளவு நாளா நீ இங்கேயே இருக்கிறதாகச் சொல்கிறாயே... உன் அம்மா, அப்பா யாரும் உன்னை வந்து கூப்பிடுவ தில்லையா என்ன?''

பவானி இதற்குப் பதில் அளிக்கவில்லை. அவள் கண்களில் இலேசாகக் கண்ணீர்த் துளிகள் தோன்றி உருண்டோடின.

''பவானி! நீ எதையோ மறைக்கிறேன்னு நினைக்கிறேன். இதோ பார்... இந்த வீட்டிலே நீயும் வேலைக்காரி; நானும் ஒரு வேலைக்காரன்... ஏறக்குறைய நாம் இரண்டு பேரும் ஒரே வர்க்கத்திலே வாழறவங்க. ஒருத்தர் மனசை இன்னொருத்தர் தெரிஞ்சுக்கிறது நல்லதுன்னு எனக்குப் படுது!''

பவானி உடனே தொண்டையைக் கனைத்துக்கொண்டாள்.

''ஆமாம்!...நீங்க இப்போ சொன்னதும் சரிதான்னு படுது. நான் சொல்றதை உங்க மனசோடு வைச்சுக்குங்க... நான் வீட்டை விட்டு ஓடி வந்தவள்!''

இதைச் சொல்லி நிறுத்திவிட்டு அவள் ராஜாராமனை ஒரு முறை பார்த்தாள். பின்னர் புன்சிரிப்புடன், ''பயப்படாதீங்க! நான் ஓடிவந்தது ரொம்ப ரொம்பச் சின்ன வயசிலே யாக்கும்! எனக்கு எதுவும் சரியாக நினைவு இல்லே. என்னுடைய அஞ்சாவது வயசிலே எஜமானி அம்மாளிடம் எப்படியோ வந்து சேர்ந்துவிட்டேன். அன்னிலேந்து எனக்கு அப்பா, அம்மா எல்லோருமே இவங்கதான். இதுதான் விஷயம். இவங்களும் என்மேல் ரொம்பப் பிரியத்தோடு இருக்காங்க. இந்த ஜன்மத்திலே நான் இந்த வீட்டை விட்டுப் போவதற்கு எஜமானி அம்மா சம்மதிக்க மாட்டாங்க'' என்றாள்.

ராஜாராமன் பெருமூச்சு விட்டான்.

''பவானி! நானும் உன் மாதிரி சின்ன வயசிலேயே ஓடிப் போனவன்தான்.''

அதைத் தொடர்ந்து தனது சரிதத்தைக் கூறி முடித்தான் ராஜாராமன். இருவரும் பரஸ்பரம் தங்கள் அனுதாபங்களைத் தெரிவித்துக் கொண்டனர்.

ராஜாராமன் பெரிதாகச் சிரித்துக் கொண்டே, ''பவானி! 'ஓடிப் போனவர்களுக்கு ஒன்பதாமிடத்திலே ராஜா' என்பார்கள்! உனக்குத் தெரியுமா?'' என்று உளறி வைத்தான்.

''ஸ்ஸ்! அதோ சின்ன எஜமானர் வருகிறார் போலத் தெரிகிறது. நீங்க தண்ணீர் இழுத்தது போதும்'' என்றவாறே பவானி நகர்ந்தாள்.

ராஜாராமன் திரும்பினான்.

ஆமாம்! உண்மையிலேயே சின்ன எஜமானர் சேகர் வந்துகொண் டிருந்தான்.

பவானியை இன்னொரு முறை பார்வையால் விழுங்கிவிட்டு அப்பால் நடந்து சென்றான் ராஜாராமன்.

இரண்டு வாரங்கள் ஓடிவிட்டன.

அடிக்கடி பவானியைச் சந்தித்துப் பேசினான் ராஜாராமன். அவன் மனம் முழுக்க முழுக்கப் பவானியை நேசித்தது. 'அவள் இல்லையென்றால் இனி வாழ்வு ரசிக்காது' என்ற அளவுக்கு அவன் மனம் சஞ்சலம் கொள்ள ஆரம்பித்தது.

''பவானி! நான் சொல்றது உனக்குத் தவறாகப் படாது என்றே நம்பறேன். இதோ பார்! நான் உன்னை மனசார நேசிக்கிறேன். உனக்குச் சம்மதம் இருந்தாக்க உடனே இந்த வீட்டிலேருந்து உனக்கு விடுதலை வாங்கித் தந்து விடுகிறேன்.''

''அப்படின்னா....?''

''அப்படின்னா...நான் உன்னைக் கல்யாணம் செய்துக்கத் தயாராக இருக்கேன்னு சொல்கிறேன். ஏன்? உனக்கு இதிலே சம்மதம் இல்லையா, பவானி?''

பவானி பதில் சொல்லத் தலையை நிமிர்த்தினாள். அடுத்த கணம், அவள் பார்வை தோட்டத்துக் கதவருகில் சென்றது.

''சின்ன எஜமானர் பார்க்கிறார்! நாம் அப்புறம் பேசிக்கலாம்'' என்று சொல்லிவிட்டு அவள் நகர்ந்தாள்.

''நல்ல சின்ன எஜமான்! சிவ பூஜையிலே கரடி புகுந்த மாதிரி சமயம் தெரியாம வந்து தொலைக்கிறார்.''

அன்று இரவு அவனுக்குத் தூக்கமே வரவில்லை. மனம் குழம்பிப் புரண்டான்.

மறு நாள்.

தோட்டத்தில் தயாராகக் காத்துக்கொண்டிருந்தான் ராஜாராமன். பவானி வந்தாள். பரிவுடன் பேச்சைத் துவக்கினான்.

''பவானி! நேற்று பதில் சொல்லாமல் ஓடிப் போயிட்டே.... நல்ல சின்ன எஜமானர் வந்து வாய்ச்சாரு... ஹூம்... நீ சொல்லு... உன் முடிவு என்ன? நான் என்னுடைய இத்தனை கால வாழ்க்கையில் உன்னைத்தான் முதல் முதலாகக் காதலிக்கிறேன், பவானி! உடனே சொல்லு.... என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள இஷ்டம்தானா?''

''கோபிச்சுக்காதீங்க...எனக்கு உங்கமேலே பிரியம் இருக்கத்தான் செய்யுது. ஆனால் நான் உங்களைக் கட்டிக்கிறதுக்கோ இந்த வீட்டை விட்டுப் போய்விடுவதற்கோ என் எஜமானி அம்மாள் சம்மதிக்க மாட்டாங்களே!''

''நீயும் ஆச்சு... உன் எஜமானியும் ஆச்சு! அவங்களைத் தூரத் தள்ளு... பவானி! எனக்கு உன்னுடைய சங்கடம் தெரியும்! இதோ பார்! நான் உன்னைக் கட்டிக்கிட்டு இதே வீட்டிலே வேலை செய்யறதுன்னாத்தான் இந்த எக்கச்சக்கம் வரும். என் யோசனையைக் கேளு.... எனக்கு இந்த ஊரு அலுத்துப் போச்சு...வா! இரண்டு பேரும் சேர்ந்து யாருக்கும் தெரியாமல் சென்னைக்கு ஓடிப்போய் விடலாம்!''

''ஹா! என்னது? ஓடிப் போகிறதா?''

''ஆமாம்! அதுதான் நல்ல யோசனை! எந்தத் தொந்தரவும் இருக்காது. பவானி! நான் சத்தியமாகச் சொல்றேன். என்னை நம்பு. என் கையிலே உழைப்பு இருக்கு. நான் உன்னைக் கடைசிவரை காப்பாத்தறேன். அங்கே சென்னையிலே போனதும் எனக்கு டாக்ஸி டிரைவர் வேலை கிடைச்சுடும். நான் சொல்றபடி கேளு. நாளை சாயங்காலம் கடைசி எக்ஸ்பிரஸிலே மெட்ராஸுக்குப் போயிடலாம்.''

''அது நல்லா இருக்குங்களா?''

''நல்லதாவது, கெட்டதாவது? நீயும் நானும் இந்த வீட்டு அடிமைகளா என்ன? நாமும் சுதந்திர ஜீவன்கள்தானே? பவானி... ஓடிப் போனவங்களுக்கு ஒன்பதாமிடத்திலே ராஜான்னு சொல்லுவாங்க நம்பெரியவங்க!''

''அது சரி! ஆனால் ஒரு நிபந்தனை. நான் உங்களுடன் சென்னைக்கு வந்து கொஞ்ச நாட்களாவது கல்யாணம் செய்துக்காமதான் இருப்பேன். நீங்க கை நிறையவோ கை வழியவோ சம்பாதித்து என்னைக் காப்பாற்றக் கூடிய

வர்தான் என்பதை அறிந்துகொண்ட பிறகு நான் கல்யாணம் செய்து கொள்வேன். தெரிந்ததா?'' ராஜாராமன் சிரித்தான்.

''பவானி! நீ என்னுடைய குணத்தைச் சரியாக அறியவில்லை. சரி! இருந்தாலும் நீ உன்னுடைய நிபந்தனைப்படியே நான் நடந்துக்கிறேன். சம்மதமா?''


''ரொம்ப சரி! நாளை ராத்திரி...!''

''நாம் இருவரும் ஓடிப் போகிறோம். யார் எது சொன்னாலும் நீ பயப்படாதே! என்ன நேர்ந்தாலும் முன் வைத்த காலைப் பின் வைக்கக் கூடாது. தெரிந்ததா?''

''சரி! சரி! அதோ சின்ன எஜமானர் வரா மாதிரி தெரியுது. நான் போறேன்!''

பவானி நகர்ந்தாள்.

'சின்ன எஜமானனாவது? சீனு சாத்தானாவது? இவங்க தொல்லை இன்றோடு தீர்ந்தது' என்றுஎண்ணிக்கொண்டு ராஜாராமன்நடந்தான்.



மதுரையில் பிரபலமடைந்துள்ள ''யூனியன் கிளப்'' தனது 75-வது ஆண்டு விழா — பிளாட்டினம் ஜுபிலி விழாவைச் சென்ற மாதம் விமரிசையாகக் கொண்டாடியது. அச்சமயம் டாக்டர் ஸி. பி. ராமஸ்வாமி அய்யர் தலைமை வகித்து ஓர் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார். டி. வி. எஸ். குடும்பத்தைச் சேர்ந்த திரு ஆர். ராமச்சந்திரனுடைய உழைப்பும், திரு டி. எஸ். சீனிவாசனின் தலைமையும் கிளப் சிறப்பாகச் செயல்படக் காரணமாயிருந்திருக்கின்றன. ஆண்டு விழாவில் கலந்துகொண்ட டாக்டர் ஸி. பி. பழைய ஏடு ஒன்றைப் புரட்டிப் பார்த்து ஆனந்திக்கிறார்.

எல்லாம் திட்டப்படி நடந்தது.

சென்னையில் வந்து இறங்கிய அன்று இருவரும் ஹோட்டல் ஒன்றில் தங்கினார்கள்.

சிந்தாதிரிப் பேட்டையில் ஒரு சிறு வீடு உடனே கிடைத்தது. இருவரும் மறுநாளே அங்கு குடியேறினர்.

ராஜாராமனும் டாக்ஸி டிரைவராக மாறி விட்டான். முதல் நான்கு நாட்கள் வந்த வரும்படியை நேராகப் பவானியிடமே தந்தான்.

அவள் மலைத்து விட்டாள்.

''என்னை நீங்கள் மன்னிக்கணும். நீங்கள் சொன்னால் சொன்னபடி செய்துட்டீங்க!''

''பவானி...., நாளைக்கு வெள்ளிக்கிழமை. இங்கேகூட வடபழனின்னு ஒரு கோவிலைக் கட்டி வைச்சிருக்காங்க. உனக்குச் சம்மதமானால்...நாளை மாலையே...''

''பேச்சைப் பாரு பேச்சை!''

பவானியும், ராஜாராமனும் சிரித்துக் கொண்டனர்.

மறுநாள்.

மணி சரியாகப் பத்தரை.

சிந்தாதிரிப்பேட்டை நேப்பியர் பூங்கா பக்கமாக அவன் டாக்ஸியைச் செலுத்தி வந்தான்.

''டாக்ஸி!''

குரல் வந்த திசையை நோக்கி அலட்சியமாகத் திருப்பினான் டாக்ஸியை.

அடுத்த கணம் இவன் கண்கள் ஆச்சரியத்தால் மலர்ந்தன.

ஆம்! அவனது மாஜி சின்ன எஜமானர் சேகர்தான் நின்று கொண்டிருந்தான். அவனுக்குப் பின்னால் தலையை முக்காடிட்டுக் கண்களில் கறுப்புக் கண்ணாடி அணிந்தவாறு யாரோ ஒரு பெண். சின்ன எஜமான் தன்னைப் போலீஸுக்கு இழுத்துவிடப் போகிறாரோ என்று கதிகலங்கினான்.

''ராஜாராம்! நீ பயப்படாதே!...நாங்கள் இப்போது டில்லி ஜனதாவைப் பிடிக்க வேண்டும். எங்களை ஏற்றிச் செல்.''

டாக்ஸி பறந்தது. சென்ட்ரல் ஸ்டேஷனை அடைந்ததும், முதலில் அந்தப் பெண் இறங்கி விரைவாக நடந்தாள்.

ராஜாராமின் முகத்தருகே சேகரின் முகம் வந்து நின்றது. அடுத்த கணம் ஒரு பத்து ரூபாய் நோட்டைச் சேகர் நீட்டினான்.

''எஜமான்... வேண்டாங்க...''

''ஸ்ஸ்... வைச்சுக்கப்பா இதை. இங்கே பாரு. எனக்கு எல்லாம் தெரியும். நானும் இப்போது உன்னை மாதிரிதான் ஓடிப் போகிறேன். அதோ போகிறாளே, அவள் ஒரு வடக்கத்திப் பெண். மதுரையிலேதான் இருக்கிறாள். தயவுசெய்து இதைப் பற்றி மூச்சு விடாதே...என்ன!''

''சரிங்க...''

ராஜாராமனுக்கு ஆனந்தமும் அதிர்ச்சியும் மாறி மாறித் தோன்றின.

அடுத்த கணம் டாக்ஸியைப் பூக்கடை அருகில் கொண்டு வந்து நிறுத்தினான்.

அன்றைய வைபவத்துக்குத் தேவையானவைகளை வாங்கிக் கொண்டு திரும்பினான்.

பத்தே நிமிஷங்களில் அவன் குதூகலம் பொங்கத் தன் வீட்டை வந்தடைந்தான்.

"பவானி! என்ன நீ? உள்ளேயே உட்காந்துக்கிட்டு இருக்கயே... இதோ பாரு... நீ பயந்து பயந்து நடுங்கினியே...அந்த உங்க சின்ன எஜமானரே யாரோ ஒரு மார்வாரிப் பெண்ணை இழுத்துக்கிட்டு டில்லிக்கு ஓடறாரு. நான் அவங்களை ஸ்டேஷனுக்குக் கொண்டு விட்டு நேராக வரேன். எப்படி இருக்கு கதை? என்ன இது. அடுப்பிலே ஏதோ தீயறமாதிரி இருக்கே பவானி! நீ என்ன பண்ணுறே?"

ஆவலுடன் சமையலறைக்குள் நுழைந்தான் ராஜாராமன். 'பவானி!' என்று கூப்பிட்டான்.

பவானியை அங்கு காணேம். முன் பக்க அறைக்கு வந்தான். அவள் அங்கும் இல்லை. அடுத்த கணம் அருகிலிருந்த மேஜையின்மேல் அவன் கவனம் சென்றது.

மேஜையின்மேல் ஒரு கடிதம்!

தாவி எடுத்தான் அதை. ஆவலுடன் பிரித்துப் படித்தான்; அடுத்த கணமே...

அன்புள்ள சகோதரருக்கு,

முதலில் என்னை மன்னிக்கவும். நீங்கள் என்னை மனமாரக் காதலித்தது வாஸ்தவம். ஆனால் நான் உங்களை மனமாரக் காதலிக்கவில்லை.

ஒரு காரணத்துக்காக நான் உங்களை இவ்வளவு தூரம் நேசிப்பதாகக் காட்டிக் கொள்ள நேர்ந்துள்ளது.

நான் மதுரையில் இருந்தபோதே என்னை வேறு ஒருவர் மனதாரக் காதலித்து வந்தார்.

இந்த நிலையில்தான் நீங்கள் என்னைக் காதலிக்க ஆரம்பித்தீர்கள். ஆரம்பத்திலேயே நான் இதைத் துண்டித்துக் கொள்ள விரும்பி, உங்களைப் பற்றி என் காதலரிடமும் சொல்லி வைத்தேன். நான் எதிர்பாராதபடி அவர் ஒரு விநோதமான யோசனையைத் தெரிவித்தார்.

'எப்படியும் நீயும், நானும் எங்கேயாவது சேர்ந்து வாழவேண்டும். அதற்கு ஒரே வழி இருவருமாக வெளியேறுவது என்பதே. ஆனால் நாம் இருவரும் சேர்ந்தாற்போல் வெளியேறினல் இருவருக்கும் பல சங்கடங்கள் நேரும். ஆகவே நான் சொல்கிறபடி செய். நீ உன்னைக் காதலிப்பதாகச் சொல்லும் டிரைவரிடம் சேர்ந்து ஓடி விடுவதற்குச் சம்மதத்தைத் தெரிவித்துவிடு. நானும் ஒரு வாரத்துக்குள்ளாக எங்கேயாவது வேலை என்று சொல்லிக் கொண்டு கிளம்பி வந்து விடுகிறேன். இருவரும் சென்னையில் சந்தித்து வேறு எங்கேயாவது ஓடி விடுவோம்!'

இதுதான் அவர் திட்டம். நானும் இந்தத் திட்டத்துக்கு ஒப்புக் கொண்டதால்தான் உங்களுடன் இவ்வளவு நாட்கள் சேர்ந்திருந்தேன்.

கடைசியாக ஒரு வார்த்தை. நீங்கள் எனக்குக் கொடுத்த வாக்குறுதியின்படி இதுவரையில் என்னிடம் நடந்தது பற்றி என்னுடைய மனமார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். என் காதலரும் உங்களைப் பெரிதும் போற்றுகிறார் என்பதை இத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். எனக்காக நீங்கள் இதுவரையில் செலவழித்துள்ள தொகையையும் இத்துடன் திருப்பி யளித்துள்ளேன்.

உங்கள் சகோதரி,

பவானி.

பின் குறிப்பு: என்னுடைய காதலர் யார் என்பதைப் பற்றி நான் சொல்லாமல் போகக் கூடாது என்றே கருதுகிறேன். நீங்கள் இதை எப்படியும் நம்பித்தான் ஆகவேண்டும். ஆம்; என் காதலர் வேறு யாருமில்லை. **சின்ன எஜமானர் சேகர்தான்.**

அடுத்த கணம் தலையில் அடித்துக் கொண்டவாறே ராஜாராமன் முணுமுணுத்தான்:

"ஓடிப் போனவனுக்கு ஒன்பதாம் இடத்திலே சனி!"

சில நாட்கள் கழித்து ராஜாராமனுக்குக் கல்யாணப் பத்திரிகை ஒன்று வந்தது. சின்ன எஜமானுக்கும் பவானிக்கும்தான் கல்யாணம்! அதுவும் மதுரையில் சேகரின் பெற்றேர்களே நடத்தி வைக்கிறார்கள் என்று அறிந்ததும் ஆச்சரியம் தாங்காமல் அன்றிரவே ரயிலேறிக் கல்யாணத்துக்கு இரண்டு நாட்கள் முன்னதாகவே போய்ச் சேர்ந்தான். அங்கு போன பிறகுதான் விவரம் புரிந்தது அவனுக்கு.

டில்லிக்குப் போனபிறகு தாங்கள் செய்வது சரியல்ல என்று சேகருக்கும் பவானிக்கும் தோன்றிவிட்டதாம். அப்பா அம்மாவுக்குத் தன்னை மன்னித்து விடும்படி எழுதினனும் சேகர். கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்வதாயும் உடனே திரும்பும்படியும் தந்தி அடித்தார் சேகரின் தந்தை. "ஏன்டா! நம்ப பவானியைக் கல்யாணம் செய்துகொள்கிறேன் என்றால் குறுக்கேயா நிற்கப் போகிறோம்? பதினைந்து வருஷமா நாங்களே வளர்த்துவந்த குழந்தை அவள். ஓடிப் போகிறானும் அசடு!" என்று மகன் திரும்பி வந்ததும் செல்லமாகக் கடிந்துகொண்டாராம்.

மணப் பந்தலில் ராஜாவைப் போல் உட்கார்ந்திருந்த சேகரைப் பார்த்து 'ஓடிப் போனவனுக்கு ஒன்பதாம் இடத்திலே ராஜா' என்பது சரிதான் என்று தீர்மானித்துக் கொண்டான் ராஜாராமன்.

இருமல் தொல்லையா !

ஸெப்ரால்
சாப்பிடுங்கள்
அது உடனடியாக
நிவாரணம்
அளிக்கிறது





'ZEPHROL'

trade mark brand

ஸெப்ரால் காப் ஸிரப்

தயாரிப்பாளர்கள் மே ஆண்ட் பேக்கர் லிமிடெட்

விநியோகஸ்தர்கள்

மே ஆண்ட் பேக்கர் (இந்தியா) பிரைவேட் லிட்

பம்பாய் . கல்கத்தா . கௌஹாத்தி

மதராஸ் . புதுடில்லி

வேங்கையின் மைந்தன்

இரண்டாம் அத்தியாயம்

பாசம் வளர்த்த பகை

ஆமாம்; வீரமல்லனின் கண்களைக் கவர்ந்த அழகுமோகினி மன்னர் மகிந்தரின் அருமைப் புதல்விதான். ரோகணத்து இளவரசிதான்.

ரோகிணி எப்படி இங்கு வந்தாள்! ஈழநாட்டை விட்டு அவள் ஏன் சோழ வளநாட்டுக்கு வந்து சேர்ந்தாள்? கடல் கடந்து நாம் திரும்பவும் ஈழத்துக்குச் செல்ல வேண்டும். காடுகளையும் மலைகளையும் கடந்து ரோகணத்துக்குள் நுழைய வேண்டும். கப்பகல்லகம் அரண்மனையில், மாமன்னர் இராஜேந்திரரின் அன்புப் பிடியில் அகப்பட்டு, தன் தந்தைக்காகத் துடிதுடித்த ரோகிணியைக் காண வேண்டும்.

இதோ, அவள் நீதியின் சிகரமான இராஜேந்திர மாமன்னர்மீது சீறி விழுகிறாள். உணர்ச்சி வயப்பட்ட சிறு புயலென அவரைச் சாடுகிறாள். அன்பும் கருணையும் கொண்ட அவர்மீது ஆத்திரச் கடுசொல் வீசுகிறாள்.

"சக்கரவர்த்திகளே! இது அநீதி! இது அநீதி!" என்று குமுறினாள் ரோகிணி. "முடியை என்னிடமே திருப்பிக்கொடுத்தீர்கள்; நாட்டைத் திருப்பிக் கொடுப்பதாய் வாக்களித்தீர்கள். இப்போதுஇரண்டையும் தாங்களே திரும்பப் பெற்றுக் கொண்டீர்கள். சொன்ன சொல் தவறுவது நியாயமா? நிர்க்கதியாக வந்திருக்கும் என் தந்தையாரைச் சிறையிட்டுச் சோழநாட்டுக்கு இழுத்துச் செல்வது தர்மமா? சக்கரவர்த்திகளே! இது அநீதி!" என்று சீறினாள்.

"நீதி, நியாயம், தர்மம் எதையும் நான் மறந்துவிடவில்லை, மகளே!" என்று அமைதியோடு கூறினார் சக்கரவர்த்தி. "உன் தந்தையார் திறந்த மனத்தோடு எங்களுடன் நட்புறவு பூண வருவார் என்று எதிர்பார்த்தோம். அவர்தான் அம்மா, சொன்ன சொல் தவறிவிட்டார். நேற்று அவர் தூதுவனிடம் சொல்லி அனுப்பிய செய்திக்கும் இன்று அவர் நடந்து கொண்ட முறைக்கும் சிறிது கூடத் தொடர்பே இல்லை. நீயும்தானே எங்கள் பேச்சு வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்தாய்? நீ விவரம் தெரிந்த பெண். நன்றாக யோசித்துப் பார், ரோகிணி!"

யோசித்துப் பார்க்காமல், "அவரைத் தாங்கள் இப்போது என்ன செய்யச் சொல்கிறீர்கள்?" என்று வெடுக்கெனக் கேட்டாள் ரோகிணி.

மாமன்னர் வருத்தத்துடன் சிரித்தார். "அவரை நாங்கள் வேறொன்றும் செய்யச் சொல்லவில்லை. எங்களை நேரடியாகவோ மறைமுகமாகவோ பகைத்துக் கொள்ள வேண்டாமென்றுதான் கேட்டுக் கொள்கிறோம். அமைச்சர் கீர்த்தி எங்கள்மீது வீணாகப் பகைமை பூண்டிருக்கிறார். அவருக்கு அடிமையாகி, எங்களுக்குத் தொல்லை தர வேண்டாமென்கிறோம். எங்கள் கூற்று நியாயமானதுதானே?"

ரோகிணி யோசனை செய்தாள்.

"ரோகிணி! நீ வேண்டுமானால் உன் தந்தையிடம் சென்று முறையிட்டுப் பார். அவருடைய தலைவிதியை அவரே முடிவு செய்வதற்குச் சிறுபொழுது அவகாசம் தருகிறேன். போய் அவரைப் பார்த்துவிட்டு வா."

மகிந்தர் காவல் வைக்கப்பட்டிருந்த அறைக்குச் சென்றாள் ரோகிணி. வல்லவரையர் அவளை உள்ளே செல்வதற்கு அனுமதித்தார். வெளியில் நிற்பவர்களுக்குக் கேட்காதபடி தன் தந்தையிடம் மன்றாடிப் பார்த்தாள் ரோகிணி.

மகிந்தர் அசைந்து கொடுக்கவில்லை. அவள் கூறியதைக் கேட்டுவிட்டு அவள் காதருகில் மெல்லப் பதிலளித்தார்.

"ரோகிணி! ஒன்று, நான் சோழர்களைப் பகைத்துக் கொள்ள வேண்டும்; அல்லது அமைச்சர் கீர்த்தியைப் பகைத்துக் கொள்ளவேண்டும். இந்த நெருக்கடி எனக்குத் தற்சமயம் ஏற்பட்டிருக்கிறது. கீர்த்தியைப் பகைத்துக் கொள்ளும் நிலையில் இப்போது நான் இல்லை. உன் தம்பி காசியபன் இப்போது அவரிடம் அகப்பட்டுக் கொண்டிருக்கிறான். சோழர்களுடன் நட்புறவு பூண்டு ரோகணத்தின் ஆட்சியை நான் ஏற்றுக் கொண்டால், என் மகனையும் மகனுக்குப் பின்னால்

அகிலன்

நிற்கும் மந்திரியையும் மக்களையும் பகைத்துக் கொள்ள வேண்டும். ஒருவேளை நான் அவருக்குத் துரோகம் செய்து விட்டதாக நினைத்துக் காசிபனையே கொன்று வஞ்சம் தீர்த்தாலும் தீர்த்துக் கொண்டு விடுவார் கீர்த்தி.''

''என்ன?'' என்று அலறினள் ரோகிணி.

''ஆமாம்; உண்மைதான். இப்படி நான் சிறைப்பட்டு விட்டதால், என்மீது அவருக்கு அநுதாபம் ஏற்படும். இந்த அநுதாபத்தினால் என் மகனையே அவர் கட்டாயம் ஒருநாள் சிம்மாசனத்தில் ஏற்றி விடுவார். எதையும் சாதிக்கவல்லவர் அவர். சோழர்களைப் பகைத்துக் கொண்டால்தான் என் மகன் மன்னனாவான். எனக்கோ வயதாகி விட்டது. நான் இனி எப்படியிருந்தால் என்ன?''

இருதலைக்கொள்ளி எறும்பாக மகிந்தர் அகப்பட்டுக் கொண்டு தடுமாறுவதை ரோகிணி இப்போது புரிந்து கொண்டாள். மாமன்னர் இராஜேந்திரர் கூற்றிலும் நியாயம் இருந்தது. மகிந்தரின் முடிவிலும் தவறில்லையென அவளுக்குத் தோன்றியது.

தலையைக் கவிழ்த்துக் கொண்டே சக்கரவர்த்தியின் முன்னால் வந்து நின்றாள் ரோகிணி. குரல் தழுதழுக்கக் கூறினாள். ''அரசர்களுடைய ராஜதந்திர விஷயங்கள் எதுவும் எனக்கு விளங்கவில்லை. தாங்கள் என்ன செய்தாலும் சரி. ஆனால், நானும் என் தாயாரும் என் தந்தையார் இருக்குமிடத்தில்தான் இருப்போம். அவரை ரோகணத்தை விட்டு அழைத்துப் போவதானால் எங்களையும் அழைத்துக் கொண்டு செல்லுங்கள். நாட்டைத்தான் அவருக்கு மறுத்து விட்டீர்கள்; வீட்டை மறுக்காதீர்கள். அவர் குடும்பத்தை அவரிடமிருந்து பிரித்து விடாதீர்கள்.''

''குடும்ப சுகம் என்பது எங்களைப்போல் நாடாளப் பிறந்தவர்களுக்குக் கிடையாது, ரோகிணி! நாடுதான் எங்கள் குடும்பம். உன் தந்தையாருக்கு நாடில்லை என்பதால் வீட்டைக் கேட்கிறாய். ஆனால் பெண்களை நாங்கள் எங்கள் நாட்டுக்கு அழைத்துக் கொண்டு போவதில்லை. அந்தப் பழிபாவம் எங்களுக்கு ஒரு போதும் வேண்டவேவேண்டாம். நீங்கள் இனி உங்கள் விருப்பப்படி எங்கு வேண்டுமானாலும் போகலாம். உற்றார் உறவினரிடம் நானே உங்களை அனுப்பி வைக்கிறேன். வேண்டிய செல்வத்தையும் எடுத்துக் கொண்டு செல்லுங்கள்.''

ரோகிணி தன் தலையைத் தூக்கி அவரைப் பார்த்தாள். அவளுடைய உதடுகள் துடித்தன.

'''மகளே!' என்று என்னை அழைக்கிறீர்களே, பாசத்தின் பொருள் தங்களுக்குத் தெரியுமா, சக்கரவர்த்தி?'' என்று கேட்டாள் ரோகிணி. ''ரோகணத்துக்கு அதன் அரசரைக் கொடுக்காத தாங்கள், எனக்கு என் தந்தையைக் கொடுக்கக் கூடாதா? என் தாயாருக்கு அவர் கணவரைக் கொடுக்கக் கூடாதா? நாங்கள் இருவரும் என் தந்தையாரோடு தங்கள் நாட்டுக்கு வந்தால் அதனால் என்ன கெட்டு விடும்? அத்தனை பெரிய பரந்த சோழ சாம்ராஜ்யத்தில் எங்கள் இருவருக்கும் மட்டுந்தானா இடமில்லாமல் போய்விட்டது? அல்லது தங்கள் மனத்தில்தான் இடமில்லையா?''

இராஜேந்திரருக்கு அப்போது அவருடைய இளைய பெண் அம்மங்கை தேவியின் நினைவு வந்து விட்டது. ரோகிணிக்கு ஒருபுறம் அருள்மொழியும் மறுபுறம் அம்மங்கையும் நின்று கொண்டு அவரிடம் ரோகிணிக்காகப் பரிந்து பேசி வாதாடுவது போல் தோன்றியது. அம்மங்கை தேவியும் இப்படித்தான் ரோகிணி போல் துடுக்காகப் பேசுவாள்.

''ரோகிணி! என்னை நீ வென்று விட்டாயம்மா, வென்று விட்டாய்!'' என்று கனிவோடு கூறினார் சக்கரவர்த்தி. ''சரி! நீங்களும் மகிந்தருடன் சோழ நாட்டுக்கு வருகிறீர்கள். உனக்கு மகிழ்ச்சிதானே?''

ரோகிணியின் கண்கள் அழுது கொண்டே சிரித்தன. அந்தக் கண்களாலேயே நன்றி கூறிவிட்டு அவ்விடத்தை விட்டு நகர்ந்தாள்.

சோழப் பேரரசின் முதற் கப்பல் ஈழநாட்டின் துறைமுகத்திலிருந்து தாயகம் நோக்கி நீரில் மிதந்தபோது, கப்பலின் மேல்தளத்தின் மீது ரோகிணி நின்று கொண்டிருந்தாள்.

மக்களின் ஆரவாரக் குரல் கடல் அலைகளின் பேரிரைச்சலுடன் ஒன்றிக் கரையத் தொடங்கியது. நீருக்குள் மரக்கலம் செல்லச் செல்ல, ரோகிணியின் கண்கள் முத்துத் துளிகளை ஒவ்வொன்றாக உதிர்த்துக் கொண்டே வந்தன.

தொலை தூரத்தில் மங்கி மறைந்து கொண்டிருந்த ஈழத்தின் நிலப்பரப்பை ரோகிணி கண் இமைக்காது உற்றுப் பார்த்தாள். விநாடிக்கு விநாடி அவளுக்கும் அவளைப் பெற்றெடுத்த மண்ணுக்கும் இடைவெளி அகன்று கொண்டே வந்தது. கரையில் நின்று பசுமை உமிழ்ந்து கொண்டிருந்த தென்னஞ் சோலைகள் சிறிது சிறிதாகக் கறுத்துக் கொண்டு வந்து, வானத்தில் மிதந்த கார்முகிலுடன் கலந்தன.

ரோகிணியின் உள்ளத்தைப் போலவே அடிவானம் குமுறியது; கடல் அலைகள் கொந்தளித்தன.

அவள் தனக்குள் புலம்பினாள். 'ஈழத்து மலைகளே! கண்கவரும் காடுகளே! துள்ளிக் குதிக்கும் அருவிகளே! நீங்கள் இப்போது எங்கே இருக்கிறீர்கள்? மீண்டும் இந்தக் கண்களால் உங்களைக் காணும் பாக்கியம் கிடைக்குமா, கிடைக்காதா? என்னருமை ரோகணமே! என் தம்பி காசிபன் இப்போது எங்கே இருக்கிறான்? அவனை நீ எங்கே ஒளித்து வைத்துக் கொண்டிருக்கிறாய்? நாங்கள் அவனை விட்டுப் பிரிந்து போவது காசிபனுக்குத் தெரியுமா? தெரிந்தால் அவன் என்ன நினைப்பான்? என்ன நினைப்பான்?'

ஈழநாட்டுக் கடற்கரை கரும்புள்ளியாக மாறி, அதுவும் அவள் கண்ணீர்த் துளியுடன் ஒன்றி, பிறகு கடல் நீருக்குள் விழுந்தது. வெறும் சூனியத்தையே ஊடுருவிக் கொண்டு நின்றாள் அவள்.

அந்தச் சூனியத்துக்கப்பால் மறைந்து விட்ட கடற்கரைச் சோலைக்குள்ளிருந்து அவளுடைய தம்பி அவளையே பார்த்துக் கொண்டிருந்தது அவளுக்குத் தெரியாது. காசிபனையும் அமைச்சர் கீர்த்தியையும் மரத்தின் இலைகள் நன்றாக மறைத்துக் கொண்டிருந்தன. நுனி மரத்தின் வலுவான கிளையொன்றில் அவர்கள் தொத்திக் கொண்டு நின்றார்கள். தொலைதூரத்தில் கடந்து செல்லும் கப்பலையே கண்களால் விழுங்கினார்கள்.



"காசிபா! இந்த அக்கிரமத்தை உன் கண்களாலேயே பார்த்துக் கொண்டாயல்லவா?" என்று கேட்டார் கீர்த்தி. காசிபன் பதிலளிக்கவில்லை. அவனுடைய சிறு விழிகள் சிவந்திருந்தன.

"வா, இறங்கிப் போகலாம்" என்று அவர் அவனை அழைத்தார்.

அதை அவன் செவிகளில் வாங்கிக் கொள்ளாமல், "கப்பல் இன்னும் கண்களை விட்டு மறையவில்லை" என்றான்.

"கண்களை விட்டு மறைந்தாலும், இந்தக் காட்சி உன் மனத்தை விட்டு மறையக் கூடாது! ஆமாம், நீ விளையாட்டுப் பிள்ளையல்ல; இந்த ஈழ நாட்டின் இளவரசன்! மன்னரை மாத்திரமா அவர்கள் கட்டி இழுத்துக் கொண்டு போகிறார்கள்? இல்லை! உன் தாயாரையும் தமக்கையையுமே கொண்டு போகிறார்கள். அங்கு போய் அவர்களை என்ன செய்வார்கள், தெரியுமா? பணிப்பெண்களாக, குற்றேவல் செய்யும் அடிமைகளாக, அந்தப்புரத்தின் நடைப்பிணங்களாக மாற்றுவார்கள்!"

நாகப்பாம்பின் சீற்றம்போல் எழுந்தது காசிபனின் பெருமூச்சு.

மரக்கிளையில் நின்றவாறே ஒரு சிறு கத்தியை எடுத்து அவனிடம் கொடுத்து, தமது வலது கரத்தை அவன் முகத்துக்கு எதிரே நீட்டினார் அமைச்சர் கீர்த்தி.

"என்னுடைய கட்டை விரலின் மத்தியில் ஆழமாய்க் கீறி விடு!" என்றார்.

பயந்துகொண்டே தயங்கி நின்றான் காசிபன். 'எதற்காக?' என்று கேட்பது போல் விழித்தான்.

"உம்! ஏன் தயங்குகிறாய்? நீ ஆண் பிள்ளைதானே? இரத்தத்தைக் கண்டால் உனக்குத் தலை சுற்றுமா? - கீறி விடு!"

காசிபன் பற்களைக் கடித்துக்கொண்டே கீர்த்தியின் கட்டை விரலைக் கீறி விட்டான். 'குபுகுபு'வென்று செவ்விரத்தம் கொப்பளித்துச் சொரிந்தது.

"இதைத் தொட்டு உன் நெற்றியில் வைத்துக் கொள்!"

மந்திரத்தால் கட்டுண்டவன்போல் அவர் கூறியபடியே செய்தான் காசிபன். அவனுடைய சின்னஞ் சிறு நெற்றி ரத்தச் சிவப்பாக மாறியது.

"சொல்: 'சோழர்கள் என் ஜன்மப் பகைவர்கள்!' - மூன்று முறை சொல்."

"சோழர்கள் என் ஜன்மப் பகைவர்கள்! சோழர்கள் என் ஜன்மப் பகைவர்கள்! சோழர்கள் என் ஜன்மப் பகைவர்கள்!"

அவனை அன்போடு தழுவி அணைத்துக் கொண்டே மரத்திலிருந்து இறங்கி வந்தார் கீர்த்தி. கீழே வந்தவுடன், "காசிபா! நீ உன் தந்தையை விட வீரன். உன்னை வைத்துக் கொண்டு நான் இந்த உலகத்தையே வென்று விடுவேன்" என்று பெருமிதத்துடன் கூறினார்.

மூன்றாம் அத்தியாயம்

வெறுப்புத்தானா?

எத்தனை நாழிகை ரோகிணி அதே இடத்தில் ஆடாத அசையாத சிலையாக நின்று கொண்டிருந்தாளோ, அவளுக்கே தெரியாது.

கடற்காற்றில் அவளது கருங்குழலின் இவலைகள் நெற்றியில் படர்ந்து துடித்தன. மேலாடை கதிரொளியில் மினுமினுத்துப் பின்னோக்கிப் பறந்தது. கொடி மரத்தை வளைத்துக் கொண்டிருந்த பட்டுக் கயிறு போல், அவள் துவண்டு போன பசலைக் கொடியாக அங்கு நின்று கொண்டிருந்தாள்.

அதே மேல்தளத்தின் மறுகோடியில், ஒரு தந்தக் கட்டிலில் சாய்ந்து கொண்டு கிடந்தான் இளங்கோ. அவனால் ஓரளவுக்கு எழுந்து நடமாட முடிந்ததே தவிர, அவனுடைய உடல் நலம் பழைய நிலைக்கு இன்னும் திரும்பவில்லை. வேல் பட்ட காயம் வெளிப்புறம் ஆறிக் கொண்டு வந்தாலும் உள்ளே வேதனையைக் கொடுத்துக் கொண்டுதான் இருந்தது.

வைத்தியர் ஏதோ தைலம் தடவிய துணியைக் காயத்தின் மேல் போட்டு வைத்திருந்தார். அதைப் பிய்த்து எடுத்துக் கடலில் வீசி எறிய வேண்டும்போல் இருந்தது. நோய்ப் படுக்கை விவகாரமே அவனுக்குப் பிடிக்கவில்லை. சிற்சில சமயங்களில் காயத்தின் தொல்லை தாங்காத போது, 'வேல் எறிந்து தொலைத்தவன் இன்னும் சிறிது வேகமாக எறிந்திருக்கக் கூடாதா? மணிமுடிப் பேழையை மாமன்னரிடம் கொடுத்தவுடன் இந்த உயிர் உடலை விட்டுப் போயிருக்கக் கூடாதா?' என்று கூட அவன் நினைத்திருக்கிறான்.

ஆனால், ரோகிணி அவன் அருகே வந்து பேசிக் கொண்டிருந்த வேளைகளில் அவனுக்குத் தன் உயிரின்மேல் வெறுப்பு ஏற்படவில்லை. வாழ வேண்டும் என்ற அளவுகடந்த ஆசையை அவனுக்கு அவள் கண்கள் கொடுத்தன; சொற்கள் கொடுத்தன; முகம் கொடுத்தது.

திடீரென்று ரோகிணி மாறிப் போய் விட்டாள். நேற்றிலிருந்து அவள் அவனிடம் முகம் கொடுத்துப் பேசவில்லை. அவனுடைய உடல்நிலை பற்றி முன்னைப் போல் அன்போடு விசாரிக்கவில்லை. கண்டும் காணாதது போல் பராமுகமாக நடந்து கொண்டாள்.

இன்று பொழுது புலர்ந்ததிலிருந்து ரோகிணி ரோகிணியாகவே இல்லை. இரவெல்லாம் அவள் தேம்பித் தேம்பி அழுதிருக்க வேண்டும். தன் தாயாரின் மடியில் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மியிருக்க வேண்டும். முகம் கன்றிச் சிவந்திருந்தது; கண்கள் கொவ்வைக் கனியாகப் பழுத்திருந்தன.

கப்பலின் மேல்தளத்துக்கு அவள் வந்து கொண்டிருந்த போது எதேச்சையாக அவள் கண்கள் இளங்கோவைச் சந்தித்தன. பார்வையா அது! நெருப்பை அள்ளி அவன் மீது வீசி விட்டுத் தன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

இளங்கோவுக்கு ஏன் இந்த மாற்றம் என்று விளங்கவில்லை. பொறுத்துப் பொறுத்துப் பார்த்தான். அவள் தன்னிடம் திரும்பி வந்து பேச்சுக் கொடுப்பாள் என்று நினைத்தான். அன்போடு அவள் பேச வேண்டியதில்லை. பெயரளவுக்காவது ஒரு புன்சிரிப்பை உதிர்த்து விட்டுப் போகலாமல்லவா?

அவள் எதையும் செய்யவில்லை.

இளங்கோவுக்கு மனத்தவிப்பு மிகுதியாயிற்று. மெல்லத் தன் கட்டிலைவிட்டு எழுந்து வந்தான்.

கப்பல் மிகப் பெரிய கப்பல். இராஜேந்திரர், வல்லவரையர் முதலிய பெரியவர்கள் அதன் கீழ்த் தளத்தில் இருந்தார்கள். மீகாமனும் அவனுடைய ஆட்களும் அடித்தளத்தின் பக்கவாட்டிலிருந்து கலத்தைச் செலுத்திக் கொண்டிருந்தார்கள். சார்ந்த காற்று வீசியதால் பாய்மரச் சேலைகள் புடைத்திருந்தன. அதனால் துடுப்பு வலிப்பவர்களுக்கு அதிகமான வேலையில்லை.

ரோகிணியின் அருகேசென்று கைப்பிடியில் சாய்ந்துகொண்டே சில விநாடிகள் அவள் முகத்தை உற்றுப் பார்த்தான் இளங்கோ. அவனுடைய வரவு அவளுக்கு நன்றாகத் தெரிந்தது. எனினும் ரோகிணி அவனைத் திரும்பிப் பார்க்கக் கூட முன்வரவில்லை.

"ரோகிணி!"

சட்டென்று திரும்பிப் பார்த்து முகத்தைச் சுளித்துக் கொண்டாள் அவள். சற்றே விலகி நின்றாள்.

"ரோகிணி!" என்று கனிவுடன் அழைத்தான் இளங்கோ. "என்னோடு நீ எங்கள் நாட்டுக்கு வருகிறாய் என்று தெரிந்ததிலிருந்து நான் எவ்வளவு ஆனந்தமாக இருக்கிறேன், தெரியுமா? என்னிடம் உன் கோபத்துக்குக் காரணத்தைச் சொல்ல மாட்டாயா? ஏன் நீ என்னைத் திரும்பிக்கூடப் பாராமல் இரண்டு தினங்களாக விலகி விலகிச் சென்று கொண்டிருக்கிறாய்?"

"இப்போது நீங்கள் விலகிப் போக மாட்டீர்களா?" என்று முகத்தில் அறைவதுபோல் கூறினாள் ரோகிணி.

பகைவனின் வேல் அவன் தோளில் பாய்ந்தபோது கூட இளங்கோவுக்கு இவ்வளவு வேதனை ஏற்படவில்லை. ரோகிணி எறிந்த சொல்லம்பு அவனது நெஞ்சகத்தின் நடுமையத்தில் பாய்ந்து விட்டது.

அந்த வலியைக்கூடப் பொறுத்துக் கொண்டு, "நான் உனக்கு என்ன கொடுமை செய்து விட்டேனென்று கூற மாட்டாயா?" என்று கெஞ்சுவது போல் கேட்டான்.

"இதைவிட வேறென்ன கொடுமை வேண்டும்? அரசகோலத்தில் இருந்தவர்களை அடிமைகளாக்கி, ஆண்டிகளாக்கி, இழுத்துக் கொண்டு போகிறீர்களே, போதாதா? எங்கள் நாட்டைப் பறித்து, வீட்டைப் பறித்து, எங்கள் வாழ்வையே பறித்துக் கொண்டீர்களே, போதாதா? பெண்களைச் சிறை செய்து கொண்டு போவதற்கு உங்களுக்குக் கொஞ்சமும் வெட்கமாக இல்லை?"

"கடவுளே!" என்று அலறினான் இளங்கோ. "ரோகிணி! உனக்கு என்ன புத்தி தடுமாறி விட்டதா? நாங்களா உன்னையும் உன் தாயாரையும் எங்கள் நாட்டுக்கு அழைத்தோம்? உங்களை நாங்கள் வரச்சொல்லி வற்புறுத்தினோமா? கட்டாயப்படுத்தினோமா? ஏன் இப்படிப் பேசுகிறாய்?"

"இனி நீங்கள் எதை வேண்டுமானாலும் சொல்வீர்கள்!" என்றாள் ரோகிணி. "நீங்கள் வெற்றி பெற்றவர்கள்; நாங்கள் தோற்றுப் போனவர்கள். நீங்கள் சாதாரண வெற்றியா பெற்றிருக்கிறீர்கள்? சரித்திரம் காணாத மாபெரும் வெற்றியல்லவா இது? இந்த வெற்றி மயக்கத்தில் உங்களுக்கு மற்றவர்களின் மனத் துன்பம் எங்கே புரியப் போகிறது? ஏன், எங்கள் தந்தையாரைக் கொண்டு போனால், அப்போது நாங்களும் அவர் பின்னோடு வந்தே தீருவோம் என்பதற்காகத்தானே நீங்கள் இப்படிச் செய்திருக்கிறீர்கள்?"

இதைக் கேட்டு அழுவதா, சிரிப்பதா என்று இளங்கோவுக்குத் தோன்றவில்லை.

"இதில் நான் ஒன்றும் செய்யவில்லை. மாமன்னரின் கட்டளைப்படி உன் தந்தை

புத்தகம் படிக்கப் படிக்க

அறிவு வளரும்....

உலகிலேயே அறிவிலும் ஆற்றலிலும் சிறந்தோர் எழுதி வைத்த அரிய விஷயங்கள் பாமரரும் படிக்கும்படி புத்தகங்களாக வெளிவந்துள்ளன. ஒரு நல்ல புத்தகத்தில் அடங்கியவிஷயங்கள் உண்மையாகவோ, கற்பனையாகவோ, எப்படியிருந்தாலும் அதன் கருத்து உங்கள் சிந்தனை சக்தியைத் தூண்டி அறிவை வளர்க்கும். இன்றே ஒரு நல்ல புத்தகம் படித்து வாழ்வில் சிறப்பும், நிறைவும் பெருக!

இப்புது முறையில் படியுங்கள்— சிறந்தவற்றை வாசியுங்கள்



இந்நாட்டு இலக்கியங்களையும் அகில உலகப் புத்தகங்களையும் உங்கள் சொந்த மொழியிலேயே வாசிக்க ஒரு வாய்ப்பு. விலைகளும் உங்கள் சக்திக்கு உட்பட்டவைகளே. தென் மொழிகள் புக் டிரஸ்ட் முதன் முறையாக உங்களுக்கு உலகிற் சிறந்த புத்தகங்களைத் தமிழில், பாமரரும் புரிந்து மகிழத்தக்க எளிய நடையில் உயர்தரமாக அச்சிட்டு மலிவு விலைகளில் வழங்குகின்றனர்.

இந்தக் கூப்பனை

இந்தப் புத்தகங்களை உள்ளூர் புத்தக வியாபாரியிடம் வாங்குங்கள்.
8, விக்டோரியா கிரஸெண்ட், எழும்பூர், சென்னை - 8; ¡ என்ற

சமீபத்தில் வெளியான இப்புத்தகங்களை வாசித்தீர்களா ?














அறிவுக் களஞ்சியத்தின் அடையாளச் சின்னம்

தென் மொழிகள் புக் டிரஸ்ட்

3, வீட்கிராப்ட் ரோட், நுங்கம்பாக்கம், சென்னை–31

எமது எதிர்கால வெளியீடுகளின் விவரங்களை உடனுக்குடன் அறிய விரும்புவோர் இந்தக் கூப்பனைப் பூர்த்திசெய்து அனுப்புக. எமது நிரந்தரப் பட்டியலில் உங்கள் பெயரை பதிவு செய்துகொள்வோம். இதனால் உங்களுக்கு எவ்விதப் பொறுப்பும் ஏற்படாது.

இப்பொழுதே அனுப்புங்கள்

தயவுசெய்து உங்கள் புத்தகங்களின் பட்டியலை இலவசமாக எனக்கு அனுப்புங்கள். எதிர்கால வெளியீடுகளைப் பற்றியும் அவ்வப்பொழுது அறிவிக்கவும். இதனால் எனக்கு எவ்விதப் பொறுப்பும் ஏற்படாது.

பெயர்......................................

விலாசம்......................................

....

அல்லது தென்மொழிகள் புக் டிரஸ்ட், மார்க்கெட்டிங் இலாகா விலாசத்துக்கு நேராக எழுதி வரவழைத்துக் கொள்ளுங்கள்.

யார் எங்களுடன் வருகிறார். நீயோ உன் சொந்த விருப்பத்துக்காக உன் தாயாரையும் அழைத்துக் கொண்டு வருகிறாய். உனக்கு விருப்பமில்லா விட்டால் இப்போதே சொல்லிவிடு. உனக்காக நான் சக்கரவர்த்தியிடம் முறையிட்டு, உங்கள் இருவரையும் திருப்பி அனுப்புகிறேன். வா, நாம் இருவருமே சக்கரவர்த்தியிடம் போவோம்!''

''உங்கள் பேச்சு எனக்கு வெறுப்பைத்தான் தருகிறது'' என்று சிடுசிடுத்தாள் ரோகிணி. ''உங்களை நான் என் மனதார வெறுக்கிறேன்!''

''என்ன சொன்னாய்?'' இளங்கோவின் இளம் மீசை துடிதுடித்தது. அவன் கண்கள் கொப்பளித்தன.

''நீங்கள் என்னை ஏமாற்றினீர்கள்! என்னைத் துரோகியாக மாற்றினீர்கள்! என்னுடைய தந்தையாருக்கு வஞ்சனை செய்யத் தூண்டினீர்கள்! என் தம்பி காசிபனை என்னிடமிருந்து விரட்டினீர்கள்! இவ்வளவும் செய்து விட்டு, இப்போது கூண்டுக் கிளிபோல் கொண்டு போய், உங்கள் நாட்டில் ஓர் அறைக்குள் அடைக்கப் பார்க்கிறீர்கள்! உங்களுடைய பேச்சு, செயல், சாகசம் ஒன்றுமே எனக்குப் பிடிக்கவில்லை. நான் உங்களை வெறுக்கிறேன், வெறுக்கிறேன், வெறுக்கிறேன்!''

'பெண்ணல்ல இவள்; பேய்தான்!' என்ற முடிவுக்கு வந்தான் இளங்கோ. அழகான நாகப்பாம்பு தன் அகங்காரப் படம் விரித்து ஆடத் தொடங்குகிறதா?

'எவ்வளவு அழகான கண்கள்? எவ்வளவு அடர்த்தியான புருவங்கள்! எவ்வளவு எடுப்பான நாசி! அடாடா, எத்தகைய செவ்விதழ்கள்! - இவ்வளவு அழகும் கொண்ட ஒருத்தியா இப்படி விஷத்தைக் கக்குகிறாள்?'

இளங்கோவின் வலது கரம் பரபரத்தது. அவனுடைய முகத்தின் அழகுச் சேர்க்கை யனைத்தும் அவனுடைய ஒரே ஒரு அறையைத் தாங்க வலிமையற்றவை. 'என்ன துணிவு இவளுக்கு? யாரிடம் பேசுகிறோம் என்பதைத் தெரிந்து கொண்டுதான் பேசுகிறாளா?'

இளங்கோவின் முகத்தில் திடீரென்று கோரக் களை தாண்டவமாடியது. புருவங்கள் நெரிந்தன. விழிகள் குத்திட்டு நின்றன. அவளருகில் நெருங்கி, அவளைப் பார்த்துப் பயங்கரமாக விழித்துக் கொண்டே, ''நீ என்ன சொன்னாய்?'' என்று திரும்பவும் கேட்டான்.

''நீங்கள் என் குல விரோதி! நான் உங்களை வெறுக்கிறேன்'' என்று கலங்காமல் கூறினாள் ரோகிணி.

மறுகணம் 'பளீ'ரென்று சத்தம் கேட்டது. ரோகிணியின் மூக்கிலிருந்து ரத்தத் துளிகள் கசிந்தன! செவிகள் ரீங்காரம் செய்தன.

அத்துடன் அவன் நிற்கவில்லை. வெறி கொண்டவன்போல் அவள் இடையைப் பற்றி மேலே தூக்கினான். கீழே கடல் அலைகள் மரக்கலத்துடன் முட்டி மோதிக் கொண்டு பயங்கரப் பேயாட்டம் போட்டன. உணர்ச்சி வேகத்தில் தான் செய்து கொண்டிருப்பது என்ன என்பதையே அவன் மறந்து விட்டான்.

''உன்னைத் தொலைத்து விடுவேன்! என்னை யாரென்று நினைத்தாய்? யார் என்று நினைத்தாய்?'' என்று அலறினான்.

அலைகடல், அவன் கரங்களில் அகப்பட்டிருந்த சிறு பிராணியைத் தனக்கு உணவாகப் போடச் சொல்லிக் கூத்தாடியது. ரோகிணி தன் வாழ்வின் முடிவு நெருங்கி விட்டதென்ற எண்ணத்தில் தன் பலமனைத்தும் சேர்த்துக் கத்தினாள். கை கால்களை உதறிக்கொண்டு பதறினாள். கூக்குரலிட்டாள்.

மரப்படிகளில் காலடி ஓசை கேட்டது. ''இளங்கோ!'' என்று அதட்டிக் கொண்டே அங்கு ஓடி வந்தார் வல்லவரையர். தாவிச் சென்று ரோகிணியை அவனிடமிருந்து பற்றி இழுத்தார்.

அவனுடைய கோலத்தைக் கண்டவுடன், ஏதோ நடக்கக் கூடாதது நடந்திருக்க வேண்டுமென்று தோன்றியது, வல்லவரையருக்கு.

ரோகிணியை ஒருபுறம் நிறுத்தி விட்டு, இளங்கோவிடம் நெருங்கி வந்து, ''நீ என்ன காரியம் செய்யத் துணிந்து விட்டாய்?'' என்று பதறினார். ''இப்போது என்ன நடந்து விட்டது?''

அவன் மறுமொழி கூறாமல் தலையைக் கவிழ்த்துக் கொண்டு கடலின் பக்கம் திரும்பினான். கண்ணீர்த்துளிகள் வெடித்துச் சிதறின. அவன் முதுகு குலுங்கி அங்கம் பதறி நடுங்குவதை ரோகிணி மிகுந்த அச்சத்தோடு பார்த்துக் கொண்டிருந்தாள்.

''என்ன இளங்கோ, இது!'' வல்லவரையர் மீண்டும் கேட்டார்.

''என்னை இவள் இகழ்ந்து பேசிவிட்டாள் தாத்தா! என்னால் அதைப் பொறுக்க முடியவில்லை!'' என்று முகத்தைத் திருப்பாமலே பதில் அளித்தான் இளங்கோ. ''பொறுக்கவே முடியவில்லை!'' என்று மீண்டும் குமுறினான். ''என்னை இவள் அலட்சியப்படுத்தி விட்டாள், தாத்தா!''

'இந்தச் சிறிய விஷயத்துக்காகவா இவ்வளவு பதற்றம்?' என்று கேட்பவர்

போல் முதலில் விழித்தார் வல்லவரையர் வந்தியத்தேவர். உடனே அவருக்குக் கொடும்பாளூர்ப் பெரிய வேளாரின் நினைவு வந்தது. தந்தையைப் போல் தானே மகனும் இருப்பான்?

ரோகிணி ஏதோ தகாத குற்றம் புரிந்து விட்டவள்போல் முகத்தை வைத்துக் கொண்டு பரிதாபமாக நின்றாள். வல்லவரையர் அவளை நெருங்கி, "கொடும்பாளூர்க் குலம் மிகவும் பொல்லாத குலம், ரோகிணி! நெருப்போடு பழகுவது போல் அதனுடன் பழக வேண்டும்" என்று கூறினார்.

பதிலளிக்கக்கூடிய தெம்போ, துணிவோ அவளிடம் இல்லை. பயங்கரக் கனவிலிருந்து விழித்துக் கொண்டவள்போல் அவள் காணப்பட்டாள்.

"ரோகிணி! பெற்று வளர்த்த தாயார் ஒரு சுடுசொல் சொன்னால்கூட அவர்கள் தாங்கமாட்டார்கள். மாபெரும் சோழ சாம்ராஜ்யத்தைக் கட்டி ஆளும் சக்கரவர்த்திகளே அவர்களிடம் இன்மொழியால் நயந்து உரையாடுவது வழக்கம். இளங்கோவுடன் நெருங்கிப் பழகும் நீ இதையெல்லாம் தெரிந்து கொண்டு பழக வேண்டும், அம்மா!"

"நான் ஒன்றுமே சொல்லவில்லையே!" என்றாள் ரோகிணி. "என்னுடைய துன்பம் தாங்காமல் நான் தனிமையில் புழுங்கிக் கொண்டிருந்த போது அவர் தாம் வந்து குறுக்கிட்டார்."

"பாதகமில்லை! இனியாவது கவனமாக நடந்து கொள். அவன் கொடும்பாளூர் அரசரின் செல்வப் புதல்வன்; நாடாளவிருக்கும் இளவரசன்; நயந்து பேசுபவர்களுக்கு அவன் நல்லவன்; சுடுசொற்களை வீசுகிறவர்களுக்கு எரிமலை. தெரிந்து கொண்டாயா?"

அவளிடம் அவர் பேசிய சொற்கள் இளங்கோவின் செவிகளில் விழவில்லை. அவற்றைக் கேட்க அவன் விரும்பவுமில்லை.

இளங்கோவிடம் வந்து, "வீராதி வீரனை நீ, கேவலம் ஒரு பெண்பிள்ளையிடந்தானா உன் வீரத்தைக் காட்டத் துணிந்தாய்!" என்று பரிகசித்தார். "பாவம், அவனுடைய கவலை அவனுக்கு! - வா, நீ வந்து ஓய்வெடுத்துக் கொள்."

அவனைத் தள்ளிக் கொண்டு வந்து கட்டிலில் கிடத்தி விட்டு, படிகளில் இறங்கிக் கீழ்த்தளத்துக்குச் சென்றார் வல்லவரையர். சின்னஞ் சிறியவர்களின் கோபம் சில விநாடிகளில் தீரக்கூடியது என்பது அவர் எண்ணம்.

இளங்கோ தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு குப்புறப் படுத்தான். மலைகளைப் போன்ற பேரலைகள் நான்கு பக்கங்களிலிருந்தும் எழும்பிவந்து அவனுடைய கட்டிலைத் தனியே கடலுக்குள் அடித்துக் கொண்டு போவதுபோல் தோன்றியது. 'நான் உன்னை வெறுக்கிறேன்! நான் உன்னை வெறுக்கிறேன்!' என்று எக்காளமிட்டபடியே, அலைகள் ஒவ்வொன்றாக அவன் கண்ணெதிரே சுருண்டெழுந்து நர்த்தனம் புரிந்தன.

அற்பத்திலும் அற்பமான விஷயம் என்று நினைத்து அதைத் தன் மனத்திலிருந்து ஒதுக்கி விடப் பார்த்தான் இளங்கோ. அற்பமான சிறு வித்திலிருந்துதானே மிகப் பெரிய ஆலமரம் முளைத்தெழுகிறது? எண்ணங்களான ஆல விருக்ஷங்கள் அவனது உடலின் ஒவ்வொரு அணுவிலும் விழுதுகளையும் வேர்களையும் பாய்ச்சி அவனை ஆட்டுவிக்கத் தொடங்கின.

முதற் பார்வையிலிருந்து எவளிடம் அவன் தன் மனத்தைப் பறிகொடுத்தானோ, அவள் அவனைப் பகைக்கிறாள்; வெறுக்கிறாள்; துரும்பென எண்ணித் தூற்றுகிறாள்.

வெகுநேரம் சென்ற பின்பு, "இளவரசே!" என்ற மெல்லிய குரலொன்று அவன் தலைமாட்டில் கேட்டது. அந்தக் குரலை அவன் முதலில் நம்பவில்லை. தன் மனம் எழுப்பும் பிரமைக் குரலாக இருக்குமோ என்று சற்றே தயங்கினான்.

"இளவரசே!" என்று மீண்டும் அதே குரல் ஒலித்தது.

தலையைத் தூக்கிப் பார்த்தான்.

"நான்...நான் வந்து..." ரோகிணி தடுமாறினாள்.

"யாரது? யார் நீ?" என்று முகத்தைச் சுளித்துக்கொண்டே கேட்டான் இளங்கோ. "நான் உன்னை வெறுக்கிறேன்; நீ என் முகத்தில் இனி விழிக்க வேண்டாம்!" என்று, தன் சொற்களில் ஆத்திரத்தின் வஞ்சத்தையெல்லாம் ஒன்றாய்த் திரட்டி வைத்து அவள்மீது வீசினான்.

அம்பு பட்ட அன்னப் பறவை தன் சிறகுகளைச் சிதற விட்டு, கப்பலின் கீழ்த்தளத்துக்கு உருண்டோடிச் சென்று, அங்கே குற்றுயிர் குலை உயிராக விழுந்து துடித்தது.

அதன் பிறகு ரோகிணியுடன் இளங்கோ முகம் கொடுத்துப் பேசுவதையே நிறுத்தி விட்டான். நாகைப் பட்டினத்துக்கு அவர்கள் வந்த பின்னரும், அதை விட்டு அவர்கள் புறப்பட்ட பின்பும் அவன் அவளை ஏறெடுத்துப் பார்க்கவில்லை. (தொடரும்)

அரசவையில் கொந்தளிப்பும், கலவரமும் மிகுந்த சமயம் அது.


நான்கு முரட்டு வீரர்களால் கைப்பிடியாக அழைத்து வரப்பெற்ற அவன் மனிதனுல் மதம் அடக்கிக் கொண்டு வரப்பெற்ற வேழம்போல் வந்து கொண்டிருந்தான். அவனது நடையின் மிடுக்கிலும், வெறிச்சிட்ட பார்வையிலும், வெறுப்பும், மறுப்பும் மிகுந்திருந்தன. ஆனுல் அவன் தோற்றத்துக்குச் சிவனடியார் போலக் காட்சியளித்தான்.

அரியணையிலிருந்த அரசரின் கண்கள் இரு நெருப்புக் கோளங்கள் போல் உருண்டன. வீரர்களை நோக்கி, ''தளபதியார் எங்கே இருந்தார்களோ?'' என்று கேட்டார் இடி முழக்கத்துடன்.

வீரர்களின் ஒருவன் தலைவணங்கியபடி கூறினுன். ''சித்தரனேச்சுரர் சிவாலயத்தில் கூடியிருந்த சபையில் கண்டோம். தங்களது ஆணையையும், அவசர அழைப்பையும் எடுத்துக் கூறி நயமாக அழைத்தோம். வர மறுத்தார். உடனடியாக ; அவரைக் கைப்பற்றி அழைத்து வந்தோம்.''

அரசரின் முகத்திலிருந்து கனல் தெறித்தது. ''என்ன, இப்போதும்கூட மறுத்தாரா?'' என்று கூறிக்கொண்டே எதிரே நின்றவனை உருட்டி விழித்தார். ''தளபதி! நீர் ஒழுங் கீனமாக நடந்துகொண்டுள்ள குற்றவாளி. அரசாணையை ஒருமுறை புறக்கணித்ததே பெருங் குற்றம். நீரோ இக்குற்றத்தை மூன்று தடவைகள் புரிந்துள்ளீர். அதனுல் இவற் றுக்கான தண்டனை என்னவென்பதை அரசி யல் அனுபவம் நிறைந்துள்ள நீரே குறிப்பிட்டு விடும்''—என்றுர் அவனை நோக்கி.

அவன் தலைநிமிர்ந்து அரசரின் முகத்தை ஒரு முறை ஏறிட்டு நோக்கி விட்டுப் பார் வையை வேறுபுறம் திருப்பிக்கொண்டான்.



கற்றளிப் பிச்சன்

''ஓ, அப்படியா? உமது அழுத்தம் புரிகிறது! தளபதி! நீர் இந்நாட்டை மாற்றா னுக்குக் காட்டிக் கொடுக்கும் நோக்கம் கொண்டுள்ளீர் அல்லவா?'' — தீக்குழம்பை உமிழ்ந்தார் வேந்தர்.

அடுத்த கணம் அவன் கொதி மணலில் பொரியும் சோளம் போன்று துள்ளினான். ''வேந்தே, அன்று, அன்று! அத்தகைய நன்றி கெட்ட மிருகமல்ல நான்! நான்...நான்...'' எனத் தடுமாறிய வண்ணம் வார்த்தைகளை மென்று விழுங்கினான்.

''ஆம்! நீர் இவ்வரசியலுக்கு நம்பிக்கைத் துரோகியாகிவிட்டீர். சில காலமாக உமது செய்கைகள், வேலியே பயிரை மேய்வது போன்று உள்ளன. உமது மீதுள்ள நம்பிக்கையால், உம்மை இதுகாறும் கண்காணிக்காது விட்டிருந்தோம். ஆனால் இப்போது...''

''பேரரசே! என்னை மன்னியுங்கள். இக் கொடுங் குற்றச்சாட்டை என்மீது சுமத்துவதற்கு முன், தங்களது மனச்சாட்சி அனுமதிக்கிறதா வென்பதைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்'' என்றான் சற்றே நிமிர்ந்த பார்வையுடன் அத்தளபதி.

அரசர் வெறுப்பும் வினயமும் கலந்த தோரணையில் 'கடகட'வென நகைத்தார். அவனை நோக்கி, ''பின்னர், நீர் படையை விட்டு அனுமதியின்றி, முன்னறிவிப்பின்றி விலகிய தன் காரணம்? மும்முறைகள் ஆளை விடுத்தும் வர மறுத்ததின் காரணம்?'' என்றார் முகத்தைச் சுளித்தபடியே.



''வேந்தே! அக்காரணத்தை மட்டும் சிறிது காலம் வரையில் கேட்காமல் இருக்குமாறு மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன். அது என்னுடைய சொந்த வாழ்வின் நிலையையும் ஒட்டியது.''

''ஓ, அப்படியா? நம் அரசியலுக்கு நேர்ந்துள்ள நெருக்கடியான நிலைகளைவிட உமது சொந்த வாழ்வின் அலுவல்கள் முக்கியமானதாகி விட்டனவோ? தளபதி! நீர் மறைப்பதில் பயனில்லை. உமது கருத்தில் சூழ்ச்சி உருவாகி உள்ளது என்பது நிச்சயம். இச் சோழ மண்டலத்தின் மீதுள்ள பற்று உமக்கு உண்மையாக இருந்திருப்பின், நீர் எடுத்துக் கொண்டுள்ள விசுவாசப் பேருரை தூய்மையுடையதாயிருப்பின், உமது நிலை இவ்வாறு மாற்றம் கொண்டிராது. பேராபத்துக்கள் சூழ்ந்து விட்டுள்ள இன்றைய அரசியல் கொந்தளிப்பை அறிந்தும், உமது உள்ளத்தில்-உடலில் சிறிதும் துடிப்பில்லை. இதன் காரணம் உமது துரோக சிந்தை!''

அப்போது தளபதியின் முகத்தில் இதுகாறும் தோன்றியிராத ஆவேச உணர்ச்சி மின்னல்போல் எழுந்தது! கரங்களைச் சிரமேற் குவித்தவண்ணம், ''மதுரை கொண்ட கோப்பரகேசரி பராந்தக சோழரின் திருவடிகளில் இவ்வடிமையின் விண்ணப்பம்! பாண்டியருடன் நிகழ்த்திய வெள்ளூர்ப் போரில் வெற்றிக்காக எந்த வீரர் உயிரை மாய்த்துக் கொண்டாரோ, அதே பழுவேட்டரையர் கண்டன் அமுதனாரின் உதிரத்திற் பிறந்த இம் மகன்—போருக்கும் அஞ்சான்; புறமுதுகும் இடான். ஆனால், இழுக்குக்கும், ஒவ்வாக் குற்றச்சாட்டுக்கும் உள்ளம் துடிக்கின்றேன். பேரரசே! இப் பூதவுடலின் இறுதி மூச்சு வரையில், அரசியலுக்கு எதிரான துரோக சிந்தை கொள்ள மாட்டேன் என்பதைத் தங்களது குலப்பெருநாயகனான ஆடவல்லான் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன்!'' என்றான் படபடப்புடன். அவனது விழிகளிலிருந்து இரண்டு அருவிகள் பெருகிக் கொண்டிருந்தன.

அதே கணம், அரசரின் முகத்திலிருந்த [illegible]தணலை அவனது கண்ணீர் வெள்ளம் அவித்துவிட்டது போலும்! அரசர் திக்பிரமை கொண்டவர் போல் சிறிது நேரம் அசைவற்றவராய் அமர்ந்திருந்தார். பின்னர் எழுந்து, இரண்டு படிகளைக் கடந்து [illegible] நின்றபடி, ''தளபதி! அரசாணையை அவமதித்ததன் காரணமாக, உம் மீது சீற்றம் கொண்டேன். உம்மைத் தண்டிப்பதன் பொருட்டே, கடைசியாக இங்கு இழுத்து வரும்படி ஆணையிட்டேன். ஆனால், நீர் இங்கு வந்து உமது முகத்தினைக் காட்டியதும், உமது [illegible] கண்டதும் உமது [illegible] புரிந்தது. ராஜ விசுவாசத்துக்கும் [illegible] என்னைக் கட்டுப்படுத்தி விட்டது. நீர் போர்முகம் சென்று, வாகை பெற்றுத்தான் வரவேண்டாம்; வெறும் [illegible] சென்று வந்தாலே வெற்றிக் கிடை

நம் பக்கலில் இருப்பாள் என்பதே எனது நம்பிக்கை!'' என்றார் இளகிய குரலில்.

அவன் சிரம் தாழ்த்தி வணங்கியபடி, ''பேரரசர் அருள் கூர்ந்து என்னைத் தற்போதைக்கு விடுவிக்க வேண்டும். சோழ நாட்டின் உப்பைத் தின்று வளர்ந்த இவ்வேழைத் தண்டநாயகன், எம்முறையிலும் கடமையினின்றும் நழுவமாட்டான் என்பதைத் தாங்கள் நம்பலாம்!'' என்றான். அவ் வார்த்தைகள் முடிந்தவுடனேயே, அரசவையினின்றும் அவன் மின்னலாக மறைந்து விட்டான்! சபையில் திகைப்பும், வியப்புமான நிசப்தம் குடிகொண்டு விட்டது.

* * *

இத்தகைய வழக்கும் வாதாடல்களும், இன்றையத் தேதிக்கு—ஆயிரத்து இருபது வருஷங்களுக்குமுன் நிகழ்ந்தவை. அப்போது சோழப் பேரரசின் இரண்டாம் உதயம் தொடங்கிச் சில ஆண்டுகளே ஆகியிருந்தன. ஆதித்த சோழரின் மைந்தரான முதலாம் பராந்தக சோழர் அவர். அவர் எதிரே கைதியின் நிலையில் கொண்டுவரப்பட்டிருந்த அவன்-தென் பகுதிப் படைக்குத் தளபதியாக இருந்த பிச்சன் என்பவன்!

பராந்தகரின் முப்பத்தெட்டாம் ஆட்சியாண்டு அப்போது நிகழ்ந்து கொண்டிருந்தது. பாட்டனாராலும் தந்தையாலும் உருவாக்கப் பெற்றிருந்த அஸ்திவாரத்தின் மீது மகத்தான சோழ சாம்ராஜ்யக் கோட்டையை உருவாக்கி விட்டிருந்தார் பராந்தகர். கூடவே கலைக்கும், சமயத்துக்கும், அறத்துக்குமாக அவர் எண்ணற்ற தொண்டுகள் புரிந்திருந்தார். பற்பல சிவாலயங்களையும் கட்டுவித்திருந்தார். தில்லைக் கூத்த பெருமானுக்கு உரியதான திருமன்றம் அமைத்து, அதற்குப் பொன் வேய்ந்த காவலரெனவும் பெயர் கொண்டார்.

பாண்டிய நாட்டின் திருமுடியையும், அரச பீடத்தையும் மீட்டுக் கொண்டு வருவதன் நிமித்தம், அரசர் ஈழத்துப் போரைத் தொடங்கத் திட்டம் வகுத்துக் கொண்டிருந்தார். அப்போதுதான் வடக்கிலிருந்து மற்றொரு பெரும் சக்தி சோழநாட்டையே விழுங்க வந்து கொண்டிருந்தது. அங்கே ராஷ்டிரகூட மன்னனான கிருஷ்ணன் என்பவன் பதுங்கிக் கிடந்த பாணர்களையும், உறங்கிக் கொண்டிருந்த வைதும்பர்களையும் ஒன்றுசேர்த்துக் கொண்டு கங்க மன்னனான இரண்டாம் பூதுகனின் பேருதவிகளுடன் கச்சியை நோக்கிப் படையெடுத்திருந்தான். அச்சமயம் சோழர் படையின் பெரும் பகுதியுடன் பராந்தகரின் முதல் மைந்தனான இராஜாதித்தன் சாளுக்கியரின் ஆட்சிக்குட்பட்டிருந்த சீத்புலி நாட்டில் போரிட்டுக் கொண்டிருந்தான். இத்தகைய நெருக்கடியான நிலையில்தாம் அஞ்சா நெஞ்சமும், போர் வன்மையும் மிகுந்திருந்த தளபதி பிச்சன், அரசியலினின்று விலகியும், தலைமறைவாகவும் இருந்தான். முடிவாக, பேரரசரின் கடும் உத்தரவுக்குப் பின்பே அரச வீரர்கள் பிச்சனைக் கைப்பிடியாக அழைத்து வந்திருந்தனர்.

பிச்சன் அரச அவையை விட்டுச் சென்ற அன்றே இளைய இளவரசனான அரிஞ்சயனின் தலைமையில் காஞ்சியைப் பாதுகாக்கப் படைகள் சென்றன.

ஏறக்குறைய ஒரு திங்கள் கழிந்துவிட்டது. வடபால் நிகழ்ந்து கொண்டிருந்த போரின் கவலைகளால், அரசர் அல்லும் பகலும் ஊண் உறக்கமின்றி இருந்தார். ஒரு நாள் சோழ நாட்டு ஒற்றர்கள் இருவர் அரச சமூகத்துக்கு வந்து, ஓர் அதிசயத்தைத் தெரிவித்தனர். அவர்கள் இருவரும் தளபதியான பிச்சனைக் கண்காணிக்கச் சென்றிருந்தவர்கள்!

''பேரரசே! ஒரு திங்களாகத் தளபதியைப் பல இடங்களிலும் தேடி விட்டோம். காண இயலவில்லை. முடிவாக, தென்குரங்காடுதுறையின் அருகிலுள்ள ஆவடுதுறை கிராமத்தில் இருக்கலாமெனக் கேள்வியுற்று, அங்கு சென்றோம்.

''வேந்தே! அங்கே இவ்வளவு காலங்களாகச் செங்கற் சிற்றாலயமாக விளங்கிவந்துள்ள 'மாசிலாமணி செம்பொற்றியாகரின்' ஆலயம் இப்போது மாபெரும் கற்றளியாக உருவாகி வருவதைக் கண்டோம். இச்சோழ நாட்டில் இதுவரையில் வந்து குவிந்திராத கருங்கற் செல்வங்கள் அங்கே மலையாகக் கொண்டு வந்து குவிக்கப் பெற்றுள்ளன! இத்தகைய திருப்பணியை நடத்தி வரும் சிற்றணைச்சூர் மகாசபையாரைக் கண்டு வினவினோம். அவர்கள் மூலம் இவையனைத்தும் நம் தளபதி பிச்சனின் முயற்சியென்றும், அவரது வேண்டுகோளின்படியே அச்சபையார் திருப்பணி வேலைகளை நடத்தி வருவதாகவும் அறிந்தோம். ஆனால் தளபதியின் இருப்பிடத்தைக் கூற அவர்கள் மறுக்கிறார்கள்!'' என்று அவ்வொற்றர்கள் அறிவித்தனர்.

சோழ வேந்தர் அவர்களது செய்திகளைக் கேட்டதுதான் தாமதம்; போரின் கவலைகளையே மறந்து விட்டார். தளபதி பிச்சனை, அருட்பணிகள் புரியத் தூண்டுவித்திருக்கும் ஆவடுதுறையப்பனைக் காணும் பேரின்பக் காதலால் உந்தப்பெற்றுக் கிளம்பிவிட்டார் அங்கே!

ஒற்றர்கள் கூறியிருந்த செய்திகள் அனைத்தும் உண்மையாகவே நடைபெற்றுக் கொண்டிருந்தன. சில திங்களுக்கு முன் செங்கல்லாலும் கண்ணாம்பாலும் உருக்கொண்டிருந்த கோயிலின் கருவறை, இப்போது கருநீலப் பாறைக் கற்களால் உயர்ந்த விமானத்தைக் கொண்டு புதிய தோற்றம் அளித்துக் கொண்டிருந்தது. சிற்றுளி கொண்டு பாறைக் கற்களைச் சிற்பிகள் பொளிந்து கொண்டிருந்த காட்சி பேரரசரை மெய் சிலிர்க்க வைத்தது.

மகாசபைத் தலைவரின் மூலம் பிச்சனின் அரும் பணிகள் அனைத்தும் அரசரின் கவனத்துக்கு அப்போதுதான் வந்து சேர்ந்தன!

பிச்சன் பல காலமாக அந்தக் கோயிலுக்கு அரும் பணிகள் புரிந்திருந்தான்! திருப்பதியம் ஓதுவாருக்கும் அன்றாடம் திருமஞ்சன நீர் கொண்டு வரும் அடியார்களுக்கும் கருவிகள் வாசிப்போருக்கும் பயன்படும் வகையில், தனித்தனியாக நிலம் வாங்கி அவற்றின் நிர்வாகத்தை அச்சபையாரின் பொறுப்பில் விட்டிருந்தான். இவையனைத்தும் அவனது அரச சேவையின் ஊதியத்தைக் கொண்டும், பெயருக்கேற்ற பிச்சனாகவே இரந்து ஈட்டியும் செய்திருந்தவை!

பராந்தக சோழரின் உள்ளத்தில் அம் மாசற்ற தொண்டனின் பணிகள் எல்லையிலா மதிப்பையும், ஆழ்ந்த பற்றையும் அளித்துவிட்டன. அவன் சென்றுள்ள இடத்தைப்பற்றி விசாரித்தார்.

"பெருவேந்தரே! தளபதியை நாங்களும் கண்டு ஒரு திங்களுக்கு மேலாகிவிட்டது. இத் திருப்பணிகளைப் பூர்த்தி செய்விக்கத் தக்க பொருளைத் தேடிவருவதாகக் கூறிவிட்டுச் சென்றார். இத் திருப்பணிக்குரிய பொருள் இன்றுடன் தீர்ந்துவிட்டதால், நாளை முதல் அவரது வரவை எதிர்நோக்கியே இதனை மீண்டும் துவக்க முடிவு கொண்டுள்ளோம்" என்றனர் பணிவுடன் சபையினர்.


அரசர் சட்டெனத் திரும்பி, தம் பக்கலில் நின்ற மெய்க்காப்பாளரையும், அமைச்சரையும் உற்று நோக்கினார். அரசரின் குறிப்பறிந்த அமைச்சர், தம்மிடையில் செருகியிருந்த கிழியையெடுத்து அரசரிடம் அளித்தார். அரசர், அதை மகாசபைத் தலைவரின் கரங்களில் கொடுத்து, "பெரியீர்! பேரருளாளன் பிச்சனால் தொடங்கப் பெற்றுள்ள இவ்வரும் பணிகள், ஒரு விநாடியேனும் தவக்கமுறக்கூடாது. இது-பரமன் அளிக்கும் பொற்கிழியல்ல; அற்பமான நந்நூறு கழஞ்சு பொன்களைக் கொண்ட கிழி. இப்பொருள் தீர்ந்ததும் நம்மிடம் வந்து சேரும்—" இவ்வாறு கூறிவிட்டு விடைபெற்றார் வேந்தர்.

பிச்சனின் திருப்பணிகள் தொடர்ந்தன. பதினைந்து தினங்கள் கழிந்துவிட்டன.

* * *

சோழ அரசியல் சரித்திரத்தில் சொல்லொணாத ஒரு கொந்தளிப்பு!

காஞ்சியை நோக்கிச் சென்றிருந்த சோழப் படைகள், எதிரிப் படைகளைச் சந்திக்குமுன், சாளுக்கியரை வென்று திரும்பியிருந்த இளவரசனான இராஜாதித்தன், எதிரிகளைத் தக்கோலத்தில் சந்தித்து விட்டான். ஏறக் குறைய இருபத்திரண்டு தினங்கள் போர் நிகழ்ந்தது. முடிவாக, இளவரசனான இராஜாதித்தன், கங்கமன்னனான பூதுகனால் கொல்லப் பட்டுவிட்டான். சோழர் சேனை சிதறுண்டது. இத்தகைய சந்தர்ப்பத்தில்தான் சோழரின் புதுப் படை அங்கே சென்றிருந்தது. அதனைத் தலைமை தாங்கிச் சென்றிருந்த வீரன், வீராவேச உணர்ச்சி கொண்டு துடித்தெழுந்தான். நாலா புறங்களிலும் சிதறி ஓடிய சோழர் படையை ஒருங்கு கூட்டி, வெறியையும், உற்சாகத்தையும் மூட்டினான். போர் முன்னிலும் உக்கிரமாகத் தொடங்கியது! சோழர் படைவீரரின் ஒவ்வொரு நரம்பிலும் ஆக்ரோஷம் கொந்தளித்தது. அவர்களது வெறிச் சுழற்சி, இப்போது பிரளயகாலச் சண்டமாருதமாக மாறியிருந்தது. எதிரிப் படைகள் கலங்கின. தோற்ற சோழர் படையின் புது எழுச்சிக்குக் காரணமான தளபதியைக் கண்டு எதிரிகள் திகைத்தனர். அவன்தான் தளபதி பிச்சன்!



சிரிக்காதே!

புகழ் ஏந்தி!

"நீர், ரொம்பப் பெரிய நடிகராக இருக்கலாம். நான் அப்படி உமக்கு சர்டிபிகேட் கொடுக்க முடியாதே. நான் உங்கள் நடிப்பை இதற்குமுன் பார்த்ததே இல்லையே!"

"சபாஷ்! அப்ப இப்படி எழுதுங்க: "இவர் பெரிய நடிகர். இவர் நடிப்பைப் போல் இதற்குமுன் பார்த்ததில்லை' என்று எழுதுங்கள்!"

கவலையில்லை!

அழகி: என்னை நீங்கள் கல்யாணம் செய்துகொள்ளப் போவதாக ஊரெல்லாம் சொல்லுகிறீராமே! அப்படிக் கல்யாணம் செய்துகொள்ள ஆண்மகனை நான் தேடினால் அதில் நீங்கள்தான் கடைசி மனிதனாக இருப்பீர்.

அவன்: சரி, அதுவரையிலும் காத்திருக்கிறேன்!

உதவி!

ஒருவர் (ரயில்வே ஸ்டேஷனில்)**:** இனிமேல் நான் பெட்டிகளையெல்லாம் ரயிலில் ஏற்றி, கூஜாவில் தண்ணீர் பிடித்து வந்து பிறகுதான் டிபன் சாப்பிடணும் அவ்வளவு வேலை இருக்கு. நீங்கள் ஏதேனும் உதவி செய்வீர்களா?

மற்றவர்: ஓ! பேஷா செய்கிறேன்! உங்கள் டிபனை நான் வேண்டுமானால் சாப்பிட்டு விடுகிறேன்!

தள்ளுபடி!


ஒரு நீதிபதி கூண்டிலிருப்பவருக்கு ஐம்பது ரூபாய் அபராதம் போட்டார். கூண்டிலிருப்பவர்: "நான் ஒரு துணி வியாபாரி. அபராதத்தைக் கொஞ்சம் குறைக்க முடியுமா?"

நீதிபதி: 'ஓ' துணி வியாபாரியா? அப்படி என்றால், உங்களுக்கென்று பிரத்தியேகமாக அபராதம் குறைக்கப் பட்டிருக்கிறது. அபராதத்தைச் செலுத்த முந்துங்கள். ரூபாய் 49 தொண்ணூற்று ஒன்பது நயா பைசா!"

ஒரே குற்றம்!

ஒரு பெண்மணி வெகுவேகமாக ஓட்டி வந்த கார் எதிரேயிருந்த கட்டடத்தின் மேல் மோதி நின்றது. போலீஸ் அதிகாரி குற்றங்களைக் காரில் இருந்த கனவானிடம் சொல்லிக்கொண்டு வந்தார். "பிரேக் சரியில்லை, அதனால் விபத்து ஏற்பட்டது. அதி வேகமாக வந்தது. ஹாரன் அடிக்காதது....."

கனவான் குறுக்கிட்டு, "ஸார்! இத்தனை வேண்டாம். ஒரே குற்றச்சாட்டு என்மேல் போடுங்கள் போதும். இவளை கார் ஓட்ட அனுமதித்தது!" என்றார்.



அம்பி: அத்திம்பேரே! தீபாவளிக்கு நீங்க வந்தா போகமாட்டேளாம். அப்பா சொல்லிண்டு இருக்கா!

அத்திம்பேர்: இருக்கட்டும்! நீ என்ன வாழ்ந்தே? நீயும்தான் உள்ளே வந்தா போகமாட்டாயே!

பிச்சனின் முயற்சியால், காஞ்சி நகரம் அப்போது தப்பிவிட்டது! அரிஞ்சயனின் தலைமையில் சென்றிருந்த படைகளைக் காஞ்சியைச் சுற்றிலும் அரணாக வைத்துவிட்டு, அவன் மட்டும் சிறு படையுடன் அங்கே சென்றிருந்தான்!

இத்தகைய நிலையில், சிற்றனைச்சூர் மகாசபைத் தலைவரிடமிருந்து, அரசருக்கு ஓர் அவசரச் செய்தி கிடைத்திருந்தது. ஏறக்குறைய ஒன்றரைத் திங்களாக, ஏவலரால் தேடப் பெற்றுக் கொண்டிருக்கும் தளபதி பிச்சன், போர்முகம் சென்றிருந்ததையும், தற்போது படுகாயமுற்று, அபாய நிலையில் ஆவடுதுறைக்குக் கொண்டுவரப் பெற்றிருப்பதையும் அவரது ஓலையின் மூலம் அறிந்தார் வேந்தர். அச் செய்தி கண்டதுமே, அவருக்கு இருந்த பெருந்துயரத்தை யெல்லாம் மறந்துவிட்டு, ஆவடுதுறையை நோக்கிக் கிளம்பி விட்டார்.

வலது கரம் துண்டிக்கப் பெற்றும், நெற்றியிலும் மார்பிலும் எண்ணற்ற விழுப்புண்களால் முத்திரையிடப் பெற்றும் படுக்கையில் கிடந்தான் பிச்சன். மகாசபையைச் சேர்ந்த சிலர் அவன் அருகே குழுமியிருந்தனர். அங்கே வந்து சேர்ந்த சோழவேந்தர், உள்ளமுருகிக் கண்ணீர் சோரத் தழுவிக் கொண்டார் அவனை. புகழுரைகளால் போற்றினார்.

இறுதியுடன் போரிட்டுக் கொண்டிருந்த பிச்சன், அரசரை நோக்கி மெல்லிய குரலில் கூறினான்: "வேந்தே, இவ்வேழை கடமையில் தவறவில்லை. ஆனால் மனமறிந்து ஒரு துரோகமே புரிந்துள்ளேன்! போர்களின் வெற்றியால் பெற்ற செல்வங்களைத் தாங்கள் இறைவனின் திருப்பணிகளுக்கே அர்ப்பணிக்கத் தவறியதில்லை. ஆனால் தங்களது இட்டமனைத்தும் கொள்ளிடத்துக்கு வடபாலிலும், தொண்டை மண்டலத்திலுமே இருந்ததை அறிந்து மனம் ஏக்கமுற்றேன். இதன் விளைவே, வெள்ளூர் போரிலும், விழிஞத்துப் போரிலுமாகக் கிடைத்த பொருளின் ஒரு பகுதியை மறைத்து வைத்தே இத்திருப்பணிகளை ஈடேற்றத் துணிந்தேன். வெள்ளூர் போரில் 'வெற்றி சென்ற சென்னிப் பேரரையர்' என்ற புகழுடன் உயிர் நீத்த என் தந்தை, நானும் என் தாயும் பிறந்த மண் - இத்திருவாவடுதுறை என்பதைக் கடைசித் தருணத்தில் தாம் உணர்த்திவிட்டார். எந்தத் திருமூலரின் நாவின் மூலம் மூவாயிரம் பாடலைத் தோற்றுவிக்க அருள் சுரந்தானோ, அவ்வப்பனின் திருக்கோயில் அரச அரண்மனையிலும் சிற்றுருவாக இருப்பது கண்டு உள்ளம் நொந்தேன். என் ஊதியச் சேமிப்புகள் அனைத்தையும் அவனது பணிக்கெனவே அர்ப்பணித்தேன். கடமையைச் செய்வதுடன், மீண்டும் பொருளீட்டி வந்து இத்திருப்பணிகளை முடிப்பதற்கெனவே போர்முகம் சென்றேன். 'இடரினும் தளரினும், எனதுறு நோய் தொடரினும்' என்று அருட்கண்ணீர் சொரிந்த ஞானக் குழந்தையின் கவலை போக்கி, உலவாக்கிழி யளித்த பெருமான், தங்கள் கருத்திலும் குடி புகுந்து பொற்கிழியளிக்கச் செய்வித்து, இத்திருப்பணியை முடிப்பிக்கத் திருவருள் சுரந்து விட்டான்! ஆகவே, இப்போதையப் போரின் மூலம் கிடைத்த செல்வத்தைத் தங்களையறியாது மறைக்க மனம் ஒவ்வாது செய்து விட்டான் என்னப்பன்! அவையனைத்தும், தங்களிடம் சேர்ப்பிக்குமாறு, இச்சபையாரிடம் ஒப்படைத்துள்ளேன். இப்பணியின் பெருமையனைத்தும் தங்களையே சாரும்!"

"வெநேசப் பிச்சனே! மன்னனுமறியாத மாபெரும் பணியை மாநிலம் வியக்கப் புரிந்து விட்டீர்! இப்பணியை முடிப்பிக்கும் வாய்ப்பு என்னுடையதாயினும், இதன் பெருமை அனைத்தும் உங்களையே சார்ந்ததாகும். இத் திருவாவடுதுறையப்பனை நோக்கி, 'மஞ்சனே மணியும் ஆனாய்—மரகதத்திரளும் ஆனாய்' எனப் போற்றிய அப்பன் நாவுக்கரசரையும், 'குறைவிலா நிறைவே — குணக்குன்றே' யெனக் கூவிய சுந்தரரையும், 'வெந்துயர் தோன்றியோர் வெருவுறினும்' என முறைப் பாடிட்ட ஞானக் குழந்தையையும், மக்கள் எவ்வாறு மறவாரோ, அவ்வாறே, இத்திருக் கற்றளியையுருவாக்கியபிச்சனையும் மறவார்!"

சோழவேந்தரின் கனிவுரைகள் கேட்ட பிச்சன், ஆனந்த வெள்ளத்தில் மிதந்து விம்மியபடியே 'நிறைவு' பெற்றுவிட்டான்!

சோழர் தலைநகரான தஞ்சை வட்டத்துக்குள், முதன்முதலாகக் கற்றளி தோற்றுவித்த பெருமையைப் பேரரசரான பராந்தகசோழர் அடையவில்லை: அவரது தளபதி அடைந்து விட்டான்! பிற்காலச் சோழ மன்னர்களின் உள்ளங்களில், இத்தகைய இன்ப ஊற்றைச் சுரக்கச் செய்த பெருமையும் அவனுக்கே உரித்தாகும்! பராந்தக சோழர், அவ்வாண்டில் பிறந்த தம் கடைசி மகவுக்குக் 'கற்றளி' யென்ற பெயரைச் சூட்டுவதன் மூலமே, பிச்சனின் பெருமையைப் பகிர்ந்து கொண்டார். அன்று பிறந்த கற்றளி எங்கும் பிறந்து விட்டாள் — எங்கும் வளர்கிறாள்.

சோழவேந்தரின் பரந்த நோக்கத்தால் கல்லில் உருப் பெற்று, கற்றளியினுள்ளே இடம் பெற்று, காலம் காலமாக வாழ்ந்து வருகின்றான்—தளபதியான கற்றளிப் பிச்சன்! அவனுக்கு இனியும்தான் அழிவேது?

நிறுத்த முடியாத



பிரிட்டானியா

பிரிட்டானியா பிஸ்கட்டுகள் சிறுவர்களுக்கு மிகச் சிறந்தவை. காரணம், தினசரி உணவு, ஆரோக்கியம், வலிமை ஆகியவற்றை அதிகப்படுத்தும் விசேஷ வைட்டமின்களும், போஷாக்குச் சத்துக்களும் அவற்றில் நிறைந்திருக்கின்றன. பிரிட்டானியா பிஸ்கட்டுகள் இன்சுவையோடு திருப்தியளிக்கும் வகையிலும் இருப்பதால் அவை சிறுவர்களுக்கு மிகப் பிரியமானவை.

பிரிட்டானியா பிஸ்கட்டுகள்மீது பெரியவர்களுக்கும் ஆசை அதிகம். விவேகிகள் பிரிட்டானியா பிஸ்கட்டுகளையே வாங்கும்படி வற்புறுத்துவார்கள். ஏனெனில், அவை தின்பதற்கு உச்ச தரமாயும் சுவையில் சிறந்ததாயும் இருக்கின்றன.

பிரிட்டானியா
பிஸ்கட்டுகள்

நீங்கள் வாங்கக்கூடிய
சிறந்த ஒன்று

தி பிரிட்டானியா பிஸ்கட் கம்பெனி லிட்.

BC 3823

கண்கள் உறங்காவோ?

அத்தியாயம் 2

முதல் எதிரொலி

சுந்தரம் வாசல் வழியாகத்தான் வீட்டிலிருந்து வெளியேறினன். ஆனல் இரண்டு வீடுகள் தாண்டியதும், தெருவின் நடுவே ஓடிய சந்தின் வழியாகக் கொல்லைப்புறம் சென்று, கொல்லைப் புறத்தின் வழியாக வடக்குத் தெருவை நோக்கி நடக்கலானன்.

அவனுக்கே தன் கோலத்தைக் காண வெட்கமாக இருந்தது. அவன் உடலில் ஓர் அழுக்கு வேட்டியும், அழுக்குச் சட்டையும், முகம் கழுவியதும் துடைத்துக் கொள்ளுவதற்காகத் தோளில் போட்டுக்கொண்டிருந்த தேங்காய்ப்பூ துவாலை ஒன்றும் மட்டுமே இருந்தன. தூங்கி எழுந்து வந்திருந்ததால் தலைக் கிராப்பு பரந்து கிடந்தது. முகமெல்லாம் எண்ணெய் வழிந்தது. இந்தக் கோலத்தோடு அவன் தெரு வழியாக நடந்தால் கிராமத்தார்கள் அவனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்றுதான் நினைப்பார்கள். தவிர, சமீப காலத்தில் அவனுடைய கால்கள் தரையில் பட்டு அவ்வூரில் யாருமே கண்டிராததால், இன்று 'விர்'ரென்று பறக்கும் மோட்டார் வண்டி இல்லாமல் அவன் கால் நடையாகச் சென்ருல் அதுவே கிராமத்தில் பரபரப்பை ஏற்படுத்தி விடும். இவற்றையெல்லாம் மனத்தில் கொண்டுதான் அவன் கொல்லை வழியைத் தேர்ந்தெடுத்தான்.

ஆனல், இப்படிக் கெட்டதட்டப் பரதேசிக் கோலத்தில் வீட்டைத் துறக்கின்றேமே, மேலே என்ன செய்வது என்ற கேள்வி அவனிடம் எழாமல் இல்லை. அது அவன் வீட்டைத் துறக்கும் முடிவுக்கு வந்தபோதே எழுந்தது. எழுந்த கணத்திலேயே அவன் அதற்கு விடையும் கண்டுவிட்டான். 'சும்மா பெற்றேரை இப்படிப் பயமுறுத்தித் தன் வழிக்கு வரச் செய்துவிட்டுப் பிறகு வீடு திரும்பி விடலாம்' என்பதில்லை அவன் கண்ட விடை. அது சாத்தியமில்லை என்பது அவனுக்குத் தெரியும். அவர்கள் இவ்வளவு பெரிய விஷயத்தில் தனக்கு அத்தனை எளிதாக விட்டுக் கொடுத்துவிட மாட்டார்கள் என்பது அவன் அறிந்ததே. அப்படி அவர்கள் விட்டுக்கொடுத்துத் தன்னை வீடு திரும்புமாறு கெஞ்சினல் அவன் திரும்பச் சித்தமாகவே இருந்தான். ஆனல் இப்பொழுது இல்லை. இப்பொழுது, தான் எங்கே தஞ்சம் புக நிச்சயித்திருந்தானே அங்கேதான் நடந்துகொண்டிருந்தான். அதாவது வீணவின் ஆஸ்பத்திரிக்கு!

வீணவின் ஆஸ்பத்திரியில் கூட்டம் நெறிபட்டது. வைத்தியத் துறையிலும் சரி, புற வாழ்க்கையிலும் சரி, அவளுக்குக் கேசவபுரத்தில் நல்ல பெயரே நிலவி வந்தது. ஆனல் புங்கனூற்றில் நடந்த கலாட்டாக்களும், விகாவின் மரணத்தின் எதிரொலியும், அவளுடைய புற வாழ்க்கையைப் பற்றிய நல்ல கருத்துக்குச் சமீபமாகச் சிறிது கரி தீட்டத்தான் தீட்டி விட்டன. முன்பெல்லாம் அவள் தெருவோடு போனல், "வணக்கம், டாக்டரம்மா!" என்று உள்ளன்போடு கூறி வந்தவர்கள், இப்பொழுது மனத்தில் வெறுப்போடுதான் வணக்கம் செலுத்தினர். அவளுக்குப் பின்னல் அவளைப் பற்றி ஏளனமான பேச்சுக்களும் சிறுகச் சிறுகப் பேசப்பட்டு வந்தன. இருந்தாலும் இவை அவளுடைய தொழிலை எவ்விதத்திலும் பாதிக்கவில்லை. வழக்கம்போல் அவளிடம் ஏராளமான நோயாளிகள் வந்துகொண்டுதானிருந்தார்கள்.

பரிசோதனை அறையில் வீண யாரோ ஒரு பெண்மணியைப் பரிசோதித்துக் கொண்டிருக்கையில், சுந்தரம் அறைக் கதவைத் தள்ளித் திறந்து கொண்டு, புயலென உள்ளே வந்து, "மன்னித்துக் கொள், வீண!" என்று கூறிவிட்டுப் பின் கட்டுக்கு விரைந்து சென்றன். இந்தக் கோலத்தில், வெளியே குழுமியிருந்த மக்களின் முன், வீணவின் வருகைக்காகக் காத்திருக்க அவனுக்கு வெட்கம்.

அவன் இப்படி முன்னறிவிப்பின்றிப் பரிசோதனை அறைக்குள், அதிலும் ஒரு பெண்மணியைப் பரிசோதித்துக் கொண்டிருக்கையில் வந்தது தொழில் முறையில் வீணவுக்கு ஒருகணம் கோபத்தையே எழுப்பியது. ஆனல் மறுகணம் அவனுடைய கோலத்தைப் பார்த்ததும், அந்தக் கோபம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து, அதன் இடத்தில் இனமறியாத பரபரப்பு ஒன்று ஏற்பட்டது. அவள் அந்த நோயாளிப் பெண்மணியைப் பரிசோதித்துப் பார்த்து

முன்னறைக்கு அனுப்பிவிட்டுப் பின் கட்டுக்கு விரைந்து சென்றான்.

பின்கட்டில் நோயாளிகளுக்காகப் போடப்பட்டிருந்த கட்டில் ஒன்றில் தலையைக் கவிழ்த்தவாறு உட்கார்ந்திருந்தான் சுந்தரம். வீணா அங்கே வந்து, "என்ன ....?" என்று கேட்டாள். 'என்ன நடந்தது?' என்றுகூட அவள் கேட்கவில்லை. என்ன நடந்திருக்கக் கூடும் என்பதைத்தான் அவன் கோலத்தைப் பார்த்ததுமே அவள் ஊகித்து விட்டாளே!

சுந்தரம் வலிய வரவழைத்த முறுவல் ஒன்றுடன், "ஒன்றுமில்லை; நேற்று வேலையைத் துறந்தேன்; இன்று வீட்டைத் துறந்து விட்டேன்" என்றான்.

இதைச் சொல்லிவிட்டு, வீணா அதிர்ச்சி அடைகிறாளா என்று அவள் முகத்தை அவன் கூர்ந்து நோக்கினான். அவள் முக பாவம் சிறிதுகூட மாறவில்லை. ஆனால் முன்பிருந்த பரபரப்பு மட்டும் இன்னும் அப்படியே இருந்தது. அவளும் ஒரு புன்சிரிப்பை வலியத் தவழவிட்டாள். பிறகு, "ஏது? திட்டங்களை நாம் வகுக்கும் முன்னர் அவைகளாகவே நடந்து விடுகின்றன போலிருக்கிறதே! சரி, மேலே....." என்று கேட்டான்.

"இனிமேல், 'மேலே' இல்லை; 'கீழே' தான். டாக்டர் வீணாவுக்குக் கீழே ஒரு கம்பவுண்டர் வேலைக்கு விண்ணப்பித்துக் கொள்ளுகிறேன்."


"அவசியம் அப்படி ஒருவர் எனக்குத் தேவைதான். நர்ஸால் இப்பொழுது எல்லா வேலைகளையும் சமாளிக்க முடியவில்லை. வேலை தந்தேன். அப்புறம்...?"

"பெரிய ஆஸ்பத்திரிகளில் கம்பவுண்டர், நர்ஸ் ஆகியோருக்கு 'டிரஸ்' தைத்துக் கொடுப்பது வழக்கம். உன் ஆஸ்பத்திரியும் பெரிய ஆஸ்பத்திரி தானே? அப்படி இல்லாவிடினும் இந்தக் கம்பவுண்டர் இந்தக் கட்டிலை விட்டு நகர வேண்டுமானால் உடனடியாக இவருக்கு மாற்றுடை வேண்டும்."

வீணா ஒரு சோக நகையைச் சிந்திவிட்டு, "சரி, வேலைக்காரனை உடனே கோவிலூருக்கு அனுப்பி வாங்கி வரச் செய்கிறேன். உங்களுடைய சட்டை அளவு என்ன?" என்றாள்.

"முப்பத்தெட்டு. ஆனால் அவனை முதலில் ஸ்டேஷன் ஹோட்டலிலிருந்து எனக்குக் காப்பி-பலகாரம் வாங்கி வரச் செய்துவிட்டுப் பிறகு கோவிலூருக்கு அனுப்பு. பசி வயிற்றைக் கிள்ளுகிறது. ராத்திரியே சரியாகச் சாப்பாடு செல்லவில்லை."

"ஆகட்டும்; அதற்குள் நீங்கள் கிணற்றடியில் பல் தேய்த்து, முகம் கழுவிக் கொண்டு தயாராக இருங்கள்" என்று கூறி



விட்டு விஜு நோயாளிகளைக் கவனிக்க முன் அறைக்குப் புறப்பட்டான்.

"இன்னொரு விஷயம்" என்று சுந்தரம் அவனை நிறுத்தினன். "இன்று முதல் எனக்குச் சாப்பாடும் இங்கேதான். அதற்கும் முன்னேற்பாடு செய்துவிடு. அப்புறம் உன் நர்ஸ் இருக்கிருளே, அவளை இனித் தன் பாட்டி வீட்டில் ஜாகை வைத்துக் கொள்ளச் செய்ய வேண்டும். இங்கே... இங்கே...."

"நீங்கள் இருக்கப் போகிறீர்கள்; அப்படித்தானே?" என்று விஜு மிகச் சாதாரணமாகக் கூறிவிட்டு நகர்ந்தான். அவன் முகத்தில் புன்னகை மாறவில்லை.

நடந்திருந்தது எவ்வளவு பெரிய விஷயம். அதை இவர்கள் எவ்வளவு எளிதாக ஒரு தினசரி நடைமுறை நிகழ்ச்சி மாதிரி எடுத்துக் கொண்டு விட்டார்கள்! சொந்த ஊரில், அடுத்த தெருவில், பெற்றேருக்கு ஒரே மகனுக வசித்து வந்த ஒருவன், அவர்களைத் துறந்து வேருருத்தியிடம், புகலிடம் நாடி வந்திருக்கிருன். அதன் முழு விவரத்தைக் கூட அவள் அறிந்து கொள்ள ஆர்வம் காட்டவில்லை. அப்படியானுல் அவர்கள் எவ்வளவு மனத் துணிச்சலுடன் புரட்சிப் பாதையில் இறங்கியிருக்க வேண்டும்?

ஆம், அவர்கள் இப்பொழுது அத்தனை துணிச்சலைப் பெற்றுத்தான் இருந்தார்கள். யாரையும், எதற்கும் கொஞ்சம் கூட லட்சியம் செய்யாமல் தங்கள் கருமமே கண்ணுக இருக்கத்தான் தீர்மானித்திருந்தார்கள். ஆனுல்....?

அவர்கள் யாரையும் லட்சியம் செய்யவில்லை என்ருலும், அவர்களை லட்சியம் செய்தாக வேண்டியவர்கள் சிலர் இருந்தனரே! அதாவது அவர்களின் அலட்சியத்தால் பாதிக்கப்பட்ட சுந்தரத்தின் பெற்றோர், விஜுவின் குடும்பத்தினர், இன்னும் தானுவதி...இல்லை, அவன் விஷயம் இப்பொழுது வேண்டாம்; பின்னுல் பார்த்துக் கொள்ளலாம். என்ன, நான் சொல்வது நிசந்தானே?

மகன் இப்படி வெளியேறியதைக் கண்டு பித்துப் பிடித்து நின்றுவிட்டார் புஷ்பவனம் பிள்ளை. என்றுமே இல்லாது அன்று அவனிடம் கடுமையாகப் பேசி விட்டார். தங்களுக்கும் அவனுக்கும் உள்ள உறவு இத்துடன் விட்டுப் போயிற்று என்று கூறிவிட்டார். ஆனுல் அவர் அதை அவனைப் பயமுறுத்துவதற்காகச் சொல்லவில்லை. உண்மையாகவே அவருடைய அந்தராத்மா வெளியிட்டுத்திய கருத்துத்தான் அது. இதுவா, மகன் நல்லவனென்ற ஆசையா உறுதி பெற்றிருந்த அவருக்குக் கிட்டிய பரிசு? இதுவா, 'என் ரத்தம் அவன் உடலில் ஓடுகிறது; அவன் ஒருபோதும் தப்பு வழிகளில் போக மாட்டான்' என்று அவர் பெருமையோடு எல்லாரிடமும் கூறி வந்ததற்குக் கிடைத்த கைம்மாறு? இதுதானென்ருல், அந்த மகன் அவருடையவன் இல்லைதான்; அவன் நல்லவன் இல்லைதான்; அவர் ரத்தமும் அவன் உடலில் ஓடவில்லைதான்.

"ஐயோ, போயிட்டானே! எங்கேயாவது போய் உசிரை விட்டுடப் போருனே; என்ன சும்மா நிக்கிறீங்க? போய், நல்ல வார்த்தை சொல்லிக் கூட்டிக்கிட்டு வாங்க" என்று அழுது கொண்டிருந்த மனைவியை அவர் கோப விழிகளால் சுட்டார்.

"செத்தால் சாகட்டும்; இப்படிப் பட்ட பிள்ளை இருக்கிறதைவிடச் செத்துட்டா நல்லதுதான்!" என்று அவர் எரிந்து விழுந்தார்.


"செய்யறதையும் செய்து போட்டு, இது நல்ல பேச்சுத்தான். ஐயோ மகனே! சுந்தரம்! சுந்தரம்!" என்று பிரலாபித்தாள் மரகதத்தம்மாள்.

புஷ்பவனம் பிள்ளைக்கும் தாம் செய்தது தவறுதான் என்பது தெரியாமலா இருந்தது? அதைத்தான் ஆணித்தரமாக எடுத்துக் காட்டி விட்டுப் போய் விட்டானே, சுந்தரம்! ஆனுல், அவர் அன்று அவனை விஜுவுடன் பழகக் கூடாது என்று தடுத்திருந்தாலும் அவன் நின்றிருக்கப் போகிருனு? அவர் மனைவியை அதட்டி அடக்கினுர். "இதோ பாரு, மரகதம்! தப்பு என்னுடையதுதான்; ஒப்புக்கிடறேன். ஆனுல் அதுக்கு இதுவா தண்டனை? என்ன வந்தாலும் சரி, அவனை 'மறந்து விட்டேன்' என்று அவனுகத் திரும்பி வர அன்றைக்குத்தான் நான் அவன் முகத்தைப் பார்ப்பேன். அதுக்கு முன்னுடி நீ என்ன அழுதாலும் சரி, என்ன கதறினுலும் சரி, அவனை இங்கே கூப்பிடவும் மாட்டேன்; அவனுகத் திரும்பி வந்தால்கூட இந்த வீட்டிலே ஏற்கவும் மாட்டேன்."

"ஐயோ! என் ஒரே மகனை உயிரோட பறிச்சுக்கிட்டானே அந்த நாசமாப் போன அறுதலி!" என்று தன் கோபம் முழுவதையும் விஜுவின் மீது திருப்பினுள் மரகதத்தம்மாள்.

புஷ்பவனம் பிள்ளை இதையும் ஆமோதிக்கத் தயாராயில்லை. "உன் மகன் பைத்தியம் புடிச்சவன் போல் அவள் பின்னுலே சுற்றிக்கிட்டு இருந்தான்னு, அவள் என்ன செய்வாள்?" என்று அவர் வருத்தத்தோடு கூறினுர். ஆம், விதவைகளிடம் அவருக்கு என்னவோ


ப்ரூக் பாண்ட் தேயிலை
BROOKE BOND
TEA
FINEST
TEA
தேயிலைகளுக்குள்ளே தலை சிறந்தது
ப்ருக் பாண்ட் இந்தியா பிரைவேட் லிமிடெட்.
BB. 329 K



மர்பி ரேடியோ ஸ்தாபனத்தின் பத்தாவது வருடாந்திரக் கொண்டாட்டம் பம்பாயில் அதிவிமரிசையாக நடைபெற்றது. அச்சமயம் மத்திய சர்க்கார் உணவு மந்திரி திரு எஸ். கே. பட்டீல், மர்பி ரேடியோ ஸ்தாபனத்தின் மானேஜிங் டைரக்டர் திரு லக்கன்பால் அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தார்.

இன்னும் அனுதாபம் இருக்கத்தான் இருந்தது. ஆனால் அந்த அனுதாபம் தம்மையே சுற்றிப் பிடித்ததைத்தான் அவர் விரும்பவில்லை. புஷ்பவனம் மட்டுமென்ன? அறிவாளிகள், முன்னேற்றக் கருத்துடையவர்கள் என்று கருதப்படும் எல்லாருடைய மன நிலையும் அதுதானே! இல்லாவிட்டால், எத்தனையோ துறைகளில் எத்தனையோ வித முன்னேற்றங்களைக் கண்டுள்ள நம் நாட்டில் இன்னும் விதவைகளின் கண்ணீர் வற்றாத துயரக் கண்ணீராகவே இருந்து கொண்டிருக்குமா என்ன?

அன்று மரகதத்தம்மாள் எவ்வளவு மன்றாடியும், புஷ்பவனம் தமது பிடிவாதத்தைத் தளர்த்திக் கொள்ளவே இல்லை. அந்த மட்டும் மகன் வீட்டிலே இருந்துகொண்டு இந்தக் கேலிக் கூத்துக்களைச் செய்து கொண்டிராமல் வெளியேறினானே என்றுதான் அவர் ஆறுதல் கொண்டார். ஆமாம்! அப்படி நடந்திருந்தால் அவரே அல்லவா அவனை வெளியேற்ற நேரிட்டிருக்கும்!

* * *

இது ஒன்றும் மூடி மறைத்து விடும் விஷயமில்லை. அன்று நடுப்பகல் ஆவதற்குள்ளாகவே கேசவபுரம் எங்கும் இச்செய்தி காட்டுத் தீ போல் பரவி விட்டது. புஷ்பவனம் பிள்ளை மகன், சச்சிதானந்தம் பிள்ளை மகளை - அந்தத் தாலியறுத்த டாக்டர் அம்மாளை - கட்டிக்கிடப் போறானும்! அதுக்காக இன்ஜினியர் வேலையைக்கூட விட்டுட்டு வீட்டிலே சண்டை போட்டுக்கிட்டு வடக்குத் தெருவிலே, அந்தப் பெண்ணின் ஆஸ்பத்திரி வீட்டிலே போய் இருக்கிறானும்!

காலையில் பத்து மணி சுமாருக்கெல்லாம் இந்தச் செய்தி சச்சிதானந்தம் பிள்ளையின் வீட்டை எட்டி விட்டது. ஆற்றில் குளித்துவிட்டு இந்தச் செய்தியைச் சேகரித்துக் கொண்டு வந்த அந்தத் தெருக்காரி ஒருத்தி, ஈரச் சேலையுடனும், இடுப்பில் குடத்துடனும் அப்படியே அவர்கள் வீட்டுக்குள்ளே நுழைந்து தைலம்மாளிடம் விஷயத்தைக் கொட்டி விட்டுச் சென்றாள். திருடனுக்குத் தேள் கொட்டியது போல் இருந்தது. தைலம்மாளுக்கு இதைக் கேட்டதும். அவள் வினை அவளையேயல்லவா சுற்றிப் பிடித்துவிட்டது? சுந்தரத்தையும் வீணையையும் பிரிக்கத் தான் வகுத்த திட்டம் பாதியளவு வெற்றி பெற்று விட்டதென்று நேற்றிரவு வீணை புங்கனூற்று டிஸ்பென்சரியை மூடிவிட்டாள் என்பதைக் கேட்ட போது அவள் களிப்படைந்தாள். ஆனால் இது என்ன? கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட கதையாகி விட்டதே! சுந்தரம் அவளுக்காக வேலையை விட்டு விட்டானும்; இன்று வீட்டிலும் சண்டை போட்டுக்கொண்டு அவள் ஆஸ்பத்திரிக்கே வசிக்கப் போய் விட்டானுமே!

தைலம்மாளுக்கு உடலெல்லாம் பற்றி எரிந்தது. இதனால் ஏற்படப் போகும் அவமானத்தை எண்ணியில்லை, வீணாவும் சுந்தரமும் மணம் செய்து கொண்டு விடுவார்களோ என்ற பொறாமை எண்ணத்தால். அவர்கள் மணந்து கொண்டு விட்டால் அவளுடைய மகளின் கதி?

"கேட்டியாடா தம்பி?" என்று நீட்டி முழக்கிக்கொண்டு, அப்பொழுதுதான் பூசையை முடித்துவிட்டு எழுந்து கொண்டிருந்த சச்சிதானந்தம் பிள்ளையிடம் தாவினாள் அவள்.

தன் பேச்சைக் காதிலே போட்டுக் கொள்ளாமல், திருப்புகழை முணுமுணுத்தவாறு பூசைச் சாமான்களை எடுத்து அலமாரியில் அடுக்கிக் கொண்டிருந்த அவரிடம் அவள் மேலும் வெடித்தாள்: "நீ திருப்புகழ் பாடினதெல்லாம் போதும்; முதலிலே இந்த அபவாதத்துக்கு வழி சொல்லு." அவள் வெறுப்பெனும் நீரில் கரைத்து அச்செய்தியைக் கொட்டினாள்.

"என்ன?" சச்சிதானந்தத்தின் கையிலிருந்த பூசை மணி நழுவிக் கீழே விழுந்து அதன் வெண்கல நாக்கு தெறித்துப் போயிற்று. தமது நாக்கும் அப்படித் தெறித்து விழுந்துவிட்டது போலவே

உணர்ந்தார் அவர். வீணாவின் வாழ்வு சூன்யமாவதை அவருடைய உள் மனம் விரும்பவில்லை. அவள் சமூகப் புரட்சி செய்து மறுமணத்தில் ஈடுபடுவதாக இருந்தால், அதனால் தமது குடும்பத்துக்கு ஏற்படும் அவமானத்தைப் பொருட்படுத்தாமல், மறைமுகமாக அதற்கு ஆதரவு அளிக்க அவர் சித்தமாகவே இருந்தார். சுந்தரமும் அவளும் இணைந்து பழகி வருவதைக் கண்ட போது, ஒருகால் இவர்களிடையே அந்த இணைப்பு ஏற்பட்டு விடுமோ என்று அவர் நினைத்தது கூட உண்டு. ஆனால் அப்படி ஏற்பட்டால் அவர் ஒரு பிரச்னையைக் கட்டாயம் சமாளித்தே ஆக வேண்டும். ஆம், புஷ்பவனமும், அவர் மனைவியும் இந்த இணைப்புக்குச் சம்மதிக்கவே மாட்டார்கள். அவர்களைச் சரிக்கட்டுவதும் எளிதன்று. இதற்காக அவர் சிலசமயம் மனத்துக்குள்ளே ஒரு பிரார்த்தனைகூடச் செய்து கொள்ளுவதுண்டு. "ஆண்டவனே! அப்படி வீணாவும், சுந்தரமும் மனமொத்துப் போயிட்டாங்கன்னா, வெளியே சொல்லாமல், எனக்குக்கூடச் சொல்லாமல், கோயிலோ, குளமோ, ரெஜிஸ்டர் ஆபீசோ எங்கேயாவது போய்க் காரியத்தை முடிச்சுக்கிட்டு வந்துடட்டும். அப்புறம், 'நடந்தது நடந்து போச்சு' என்று இவர்களிடம் சாவதானமாக விஷயத்தைச் சொல்லிச் சமாளித்து விடலாம்!"

ஆனால் இப்பொழுது அந்த அசடுகள் விபரீதத்துக்கு அல்லவா வழி செய்து கொண்டிருக்கின்றன? இது சமாளிக்க முடியாத விஷயமாக அல்லவா வளர்ந்து விடப் போகிறது? இந்தக் கலக்கம் அவரை அப்பொழுது ஆட்கொண்டு மனம் நடுங்க வைத்தது; பேச நா எழாதவராகச் செய்தது.

ஆனால் தைலம்மாள் விட்டுவிடுவாளா? "என்ன தம்பி வெக்கிச்சுப்போய் நின்னுட்டே. நான் அண்ணைக்கு முதலே சொல்லிக்கிட்டு வந்தேனே, கொஞ்சமானும் காதிலே போட்டுக்கிட்டியா? இப்போ என்ன செய்யப்போறே?"

"நான் என்ன செய்ய அக்கா?"

"என்ன! என்ன சொன்னே? நீ என்ன செய்ய இருக்குதா? தம்பி! இது உங்களோட போற விஷயம் இல்லை; என்னையும் என் மகளையுங் கூடச் சுற்றிப் பிடிச்சுடப்போற விஷயம்."

"நீங்க வேறு; நாங்க வேறுன்னு நான் இதுவரையிலும் நினைச்சுப் பார்த்தது இல்லை அக்கா. அப்படி நினைச்சுப் பார்த்திருந்தால், உன்னையும் உன் மகளையும் இத்தனை வருஷமா வைச்சுக் காப்பாற்றி வந்திருக்க மாட்டேன். கொள் என்றதும் வாயைப் பிளக்கும் குதிரை, கடிவாளம் என்றதும் வாயை மூடிக்கொள்ள முயன்றால் நடக்குமா? நல்லதையும் பொல்லாததையும் நீங்களும் எங்கள்கூடச் சேர்ந்து அநுபவிக்க வேண்டியதுதான்."

"என் தலைவிதியைத்தான் உன் அருமை மகள் இருபது வருஷங்களுக்கு முன்னாடியே கோணலாக்கிட்டாளே. அநுபவிச்சுக் கிட்டுத்தானே இருக்கேன். ஆனால் உன் மகளின் அடாபிடித்தனத்துக்கு என் மகள்-அந்தப் பச்சைக் குழந்தையும் பாழாகணுமா?"

"நீ என்ன சொல்லுகிறாய் அக்கா? மாலா பாழாகிவிடுவாளா? எதற்காக?"

"இல்லை, வாழ்வாள்! இப்படி வீட்டிலே இருக்கிற கொழுப்புப் புடிச்ச ஆகாமப் போன ஒருத்தி கலியாணம் கட்டிக்கிட்டா, என் மகளுக்குக் கலியாணம் ஆனாப்போலத்தான்!"

"இதெல்லாம் என்ன அசட்டுப் பேச்சு, அக்கா! மாலாவின் கலியாணத்தை நான் முடிச்சு வைக்கிறேன். பணத்தை அள்ளி வீசினால், நான்-நீ என்று ராசாக்களாட்டமா ஆயிரம் இளவட்டங்கள் அவளைக் கட்டிக்கிட வருவாங்க."

"உன் பணத்தை நீ பெரிசா நினைச்சுப் பெருமையாப் பேசிட்டே. ஆனா என் மகள் உன் பணத்துக்காக வர மாப்பிள்ளையைக் கட்டிக்கிட மாட்டா. அவள் மனசிலே ஒருத்தனைக் கண்ணி வைச்சுக் கிட்டிருக்கிறா. அவனை விட்டா...?"

"சொல்லு, அவன் யாருன்னு. எந்த ராசாவாக இருந்தாலும் கலியாணத்தை முடிச்சு வைக்கிறேன்."

"அது நடக்காது, தம்பி. நீ தலைகீழா நின்னாலும் அது நடக்காது. அது நடக்கணுமின்னா ஒரே ஒரு வழிதான் இருக்கு. சுந்தரத்தையும் உன் மகளையும் பிரிக்கணும். அவன் ஒரே சமயத்தில் தாலி அறுத்த பொண்ணையும், வாழ வேண்டிய பொண்ணையும் கல்யாணம் கட்டிக்கிட முடியாதில்லையா?"

"என்ன? நம்ப சுந்தரத்தையா உன் மகள்....?" என்று சச்சிதானந்தம் தடுமாறினார். அவர் நிலை இருதலைக்கொள்ளி எறும்பாயிற்று. இப்பொழுது சுந்தரம் வீணாவுக்கா? மாலாவுக்கா?

'அதைத் தீர்மானிக்க வேண்டியது நீங்களில்லை; நான்!' என்று அவருக்கு உணர்த்துவதுபோல் பூசை அறையின் வாசலில் "அத்தான்!" என்ற கடுகடுப்பான குரல் எழுந்தது.

சச்சிதானந்தமும், தைலம்மாளும் திரும்பிப் பார்த்தனர். அங்கே புஷ்பவனம் நின்று கொண்டிருந்தார். அவர் கண்கள் இரண்டும் கோபத்தில் ரத்தச் சிவப்பாக மின்னின.


(தொடரும்)

கடல் மயிலைக் கபாலி

தொ. மு. பாஸ்கரத்தொண்டைமான்

நான் சிறு பையனாகப் படித்துக் கொண்டிருந்த போது, 'மாஜிக்' என்றால் எனக்கு நிரம்பப் பிரியம். சர்க்கஸ் விளையாட்டுக்களிலும் மோகம் உண்டு. அதில் எல்லாம் ஏதோ சில அபூர்வமான 'பார்' விளையாட்டுக்களும் ஆணும் பெண்ணும் சேர்ந்து ஆகாயத்திலேயே 'அந்தர்' அடிப்பதும்தானே. காட்டு மிருகங்களான சிங்கம் புலிகளையெல்லாம் பிடித்து, அவைகளின் பற்களையெல்லாம் பிடுங்கி, அவைகளைப் பட்டினி போட்டு வைத்திருப்பார்கள். அவைகளைக் கூண்டிற்குள் வைத்துச் சில விளையாட்டுக்களும் காட்டுவார்கள். அபூர்வமான விளையாட்டுக்களாகவே இருக்கும். ஆனால் அதிசயப்படுவதற்கு என்ன இருக்கிறது சர்க்கஸில்? ஆனால் மாஜிக் என்னும் கண்கட்டி வித்தையில் என்ன என்ன அற்புதமான வேலைகள்? கண்மூடிக் கண் திறப்பதற்குள் என்ன என்ன ஜாலங்கள்? கண்ணைத்தான் மூடுவானேன்? விழித்த கண் விழித்தபடியே பார்த்துக் கொண்டிருக்கும் போதே, நாம் நடக்க முடியாது என்று நினைத்துக் கொண்டிருப்பதை அல்லவா நடத்திக் காட்டுவார்கள் இந்த மந்திரவாதிகள். கூட்டத்தில் முன் வரிசையில் இருப்பவரிடம் பத்திரமாய் வைத்துக் கொள்ளச் சொல்லிக் கொடுத்த தங்க மோதிரத்தைக் கூட்டத்தின் கடைசியில் இருப்பவர் ஒருவர் ஜேபியில் இருந்து எடுத்துக் காட்டுவார்கள். காலியான பெட்டி ஒன்றிலிருந்து விதம் விதமான பூக்கள், சுவையான பழங்கள் எல்லாம் தருவிப்பார்கள், காசு ஒன்றும் கொடாமலேயே. இது எல்லாம் நாகரீக மந்திரவாதியின் வேலை. ஆனால் அந்தப் பழைய கழைக் கூத்தாடியின் வேலையோ இவற்றையெல்லாம் தூக்கி அடிக்கும். கூட்டம் கூடியிருக்கும்போதே ஒரு சிறு மாங்கொட்டையைப் பூமியில் நட்டு, மண்ணைப் போட்டு மூடி அதன்மேலே ஒரு கூடையைப் போட்டு மூடுவான். 'ஜல் மந்திரக் காளி, ஜூ, மந்திரக்காளி' என்று மந்திர உச்சாடனம் வேறே செய்வான். பின்னர் கூடையைத் தூக்கித் தூக்கிக் காட்டுவான். மாங்கொட்டை நட்ட சில நிமிஷ நேரங்களுக்குள்ளே அது செடியாக வளர்ந்து, மரமாக உயர்ந்து, பூத்துக் காய்த்துப் பழங்களாகவும் செய்கிறது. என்ன அற்புதமான வேலை! (இந்த அற்புத வேலை நமது சர்க்காருக்குத் தெரிந்திருந்தால், உணவுப் பிரச்னையை எவ்வளவு எளிதாகத் தீர்த்து விடலாம். ஆனால் ஒன்றே ஒன்று. மரம் வளர்ந்து பூத்துக் காய்த்தது போலவே மாயமாய் மறைந்தும் போய் விடுமே என்ற கவலைதான்.) கழைக் கூத்தாடியின் கடைசி வேலை: தன் சொந்தப் பெண்ணை உட்கார வைத்துக் கூடையால் மூடுவான். பின்னர் கூடைக்குள் பல தடவைகள் நீண்ட கத்தியால் குத்துவான். நமக்கோ உடல் பதறும். பின்னர் கூடையைத் திறந்தால் அதனுள் பெண்ணிருக்க மாட்டாள். மறைந்து போயிருப்பாள். அதன் பின் 'ஏ! பொன்னு, ஏ, கண்ணு' என்று கூவுவான். தெருக்கோடியிலிருந்து ஓடி வருவாள் பெண். இதுதான் அதி அற்புதமான வேலை, கழைக்கூத்தாடியிடத்திலே. இதைக் காட்டிவிட்டால் பணம் காசு எல்லாம் நிறையப் பெயரும் அவனுக்கு.

இப்படி நடப்பது கண்கட்டி வித்தை. இதை ஒரு வித்தையாகச் செய்யாமல் வாழ்விலே ஒரு நிகழ்ச்சியாகவே நடத்திக் காட்டினார் ஒருவர். அவர்தான் நமது சமய குரவர்களில் முதல்வர் ஆகிய **திருஞான சம்பந்தர்**. கழைக் கூத்தாடிக்காவது கூடைக்குள் சென்று மறைய உயிரோடு கூடிய, எலும்புந்தோலும், சதையும் இரத்தமும் உள்ள ஒரு நிஜப் பெண்ணே தேவையாயிருந்திருக்கிறது. ஆனால் ஞான சம்பந்தரோ, எலும்புக்குவியலுக்குள் இருந்தல்லவா ஒரு **பூம்பாவையை** வரவழைக்கிறார். அப்படி அவர் எலும்பைப் பெண்ணுருவாக்கிய தலம்தான் **மயிலையிலுள்ள கபாலீச்சரம்** என்னும் கோயில். கதை இதுதான். கிட்டத்தட்ட ஆயிரத்து முந்நூறு வருஷங்களுக்கு முன் மயிலாப்பூரிலே சிவநேசர் என்று ஒருவைசியர் இருந்தார். அவர், ஆளுடைய பிள்ளை அத்தனை சிறு வயதிலேயே தலம் தலமாகச் சென்று இறைவனைப் பாடுவதும், சமணர்களை வாதிட்டு வெல்வதும் ஆகிய காரியங்களைச் செய்து வருகிறார் என்பதை அறிந்து அவரிடம் அளப்பரியபக்திசெலுத்துகிறார். தம் ஒரே மகளான



கபாலி கோயிலும் குளமும்

பூம்பாவையை அவருக்கே மணம் முடித்துக் கொடுக்க எண்ணி மிகக் கவனத்தோடு வளர்க்கிறார். ஆனால் பூந்தோட்டத்துக்குப் போன இடத்திலே பூம்பாவையைப் பாம்பு தீண்டி விடுகிறது. மரணம் அடைந்த அவளது உடலைத் தகனம் பண்ணி, அந்த எலும்பையும் சாம்பரையும் ஒரு குடத்துள் இட்டுப் பத்திரமாகப் பாதுகாக்கிறார் சிவநேசர். சில வருஷங்கள் கழிகின்றன. சிவத் தலங்களைத் தரிசித்துவரும் சம்பந்தர் ஒற்றியூர் வருகிறார். அங்கு சென்று சிவநேசர் நடந்ததைச் சொல்லிச் சம்பந்தரை மயிலாப்பூருக்கு அழைக்கிறார். அவரும் வருகிறார். பூம்பாவையின் எலும்புகள் இருந்த பாண்டமும் கோயில் மதில்புறத்துக்குக் கொண்டு வரப்படுகிறது. கபாலி கோவிலுக்கு வந்த சம்பந்தர் பாடுகிறார்.



மயிலம்மை பூஜிக்கும் இறைவன்

மட்டிட்ட புன்னையங்
கானல் மடமயிலைக்
கட்டிட்டம் கொண்டான்
கபாலீச்சரம் அமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின்
உருத்திரபல் கணத்தார்க்கு
அட்டிட்டல் காணாதே
போதியோ பூம்பாவாய்

என்று தொடங்கிப் பதினொரு பாடல் 'தேனமர் பூம்பாவை'ப் பாட்டாகவே பாடுகிறார். அவ்வளவுதான்; குடத்துக்குள்ளிருந்து பூம்பாவை அழகிய கன்னிப் பெண்ணாக வெளியே வருகிறாள்; வணங்குகிறாள். உயிர் அற்ற உடலுக்கு உயிர் அளித்தவர் ஆனதால் தனக்கு அவள் மகள் முறை என்று சொல்லி அவளை மணக்க மறுக்கிறார் சம்பந்தர். பூம்பாவையும் கன்னி மாடத்திலிருந்து சிவத்தியானம் பண்ணி முக்தி அடைகிறாள்.

சாதாரணமாக எலும்பைப் பெண்ணுருவாக்கிய இச்செயலைக் 'கன்னித் தண்தமிழ்' செய்த காரியம் என்று போற்றிப் புகழ்வர் புலவர். தமிழ் மொழியைவிட, தமிழ்ப் பாடல் செய்த அற்புதமே இது என நினைவு கூர்வர் **அருணகிரியார்.**

அளகை வணிகோர் குலத்தில்
வனிதை உயிர் மீள அழைப்ப
அருள் பரவு பாடல் சொற்றவரே

ஞான சம்பந்தர் என்பர் அவர் பாடிய திருப்புகழில். சமய குரவரில் ஒருவர் இப்படி எலும்பைப் பெண்ணுருவாக்கியிருக்கிறார். இன்னுமொருவர் **(சுந்தரர்)** முதலையுண்ட பாலனையே அழைத்திருக்கிறார். 'கரைக்கால் முதலையைப் பிள்ளைதரச் சொல்லு காலனையே' என்று சுந்தரர் இறைவனுக்கே உத்தரவு போடுகிறார். ஆனால் சம்பந்தர் இறைவனிடம் விண்ணப்பம் கூடச் செய்து கொள்ளவில்லை.

'கார்த்திகை நாள் விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்?' 'ஆதிரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய்?' 'தைப்பூசம் காணாதே போதியோ பூம்பாவாய்?' என்று பூம்பாவையிடமே (எலும்புருவாக இருப்பவளிடத்திலேதான்) கேட்கிறார். கபாலீச்சரத்தில் இருக்கும் இறைவன் என்ன அவ்வளவு விதரணை தெரியாதவனா? பூம்பாவை பூத உடலோடே விளக்கீடு காணவும், ஆதிரைநாள் காணவும், தைப்பூசம் காணவும் வகை செய்து எலும்புக்கே வகை செய்து எலும்புக்கே உயிர் கொடுத்து விடுகிறான். உயிர் கொடுத்தவர் கபாலீச்சரர்தான் என்றாலும், பேரும் புகழும் 'நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தருக்கே.'

இந்தக் கபாலீச்சரம் இருப்பது பிரசித்தி பெற்ற மயிலாப்பூரிலே. மயிலாப்பூர் என்றாலே அங்குள்ள சாந்தோம் கடற்கரை, குளிர்ந்த தென்னஞ்சோலையெல்லாம் நம் கண்முன் வரும். இந்த 'ஆழிசூழ் மயிலாபுரித் திருநகர்,' தொல் புகழ் உடையது. 'மடல் ஆர்ந்த தெங்கின் மயிலை' என்றெல்லாம் பாடிய ஞானசம்பந்தரே, மயிலையையும் கபாலியையும் இணைத்து 'கான் அமர் சோலைக் கபாலீச்சரம்' என்றும் பாடியிருக்கிறார். கபாலீச்சரத்தான் கோயில் அழகுக்கு அழகு செய்வது அக்கோயிலுக்கு மேல் புறத்தில் உள்ள தெப்பக்குளம். குளத்தின் நடுவிலே நீராழி மண்டபம், குளத்தின் பகைப்புலத்திலே கோயில் கோபுரம், கண்ணுக்கு இனிய காட்சியாய் இருக்கும். கோபுரமோ ஏழு மாடங்களுடன் இருக்கிறது. இந்தத் தலத்துக்கு மயிலாப்பூர் என்று பெயர் வந்ததே அங்கு கோயில் கொண்டிருக்கும் **கற்பகவல்லி** அம்பிகையால்தான். உமை மயிலாக உருவெடுத்துச் சிவபெருமானை நோக்கித் தவம் புரிந்திருக்கிறாள். அவள் மயிலாக இருந்து தவம் புரிந்தமையால் இக்கோயிலுக்கு மயிலை என்றும் மயிலாப்பூர் என்றும் பெயர்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவ்வரலாற்றை விளக்குகின்ற சிற்பவடிவம் ஒன்று

கோயில் வடக்குப் பிராகாரத்திலே இன்றும் இருக்கிறது. மயிலாக விளங்கிய அம்மைக்குக் கபாலம் ஏந்திய கையனாய்க் காட்சி கொடுத்து ஆட்கொண்ட பெருமான் ஆனதினாலே கபாலி என்று பெயர் நிலைத்திருக்கிறது இறைவனுக்கு.

இக்கோயிலின் பெரிய திருவிழா அறுபத்து மூவர் உற்சவம். எல்லாச் சிவன் கோயிலிலும் அறுபத்து மூன்று நாயன்மார்கள் இருந்தாலும் இந்தக் கோயில் ஒன்றிலேதான் அவர்கள் எல்லோரையும் சேர்த்து எடுத்து வந்து திருவீதி உலா நடத்துகிறார்கள். இந்த அறுபத்து மூவரில் ஒருவரான வாயிலார் நாயனார் அவதரித்த தலமும் இதுவே. இவரும் பூசலார் நாயனார் போலவே இறைவனை மனத்தகத்தான் என்று கொண்டாடியவர். இறைவனைப் பகட்டான பூசை புனஸ்காரங்களால் கொண்டாடுவதை விட, மானசீகமாக வணங்கி உய்வதே சிறந்தது எனக் கொண்டவர். இவரும் சொர்ணத்தால் சமைத்த மனக்கோயில் உள்ளே, இறைவனை எழுந்தருளப் பண்ணி ஒழியாத ஆனந்தமென்னும் திருமஞ்சனம் ஆட்டுவித்து, அறிவாகிய திருவிளக்கு ஏற்றி, அன்பை நிவேதித்து, நியதி தவறாது அருச்சனை செய்து இறைவன் திருவடி அடைகிறார். இவரையே,

மறவாமையால் அமைத்த
மனக்கோயில் உள்ளிருத்தி
உறவாதி தனைஉணரும்
ஒளிவிளக்குச் சுடர்ஏற்றி
இறவாத ஆனந்தம் எனும்
திருமஞ்சனம் ஆட்டி
அறவாளர்க்கு அன்பென்னும்
அமுதமைத்து அர்ச்சனைசெய்வார்

என்று சேக்கிழார் வியந்து பாடுகிறார், எல்லாக் காரியங்களும் மனத்தில் நிகழ்வதால், வாயினால் செய்ய வேண்டியது ஒன்றுமே இல்லை வாயிலாராம், வாய் இல்லார்க்கு.


கோயிலின் பிரதான வாயில் கிழக்கு நோக்கியிருந்தாலும் மக்கள் எல்லாம் அதிகமாக உபயோகப் படுத்துவது மேற்கு கோபுர வாயிலையே. கபாலீச்சரத்தானே மேற்கு நோக்கியவராகத்தானே இருக்கிறார். கோயிலில் கற்பகவல்லி சந்நிதி சிறப்பான தொன்று. கோயிலுக்குள்ளே பூம்பாவை, சம்பந்தர், வாயிலார் முதலியவர்களுக்கு எல்லாம் தனித்தனி சந்நிதி உண்டு.

இன்னும் வைணவ முதல் ஆழ்வார் மூவரில் ஒருவரான பேயாழ்வார் அவதரித்த தலமும் இதுவே. இவர் இங்கும், திருவல்லிக்கேணியிலுமாக இருந்து தமிழ் வளர்த்திருக்கிறார். பெருமாளை நூறு பாடல்களால் பாடிப் பரவி இருக்கிறார். இவருக்கும் வாயிலாருக்கும் ஒரு அரிய ஒற்றுமை. இறைவனை மனக்கோயில் உள்ளிருத்தி வழிபட்டவர் வாயிலார் என்றால், இவருமே 'மாகடல் நீர் உள்ளான் மனத்து உள்ளவனே' என்றும், 'உளன் கண்டாய், உத்தமன் உள்ளுவார் உள்ளத்து உளன் கண்டாய்' என்றுமே பாடிக் குருந்தொசித்த கோபாலனைக் குறிப்பார். இந்தப் பேயாழ்வாரையும் வாயிலாரையும் விடப் பிரசித்தி பெற்ற திருவள்ளுவர் வாசுகியோடு இருந்து இல்லறம் நடத்திய இடமும் இம்மயிலாப்பூரேயாம். வள்ளுவர் பெருமையோ அளவிட்டு உரைக்கும் தரத்தது அன்று. இன்னும் சமண சமயத்தைச் சேர்ந்த பண்டிதர் சிலர் மயிலாப்பூரிலே இருந்துதான் தமிழ் வளர்த்திருக்கிறார்கள். நேமிநாதம் எழுதிய நேமிநாதர் இங்கே இருந்திருக்கிறார். அவருக்கு என்று ஒரு சிறு கோயில் இவ்வூரில் இருந்ததாகவும் அந்தக் கோயிலில் இருந்த நேமிநாதர் சிலையைப் பெயர்த்து எடுத்து, தென் ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த சித்தாமூர் ஜைன ஆலயத்தில் பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள் என்றும் கதை. இப்படியே, சைவ வைணவ, ஜைன சமரச பீடமாக மயிலாப்பூர் விளங்கி இருக்கிறது அந்நாளிலே.

இன்னும் வேதாந்த சாரமான பாடல்களைத் தாயுமானவர் அடிச்சுவட்டிலே நின்று பாடிய மஸ்தான் சாகிபு இந்த மயிலாப்பூரிலே வாழ்ந்தவர்தானும். மேலும் ஸெயிண்ட்தாமஸ் என்னும் கிறிஸ்துவ ஞானி, வந்து சமாதி ஆன இடமும் இதுவே. அவர் கல்லறையைச் சுற்றி உருவான ஊரையே சாந்தோம் என்று குறுக்கிச் சொல்கிறார்கள். மயிலாப்பூர் வக்கீல் பரம்பரை மிகவும் பிரசித்தமானதாயிற்றே. பேரும் புகழும் படைப்பது இத்தல விசேஷத்தினால்தானோ என்னவோ யார் கண்டார்கள்? வாசகர்கள் மயிலையில் இடம் தேடி 'கற்றவர் ஏத்தும் கபாலீச்சரம்' ஓடினால் அதிசயமில்லை.


ஆரியன்

உங்கள் பற்களுக்குப் பொருத்தமானவை



உங்கள் பற்களின் பாதுகாப்பை சரியான அமைப்புள்ள ஆரியன் பிரஷ்க்கு விட்டுவிட்டீர்களேயானால், அது உங்கள் பற்கள் முழுவதையும் முற்றிலும் நன்றாகச் சுத்தி செய்யுமென்பதை நீங்கள் உறுதி செய்துகொள்ளலாம்.

ஸ்டாண்டர்டு சைஸிலும் சிறிய சைஸிலும் கிடைக்கும். மிகவும் சௌந்தர்யமான உயர்ந்த ரகம் - பிளாஸ்டிக் பெட்டியில் கிடைக்கிறது.



நன்றாகச் சுத்திசெய்கிறது. நீடித்து உழைக்கக் கூடியது.

Aryan

பயனளிக்கும் சோப் நுரைக்கு ஆரியன் ஷேவிங் பிரஷையே எப்பொழுதும் உபயோகியுங்கள்

உங்கள் குழந்தையையும் குதூகல மடையச் செய்யும்

ஸ்பென்ஸர்ஸ் கிரைப் ஸிரப்



குழந்தைகளுக்கு வரும் கோளாறுகளைப் போக்கும் சிறந்த மருந்து.

வயிற்றை இறுக்கிப் பிடித்துத் துன்புறுத்தும் நோயின் சின்னங்கள், வாயு பரிதல், உப்புசம், சிறிய வலிப்புகள், அதிகமான புளிப்புத்தட்டல், மந்தம், ஆகியவைகளை விரைவில் சாந்தப் படுத்துகிறது. பல் முளைக்கும் பருவத்துக்கு சிறப்பாக உபயோகிக்கத்தக்கதென்று சிபார்சு செய்யப்படுகிறது.



சென்னை (புதுச்சேரி உள்பட), கேரளம் & மைசூர் இராஜ்யங்களுக்குப் பூரண விநியோகஸ்தர்கள்.

டிரக் (ஹ்) ஹவுஸ்

தேர் நிலையம், சேலம்—1

கிளைகள்: சென்னை & பெங்களூர்.

கிழக்கு வானத்தில் பகல் பூத்துக் கொண்டிருந்த நேரம். மண்ணுலகத்து இன்பமெல்லாம் ஒன்றுசேர்ந்து காற்றாய் வீசுவது போல் வேப்ப மரத்துக் காற்று வீசிக் கொண்டிருந்தது. காகம் கரையும் ஒலி. மேல வீட்டுப் பாகவதர் பூபாளம் பாடும் அழகு, பக்கத்து வீட்டு மாட்டுக் கொட்டத்தில் பால் கறக்கும் ஒலி, தெரு வாசலில் சாணம் தெளிக்கும் ஓசை, இடையிடையே வாசலில் கோலம் போடும் பெண் கரங்களின் வளைக் குலுங்கல், — கோவில் விசுவரூப மணியோசை காற்றில் மிதந்துவரும் நாதம்—

அடாடா! அந்தச் சின்னஞ் சிறு கிராமத்தில் வைகறைப் போது எவ்வளவு அழகாயிருக்கிறது? உழவு மாடு பூட்டிக் கொண்டு போகும் உழவன், காய்கறிக்காரன், தயிர்க்காரி, பால்காரன் என்று தெருவில் மனிதர்கள் நடமாடுகிற உயிர்த் துடிப்பில் எத்தனை எழில்? கிழக்கே தெரு முடியும் இடத்துக்கு அப்பால் தென்னை மரக் கூட்டத்தில் சூரியோதயத்தின் ஒளி பரவும் அழகைப் பார்த்துக்கொண்டே வேப்ப மரத்தடியில் நின்றிருந்தார் பேராசிரியர் சிற்சபேசன். கிராமத்தின் அழகிலும், தூய்மையும், அமைதியும் நிறைந்த அந்தக் காலை நேரத்துச் சூழ்நிலையிலும் தோய்ந்து நின்ற அவர் மனத்தில் வளமான சிந்தனைகள் உண்டாயின.

பின்னால் யாரோ நடந்து வருகிற ஓசை கேட்டுத் திரும்பினார் சிற்சபேசன். கையில் கூடையும் விளக்குமாறுமாக ஒரு சிறுமி வந்து கொண்டிருந்தாள். அவர் நின்றுகொண்டிருந்த வேப்ப மரத்தடியை நோக்கித்தான் வருவதாகத் தோன்றியது.

"மாமா....! நீங்கதான் இந்த வீட்டுக்குப் புதிதாகக் குடி வந்திருப்பதாகச் சொன்னாங்க. நான் வீடெல்லாம் தெளித்துப் பெருக்கிச் சுத்தமா வைத்துக் கொள்வேன். வீட்டிலே சமையலுக்கு உதவியா எடுபிடிக் காரியமெல்லாம் செய்து கொடுப்பேன். சம்பளம்னு பெரிசா ஒண்ணும் கேட்க மாட்டேன். ஏதோ உங்களாலே முடிஞ்சதைக் கொடுத்தால் திருப்தியா வாங்கிக்குவேன். எனக்கு அப்பா அம்மா யாரும் இல்லே. ஒரு தம்பி இருக்கான். எலிமெண்டரி ஸ்கூல்லே அவன் மூணாங் கிளாஸ் படிக்கிறான். நான் உழைச்சுத்தான் காப்பாற்றியாகணும்."

சிற்சபேசனுக்கு முன்னால் வந்து நின்று கொண்டு பணிவான குரலில் கூறினாள் அந்தச் சிறுமி. அழுக்குச் சிற்றாடையும் கிழிந்த தாவணியுமாக ஏழைமைக் கோலத்தில் நின்ற அந்தச் சிறுமியை நன்றாய்ப் பார்த்தார் சிற்சபேசன்.

பதின்மூன்று அல்லது பதினாறு வயது மதிக்கலாம். வயதுக்கு மீறின வளர்த்தி. சூர்சி போல் வளர்ந்திருந்தாள். எதற்கோ ஏங்கிக் கொண்டே வளர்ந்தது போன்ற முகத் தோற்றம். ஆனாலும் பார்த்தவுடன் மனத்தில் பதிந்து விடக் கூடிய ஒரு சோகக் களை அந்த முகத்தில் இருந்தது. அந்த வயதுக்கு இருக்க வேண்டிய கூச்சமும், நாணமும் அற்றுப்போய், ஏதோ பெரிய பொறுப்பைச் சுமந்துகொண்டு வாழ்கிறாற்போல் கண்களில் ஓர் ஒளி அமைந்திருந்தது. பேச்சில் காரியத்தைச் சாதித்துக் கொள்கிற ஒட்டுறவு; சொற்களில் ஏழைமையின் குழைவு; நம்பிக்கையோடு சிற்சபேசனின் முகத்தைப் பார்த்துக்கொண்டு நின்றாள் அந்தச் சிறுமி. வானத்தில் மேகத்தைத் தேடும் வறண்ட நிலத்து உழவனின் முகம் போல் அந்த முகத்தில் ஓர் ஆசைத் துடிப்பு மிதந்தது. சிற்சபேசன் வாய் திறந்தார்:

"உன் பேர் என்ன குழந்தை?"

"பட்டுன்னு சொன்னாத் தெரியும், சார்! இந்த ஊர்லே நான் வேலை செய்யற வீடுகளிலே கேட்டுப் பாருங்க சார்! என்னைப் பற்றி நல்லபடியாச் சொல்லுவாங்க..."

"அதிருக்கட்டும்! நீ பள்ளிக்கூடத்திலே படிக்கலியா?"

"எப்படி சார் படிக்க முடியும்? நான் சின்னவளா இருக்கப்பவே அம்மா போயிட்டா. அப்பாவுக்குச் சமையல் வேலை. கல்யாணம் கார்த்திகைன்னு முக்கால்வாசி நாள் வெளியூருக்குச் சமையல் வேலைக்குப் போயிடுவார். தம்பி அப்போ சின்னக் குழந்தையா இருந்தான். நான்தான் வீட்டோடு இருந்து பார்த்துக்கணும். தம்பி பெரியவன் ஆகி நெனைவு தெரியற சமயத்திலே அப்பாவும் செத்துப் போயிட்டார். அப்போ எனக்குப் பதினொரு வயசு. பொறுப்பெல்லாம் என் தலையிலே விழுந்துடுத்து...."

"அதிலேயிருந்து இப்படித்தான் காரியம் செய்து சம்பாதிச்சுக் குடும்பத்தைக் காப்பாத்தறியாக்கும்?"

"ஆமாம், சார்! எங்களுக்கு வேறே யாரும் இல்லே. மாமான்னு ஒருத்தர் மெட்ராஸ்லே இருக்கார். பேருக்குத்தான் அவர் மாமா. அவராலே உபகாரம் ஒண்ணுமில்லே. அப்பா போனப்போ கடிதாக எழுதினேன். அவர் திரும்பிக்கூடப் பார்க்கலே."

"வேறே யாரும் உறவு இல்லையா?"

"இந்த ஊரிலே இல்லே. எங்கெங்கேயோ இருக்கா. யாருமே எட்டிப் பார்க்கலே. பணம் காசு, சொத்து சுகம்னு எட்டிப் பார்ப்பா. நாங்க ஏழைப்பட்டவான்னு இளப்பம். யாரும் இருக்கியா, செத்தியான்னுகூடக் கேட்க வரலே. இந்த ஊர்க் கிராம முன்சீப்

நா. பார்த்தசாரதி



இருக்காரே, ரத்னம் பிள்ளைன்னு—ஒல்லியா சிவப்பா சந்தனப் பொட்டு வைச்சிண்டு சாவடி வாசல்லே உட்கார்ந்து கணக்கெழு திண்டிருப்பாரே — அவர்தான் ஒரு வழியா என்னைத் தைரியப்படுத்தினார். என்னைக் கூப்பிட்டார். 'குழந்தை! நீ தைரியமா இருக் கணும். தம்பியைப் படிக்க வைச்சுப் பெரியவ னாக்கிறவரை நான் சொல்றபடி செய்; ஊர்லே நாலு வீட்டிலே எடுபிடி காரியம், பெருக்கத் தெளிக்க ஏற்பாடு செய்யறேன். அதிலே கிடைக்கிறதை வச்சிட்டு மானமாப் பிழைக்கலாம் '-- அப்படின்னு ஒரு வழி பண்ணிவிட்டார். அப்பா சொத்து, சுகம்னு ஒண்ணும் வைச்சிட்டுப் போகலேன்னாலும் ஒண்டிக்கிறதுக்கு ஒரு சின்ன ஓட்டு வீடு— கையகலத்துக்கு வைச்சிட்டுப் போயிருக்கார். மேலக் கோடியிலே சின்னதா பித்தல் நார்ப் பெட்டி மாதிரி ஓர் ஓட்டுக்குச்சு—நீங்க கூடப் பார்த்திருப்பீங்க. வாசல்லே எருக்கஞ்செடி மொளைச்சிருக்கும். தம்பியும் நானும், அதுலே தான் காலத்தைத் தள்ளிண்டு வரோம்...''

'' சாப்பாடு !...''

'' நானே சமைச்சுக்குவேன், எனக்கு எல் லாம் தெரியும் சார் !...''

'' அது சரி ! நான் இந்த வீட்டுக் குக் குடி வந்திருக்கேன்னு உனக்கு யார் சொன்னாங்க ?''

'' அதுவா ? நேத்துச் சாயங் காலம் கிராம முன்சீப் சொன்னார். 'பட்டு ! அந்த வேப்பமரத்தடி வீட்டுக்குப் பட்டணத்திலேருந்து ஒரு புரொபஸர் கிடையராகி வந் திருக்கார். நாளைக் காலையிலே போய்ப் பாரு' என்றார். அதான் வந்தேன் சார்.''

'' எல்லாம் சரி. எனக்கு உன்னை ரொம்பப் பிடிச்சிருக்கு. எங்க வீட்டிலேயும் நீயே வேலை செய்யலாம்...காலையிலே சுத்தமா வாசலைப் பெருக்கித் தெளிச்சுக் கோலம் போட்டுட ணும். அப்புறம் உள்ளே மாமிக்கு ஒத்தாசை யாகச் சமையலுக்கு நாலு குடம் தண்ணீர் இறைத்துக் கொடுக்கணும். சாயங்காலமும் ஒருதரம் வீடு பெருக்கணும். இவ்வளவுக்கு மாக மாசத்துக்கு உனக்கு என்ன சம்பளம் வேணும் ?...''

'' அதான் நான் அப்பவே சொன்னேனே, சார்! சம்பளம்னு பெரிசா ஒண்ணும் கேட்க மாட்டேன். நீங்க கொடுத்ததைத் திருப்தியா வாங்கிப்பேன். சம்பளமா பெரிசு ? மனுஷாள் தான் வேணும் !''

பிரசபேசன் அதிசயித்தார். ஏழைமை அந் தப் பெண்ணுக்கு எவ்வளவு விநயமாகப் பேசும் பழக்கத்தை உண்டாக்கி யிருக்கிறது என்று எண்ணியபோது அவருக்கு வியப்பாயிருந்தது. உலகத்தைப் புரிந்துகொண்டு—கற்றி யிருப்ப



வர்களையும், சூழ்நிலையையும் நன்றாகத் தெரிந்துகொண்டு அந்தக் கசப்பை அங்கே தீர்த்துவிட்ட ஒரு தெம்பு, அந்தச் சிறுமியிடம் தென்பட்டது. 'நமக்கு இதுதான் வாழ்வு— இதைக் கொண்டுதான் சமாளித்துக் கொள்ள வேண்டும்'—என்கிற மாதிரி ஒரு நிறைவை அவளிடம் காண முடிந்தது.

"சரி, குழந்தை! இன்னியிலிருந்து காரியத்தைப் பாரு. நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றார் சிற்சபேசன். பட்டு நெடுநாட்கள் அந்த வீட்டில் பழகிய வேலைக்காரியைப் போல் சிற்றாடை நுனியை இழுத்துச் செருகிக் கொண்டு வாசலைப் பெருக்க ஆரம்பித்தாள்.

சிற்சபேசன் வீட்டுக்குள் போய்க் காப்பி குடித்துவிட்டு மனைவியிடம் வேலைக்காரச் சிறுமி கிடைத்த பெருமையை அளந்தார். மறுபடியும் திரும்பி அவர் வாசற்பக்கம் வந்த போது தரையில் விளக்குமாறு புரளும் பெருக்கல் ஓசை கேட்கவில்லை. வேப்ப மரத்தடியில் குனிந்து எதையோ பொறுக்கி எடுத்து ஒவ்வொன்றாக வாயில் போட்டுச் சுவைத்துத் துப்பிக்கொண்டிருந்தாள் பட்டு.

"எதையோ பொறுக்கிச் சாப்பிடுகிறாயே...? அதென்னது?"

"வேப்பம் பழம் சார்! எனக்கு ரொம்பப் பிடிக்கும்...இந்த மரத்தடியிலே நிறைய உதிர்ந்திருக்கு..."

"வேப்பம்பழமா?......ஐயையே......கசக்காதோ உனக்கு?"

"கசப்பு உடம்புக்கு நல்லதாம், சார்! எங்கப்பா அடிக்கடி சொல்லுவா. காயா இருக்கறப்போ இது விஷமாக் கசக்கும். பழுத்திட்டால் தகதகன்னு தங்கம்போல் ஒரு நிறம் வரும். அப்போ சாப்பிட்டாக் கசப்பே தெரியாது. அசட்டுத் தித்திப்பா ஒரு இனிப்பு இருக்கும். மென்னு கடிச்சு முழுங்கிடப்படாது. இலேசாச் சப்பிச் சுவைத்து விட்டுத் துப்பிடணும்..."

"எங்கே இப்படி ஒண்ணு கொடு; பார்க்கலாம்..." சிற்சபேசன் பட்டுவுக்கு முன்னால் வந்து கையை நீட்டினார்.

"வேண்டாம், சார்! பழக்கமில்லாட்டாக் கசப்பு ஒட்டாது... குடலைக் குமட்டிண்டு வாந்தியெடுக்க வரும்..."

"கொடேன்... பார்க்கலாம்..."

பட்டு சொன்னது மெய்யாகி விட்டது. பழத்தை வாயில் போட்டுக்கொண்ட மறு கணமே குமட்டலோடு காறித் துப்பினார் சிற்சபேசன். "நல்ல காப்பி சாப்பிட்ட மணத்தையெல்லாம் கெடுத்து வாயை நாற அடித்துவிட்டதே, இந்தப் பாழும் வேப்பம் பழம்!" என்றார்.

"நான்தான் மொதல்லேயே சொன்னேனே, சார்! பழகாட்டாக் கசப்பு ஒட்டாது. எனக்கு ரொம்ப நாட்களாகவே இந்தப் பழத்தைச் சாப்பிட்டுப் பழக்கம். ஒரே சமயத்திலே பத்து பன்னண்டு கூடச் சாப்பிட்டுடுவேன்."

வேப்பம் பழத்தைக் 'சாக்லேட்டாக' விழுங்கும் அந்த அதிசயச் சிறுமியின் பழக்கத்தை வியந்துகொண்டே வாயைக் கொப்பளிக்க உள்ளேசென்றார் சிற்சபேசன். வாயைக் கொப்பளித்துக் கழுவிய பின்னும் அந்தக் கசப்பும், குமட்டல் நாற்றமும் போகவில்லை. வெகு நேரம் காறித் துப்பிக்கொண்டே இருந்தார். வாசல் தெளித்துக் கோலம் போட்டு வீடு பெருக்கித் தண்ணீர் எடுத்துக் கொடுத்துவிட்டுப் பட்டு போய்விட்டாள். போகும்போது "வரேன் மாமி, வரேன் சார்" என்று உற்சாகமாகக் குரல் கொடுத்துச் சொல்லிக்கொண்டு போனாள். அந்தக் குரலில் ஓடியாடி வேலை செய்த களைப்பின் சலிப்போ, அலுப்போ இல்லை. யாரோ உறவுக்காரப் பெண் பார்க்க வந்து விட்டுச் சொல்லிக் கொண்டு போகிற மாதிரி ஒரு தன்மையான—சுபாவமான இனிமை இருந்தது.

சிற்சபேசனிடமும், ஸ்ரீமதி சிற்சபேசனிடமும் பட்டு நல்ல பேரெடுத்துவிட்டாள். "இந்தப் பொண்ணைப் பற்றி ஊரில் யாரைக் கேட்டாலும் பெருமையாத்தான் சொல்றா. சின்ன வயசிலேயே குடும்பக் கஷ்டம் தெரிஞ்ச பொண்ணாம். அப்பா அம்மா, ஒருத்தர் இல்லாமே ஒண்டியாத் தானும் பிழைத்துக் கொண்டு நாலு வீட்டிலே காரியஞ் செஞ்சு தம்பியையும் காப்பாத்தறதாம்" என்று முதல் நாளே பட்டுவைப் பற்றி அக்கம் பக்கத்தில் கேள்விப்பட்ட பெருமையைக் கணவனிடம் கூறினாள் ஸ்ரீமதி சிற்சபேசன்.

பட்டுவுக்கு ஊர் முழுதும் நல்ல பேர்தான். யார் எந்தக் காரியம் சொன்னாலும் தட்ட மாட்டாள். அவள் முகத்தில் கடுகடுப்பையே பார்க்க முடியாது. யாரிடமும் எதற்காகவும் அலுத்துக்கொள்ள மாட்டாள்.

நாலைந்து நாட்கள் கழித்து ஒரு நாள் சாயங்காலம் வீடு பெருக்க வரும்போது ஒரு சிறு பையனையும் அழைத்துக் கொண்டு சிற்சபேசன் வீட்டுக்குள் நுழைந்தாள் பட்டு.

"இவன்தான் சார் என் தம்பி. விசுவநாதன்னு பேரு. செல்லமா விச்சுன்னு கூப்பிடுவேன். இவனை என்னாலே முடிஞ்ச மட்டும் ஒரு 'ஸ்கூல் பைனல்' வரையாவது படிக்க வைச்சு ஆளாக்கி விட்டுடணும்னு இருக்கேன். அதுக்காகத்தான் இத்தனை பாடு படறேன்" என்று சிற்சபேசனிடம் அந்தச் சிறுவனைக் காட்டிச் சொன்னாள் பட்டு. சிற்சபேசன் சிரித்தார். "ஏன் சார் சிரிக்கிறீங்க? என்னாலே முடியுமான்னு தானே?"

"இல்லே! 'ஸ்கூல்பைனல்'னா இன்னும் ஆறேழு வருஷங்களாவது படிக்கணுமே. அது வரை நீ இப்படியே சின்னப் பொண்ணா வீடு வீடா ஏறி இறங்கிக் காரியம் செய்ய முடியுமான்னு நினைச்சேன். சிரிப்பு வந்தது."

"அப்படி நினைக்காதீங்க சார்... என்னாலே கண்டிப்பா முடியும்!... நான் நினைச்சா அதைச் செய்யாம விடமாட்டேன். எப்பாடு பட்டாவது தம்பியைக் கண்டிப்பாய்ப் படிக்க வைச்சுடுவேன் சார்..."

இதைச் சொல்லும்போது பட்டுவின் இடுங்கிய கண்களில் ஒளி மின்னியது.

"பட்டு! உனக்கு நம்பிக்கை ரொம்ப இருக்கு... நீ செய்தாலும் செய்வே..."

"செய்யத்தான் போறேன், சார்! நீங்க நெறையப் படிச்சுப் பெரிய காலேஜிலே எத்தனையோ வருஷம் புரொபஸரா இருந்துட்டு வந்திருக்கீங்க! உங்களோட எல்லாம் வாதாடிப் பேச எனக்குத் தெரியாது. ரத்னம் பிள்ளை அடிக்கடி 'முயற்சி திருவினையாக்கும்'

என்று ஏதோ தமிழ் வசனம் சொல்வார். அதுலே எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை.''—பதின்மூன்று வயதுப் பட்டு பேச ஆரம்பித்துவிட்டால் அந்தப் பேச்சில் நூறு வயது அனுபவம் தொனிக்கும். அப்படி ஒரு நம்பிக்கை! அப்படி ஒரு முதிர்ச்சி. அப்படி ஒரு தெளிவு.

ஒரு நாள் சிற்சபேசன் தெரு வழியே போகும்போது மேலக்கோடியில் தன் வீட்டு வாசலில் நின்றுகொண்டிருந்த பட்டு பார்த்து விட்டாள்.

''சார்! சார்...!'' என்று கத்தி அழைத்தாள். சிற்சபேசன் திரும்பிப் பார்த்தார். பக்கத்தில் வந்தார். ''இதுதான் நீ இருக்கிற இடமா, பட்டு?'' என்று கேட்டார்.

''ஆமாம், சார்! இதுதான் எனக்கு அரண்மனை. ஓட்டுக் கூரை வெயிலுக்குக் காயும்; மழைக்கு ஒழுகும். என்ன செய்வது? அப்பா வச்சிட்டுப் போன சொத்து! விடலாமோ!''

''கிழக்கேயும் மேற்கேயும் வீடில்லாமல் இடி மனைகளாகக் கிடக்கிறதே...? தனியாப் பயமில்லாமே இதிலே உன்னாலே எப்படியிருக்க முடியறது?''

''எப்படியோ இருக்கேன், சார்! எனக்கென்ன பயம்? விச்சு துணைக்கிருக்கான். பணமா? காசா; பயப்படறதுக்கு?''

''ஆமாம்! ஊர்க்காரங்க வீடெல்லாம் வாசல் தெளிச்சுக் கோலம் போடறியே, உன் வீட்டிலே மட்டும் வாசலெல்லாம் எருக்கஞ் செடியா முளைக்க விட்டிருக்கியே?''

''அதுக்கு நேரம் ஏது சார்? எனக்குத்தான் கோழி கூப்பிடறதுக்கு முன்னேயிருந்து இருட்டறவரை வாடிக்கைக்காரங்க வீட்டு வேலே சரியா இருக்கே! இங்கே தம்பிக்கும் எனக்கும் சாப்பாடு வேறே சமைக்கணுமே?''. என்று சரியாகக் காரணம் சொல்வாள் பட்டு.

பேராசிரியர் சிற்சபேசன் அந்தக் கிராமத்தில் குடியேறி ஒரு வருடம் ஓடி விட்டது. பட்டுவின் தம்பி இப்போது நாலாங்கிளாஸ் படிக்கிறான். வீடு பெருக்குகிற வேலைக்காரப் பெண்ணாக இருந்தாலும் அவள்மேல் ஒரு தனி அனுதாபம் அவருக்கு உண்டு. ஒருநாள் காலை பட்டு வாசல் தெளித்துக் கோலம் போட வரவில்லை. விடிந்து வெகு நேரமாகிவிட்டது.

''இந்தப் பெண் பட்டு வரலியா இன்றைக்கு?'' என்று தம் மனைவியிடம் கேட்டார் சிற்சபேசன்.

''அந்தப் பெண் இனிமேல் வராது!''

''ஏன் அப்படி?''

பதில் சொல்லாமல் அர்த்தபுஷ்டியோடு சிரித்தாள் அவர் மனைவி.

''என்ன சிரிக்கிறே?''

'ஒண்ணுமில்லே' என்று சொல்லிக் கொண்டே கணவன் பக்கத்தில் நெருங்கி வந்து தணிந்த குரலில், ''பட்டு பெரிசாயிருக்கா!'' என்றாள் அவள்.

சிற்சபேசனுக்குத் திகைப்பு ஒருபுறம்; மகிழ்ச்சி ஒருபுறம். இரண்டையுமே வெளிக் காட்டிக் கொள்ளாமல், ''அந்தப் பெண்ணுக்கு இந்த ஊரில் ஏனென்று கேட்கக்கூடத் தன் மனிதர் என்று யாருமே இல்லையே! ஒண்டியா என்ன செய்யறதோ? பாவம்....'' என்று தம் மனைவியை நோக்கிச் சொன்னார்.

'பத்து கல்யாணங்களில் ஒரு கல்யாணம்தான் சந்தோஷமான வாழ்க்கை நடத்துகிறது! என்ன உண்மைதானா?''



''எனக்குத் தெரியாது, சார்! நான் இரண்டு கல்யாணங்கள்தான் பண்ணிண்டிருக்கேன்.''

''எனக்கே இது தெரியாது! நேற்று இராத்திரி பெருமாள் கோவிலுக்குப் போயிட்டுத் திரும்பி வரபோது அந்தப் பொண்ணோட வீட்டு வாசல்லே ஒரே பெண்கள் கூட்டமா இருந்தது. என்னன்னு போய் விசாரித்தேன். பட்டு பெரிசாயிருக்கான்னு தகவலைச் சொன்னா. உள்ளே போய்ப் பார்த்தேன். அது ஒரு மூலையிலே தலையைக் குனிஞ்சிண்டு உக்காந்திருந்தது. 'என்னடி பட்டு?'ன்னேன். பதில் சொல்லாமே என்னைப் பார்த்துச் சிரிச்சுது. அதைப் பாக்கறபோது எனக்கு மனசு கஷ்டமா இருந்தது. பெத்தவ இருந்தா இப்படி ஒரு மங்களமான காரியம் நடந்ததைப் பெருமையா நாலு பேருக்குச் சொல்லுவா. வாசல்லே கோலம் போட்டுக் கொண்டாடித் தலைவாரிப் பூவைச்சுப் பிட்டும், உருண்டையும் பண்ணி நாலு பெண்களைக் கூப்பிட்டுக் கொடுப்பா. யார் இருக்கா இதுக்கு அதெல்லாம் செய்ய? அனாதையா அழுக்குச் சித்தாடையைக் கட்டிண்டு மூலையிலே உட்கார்ந்திண்டிருக்கு...''

''ஐயோ பாவம்! நீயும் இந்த ஊர் அல்அசல் மனிதர்களைப் போலப் பேசாமல் இருந்துவிடாதே. சாயங்காலமா பூசப் ராவுத்தர் ஜவுளிக் கடையிலிருந்து ஒரு சீட்டிச் சிற்றாடை வாங்கிண்டுவந்து தரேன். வாசல்லே பூக்காரன் வந்தால் கொஞ்சம் பூவும் வாங்கி வைச்சுக்கோ. போய் ஏதோ முறையாச்செய்ய வேண்டியதைச் செஞ்சிட்டு வா. அது குளித்து வருகிறவரையில் அந்தச் சின்னப் பையனை இங்கேயே வந்து சாப்பிடச் சொல்லிட்டு வா. பட்டுவுக்கும் கொண்டு போய்ப் போட்டுடு'' என்று பரிவோடு சொன்னார் சிற்சபேசன்.

அவர் கூறியபடியே நடந்தது. சாயங்காலம் அவர் மனைவி ஒரு பழுக்காத் தாம்பாளத்தில் புதுச் சிற்றாடையும் பூவும் மஞ்சள் குங்குமமும் ஒரு டஜன் கண்ணாடி வளையலும் எடுத்து வைத்துப் புடவைத் தலைப்பால் மூடிக்கொண்டு பட்டுவின் வீட்டுக்குச் சென்றாள்.

போனவள் வீட்டுக்குத் திரும்பி வரும்போது இரவு ஏழு மணிக்குமேலாகி விட்டது.

''என்ன? பட்டு என்ன சொல்றாள்?'' என்று விசாரித்தார் சிற்சபேசன்.

''அதை ஏன் கேக்கறேன்? நான் புதுச் சித்தாடையும் பூவுமாப் போய் நின்னதும்

அந்தப் பொண் ஒரே பிடிவாதமா 'இதெல்லாம் வேண்டாம் மாமி'ன்னு அடம் பிடித்தது. 'நான் பிறந்து வளர்ந்த ஊருக்கு இதெல்லாம் இல்லேன்னு ஒரு குறையா? நீங்க ஏன் வீணு சிரமப்படணும்?' என்று சிரிச்சுண்டே சொல்லித்து. 'அதுக்கில்லேயடி, பெண்ணே! இதெல்லாம் வழக்கம்டீ! ஆயிரம் கஷ்டம்னாலும் முறையை விடப்பிடாது. நல்லது நாளைக்கு வருமா?' என்று நானுக வற்புறுத்திச் சொல்லி எல்லாம் செய்துட்டு வந்தேன்'' என்றாள் அவர் மனைவி.

''என்னவோ இதிலே நமக்கு ஒரு திருப்தி! அவ்வளவுதான்'' என்று மன நிறைவோடு சொன்னார் சிற்சபேசன்.

''இத்தனை நாட்கள் முகத்தைச் சுளிக்காமல் உழைச்சுது. சம்பளம்னு ஏதோ கொடுத்தோம். ஆனால் அது உழைச்சதுக்கு நீங்க கொடுத்த நாலைந்து ரூபாய்க் காசு காணவே காணாது... பெரிசாப் போனப்புறம் இன்னமே எங்கே வீடு வீடா வாசல் பெருக்க வரப் போறது?'' என்று சொல்லிப் பெருமூச்சு விட்டாள் சிற்சபேசனின் மனைவி.

''அப்படியானால் இனிமேல் பட்டு வேலைக்கு வரமாட்டாள் என்கிறாயா?''

''அப்படி அவள் சொல்லலையானாலும் எனக்குத் தோணறது''என்றாள் அவர் மனைவி. சாயங்காலம் சாவடியில் தற்செயலாகக் கிராம முனிசிப் ரத்னம் பிள்ளையைச் சந்தித்தார் சிற்சபேசன். பட்டுவைப் பற்றி ஏதோ பேச்சு வந்தது.

''எனக்கு அந்தப் பெண் பேரிலே தனி அனுதாபம், சார்! இதுவரை எப்படியோ நாலு வீட்டிலே காரியம் செய்து தன்னையும் தம்பிப் பயலையும் காப்பாத்திக்கிட்டுது. இனிமே அது முடியற காரியமில்லையே? துக்கிரிப்பய கிராமம் ஏழைப்பட்ட பொண்ணைப் பற்றி என்ன வேணுலும் பேசும். பெரிசான பொண்ணு வீடு வீடா நுழைஞ்சு வேலை செய்யறது நல்லா இருக்காது. இனிமே எப்படிக் காலந்தள்ளப் போகுதோ?'' என்று ரத்னம் பிள்ளை ஏக்கம் நிறைந்த குரலில் சிற்சபேசனிடம் சொன்னார்.

''எனக்கும் அதுதான் யோசனை'' என்றார் சிற்சபேசன்.

ஆனால் பட்டு இந்த மாதிரி எதையுமே யோசிக்கவில்லை என்பது நாலாவது நாள் விடிந்ததும் தெரிந்தது.

இருள் பிரியும் நேரம். காலைக் குளிர் நீங்கவில்லை. மப்ளரை இழுத்துக் கட்டிக்கொண்டு வாசல் பக்கம் வந்த சிற்சபேசன் வேப்ப மரத்தடியில் விளக்குமாறும் கையுமாக நின்று கொண்டிருந்த பட்டுவைப் பார்த்துத் திகைத்துப்போனார்.

நீராடிய கூந்தலை அவள் அள்ளிச் செருகிக் கொஞ்சம் சவந்திப்பூ வைத்திருந்தாள். கைகளில் அவர் மனைவி கொடுத்த புதிய கண்ணாடி வளையல்கள் குலுங்கின. புதிய சீட்டிச் சிற்றாடையும் கட்டிக்கொண்டிருந்தாள்.

'ரத்னம் பிள்ளைகூட அப்படிச் சொன்னாரே! ஒருவரையும் கலந்து யோசனை கேட்டுக் கொள்ளாமல் இந்தப் பெண் இன்னும் இப்படி விளக்குமாறும் கையுமாக வந்து நிற்கிறதே?' என்ற சிந்தனையோடு வேப்பமரத்தடிக்குப் போனார் சிற்சபேசன்.

''சார்! உங்க வீட்டிலேருந்து மாமி வந்து என்னை ரொம்பப் பெருமைப்படுத்திஞங்க. என்னாலே வீண் கஷ்டம். நாலு நாளா நான் வராமல் வாசல் பெருக்க முடியாமல் சிரமமாயிருந்திருக்கும். குப்பை சுமந்து போச்சு'' என்று வழக்கமாகப் பேசுவது போல் ஆரம்பித்தாள் பட்டு.

''அது சரி, பட்டு! நான் ஒண்ணு கேட்கணும் உன்னை. தப்பா நினைச்சுக்க மாட்டியே?''

''என்னது சார்?''

''இனிமே நீ இப்படி வீடு வீடா வாசற் பெருக்க வரமுடியுமா? பெரிய பொண்ணாயிருக்கே...ரத்னம்பிள்ளை கூட எங்கிட்டச் சொன்னார்...ஊரார் நாலு விதமாப் பேசற வங்கன்னு....''

பட்டு பெருக்குவதை நிறுத்திவிட்டு அவர் முகத்தைப் பார்த்துச் சிரித்தாள். அந்தச் சிரிப்புக்குத்தான் எத்தனை அர்த்தம்?

''சார்! எனக்கெல்லாம் இப்படிப் பெருமை கொண்டாடி முடியுமா? உழைச்சு வயிறு நிரப்பியாகணும். தம்பியைப் படிக்கவைக்கணும்னு நான் ஒரு வைராக்கியம் வேறே எடுத்துண்டிருக்கேன். ஊரார் எப்பவுமே நாலுவிதமாப் பேசறவங்கதான். பட்டினி கிடந்தா ஏன்னு கேட்க இந்த ஊராருக்குத் துப்பு இருக்கா? அவங்க என்ன பேசினாலும் கேட்க நான் தயாரில்லே...''

''சரி! நான் எனக்குப் பட்டதைச் சொல்லி விட்டேன். அப்புறம் உன் இஷ்டம்'' என்று சொல்லி விட்டு வேப்ப மரத்தடியிலிருந்த சிமிண்டு மேடையில் உட்கார்ந்தார் சிற்சபேசன். வழக்கம்போல் கிழக்கே சூரியோதயக் காட்சி கிராமத்துக்கே உரிய அசல் அழகோடு தெரிந்துகொண்டிருந்தது. பட்டு வேகமாகப் பெருக்கத் தொடங்கியிருந்தாள். சிறிதுநேரம் கழித்து வீட்டுக்குள்ளே போவதற்காக அவர் எழுந்திருந்தபோது, பட்டு பெருக்கி முடித்துவிட்டு மரத்தடியில் வேப்பம் பழம் பொறுக்கிக்கொண்டிருந்தாள்.

''இந்த வேப்பம்பழம் தின்கிற கெட்ட பழக்கம் இன்னும் உன்னிடமிருந்து போகவில்லையே? உன் பழக்கமே உலகத்தோடு ஒட்டாமே தனியா இருக்கு! எல்லாருக்கும் வாய்க்கு ருசியா ஏதாவது பழம் பிடிக்கும்னு உனக்கு மட்டும் வாயை நாற அடிக்கிறதுலேயா பிரியம்?'' என்று கேலியாகச் சிரித்துக் கொண்டே கேட்டார் சிற்சபேசன்.

''என்ன சார் செய்யறது? சின்ன வயசிலேயிருந்தே எனக்கு இந்தக் கசப்பிலே ஒரு பிரியம். இந்தப் பழத்தைச் சாப்பிட்டுப் பழகிட்டேன். இந்தப் பழத்திலேடை கசப்பிலே ஓர் அசட்டு இனிப்பும் இருக்கு சார்!'' என்றாள் நிஷ்களங்கமாகச் சிரித்துக்கொண்டே.

பட்டு சொன்ன வார்த்தைகளை அவள் ஒரே அர்த்தத்தை நினைத்துக் கொண்டுதான் சொல்லியிருக்க முடியும்! ஆனால் சிற்சபேசனுக்கு எத்தனையோ அர்த்தங்கள் அந்த வார்த்தைகளிலிருந்து கிடைத்தன!

''பட்டுவுக்கென்ன? **கசப்பாயிருக்கிற எதுவுமே அவளுக்குச் சின்ன வயசிலிருந்து பழக்கம்! பழகினால் கசப்பைப் போல் சுவை வேறே இல்லை**'' என்று தமக்குள் மெல்ல முணுமுணுத்துக் கொண்டார் சிற்சபேசன்.



தேன்கூடு

அத்தியாயம் 13

பெற்ற வயிறு

மாடிப்படியருகே ஏதோ பேச்சுக் குரல் கேட்டது. சொர்ணம்பாள் கவனித்துக் கேட்டாள்.

"வாங்க அம்மா!" என்று யாரையோ வரவேற்றாள் பொன்னி.

"அம்மா இருக்காங்களா?"

"சாப்பிட்டுப் போய்ப் படுத்தாங்க! தூங்கறாங்களோ, முழிச்சிக்கிட்டு இருக்காங்களா, தெரியல்லே!"

"சரி, பார்க்கிறேன்!"

மிஸஸ் மீனாட்சி ராமசுந்தரத்தின் பேச்சுக் குரல்தான் அது. வெகு நாட்களாக அவள் இந்தப் பக்கம் தலை காட்டாமல் இருந்துவிட்டு இன்று வந்திருப்பது சொர்ணம்பாளுக்கு ஆச்சரியமாக இருந்தது. படுத்தபடியே பத்திரிகை ஒன்றில் கல்யாணப் படங்களாகப் பார்த்துக் கொண்டிருந்த அவள் சட்டென்று பத்திரிகையை மார்பு மேலேயே போட்டுக் கொண்டு தூங்குபவள்போல் கண்களை மூடிக் கொண்டாள்.

மீனாட்சியம்மாளின் காலடிச் சத்தம் கேட்டது; பின்னர் மெல்லக் கனைத்தது கேட்டது. தூங்குகிறவளை எழுப்பும் அளவுக்கு ஓசை உண்டாகாததால் அவள் கண்களைத் திறக்கவில்லை.

"தூக்கம் போலிருக்கு!"

சொர்ணம்பாள் இதற்கும் அசையவில்லை. செய்வது பாசாங்காக இருந்தாலும் பொருத்தமாக இருக்க வேண்டாமா? இமைகள் நொடித்துவிடப் போகிறதே என்று அஞ்சியவளாக அவள் முனைகியவாறு ஒருக்களித்துக் கொண்டாள். பல நாட்கள் கழித்துப் பார்க்க வந்திருக்கும் மிஸஸ் மீனாட்சியிடம் இப்படி நடந்துகொள்ள நேர்ந்தது அவளுக்கே பிடிக்கத்தான் இல்லை. இருந்தாலும் வேறு வழியில்லை என்றே தோன்றியது. எதிர்பாராத நேரத்தில் வந்திருக்கும் அவளிடம் என்ன பேசுவது, எப்படிப் பேசுவது என்று திடப்படுத்திக் கொள்ள வேண்டாமா?

மிஸஸ் மீனாட்சி இவ்வளவு நாட்களும் இந்தப் பக்கம் வராமல் இருந்ததற்கான காரணம் என்னவென்று சொர்ணம்பாளுக்குத் தெரியும். உஷா தனக்கு மருமகளாக வர வேண்டும், வரப் போகிறாள் என்று மிஸஸ் மீனாட்சி அவ்வளவு தூரம் நம்பியிருந்தாள். இது வீண் ஆசை என்று அவளுக்கு ஒரு நாளும் தோன்றியதேயில்லை. சொர்ணம்பாளுக்கோ இது வெறும் உபசார வார்த்தையாகத்தான் இருந்து வந்திருக்கிறது. அதையும் தவிர, எப்போதோ நடக்க வேண்டிய ஒன்றைப் பற்றி இப்போது யாராவது கவலைப் படுவார்களா என்றும் அவள் அலட்சியமாக இருந்து வந்திருக்கிறாள். ஓரொரு சமயம் அந்த அம்மாளுடைய ஆசையை ஒட்டியும் அவள் பேசியிருந்திருக்கக் கூடும். அதை வைத்துக் கொண்டு இவ்வளவு பெரிய கோட்டை கட்டிக் கொண்டு விடுவதா? மிஸஸ் மீனாட்சியின்

மன வருத்தத்துக்கு அவள் எப்படிப் பொறுப்பாளி?

எல்லாம் இருக்க, உஷாவை இவ்வளவு பெரிதாக எண்ணிக் கொண்டிருப்பவள் அவ்வளவு உயர்வாக நினைப்பவள், அப்படிக் கொஞ்சம் வருத்தந்தான் படட்டுமே என்றும் சொர்ணம்பாளுக்குத் தோன்றியது. பாவம், மிஸஸ் மீனாட்சிக்கு உண்மை என்ன தெரியும்? சொர்ணம்பாளின் வயிற்றில் பிறந்தவள்தானே என்று எண்ணியிருக்கலாம்! ஆனால் அதைப் பற்றிச் சொர்ணம்பாளுக்குக் கவலையில்லை. உஷாவை 'ஓசத்தி'யாக எண்ணுகிறவர்கள் உண்மை தெரிந்தவர்களாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவளுக்கு ஆகாதவர்கள்தான். அவர்கள் வருத்தப்பட்டால் பட்டுக் கொண்டிருக்கட்டுமே! பிடிக்காத காரியத்தைத் தெரிந்து செய்தாலும் தெரியாமல் செய்தாலும் பலன் என்னவோ ஒன்றுதானே? ஆனால் இத்தனை நாட்களுக்குப் பிறகு மிஸஸ் மீனாட்சி தன்னைத் தேடி வந்திருக்கிறாள் என்றால் ஏதோ முக்கியமான விஷயமாகத்தான் இருக்க வேண்டும் என்று சொர்ணம்பாளுக்குத் தோன்றியது. அவ்வளவு முக்கியமான விஷயம் எதுவாக இருக்கும்?

மிஸஸ் மீனாட்சி திரும்பிச் செல்வது போல் காலடியோசை கேட்டது. உண்மையிலேயே அவள் போய்விட்டால் என்ன செய்வது என்று யோசனை



உண்டாகி விட்டது சொர்ணம்பாளுக்கு.

"அம்மா தூங்கறாங்களா?" என்று விசாரித்துக்கொண்டிருந்தாள் பொன்னி.

சொர்ணம்பாளுக்கு அவளுடைய விசாரணையைக் கேட்டதும் கோபம்தான் வந்துவிட்டது. ஏதாவது விசேஷம் இருக்கும் என்று ஒருத்தி ஓடி வந்து எழுப்ப மாட்டாளோ?

"கனைத்துக் கூடப் பார்த்தேன். நல்ல தூக்கம் போலிருக்கிறது. எழுந்திருந்தால் சொல்லு; நான் வருகிறேன்!" என்று சொல்லிக் கொண்டு புறப்பட்டாள் மீனாட்சியம்மாள்.

சொர்ணம்பாளுக்குப் பொறுக்கவில்லை. கட்டிலுக்கு அருகில் அழகுக்கு வைக்கப்பட்டிருந்த பூ ஜாடியை உருட்டி ஓசைப்படுத்திவிட்டு, விழித்துக் கொண்டவள் போல், "பொன்னி!" என்று குரல் எழுப்பிக் கூப்பிட்டாள்.

"அம்மாகூட எழுந்திட்டாங்க, வாங்க!" என்று கூறிவிட்டு, உள்ளே ஓடி வந்தாள் பொன்னி.

"என்ன சத்தம் கேட்டது? யார் அங்கே? பூ ஜாடியைக் கையில் இடறுவது போலவா வைப்பாய்? கீழே விழுந்து உடைந்திருந்தால்?" என்று சிடுசிடுவென்று கடிந்து கொண்டாள்.

பின்னால் மிஸஸ் மீனாட்சி வருவதைப் பார்த்து விட்டு, "நீங்களா, வாங்க, வாங்க!" என்று அவசரம் அவசரமாக எழுந்து உட்கார்ந்து கொண்டாள்.

"எங்கே, இந்தப் பக்கம் கண்ணிலேயே காணோமே! எங்களையெல்லாம் அடியோடு மறந்து விட்டீர்கள் போலிருக்கிறதே!" என்று மனத்தாங்கலோடு கூறி வரவேற்றாள்.

மீனாட்சியம்மாளுக்குக் கொஞ்சம் தயக்கமாகத்தான் இருந்தது. வேறு ஒரு சமயமாக இருந்திருந்தால் இதற்குச் சுடச் சுடப் பதில் கொடுத்திருப்பாள். அவ்வளவு தூரத்துக்கு அவள் மனம் வெறுத்துப் போயிருந்தாள். அந்தஸ்தில் இவர்கள் தங்களைவிட மட்டம் என்று எண்ணிக் கொண்டிருப்பதாக அவளுக்கு ஒரே கோபமாக இருந்தது. பாரிஸ்டர் விட்டுக் கொடுத்ததனால்தான் அந்த நீதிபதிப் பதவி தன் கணவருக்குக் கிடைத்தது என்பது அவளுக்கு நன்றாகத் தெரியும். அதனாலேயே அவர்கள் மட்டமானவர்களாகி விடுவார்களா? பாரிஸ்டருக்குப் புகழ் இருந்தது; நல்ல வருமானம் இருந்தது. அதனால் நல்ல மதிப்பு இருந்தது. அவருக்குத் தம் தொழிலைத் தவிர வேறு என்ன தெரியும்? ஆனால் நீதிபதி ராமசுந்தரம் பல மொழிகளைக் கற்றவர்; பல கலைகளைப் பயின்றவர். வேண்டுமானால் இருவரையும் பொதுவான ஒரு மேடையில் ஏற்றிப் பார்க்கட்டுமே! அவருடைய ஞானம் எப்படிப்பட்டது என்று தெரிந்துகொண்டு விடலாம். எந்த விஷயமானாலும் அதைப் பற்றி அரை மணி, ஒரு மணி நேரம் ரஞ்சகமாகப் பேசுகிற திறமை நீதிபதிக்கு இருப்பதைக் காணலாம். சட்ட மன்றத்தில் சிலை போல் உட்கார்ந்து நியாயத்தைப் பார்க்கிற அவர், சிரித்துச் சிரித்து வயிறு புண்ணாகும்படி பேசக்கூடிய ஆற்றல் பெற்றவர் என்பதை அப்போது பார்த்து விடலாம். சங்கீதம், சிற்பம், சாஸ்திரம், சரித்திரம் என்று எதுவாகத்தான் இருக்கட்டுமே! யார் மட்டம், யார் தேட்டம் என்று தெரிந்து போகிறது! மீனாட்சியம்மாளுக்குத் தன் கணவரிடம் அத்தனை மதிப்பும் நம்பிக்கையும் இருந்தன. ஆனால் சொர்ணாம்பாளுக்கு இதையெல்லாம் சொன்னால்தான் என்ன தெரிந்துவிடப் போகிறது? ஏதோ பணம் ஏராளமாக இருக்கிறது. அதிர்ஷ்டம் அதைவிட அதிகமாக இருக்கிறது.

அவள் பேச்சு எங்கே எடுபடும்? அதைப் பற்றிப் பேசவா அவள் இங்கே வந்திருக்கிறாள்? அவள் வந்திருந்த காரியம் வேறு. சொர்ணாம்பாளும் அவள் கணவர் பரமசிவமும் தங்களை எப்படிக் கருதுகிறார்கள் என்பது முக்கியமல்ல. உஷாவின் கல்யாண விஷயமாக அவர்களுடைய கருத்து இப்போது எப்படி இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்வதுதான் அவளுக்கு முக்கியமாக இருந்தது. அவள் வந்ததே அதை முன்னிட்டுத்தான்.

உஷாவுக்குக் கண்ணபிரானைக் கல்யாணம் செய்து கொள்வதில் விருப்பமேயில்லை என்பது அவள் வரைக்கும் எட்டியிருந்தது. ஆகவே கடைசியாக ஒரு முறை பேசிப் பார்த்துக் கேட்டுவிடலாம் என்ற சபலத்தோடு வந்திருந்தாள். ஆனால் எடுத்த எடுப்பிலேயே அதைப் பற்றிக் கேட்டு விடலாமா? அதைத் தவிர வேறு பல விஷயங்களைப் பற்றிச் சாதாரணமாகச் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"ஆமாம், அப்புறம் உஷாவின் கல்யாணம் எப்படி ஆயிற்று? எந்த மட்டில் இருக்கிறது?" என்று புறப்படப் போகிற சமயத்தில் கேட்டாள் மீனாட்சியம்மாள்.

"அப்படியேதான் இருக்கிறது. இப்போதைக்கு ஒன்றையும் காணோம்!" என்றாள் சொர்ணாம்பாள்.

"உஷாவுக்கு இந்தக் கல்யாணத்தில் இஷ்டமில்லையாமே?"

"உங்களுக்கு அப்படி யார் சொன்னது?"

"யாரோ சொன்னார்கள்; காதிலே விழுந்தது. அது என்ன உண்மைதானா, இல்லை, வெறும் கட்டுக்கதையா?"

சொர்ணாம்பாள் வெறுப்போடு முகத்தைத் திருப்பிக் கொண்டு, "அவ்வளவு தூரத்துக்குப் போய் விட்டதா? எனக்கு இதெல்லாம் என்ன தெரியும்? காலேஜில் படிக்கிறாள்; இல்லையா? அவள் மனத்துக்குள் என்ன வைத்துக் கொண்டிருக்கிறாள் என்று ஊராருக்குத் தெரியலாம்; எங்களுக்குத் தெரியலாமா?" என்று உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

மீனாட்சியம்மாளுக்கு இப்போது கேட்டு விடலாமா என்று நாக்கு இரண்டு மூன்று முறை துடித்தது. ஆனால் நல்ல வேளையாக அவள் தன்னை அடக்கிக் கொண்டாள்.


"அதனால் வேறு இடம் பார்க்கிற யோசனை இருக்கிறதோ என்று கேட்கிறேன். இதெல்லாம் ஆயிரம் காலத்துப் பயிர், இல்லையா? இஷ்டமில்லாததைச் செய்து வைத்தால் அப்புறம் அது கண்ணைக் கசக்கிக் கொண்டு நின்றால் நமக்குத்தானே கஷ்டமாக இருக்கும்?"

"ஆமாம்; அப்படித்தான் இருக்கும்..." என்று தரையைப் பார்த்துக் கொண்டு மனத்துக்குள் கறுவினாள் சொர்ணாம்பாள்!

"யோசித்துச் செய்யுங்கள்!" என்று எழுந்தாள் மீனாட்சியம்மாள். போகிற போது உஷாவையும் பார்த்து விட்டுப்



கால்கேட்டின் மூலம் பற்கள்
சொத்தையாவதைத் தடுப்பதோடு
நாள் முழுவதும்
வாய் துர்நாற்றத்தையும்
அகற்றுங்கள்!
வழக்கமாக கால்கேட்
உபயோகித்தால், அது:
சொத்தையைத் தடுக்கிறது
துர்நாற்றத்தை அகற்றுகிறது
பற்களை அதி வெண்மையாக வைத்திருக்கிறது
COLGATE
TOOTH POWDER
COLGATE
DENTAL CREAM
வெண்ணிற பற்களைப் பெறவும், வாயில் நறுமணம் கமழவும், உலகிலேயே பெரும்பாலான மக்கள் மற்றெல்லா பற்பசைகளையும் விட கால்கேட்டையே பெரிதும் விரும்புகிறார்கள்.



MICO
LICENCE BOSCH
எல்லா என்ஜின்களுக்கும்
ஏற்றதாக
மைக்கோ
பிளக் கிடைக்கும்
மோட்டார் இண்டஸ்ட்ரீஸ் கம்பெனி லிமிடெட்
பெங்களூர்.
MC-P/14

போக வேண்டும் என்று தனக்குள் எண்ணிக் கொண்டாள். சுந்தரிக்கு வயது ஏற ஏற, சொர்ணாம்பாளுக்கு உஷாவிடம் வெறுப்பு வளர்ந்து வருவதாக அவளுக்குப் பட்டது. இரண்டு கண்களிலே ஒரு கண் வெண்ணெயாகவும் மற்றொரு கண் சுண்ணாம்பாகவும் ஒரு தாய்க்கு எங்கேயாவது தோன்றுவதுண்டா என்று அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. இத்தனைக்கும் அவளுக்குக் கடைசிப் பிள்ளை என்றால் அவனிடம் ஆசை ஒருபடி அதிகமாகத்தான் இருந்தது. அதனால் மற்றப் பிள்ளைகளை அவள் வெறுத்தாள் என்று சொல்ல முடியுமா? முரட்டுத்தனமும் கட்டுப்பாடு என்பதே தெரியாமல் அடங்காமல் இருப்பவனுமான சேகரைக் கூட அவளால் வெறுக்க முடிந்ததில்லையே! பார்க்கப் போனால் ரமேஷிடம் அன்பு ஒரு மாற்று அதிகம் என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் சொர்ணாம்பாளின் போக்கு அவளுக்கு விசித்திரமாக இருந்தது. தான் பெற்ற பெண்ணையே வெறுக்கும் தாயை அவள் காண்பது இதுதான் முதல் தடவை. அப்படிக் கூட ஒருத்தியால் இருக்க முடியுமா? சுந்தரி பிறப்பதற்கு முன்பு உஷாவிடம் சொர்ணாம்பாள் உயிரையே வைத்திருந்தது அவளுக்குத் தெரியும். இப்பொழுது மூத்தாள் விட்டுச் சென்ற பெண்ணை நடத்துவதுபோல் மாறியிருந்ததைத்தான் கண்டாள் அவள். அழகு, படிப்பு, குணம் எல்லாவற்றிலும் சிறந்த ஒரு பெண்ணைக் கண்டு பெருமைப் பட வேண்டியவள், மாற்றாந் தாயைப் போல் பொறாமைப் படுவதாகத் தோன்றியது.

"வேறு ஏதாவது முக்கியமான விசேஷம் உண்டா?" என்று வழியனுப்ப எழுந்தவாறே கேட்டாள் சொர்ணாம்பாள்.

"என் பிள்ளை சேகர் இங்கே வருவதுண்டா, என்ன?"

சொர்ணாம்பாள் கண்களை அகல விரித்துக் கொண்டு, "இல்லையே. நான் ஒரு தடவைகூட இங்கே வந்து பார்த்ததில்லையே!" என்றாள்.

"அதுதான் கேட்டேன். இந்தப் பக்கம் வந்தால் குத்துக்கல் ஏற விடாதீர்கள். அவன் கவலைதான் அவன் அப்பாவுக்கு எப்பொழுதும். அவனால் அவருடைய நல்ல பெயருக்கே நாசம் வந்துவிடும் போலிருக்கிறது. அப்பாவின் பெயரைச் சொல்லி, நெடுக அவருக்குத் தெரிந்த இடங்களில் எல்லாம் பணம் கடன் வாங்கியிருக்கிறானாம் அவன்!" என்றாள் மீனாட்சி அம்மாள்.



"ஆமாம்! இரண்டு பேரும் பேச்சாளர்கள்தான். அவர் தூக்கத்தில் பேசுபவர்!"

"மற்றவர்?"

"ஒரு மேடைப் பிரசங்கி. பிறர் தூங்கும்போது பேசுபவர்!"

சபாஷ் தமாஷ்

"அழாதேடா, ராசா! அதோ பார்; சந்திரனை உனக்குப் பிடித்துத் தரட்டுமா?"

"உம்... ம்.....வேண்டாம்மா! அது உடைந்திருக்கு முழுசாத்தான் வேணும்...ம்...ம்...ஊம்!"



"யார், சேகரா? அப்படிக்] கடன் வாங்கும்படி என்ன வந்தது?" (

"அதை ஏன் கேட்கிறீர்கள்? இதை யாரிடம் போய்ச் சொல்லி அழுவது? நயமாகவும், பயமாகவும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தாகிவிட்டது. வீட்டை விட்டு விரட்டிக்கூடப் பார்த்தாகி விட்டது. வீட்டிலிருந்தாலாவது தேவலை; விரட்டி விட்டால், அவன் விபரீதமாக எதையாவது செய்து விடுகிறான். இன்னும் ஏதாவது தப்பித் தவறி நடந்து விட்டால், அப்புறம் அது யார் தலைமீது வந்து விடியும்?"

"ஆமாம்; இன்னார் வீட்டுப் பிள்ளை என்று உங்களைத்தான் ஊரார் சொல்

வார்கள், உங்கள் பிள்ளை இல்லை என்று சொல்ல முடியுமா?''

"அதெப்படி முடியும்? அதை யெல்லாம் நினைத்தால் வயிற்றைப் பிடுங்கிக் கொண்டுதான் போகிறது. அவனுக்காவது ஒரு துளி சுகம் என்பது உண்டா? வேளா வேளைக்கு நல்ல சாப்பாடு உண்டா? நல்ல தூக்கம் உண்டா? எத்தனை அலைச்சல்! எத்தனை துன்பம்! அவனுக்கும் துன்பம்; இருக்கிறவர்களுக்கும் எல்லையற்ற துன்பம்! இப்படித் தொல்லைப்பட்டு, துன்பப்படுவதற்கென்றே ஒரு ஜன்மம்!''

இதைச் சொல்லும்போதே மீனாட்சி அம்மாளுக்கு மறந்திருந்த வேதனைகள் எல்லாம் மூண்டுவரத் தொடங்கி விட்டன. கண்களில் நீர் முத்துக்கள் துளித்தன.

சொர்ணம்பாள் ஆறுதல் சொல்ல வகை தெரியாமல் அநுதாபத்தோடு மௌனமாக இருந்தாள். பெற்ற வயிற்றின் வேதனையெல்லாம் அவளுக்கும் உண்டாயிற்று. எப்படிப்பட்ட பிழைகளையும் ஒரு தாயின் உள்ளம் எவ்வாறு சகித்துக் கொண்டு, மன்னித்து விடவும் தயாராக இருக்கிறது என்பதைக் கண்ணால் கண்டாள். அத்தகைய சகிப்புத் தன்மை உஷாவின் விஷயத்தில் அவளுக்கு ஏன் உண்டாகவில்லை? அந்தச் சேகரைப் போல் அவ்வளவு பெரிய தவறுகள் என்ன செய்து விட்டாள் அவள்? ஒரு காரணமும் இல்லாமலே அந்தப் பெண்ணிடம் கோபமும், எரிச்சலும் மண்டிக்கொண்டு வருவானேன்? மின்னலைப் போல் ஒரு கணம் இந்த எண்ணம் அவள் மனத்தில் பளிச்சிட்டுச் சென்றது. ஒரே கணந்தான் அந்த எண்ணம்! அடுத்த கணமே அந்த எண்ணம் மறைந்துவிட்டது. விலகிய பாசி மூடிக்கொள்வது போல் உள்ளத்தை அசூயையும் பொறாமையும் வந்து கவிந்து கொண்டுவிட்டன. அவற்றை அவளால் விலக்கவோ தடுக்கவோ முடியவேயில்லை.

மீனாட்சியம்மாள் வந்த முக்கியமான காரணம் என்னவோ இந்த எண்ணங்களில் அடிபட்டுப் போய் விட்டது. மீனாட்சியம்மாள் விடைபெற்றுச் சென்று வெகு நேரமாகியும் அவள் அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

அத்தியாயம் 14

நூறு ரூபாய் நோட்டு

உஷா டெலிபோன் மணி 'கணகண' வென்று அடிப்பதைக் கேட்டு வெளியில் வந்து ரிஸீவரைக் கையில் எடுத்துக் கொண்டாள்.

"ஹலோ!'' என்று அவள் குரல் கொடுத்தாள்.

"ஹலோ!''

"பாரிஸ்டர் வீடுதானே?''

"ஆமாம்; நீங்கள் யார்? என்ன வேண்டும்?''

"உஷாவிடம் நான் கொஞ்சம் பேச வேண்டும்.''

"உஷாதான் பேசுகிறேன். நீங்கள் யார்....?''

"நான் பாபுவுக்குத் தெரிந்தவன். உங்கள் எல்லாருக்கும் மிகவும் வேண்டியவன்தான்!''

"உங்களுக்கு என்ன வேண்டும்?''

"ஒன்றுமில்லை. கொஞ்சம் பணம் தான் தேவை.''

பணம் என்றதும் உஷாவுக்குத் தூக்கி வாரிப் போட்டது. உடனே அவள் "பணமா! எதற்கு?'' என்று திகைப்புடன் கேட்டாள்.

"பாபுவை இப்போது ஜெனரல் ஆஸ்பத்திரியில் விட்டிருக்கிறது....''

"ம் ம்....''

"பயப்படும்படி அப்படி ஒன்றுமில்லை; ஆனால்....''

"ஆனால் என்ன?''

அந்தப் பக்கத்தில் சிரிப்புக் குரல்தான் எழுந்தது.

"சிரிக்கிறீர்களே!''

"முழுவதும் சொல்வதற்குள்ளே பதறுகிறாயே!''

இப்படி ஒருமையில் பேசுவது யார் என்று புரியாமல், பிடிக்காமல் உஷா ஒரு கணம் மௌனமாக நின்றாள்.

"என்ன, பேச்சு மூச்சைக் காணோம்?'' என்றது அந்தக் குரல்.

"நீங்கள் யார்? அதைச் சொல்லுங்கள் முதலில்.''

"அதிருக்கட்டும்; சொல்கிறேன். இப்பொழுது நான் அங்கே வந்தால் உன்னிடம் பணம் கிடைக்குமா? அதைச் சொல் நீ முதலில்!''

"பணம் எதற்கு? எவ்வளவு?''

"பணம் பாபுவுக்குத்தான்; அவனை ஸ்பெஷல் வார்டில் சேர்க்க வேண்டும். இந்த ஜெனரல் வார்டில் அவனுக்கு இரண்டு நாட்களாகத் தூக்கமில்லையாம்! எவ்வளவோ அசௌகரியங்கள்!''

"எங்கிருந்து பேசுகிறீர்கள்?"

"பேசவா இடம் இல்லை? பப்ளிக் டெலிபோனிலிருந்துதான்!"


"எவ்வளவு தேவையாம் பணம்?"

"கொடேன், கொஞ்சம் தாராளமாகத்தான்! நூறோ, ஐம்பதோ - எவ்வளவு கொடுத்தாலும் சரிதான்!"

"சரி; பார்க்கிறேன்! ஆனால் நீங்கள் யார் என்று சொல்லவில்லையே!"

"சொல்வானேன்; நேரில் தான் வரப் போகிறேனே! வந்தால் தெரியாமலா போய்விடப் போகிறது?"

"சரி; ஆனால் என்று ஏதோ சொல்ல வந்தீர்களே!"



சென்னை அண்ணாமலைபுரம் ஆங்கீரஸ ஆசிரமத்தில் ஸ்ரீ பத்தங்கி நாகேச்வர சிரௌதிகளால் அனுஷ்டிக்கப்படும் ஸ்ரீ தேவி ப்ரஹ்ம வித்யா மஹோத்ஸவத்தின் வெள்ளி விழா சமீபத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடப் பட்டது. மூன்று வேதங்களின் மங்கள சரணத்துடன் துவக்கப் பட்ட இந்த மஹோத்ஸவத்துக்குத் திரு கி. வா. ஜகந்நாதன் தலைமை வகித்துச் சிறப்பித்தார்.

"சொல்ல வந்தேன். ஆனால் அதற்கு அவசியம் ஒன்றுமில்லை. நீதான் பணம் கொடுப்பதாகச் சொல்லி விட்டாயே!" என்று அந்த விநோதக் குரல் பதிலளித்தது. அதோடுமட்டுமல்ல; 'டக்'கென்று ரிஸீவரைக் கீழே வைக்கும் ஓசை கேட்டது. உஷாவும் ரிஸீவரை வைத்துவிட்டுத் தன்னுடைய அறைக்குள்ளே போனாள். பேசியது யார் என்று தெரியாததால் கொஞ்சம் கலக்கமாக இருந்தது. பேசிய விதமும் அவளுக்குப் பிடிக்கவில்லை. விஷயமும் அப்படித்தான் இருந்தது. பாரிஸ்டர் அவளை அழைத்து எச்சரிக்கை செய்த பிறகு, அவள் வெளியில் எங்கும் செல்ல விரும்பவில்லை. சொல்லிவிட்டு வந்தபடி பாபுவைப் போய்ப் பார்க்கும் துணிவும் அவளுக்கு உண்டாகவில்லை. எப்படியாவது அது அவளை ஒரு பக்கம் உறுத்திக் கொண்டுதான் இருந்தது. ஆயினும் அவனைப் பற்றி இனி நினைக்கக் கூடாது என்று தன்னை அடக்கிக் கொள்ள முயன்றாள்.

'அப்பாவின் கௌரவத்துக்குக் குறைவு என்றால் அந்தக் காரியத்தைச் செய்வது சரியல்ல. எனக்குப் பிடிக்காத காரியத்தில் அவர் பிடிவாதமாக இருப்பதைதான் எப்படி விரும்பவில்லையோ, அதைப் போல் அவருக்குப் பிடிக்காத ஒன்றை நான் ஏன் செய்ய வேண்டும் பிடிவாதமாக?' என்று அவள் தனக்குத்தானே சமாதானம் செய்து கொண்டாள். எல்லாம் மேலுக்குத்தான் என்று அவளுக்கே தோன்றியது. என்ன செய்தும் பாபுவின் நினைவும் அவன் கடிதமும்தான் அவள் கண்முன்னே வந்து தோன்றிக் கொண்டிருந்தன. அவனைப் போய்ப் பார்க்கக் கூடாது என்ற நினைப்பும், தந்தையின் கண்டிப்பான உத்தரவும் மாறி மாறித் தோன்றி அவள் மனத்தை அலைக்கழித்தன. 'உம்; இதெல்லாம் எத்தனை நாளைக்கு? சண்முகம் சொல்வதுபோல் இது ஏற்காத நட்பு. இத்தகைய நட்பினால் துன்பம் உண்டாகும் என்பதைத் தவிர, வேறு என்ன பெரிய நன்மை எனக்கோ, அவனுக்கோ உண்டாகிவிடப் போகிறது? அவன் வழி வேறு; என் வழி வேறு. இரண்டு நாட்கள் மனத்துக்குக் கொஞ்சம் சங்கடமாகத்தான் இருக்கும். பிறகு எல்லாம் சரியாகிவிடும்!' என்று அவள் சொல்லிக் கொண்டாள்.

பீரோவிலே ஒரே ஒரு நூறு ரூபாய் நோட்டுத்தான் இருந்தது. சில்லறையாக ஐந்தோ, பத்தோதான் இருந்தது. அப்பாவோ, அம்மாவோ பணத்துக்குக் கணக்குக் கேட்கும் வழக்கம் இல்லை. அவர்கள் வடிகட்டின செட்டு என்றுதான் சொல்ல வேண்டும். இவ்வளவு வருவாய் உள்ளவர்கள் வீட்டில் ஒரே ஒரு வண்டிதானா வைத்துக் கொள்வார்கள்? சமையலுக்கும் வீட்டு வேலைகளுக்குமாக ஒரே ஒருத்தியைத்தானா வைத்திருப்பார்கள்? இதிலே அப்பா சிக்கனமா, அம்மா சிக்கனமா? அப்பாவுக்கு எதுவுமே தெரியாது. அவர் இதில் எல்லாம் தலையிடுவதில்லை; தெரிந்தாலும் சொல்வதில்லை. அம்மாதான் ஒரு மாதிரி. அவளுக்குத்தான் மனமே வருவதில்லை. அவள்தான் எல்லாவற்றுக்கும் காரணம். 'இப்படி ஓர் அம்மா எனக்கென்று வாய்த்திருக்கிறாளே!' என்று உஷாவுக்கு வருத்தமாக இருந்தது. ஆனால் அந்த அம்மாகூட அவளிடம்

இருக்கிற பணத்துக்குக் கணக்குக் கேட்பதில்லே. அது எவ்வளவு பெரிய சௌகரியம்? இல்லாவிட்டால் இந்தப் பணம் பாபுவின் ஆபத்துக்கு உதவுமா?

"டர்...டர்.....டடடடடட்டட்..." என்று பங்களா வாசலுக்கு வெளியே சத்தம் கேட்டு நின்றது. உஷா தன்னுடைய அறையின் ஜன்னல் வழியாகப் பார்த்தாள். சற்றைக்கெல்லாம் வாசலைக் கடந்து வாட்டசாட்டமாக யாரோ நடந்து வருவதைக் கண்டாள். அதிலேயே அவனை அடையாளம் புரிந்து கொள்ள முடியவில்லே.

பாதி வழி வந்த பிறகுதான் அவளுக்கு வருவது யார் என்று பிடிபட்டது. மீனாட்சியம்மாளின் இரண்டாவது பிள்ளை சேகர்தான் அணிவகுப்புப் பயிற்சிக்கு நடப்பது போல் வந்துகொண்டிருந்தான். அவனைக் கண்டதுமே, உஷாவுக்கு உடல் ஒரு முறை ஆடியது. அவள் பேசாமல் கன்னத்தில் கையை வைத்துக் கொண்டு சோபாவில் உட்கார்ந்து கொண்டாள்.

'இவன் யாரைத் தேடி வருகிறான்? அப்பாவைப் பார்க்க வருகிறானா அல்லது தன்னைப் பார்க்க வருகிறானா? சற்று முன் டெலிபோனில் பேசியது இவனாகத்தான் இருக்குமோ? நீ -- வா -- போ -- என்று வேறு யார் இவ்வளவு தைரியமாக, முரட்டுத்தனமாகப் பேசுவார்கள்? அப்படியானால் பாபுவுக்கு இவனிடம் என்ன உறவு வேண்டியிருக்கிறது? பாபுவிடம் இவனுக்கு என்ன அவ்வளவு அக்கறை? பாபுதான் இவர்கள் வீட்டை விட்டே போய் விட்டானே! இவன் என்ன பாபுவுக்காக என்னிடம் வந்து பணம் கேட்பது? அவ்வளவு அக்கறை உள்ளவனாக இருந்தால் இவனே கொடுக்கக்கூடாதா? ஜட்ஜ் வீட்டுப் பிள்ளையாயிற்றே!'

உஷா முகத்தைச் சுளித்துக்கொண்டாள். அவனைக் கண்டாலே தன்னால் முகம் கொடுத்துப் பேச முடியாது என்று அவளுக்குத் தோன்றியது. ஆம்பல் அழகியிடம் இவனுக்கு இருந்த பரிச்சயமெல்லாம் கண்ணெதிரே வந்து நின்று கசந்தன.

சேகர் பங்களாவின் படிகளில் ஏறி, அழைப்பு மணியை அழுத்தியதாகத் தெரியவில்லே. அவன்தானா அல்லது வேறு யாராவதா என்று பார்க்க விரும்பி எழுந்தவள் ஜன்னல் வழியாக அவன் எட்டிப் பார்ப்பதைக் கண்டு திடுக்கிட்டு விட்டாள்.

"உள்ளே வரலாமா?"

உஷா பதில் கூறுவதற்குள்ளாகவே அவன் இரண்டே தாவாகத் தாவிப் பங்களாவின் உட்பக்கமாக வந்து அவள் எதிரே நின்றான்.

உஷாவுக்குப் பேச்சே எழும்பவில்லை. வரன்முறை இல்லாமல், படிப்பு வாசனையற்ற முரடனைப் போல் அவன் வந்து நின்றது அவளுக்கு எரிச்சலையே மூட்டியது. மிதமிஞ்சிய பழக்க வழக்கத்தினால் அவன் முகத்தில் ஒரு தடிப்பு ஏறியிருந்தது. கண்கள் மட்டும் துருதுருவென்று அலைபாய்ந்தன.

"இப்போது என்னை யார் என்று தெரிகிறதா? இன்னமும் தெரியவில்லையா?" என்று கேட்டுவிட்டு, பொருத்தமில்லாமல் சிரித்தான் அவன்.

"தெரிகிறது; என்ன வேண்டும் உங்களுக்கு? அப்பாவைத்தானே பார்க்க வேண்டும்?" என்று கேட்டாள் உஷா.

"உன் அப்பாவைப் பார்க்க நான் வரவில்லை என்பது உனக்குத் தெரியும்! சற்றுமுன் டெலிபோனில் பேசியது உனக்கு மறந்திருக்காது என்று நினைக்கிறேன்!" என்றான் அவன்.

"ஓ...நீங்கள்தானா அது?"

"பார்க்கிறேன் என்று சொன்னாயே-பணம் இருக்கிறதல்லவா?"

உஷா அதற்குப் பதில் ஒன்றும் கூற முன் வரவில்லை. அவள் பீரோவைத் திறந்து, அந்த நூறு ரூபாய் நோட்டை எடுத்து வந்து அவனிடம் நீட்டினாள்.

"என்னிடம் சில்லறையாக இல்லை. இருந்தால் இதில் பாதிதான் கொடுத்திருப்பேன்!" என்றாள் அவள்.

"அதுவும் நல்லதாயிற்று!" என்று நோட்டைப் பிடுங்கிக் கொள்வதுபோல் வாங்கிக் கொண்டான் அவன்.

"சரி" என்று விடை கொடுப்பது போல் தலையசைத்துவிட்டு உஷா மாடிப் படியில் ஏறினாள். அங்கே எதிர்பாராத விதமாகச் சொர்ணாம்பாள் வந்து நிற்பாள் என்று அவளுக்கு எட்டவேயில்லை. சேகர் திரும்பிச் செல்வதைப் பார்த்துவிட்டு அவள், "யார் அது?" என்று உஷாவிடம் கேட்டாள்.

"மீனாட்சியம்மாளின் பிள்ளையாம்! அப்பாவைப் பார்க்க வந்தாராம்!" என்று அவளைத் தாண்டிக் கொண்டு மேலே சென்றாள் உஷா.

"கையில் ஏதோ வாங்கிக்கொண்டு போகிறானே?" என்று சொர்ணாம்பாள் கேட்டதற்கு விடை சொல்லும்வரையில் உஷா அங்கே நிற்கவில்லை. (தொடரும்)



இந்தப் படத்தை ரஸிகர்கள் மிகவும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். காரணம் எம். ஆர். ராதாவும், சிவாஜி கணேசனும் இந்தப்படத்தில் நடிக்கிறார்கள் என்பதுதான்.

எம். ஆர். ராதா பேச்சு, நடை, உடை, பாவனை, நடிப்பு எல்லா அம்சங்களிலும் தமக்கென்று ஒரு தனிவழி வகுத்துக் கொண்டு நாடக மேடைகளிலும், திரை உலகத்திலும் பிரசித்தி பெற்றுவிட்ட நடிகர். எப்பொழுதும் அவர் ஏற்கும் பாத்திரங்கள் கொடுமை நிறைந்த வில்லனின் பாத்திரங்கள்தான் என்றாலும் பார்ப்பவர்களுக்கு அலுப்புத் தட்டாமல் நடிக்க அவரால் முடிகிறது.

''பாகப்பிரிவினை'' யிலும் எம். ஆர். ராதா வரும் காட்சிகள் மிகவும் கலகலப்பா யிருக்கின்றன. அவர் பேச்சிலும், குரலிலுமே ஓர் அலட்சியமும், அட்டகாசமும், நகைச்சுவையும் கலந்திருப்பதனால் படம் ரஸமா யிருக்கிறது. சிங்கப்பூர் சிங்காரம் என்னும் பொறுப்பற்ற ஓர் அயோக்கியனின் பாத்திரத்தை அவர் அநாயாசமாக ஏற்று நடிக்கிறார். அவர் ஏற்கும் பாத்திரம் ஊரை ஏமாற்றி வாயில் போட்டுக் கொள்ள வேண்டும், கள்ள நோட்டு தயாரிக்கவேண்டும், பெரிய தொகையாகக் கடன் வாங்கி விட்டு ஏமாற்ற வேண்டும். இம்மாதிரி வில்லன் ஒருவன் திரைக்கதையில் இருந்து அந்தப் பாத்திரத்தை எம். ஆர். ராதா ஏற்றுக் கொண்டு விட்டாராகில், வெற்றி அந்தப் படத்துக்கு இருந்தாலும் இல்லா

மாரிக்காலம், கோடைக்காலம், பனிக் காலம் என்பதுபோல், சினிமாப் படங்களிலும் காலங்கள் உண்டு. இப்பொழுது நடப்பது கிராம வாழ்க்கைப் படங்களின் காலம். இப்பொழுது சமீப காலத்தில் வெளிவந்திருக்கும் படங்களில் அனேகமாகக் கிராம வாழ்க்கையைப் பற்றிக் கூறாத படமே இல்லை. அந்த வரிசையில் சரவணா பிலிம்ஸாரின் ''பாகப் பிரிவினை'' முன்னணியில் நிற்கிறது.

அலங்கா நல்லூர் ஓர் அழகிய கிராமம். அங்கே வைத்திலிங்கம், சுந்தரலிங்கம் என்ற இரு சகோதரர்கள். மிகவும் ஒற்றுமையோடு ஒரே குடும்பமாக வாழ்ந்து வருகின்றனர். மூத்தவன் வைத்திய லிங்கத்துக்குக் குழந்தை இல்லை. சுந்தரலிங்கத்துக்குக் கன்னையன், மணி என்று இரண்டு பிள்ளைகள். மூத்தவன், கன்னையன் சின்ன வயசிலே மின்சார அதிர்ச்சியின் காரணமாகக் கை, கால் சுவாதீனத்தை இழந்து விடுகிறான். இளையவன் மணி பட்டணத்தில் படிக்கிறான். வைத்திலிங்கத்தின் மனைவி அகிலாண்டம் திரைக் கதையின் முக்கியமான திருப்பங்களிலும், பாகப் பிரிவினையிலும் முக்கியமான அங்கம் வகிக்கிறாள்.





விட்டாலும் எம். ஆர். ராதாவுக்கு நிச்சயம் வெற்றிதான்!

''பாகப் பிரிவினை''யில் சிவாஜி கணேசன் அசல் பட்டிக்காட்டானாக வருகிறார். ஒரு காலும், ஒரு கையும் உதவியில்லாமல் உணர்ச்சிப் பெருக்கில் தத்தளித்து, பெற்றோரிடம் பக்தியும் உற்றாரிடம் பாசமும், மற்றவர்களிடம் நேசமும் கொண்டு வாழ்ந்த ஒரு நல்ல பாத்திரம்.

சிவாஜி கணேசன் கதாபாத்திரமாகவே மாறி, உருகி, பொங்கி, கண்ணீரில் நனைந்து அற்புதமாகத் தம் பாகத்தைச் செய்திருக்கிறார். மேக்கப் மிகவும் பொருத்தமாகச் செய்யப்பட்டிருக்கிறது.

தம்பி மணிக்காகச் சிற்றுண்டி சாப்பிடக் காத்திருந்து அவன் வராமற் போனதும் கண்ணீருடன் வேதனைப்பட்ட போதும், தன் திருமணத்தைப் பற்றிப் பெற்றோர்கள் பேச்செடுத்ததும் தன் உடல் ஊனத்தைக் காட்டி மறுத்தபோதும், வேலைக்காரப் பொன்னி தன்னை மணக்கச் சம்மதித்ததைக் கேட்டு ஆனந்தப்பட்ட போதும் கன்னையன் பாகம் பிரமாதமாயிருக்கிறது. நடிப்பின் உயர்வை அந்தக் கட்டங்களில் காண முடிகிறது.

வேகமாகப் பேசும் வசனங்களில்லை. பூஞ்சோலையில் அமர்ந்து முகத்தில் முகம் பார்க்கும் காதல் காட்சிகளும் இல்லை. ஆனால் படம் இதன் காரணமாக ஒன்றும் குறைந்து போகவில்லை.

சரோஜாதேவி வேலைக்காரப் பொன்னியாக வந்து கவர்ச்சியூட்டும் விதத்தில் நடிக்கிறார்.

கன்னையனின் தம்பி மணியாக வரும் எம். என். நம்பியாரும், அமுதாவாக வரும் தாம்பரம் லலிதாவும் குடும்ப பாகப் பிரிவினைக்கு உடந்தையாக இருந்தனர் என்பதைத் தவிர, ''பாகப் பிரிவினை''யில் அவர்களுக்கு வேலையில்லை.

நடனப் பெண் அனார்க்கலி ஆடும் சூதாட்டத்தில், கெட்ட எண்ணிக்கை நடனக்காரர்களின் ரூபமாகவே வருவது மிகவும் நன்றாயிருக்கிறது.

டி. எஸ். பாலையா வழக்கத்துக்கு விரோதமாக மிகவும் நல்லவனாக வந்து, சகோதர பாசத்தினால் உருகி, மனைவியின் கொடும் பார்வைக்கு நடுங்கித் தவிக்கிறார். நடிப்பு அபாரமாயிருக்கிறது. சுந்தரலிங்கமாக வரும் எஸ். வி. சுப்பையா அருமையாக நடிக்கிறார்.

கிராமிய நடனங்கள் அதிகப்படியாக இடம்பெற்றுத் தலைவலியை உண்டாக்குகின்றன.

கதை, வசனம் எழுதிய எம். எஸ். சோலைமலைக்கும், டைரக்டர் ஏ. பீம்சிங்குக்கும், இந்தப் படம் பூரண வெற்றிதான். படத்திலுள்ள எட்டுப் பாடல்களில், கண்ணதாசனின் ''ஏன் பிறந்தாய் மகனே'' என்ற பாட்டு மட்டும்தான் நம்மை உருகவைக்கிறது. இரு வேறு இயல்புள்ள இரு நடிகர்களின் நடிப்பைக்கண்டு ரஸிப்பதற்காக இந்தப் படத்தை அவசியம் பார்க்க வேண்டும்.





என்னெய்ச் சட்டியைக் கீழே இறக்கி விட்டு அடுப்பையும் அணைத்துவிட்டுத் தாழ் வாரத்துக்கு வந்தேன் நான். 'அப்பாடா' என்றிருந்தது. பெண்ணுக்குத் தலை தீபாவளி என்றால் இலேசா? முற்றத்தில் மலைபோல் பாத்திரங்கள் தேய்ப்பதற்குக் குவிந்து கிடந்தன. பக்ஷணம் செய்ததனால் விழுந்த எண்ணெய்ப் பாத்திரங்கள். அவற்றினிடையே அஞ்சலை தலைகூட நிமிராது உட்கார்ந்து வேலையிலே கண்ணாக அவைகளைச் சுத்தப்படுத்திக் கொண்டிருந்தாள்.

''அஞ்சலை! உன் ஆயா எங்கேடி? சித்தே கூடமாட வந்து உனக்கு ஒத்தாசை பண்ணக் கூடாதா? கண்ணிலேயே காணோமே?''

அஞ்சலை தலைநிமிர்ந்து ஒரு சோகப் புன்னகையை உதிர்த்தாள். ''அதுவாம்மா, மளிகைக் கடையில் பருப்பு பொடைச்சுத் தரப் போச்சுது. மத்தியானம் பொங்கி வைச்சேன். வந்து தின்னுது. மறுபடியும் எங்கிட்டுப் போச்சோ?'' என்றாள்.

''தேவலே, நீ வந்தாலும் வந்தே. உன் அம்மாவுக்கு இந்த வேலைக்கு எளிசாப் போச்சு! கடை வேலைக்குப் போற சாக்கில் சுத்தறா! உன் தலையெழுத்து...''

அஞ்சலையின் கண்ணீர் கரித்தண்ணீரில் கரைந்தது. என்னதான் தாயும் பெண்ணுமானாலும் அவளுக்கும் உடம்பு என்று ஒன்றில்லையா? அதற்கும் ஓய்வு தேவையில்லையா? இப்படியா நான் முழுவதும் பெற்ற பெண்ணை வேலை வாங்குவது?

''அம்மா! நான் போயாரேனுங்க, நேரமா விடுச்சு. அது வாரதுக்குள்ளே கறிகாய் வாங்கியாந்து குளம்பு ஆக்கி வைக்கணும். இல்லாட்டி 'எங்கேடீ வம்புக்குப் போனே, வேலை செய்யாம'...ன்னு கத்தும்!'' என்று அஞ்சலை பெருமூச்சுடன் கூறிப் புறப்பட்டாள்.

'உம், இதற்கும் வேண்டும். ஒழுங்காகக் கட்டினவனோடு குடித்தனம் செய்யாமல் இப்படி தாயாக உழைப்பானேன்? வாசல் கதவைத் தாளிட்டுவிட்டு ஊஞ்சலில் வந்து அமர்ந்தேன். "'மணி ஐந்தடித்தது. ஆயிற்று 'மாடினி படக் காட்சி'க்குப் போயிருக்கும் பெண்ணும் மாப்பிள்ளையும், ஒரு மணியில் வந்து விடுவார்கள். காலை முதல் எண்ணெய்ப் புகையில் இருந்தது. கண்ணைச் சற்றுக் கிறக்கியது. 'குழந்தை வருவதற்குமுன் காப்பி போட வேண்டுமே!' என்று உள்ளுணர்வு கூறியது. குழந்தை! கலியாணமாகி நாளைமுதல் புருஷனுடன் தனிக் குடித்தனம் செய்யப் போகிறவள் குழந்தை! தாயுள்ளத்தின் பரிவுதான் என்ன! ஆனால் அதே போல் வேறொரு தாய்க்கு ஏன் தன் மகளைப் பற்றி அவ்விதம் தோன்றவில்லை? என் மனம் மீண்டும் அஞ்சலையைச் சுற்றி வட்டமிட்டது. இந்த நாகம்மா ஏன் இப்படி அரக்கியாக மாறிவிட்டாள்?

'அம்மா!'—என்று நாகம்மா குரல் கொடுத்தபோது தனியே வரவில்லை. கூட ஒரு யுவதியும் இருந்தாள். 'என் மகள்தானம்மா' என்று கூறிவிட்டு வேலைக்கு நகர்ந்தாள் நாகம்மா. புருஷன் வீட்டிலிருந்து வந்திருந்த பெண்ணின் வரவு அவளுக்கு மகிழ்ச்சி அளிக்கவில்லை என்பதை அவள் முகம் எடுத்துக் காட்டியது. மகளை நோக்கினேன். தாய்க்கு உதவியாகத் துணிகளை அலசிக் கொண்டிருந்த அவள் முகமும் கல்லாக இருந்தது.

''எந்த ஊரிலே கட்டிக் கொடுத்திருக்கே, உன் மவளை? இப்ப எதுக்கு வந்திருக்கு! பொங்கலுக்கா?'' மெல்ல வினவினேன்.

''அப்படியெல்லாம் வரிசையா வந்தாத்தான் என் வயிறு குளிர்ந்து விடுமே அம்மா! இந்தப் புத்தி கெட்டவன் சண்டை பிடிச்சுக் கிட்டுல்லே வந்திருக்கா. அந்தப் பாவி மகனுக்கும் ஏன் தான் புத்தி இப்படிப் போச்சுதோ! என் தலை யெழுத்தும்மா... தலையெழுத்து...'' நாகம்மா குலுங்கிக் குலுங்கி விம்மினாள்.

அவளிடமிருந்து மெல்ல நான் கிரகித்த விஷயம் இதுதான். அஞ்சலையின் கணவன் வீரையன் ஒரு விவசாயி. நிலத்தில் உழுது விளைவித்து,ஊர் வயிற்றை நிரப்பித் தன் ஏழைமையில் இன்பம் காண்பவன். அவனுக்குச் சட்டமோ, அதில் தனக்குச் சாதகமான ஷரத்துக்களோ தெரியாது. அவன் அறிந்ததெல்லாம் பூமித்தாய். அவள் தருவதைப் பெற்றுக் கொள்ள வேண்டும்; அவள் அள்ளி அள்ளித் தரும்போது, வாய்ப் பேச்சில் காலம் கடத்தி, அவளது அன்பை அலட்சியம் செய்து, விளைச்சலைப் பாழாக்கக் கூடாது. இவைதாம். ஆனால் அவனுக்கு உள்ளூற வேறொரு ஆசையும் இருந்தது. அதுவும் நியாயமானது தான். தனக்கென்று ஒரு கையகலம் நிலமாவது வேண்டுமென்று விரும்பினான் அவன்.

ஸ்ரீப்ரியா

அவனது ஆசை நிறைவேறுவது போல் ஒரு சந்தர்ப்பமும் தானாக வந்தது. அவனது பண்ணையாரே தமது வாழைத் தோப்பை விற்க நினைத்தார். ஐந்நூறு ரூபாயில் பேரம் படிந்து

விடும் நிலையிலிருந்தது. ஆனால் வீரையன் கையிலிருந்ததோ இருநூறுதான். விற்பவர் பணத்தை உடனே எதிர்பார்த்தார். இந்த நிலையில் வீரையன் தன் வாழ்க்கைத் துணைவியின் உதவியை நாடியதில் தவறில்லை. ஆனால் அஞ்சலைக்குத் தன் பிறந்த வீட்டு நகையிலிருந்து ஐந்து பவுனைப் பிரிய மனம் இல்லை. பிறந்தகத்தில் உதவி கோரவோ வழியில்லை. இருக்கும் ஓர் அண்ணனும் பிரிந்து தனியே சென்று விட்டான்! அத்துடன் தன் கணவன் ஓர் உத்தியோகஸ்தனாக இருப்பதையே விரும்பிய அவளுக்கு அவன் சொந்த நிலத்தில் உழைப்பது இனிக்குமா? கலெக்டர் ஆபீஸில் பியூனாக இருக்கும் அண்ணன் முதல் தேதி 'டாண்' என்று சம்பளத்தை மனைவியிடம் எண்ணித் தரும் காட்சி மறக்குமா? அவள் பெண் மனத்தில் மண்ணாசையை விடப் பொன்னாசையே மிகுந்தது. அதன் விளைவு தம்பதிகளுக்குள் பூசல் ஏற்பட்டது. ரோசத்துடன் அஞ்சலை பிறந்தகம் வந்துவிட்டாள்.

மாதங்கள் உருண்டன. ஆடிக்குத் தை ஆறு மாதம் ஓடி, மேலும் மூன்று மாதங்கள் மறைந்தன. ஆனால் வீரையன் பக்கத்து ஊரிலேயே இருந்தும் எட்டிக்கூடப் பார்க்கவில்லை! முதலில் பத்துநாட்கள் பரிவு காட்டிய தாய், கொஞ்சம் கொஞ்சமாக அஞ்சலையையும் வீட்டு வேலைகளுக்குப் பழக்கினாள். தான் செய்த வாடிக்கை வீடுகளில் அவளை வைத்தாள். ஏதோ தாய் வீட்டிலிருந்தாலும் தன் வயிற்றைக் கழுவிக்கொள்ள உழைக்கத்தான் வேண்டும். ஆனால் நாகம்மா பெண்ணை வேலைக்கு வைத்துவிட்டு என்ன செய்கிறாள்? உல்லாசமாகச் சுற்றுகிறாளாமே! சே, தாயா அவள்? அரக்கியல்லவா?

''அம்மா...!''-வாசல் கதவு தட்டும் சத்தம் கேட்டது. பரபரக்க எழுந்தேன். பெண்ணும், மாப்பிள்ளையும் வந்துவிட்ட அமர்க்களத்தில் என் சிந்தனை மறந்தது.

* * *

இரவு மணி இரண்டு அடித்தது. திடுக்கிட்டுக் கண் விழித்தேன் நான். வெந்நீர் அடுப்புப் பற்ற வைத்து, வீட்டில் கோலமிட அஞ்சலையை இரண்டு மணிக்கே வரச்சொல்லியிருந்தேன்! மணி இரண்டரையும் ஆயிற்று. அவள் வரவில்லை. எனவே, அலுப்பை உதறிவிட்டுப் படுக்கையை விட்டெழுந்தேன். எனக்குக் கோபம் குமுறியது.

அவள் வந்ததும், ''என்னடீ இத்தனை நேரம்? தூங்க இன்னிக்குத்தான் நான் பாத்தியோ?''—வெடித்து வந்த என் கோபத்துக்குப் பதில் ஒரு முனகலாக வெளிப்பட்டது. ''என்னடீ, உடம்பு சரியில்லையா?''

''ஆமாம்மா, ராவெல்லாம் ஜுவதோசம், மண்டையிடி. உடம்பு முடியலே. இப்பக் கொஞ்சம் தேவலாம். ஆனாலும் அம்மா வீட்டிலே வேலையிருக்கேன்னு மெள்ள வந்தேனுங்க!''— மழைக் குளிரில் அவள் உடல் நடுங்கியது.

''சரி, உள்ளே வா. உன் அம்மாவுக்கு என்ன கேடாம்? அவள் வரதுக்கென்ன?''

''ராவைக்கு ஒரு மணிக்கு வருது. காலேலே ஓடுது. நேரம் ஏதுங்க...?''

நாகத்தின்பேரில் என் வெறுப்பு புஸ்வாணம் போல் சீறிக்கொண்டு வந்தது. 'சின்னம்மா கல்யாணத்துக்கு இருபது ரூபாய்க்குப் புடவை வாங்கிக் கட்டிக் கொள்ளத் தெரிந்தவளுக்கு, 'அந்தப் பெண்' ஊருக்குப் போகும்போது வந்து பார்க்கக்கூடத் தெரியவில்லை. அதற்குத் தான் சரியான பாடம் கற்பிக்கிறேன்...'

* * *

கங்கா ஸ்நானம் ஆகித் தீபாவளி சம்பிரமமாக நடந்தது. கதிரவன் ஒளி வீசிக்கொண்டு கிளம்பினான். விடியற்காலை பிசுபிசுத்த தூறல் மறைந்து விட்டது. 'அம்மா! அப்பா!' என்று வாசல்புறம் பல குரல்கள் ஒலித்தன.

''என்ன, சின்னம்மா! ஊருக்குப் போயிருந்தீங்களாமே!.. ம்...அம்மா இருக்காங்களா?''

ஆத்திரத்துடன் வெளியே வந்தேன். கேட்டவள் நாகம்மாதான். ''என்ன நாகம்மா, வழி தெரிஞ்சுதா?...''

''என்னம்மா அப்படிக் கேட்டுப்புட்டீங்க?''

''பின்னே புது வாடிக்கை பிடிச்சுட்டே. அந்த மோகத்துலே எங்களை மறந்துட்டே! உனக்கு வாக்கா பொண்ணும் வந்தா...ம்!'' தட்டில் தீபாவளிப் பரிசுடன் வந்த நான் ''எங்கே உன் மகள்?'' என்றேன்.

''யாரு, அஞ்சலையா? ஏம்மா இந்தப் புடவை அதுக்காவாங்கினீங்க?'' நாகம்மாள் முகம் ஒரு கணம் கன்றியது கண்டு என் மனம் குதித்திட்டது.

''ஆமாம், அவ ஆறு மாசமா வேலை செய்யறா? புடவை உனக்கா வாங்குவாங்க?''

''அதுக்கில்லீங்க..... வாழாதவளுக்கு இத்தனை பகட்டுப் புடவை ஏதுக்குன்னு...''

என்கையிலிருந்த 'போலிக் காஷ்மீர் ஸில்க்' பல் இளித்தது...சே....என்ன குரூரமான எண்ணம்! என் மனமே அந்தத் தாயின் குத்தலான பேச்சைக் கேட்டுக் குமுறியது என்றால் அஞ்சலைக்கு எப்படியிருக்கும்? அவள்



முகம் கனிந்தது. புடவையை எடுத்துக் கொண்டு கண்களால் எனக்கு நன்றி செலுத்தி விட்டுச் 'சட்' டென்று அகன்றாள்.

'சாயங்காலம் கட்டிக்கிட்டு வா' என்று வேண்டுமென்றே கூவினேன். அவளுடைய ஈரக் கண்களுக்கு முன், நாகத்தின் ஜ்வலிக்கும் விழிகள் என் நெஞ்சைக் குளிர்வித்தன. தனக்குப் பரிசு தராததல்லவா நாகத்தைக் கோபம் மூட்டியுள்ளது!

ஆனால் அத்துடன் என் மனம் ஆறவில்லை. மாலையில் அஞ்சலை புதுப் புடவையுடன் வருவதை ஆவலுடன் எதிர்பார்த்தேன். அஞ்சலை வந்தாள். அட, அவள் முகத்தில் ஏது இத்தனை மகிழ்ச்சிக் களை! ''அம்மா, மவராசி உன் கையாலே புடவை தந்தே. அஞ்சலையும் ஊருக்குப் போறா...'' நாகத்தின் குரல் கரகரத்தது.

'என்ன?'—மீண்டும் அஞ்சலையை உற்று நோக்கினேன். அடடா, அவள் கண்களில் இப்போது வடிவது கணவனுடன் கூடிவிட்ட ஆனந்தக் கண்ணீரா, அல்லது எனக்குச் செலுத்தும் நன்றிப் பெருக்கா?

''ஆமாம்மா. அவரு வந்துட்டாரு. இத்தினி நாள் கையிலே பணமில்லாததோடு என் கோபமும் சேர்ந்து அவர் மனசைக் கல்லாக்கியிருக்கு. ஆனால் தீபாவளி அன்னைக்கு அவர் மனசு போன வருஷம் கொண்டாடின சந்தோசத்தை நினைக்க ஏங்க ஆரம்பிச்சிடுச்சு. அதோடு, பண்ணையாரும் இவர் வைச்சிருந்த இருநூறு ரூபாய்க்கே தோப்பைத் தரேன்னுட்டாராம். இத்தனை வருசமா அவுங்க பண்ணையிலே வேலை செஞ்ச அன்பு அவருக்கு! 'விரையா, பணமும் சொத்தும் வந்து போகும். ஆனால் சின்ன வயசிலே பாழாய்ப் போன குடும்ப சந்தோசம் வயசானால் அனுபவிக்கக் கிடைக்காது. தோப்பை வாங்கிக் குடிசை போட்டுக்கிட்டுத் தனியாகவா இருப்பே? போய் உன் சம்சாரத்தையும் கூட்டியாடா' என்றாராம். அவரு நல்லாயிருக்கணும். என்னமோ நீங்க வாழ்த்தினீங்க, எனக்கு விடிஞ்சிடிச்சு.'' அஞ்சலை என்னை விழுந்துவணங்கினாள்.

* * *

மறுதினம் வீடு 'வெறிச்'சிட்டிருந்தது போல் என் மனமும் வறண்டு கிடந்தது. என் குழந்தை ஊருக்குப் போய்விட்டாள்! எத்தனை அருமையாக வளர்த்தாலும் 'ஒருவனை'க் கண்டதும் பெண்களின் மனம் எப்படித்தான் இப்படி மாறி விடுகிறதோ?

முற்றத்தில் நாகம்மாள் பத்துத் தேய்த்துக் கொண்டிருந்தாள். குனிய நிமிர அவள் முனகுவது கண்டு என் மனம் திருப்திப் பட்டது. ''ஊர் சுத்திக்கிட்டிருந்தாக்க இத்தனை நாள். இப்ப வேலை செய்யத் திணறுகிறே! அஞ்சலையை வாட்டி எடுத்தியே! எப்படி நாகம், உனக்கு மனசு வந்தது?'' என்றேன்.

நாகம்மா என்னை ஒரு முறை நோக்கினாள். ஏதோ கூற வந்த அவள், என் கணவர் செய்தித் தாளுடன் உள்ளே வருவதைக் கண்டு ஒரு வறட்டுச் சிரிப்புடன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

''இதைப் பாத்தியா ராஜம், வக்கீல் அருணஜடையின் பெண் ஆபீசிலே வேலைசெய்யற ஒரு பயலோடு எங்கேயோ ஓடிப் போயிடுத்தாம். அவளைத் திரும்பி வரச்சொல்லி, இஷ்டப்படி கல்யாணம் செய்து வைக்கறதாக, அருணஜடை விளம்பரம் கொடுத்திருக்கார்....''

''என்ன, அருணஜடையின் பெண்ணா? அட, அது அப்படித்தான் ஒரு நாள் போகும்னு நெனச்சேன். ஆனால் இத்தனை சீக்கிரம் எதிர்பார்க்கலை! ம்....செல்லம் கொடுத்து வளர்க்க ஓர் எல்லை வேணும்....எல்லை மீறினால் பெண் குழந்தைகளுக்கு என்னைக்கும் ஆபத்துத் தான்'' என்று கூறியவாறு உள்ளே திரும்பின என்னை நாகத்தின் குரல் அழைத்தது: ''அம்மா! என்னை ஒரு கேள்வி கேட்டு விட்டுப் பாதிப் பதிலை நீங்களே சொல்லிட்டுப் போறீங்களே!''

நான் விழித்தேன்.

''அம்மா! அந்த வக்கீல் ஐயா வீட்டுப் பெண்ணைப் பத்திச் சொன்னீங்களே, குழந்தைக்குச் சுதந்திரம் கொடுத்து வளர்க்காமல் வளர்த்ததற்கு அது அவங்களையே எதிரிடிச்சு. ஆனால் அது இன்னும் ஒருத்தனுக்கும் உடமையாகாதது. அதனாலே தொட்டவனுக்கே கொடுக்கறதாகத் தீர்மானிச்சுட்டாரு வக்கீல் ஐயா. அவரு சட்டம் படிச்சவரு...''

''அதுக்கும் உனக்கும் என்னடி சம்பந்தம்?''

''அதாம்மா சொல்ல வந்தேன். அஞ்சலை ஒருத்தன் உடைமை ஆனவள் அவளைக் காப்பாத்தி அந்த உடைமைக்காரங்கிட்ட சேர்க்கிறவரைக்கும் எனக்கு நிம்மதி ஏதுங்க! அவ மனசு, உடம்பு கெடாம காப்பாத்தறது எப்படிம்மா? காத்தாலே முதல் ராத்திரிவரை உழைச்சா உடம்பு அசந்துடும். மனசும் வேலைலே போறதாலே கண்டமானிக்கு அலையாது. தவிர, இப்படி உழைச்சாலாவது தாய் வீடு வெறுத்துப்போய்ப் புருசன்கிட்ட ராசாத்தியா இருக்கலாம்னு ஓடிப்போயிடுவான்னு நெனச்சேன். ஏம்மா, அவ நாயா உழைக்க எனக்கு மட்டும் மனசு கேக்குமா?''

நான் பிரமித்து நின்றேன். எத்தனை மகத்தான உண்மை? பெண்ணிடம் அன்பை வளர்ப்பதைவிட மகளது கற்புதானே தாய் போற்ற வேண்டிய பொக்கிஷம்!

''அது சரி! ஆனால் நீ அப்படி அவளை வேலை வாங்கியிருக்கக்கூடாது. நீயும் கூடமாட ஒத்தாசை பண்ணியிருக்கலாம்...'' நான் விட்டுக் கொடுக்காமல் சொன்னேன்.

''அம்மா......இன்னைக்குச் சொல்றேன்: அம்மா நான் சந்தோசமா சினிமா பார்த்துக்கிட்டு ஊர் சுத்தினதா நினைக்கிறீங்களா நீங்க! மளிகைக் கடையிலே வந்த பணம் போதுங்களா? வீட்டிலே ஒரு பெண் பாரமா வந்து குந்தியிருக்கே! அதுக்காக ஒரு சினிமாக் கொட்டகையிலே பொம்பளைங்க பக்கம் ஆயாவா வேலை பாத்தேனுங்க. நானே சேத்து வச்சுத் தோப்பை வாங்கத்தானுங்க உழைச்சேன். பெரிய முதலாளி ஒரு பண்ணையாளுக்காக விலையிலே மூந்நூறு ரூபாய் தள்ளிப்பாங்களா? நான் இந்தப் பணத்தோட அவரு காலிலே விழுந்து என் மகளை வாழ வைக்கச் சொன்னேனுங்க. மருமகனுக்குத் தெரிஞ்சா ஒத்துக்க மாட்டாரேன்னு சொல்லலீங்க....''

''நாகம்மா....!'' என் குரல் கரகரத்தது. கண்கள் பனித்தன. ''நீ தானடி உண்மையான தாய்....'' என்றேன்.



GTV.59.9.C.TM

EVEREST



நாட்டு வைத்தியம்

126 இறைசெயல் அருளதாமே!

"உனக்குத் தெய்விகக் கண்ணைக் கொடுக்கிறேன். இப்போது என்னைப் பார்!" என்று சொல்லி விசுவரூபத்தை ஏற்றான் கீதாசார்யன்.

கண்ணனைக் கண்ணுற்ற காண்டீபன் பிரமித்துப் போனான். என்ன பயங்கரமான தோற்றம்! எத்தனை தலைகள்! இந்தத் தோற்றத்துக்கு ஆரம்பம் எங்கே! இது என்ன எல்லையற்றதா? அப்பப்பா! அத்தோற்றத்தின் ஒளியோ! ஆயிரமாயிரம் சூர்யன்களா? ஐயோ! அந்த ஒளி வரவர அதிகமாகிறதே!

கண்களை இறுக மூடிக் கொண்டான் கௌந்தேயன். "கண்ணா! கண்ணா! போதும்! போதும்! இந்த உன் தோற்றத்தைக் காண என்னால் முடியவில்லை. கண்கள் தெறித்துச் சிதறி விட்டனவோ எனத் தோன்றுகிறதே! உன் பயங்கரத் தோற்றம் என்னை நடுங்கச் செய்கிறது. என் கைகால்களெல்லாம் குழைகின்றன. நாக்கு வறண்டு விட்டது. நான் எங்கே இருக்கிறேன் என்றே எனக்குத் தெரியவில்லையே! இந்த உனது தோற்றத்தை மாற்றிக் கொள். பழைய கண்ணனாகவே தோற்றமளித்திடு. நீ அருளிய இந்த 'திவ்ய சக்ஷுஸ்' எனக்கு வேண்டாம். பழைய கண்களையே எனக்குத் திருப்பித் தந்தருள்வாய். கண்ணா! கருணைக் கடலே!" என்று பிரலாபிக்கலானான்.

கண்ணன் புன்முறுவல் பூத்தான். "உன் அஞ்ஞானம் அகலட்டும்! உனக்கு மெய்ஞானம் உண்டாகட்டும்" என்று அருளிவிட்டுத் தானும் தன் பழைய தோற்றத்தை ஏற்றான். அர்ச்சுனனுக்கும் பழைய கண்களைத் திரும்பவும் அளித்தான்.

கதை பழைய கதைதான். சொன்னதில் ஒருகால் சொற்பிழை பொருட்பிழைகளும் இருக்கலாம். கண்ணன் கதையைச் சொல்வது எல்லோருக்குமே சாத்தியமாகுமா? அதற்காகத் தனிப் பிறவிகளாய்ப் பிறந்த ஒரு சிலருக்குத்தான் அது சாத்தியமாகும். தெரிந்த வரையில் சொன்னேன். ஆனால் இந்தப் பழங் கதையில் எனக்கு ஒரு புதிய பொருள் தோன்றுகிறது.

மனிதனுடைய இந்திரியங்களின் திறமைக்கு ஒரு வரம்பு ஏற்படுத்திய ஈசனின் கருணையே கருணை. இதை எவ்வளவு போற்றினாலும் போதாது! இதுதான் இந்தக் கதையிலிருந்து எனக்குத் தோன்றும் புதிய பொருள்.

ஒரு உதாரணம் சொன்னால் புரியுமே! மனிதனின் உடலுக்குள் இயங்கிக் கொண்டிருக்கும் உறுப்புக்களையும் அவற்றின் இயக்கங்களையும் அப்படியே பார்க்கும் சக்தி நம் கண்ணுக்கு இருப்பதாக வைத்துக் கொள்வோம். எதிரில் நிற்கும் மனிதனின் குடலில் நெளியும் நாகப் பூச்சிகளைக் காண நேரிடின்... குடலில் உருளை உருளையாகப் புரளும் மலத்தைக் காணும் போது...? வேண்டாம், வேண்டாம் இந்த சக்தி. எல்லோரையும் போலவே என் கண்களும் இருக்கட்டும், வேண்டாதவைகளைக் காணுஞ் சக்தி இல்லாமல் இருப்பதே நல்லது என்றல்லவா தோன்றும்? ஆகவே நமது இந்திரியங்களுக்குத் தம் செயலை யாற்றிடும் வகையில் திறமை இவ்வளவுதான் என்று ஒரு வரம்பு உள்ளது எவ்வளவு நல்லது, உபகாரமானது? இப்படி ஓர் அளவை நிச்சயித்து அருளிய இறைவனின் அருளை எப்படித்தான் போற்றுவது? எத்தனை தான் போற்றுவது! இறைசெயல் எக்கோணத்திலிருந்து பார்த்தாலும் அருளேயன்றி வேறல்ல.

காது விஷயத்தைச் சிறிது ஆராய்ந்தால் இறை செயலில் நிரம்பியிருக்கும் அருளின் பெருமை மேலும் விளங்கும்.

காது என்பது என்ன? காது என்பது கன்னத்தின் இருபுறத்திலும் இருக்கும் தருணாஸ்தியின் பிஞ்சுகள். கடுக்கன், தோடு இவைகளை அணியத் துளைக்கப் படும் அங்கத்துக்குத்தான் காது என்று (தமிழில்...தெலுங்கிலல்ல) பெயர்.

இக்காதில் ஒரு துவாரம்—தலையின் உட்புறம் நோக்கிச் செல்வது—இருக்கிறதே அவ்விடத்தில்தான் சத்தத்தைக் கேட்கும் சக்தி பொருத்தப் பட்டிருக்கிறது. இதற்கு 'ச்ரோத்ரம்' என்று சாஸ்திரங்களில் தெரிவித்துள்ள பெயர். குண்டலங்களை அணிந்திடக் காது. சப்தத்தைக் கேட்க ச்ரோத்ரம்.

'ச்ரோத்ரம்' ஆகாசம் என்ற பூதத்தின் அமைப்பு. கர்ணத்தைச் சேர்ந்த துவாரத்தில் பொருத்தப்பட்டுள்ள ஆகாசமேதான் ச்ரோத்ரம் எனப்படுவது. சத்தமேதான் ஆகாசம். ஆகாசத்துக்குச் சத்தம் என்பது ஒன்றுதான் குணம்—குணமும், அதற்கு உறைவிடமான பொருளும் இரண்டற்ற நிலையில் பொருந்தி யிருப்பதால் ச்ரோத்ரம் எனப்படுவது சப்தமேதான் என்று கருதப்படுகிறது.



'' தீபாவளிக்கு வேட்டகம் போயிருந்தாயே ! மாமனார் என்ன பண்ணினார் ?''

'' ஆசிர்வாதம் பண்ணினார் !''

ச்ரோத்ரமாக மாற்றம் பெற்றுள்ள ஆகாசமும்—வெளியே உலகமெங்கும் பரவி நிரம்பியிருக்கும் ஆகாசமும் ஒன்றேதான். ஆனதால் உலகத்தில் உள்ள சப்தங்களெல்லாம் நமக்குக் கேட்ட வண்ணமே இருப்பது தான் இயல்பு. அப்படியானால் நியூயார்க்கில் நாடகக் கொட்டகையில் ஒரு நடிகர் பாடுவது நமக்கு இங்கே கேட்க வேணுமே ! அதுமட்டுமென்ன ? உலகத்தில் எந்தப் பாகத்தில் என்ன சப்தம் உண்டானாலும் அதெல்லாம் கேட்டுக் கொண்டே இருக்க வேணும். நல்ல வேளையாக அவ்விதம் இல்லை. இன்ன அளவில் பலம் பெற்ற சப்த அலைகளைத் தான் நமது ச்ரோத்ரங்கள் கிரஹிக்கும். அதற்கு மேற்பட்டதோ அதில் குறைந்ததோ கிரஹிக்கப்பட மாட்டாது என்று ஒரு வரையறுக்கப்பட்ட நிலை இருப்பதால் நாம் சுகமாக வாழ்கிறோம். இல்லாவிட்டால் உலகத்தில் எந்த இடத்தில் உண்டாகும் சப்தமானாலும் சரி, அது எவ்வகைச் சப்தமானாலுஞ் சரி, அவை யாவும் அப்படி யப்படியே நமது ச்ரோத்திரத்தில் விழுந்தபடிதான் இருக்கின்றன. ஆனால் அவ்வளவும் கிரஹிக்கப் படுவதில்லை. இப்படியொரு சக்திக் குறைவை நமது ச்ரோத்ரங்களுக்கு அளித்த இறைவனின் அருளை என்னென்று புகழ்வது ! வேதாள உலகத்தில் புகுந்தவன் போல் திக்குத்திசை தெரியாமல், தலை பம்பரமாகச் சுற்றவும் நமக்குப் பைத்தியமே பிடித்து விடும், நல்ல வேளையாக அவ்வித ஆபத்து எதுவும் நேரிடாமல் நம்மைக் காப்பாற்றியது எது ? ச்ரோத்ரத்துக்குச் சப்தத்தைக் கேட்கும் திறமையில் நிறுவப்பட்ட வரம்புதான். இறை செயல் அருளதாமே ! சந்தேகமென்ன ?

தேனீ கூட்டின் அருகில்சற்று நேரம் உட்கார்ந் திருப்போம். தேனீக்கள் நம்மை உட்காரவிடா. கவரின் இடுக்குகளில் தேன்கூடு கட்டும் ஒருவகை கொசு உண்டு. இதைக் கொசுத்தேன் என் பார்கள். ஆனால் இத்தேனைக் கிரஹித்தவர் யாரும் கிடையாது. இவ்விதம் கொசுத்தேன் கூடுகட்டியுள்ள சுவரினருகில் சற்று நேரம் உட்கார்ந்திருப்போமானால் அத்தேனீக்களின்-இல்லை இல்லை கொசுக்களின்-யொய்ங்... என்ற சத்தம் கேட்கும். முதலில் இதை ரஸிக்க முடியும். சற்றுச் சென்றால் இது சகிக்க முடியாததாகும். 'என்னடா இது நலை வேதனை ?' என்று வெறுப்புண்டாகும்.

சத்தத்தைக் கேட்கும் ச்ரோத்ரத்தின் சக்திக்கு ஒரு வரம்பு உண்டு என்றேனல்லவா ? சப்த சக்தியை மாற்றி அமைப்பதாலோ-சப்தத்தின் சக்தியைப் பெருக்குவதாலோ அச்சப்தம் நமது ச்ரோத்ரத்திற்கு இருக்கும் சக்தி வரம்புக்கு உட்பட்டதாய் அமைக்கப் படுமானால்...? அச்சப்தத்தைக் கட்டாயமாகக் கேட்கக் கூடும். ரேடியோ நிலையங்கள் இயங்குவதிலுள்ள அடிப்படைத் தத்துவம் இவ்வளவுதான். இது ஒருபுறமிருக்க, சில காரணங்களால் நமது ச்ரோத்ரத்தின் அமைப்பு, அதன் இயக்கத்தின் வகை ஆகியவற்றில் சில வேறுபாடுகள் ஏற்றக் குறைவுகள் ஏற்படவுங் கூடும். அவ்வாறு ஏற்படிலோ... அந்நிலையில் இல்லாத -- பொல்லாத சத்தங்கள் நமது (ச்ரோத்ரங்களால் கிரஹிக்கப்பட்டு) காதுகளில் கேட்டுக்கொண்டே இருக்கும். மகா உபத்திரவமான நிலை. ஸதாஸர்வ காலமும் காதில் ஏதோ சப்தம் கேட்ட வண்ணம் இருக்கிறது என்று ஏற்படுமானால்...

ஆம்! அதைத்தான் '' கர்ண நாதம் '' என்பர்.

கர்ணநாதத்தில்-காதினுள் ஒரு சப்தம் கேட்டவண்ணமிருக்கும். தான் தூங்குவது எப்போது என்பதே தெரியாது ; விழிப்புறும் போது-காதில் சப்தம் கேட்பதுதான் இவருக்கு 'ஸுப்ரபாதம்'--

இதற்கும் சரிவரச் சிகிச்சை செய்யாவிட்டால் ? காது செவிடாகி விடும்.

பிறகு ......?

பிறகு சொல்ல வேணுமா ? இந்த அநித்திய உலகத்தைச் சேர்ந்த எந்த விஷயத்தையும் இவர் 'காதில் போட்டு'க் கொள்ளார். பெரிய ஞானிதான்!





காலையில் இருக்கும் புதுமலர்ச்சி
நாள் முழுவதும் இருக்க

பாண்ட்ஸ்

ட்ரீம்ப்ளவர் டால்க்



நாள் முழுவதும் புதுமலர்ச்சியுடனும் குளுமையுடனும் இருக்க, ஸ்நானத்திற்குப்பின் பாண்ட்ஸ் ட்ரீம்ப்ளவர் டால்கம் பவுடர் உபயோகியுங்கள்!

பாண்ட்ஸ் ட்ரீம்ப்ளவர் டால்கம் பவுடர் இன்பகரமான பரிமளமுள்ளது: மற்றும் வியர்வையை உறுஞ்சும் தன்மையுடையது. அது உங்களுக்கு நாள் முழுவதும் நீடித்திருக்கும் புத்துணர்ச்சியை அளிக்கும்!

செஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடெட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ். அமெரிக்காவில் இணைக்கப்பெற்றது)

தனயனைக் காத்த தந்தை



அடேயப்பா !..... ஒன்று..... இரண்டா ? பதினைந்து ஆண்டுகள் !

வயிற்றுப்பாட்டுக்காக வேலை தேடி எங்கோ வடக்கே சென்றவன் இத்தனை நாட்களுக்குப் பிறகு மீண்டும் பிறந்த தென்னாட்டு மண்ணை மிதித்தபோது உள்ளத்திலேதான் எத்தனை உவகை ?

காவேரிக் கரையை ஒட்டினாற் போன்ற அழகிய சிறு கிராமம் ; பச்சைப் பசும் வயல் வெளிகள்; ஐம்பது அறுபது ஓட்டு வில்லை வீடுகளுடன் கூடிய அமைதியான அக்ரகாரம் ; அதிலே பண்பும் பக்தியும் நிறைந்த பழங்கால மனிதர்கள்; அக்கிரகாரத்தின் கோடியிலே ஒரு சிவாலயம். ஆகா...ஒவ்வொரு தடவை நினைக்கும் போதும் புதுமை மாறாமல் திகட்டாத காட்சியாகத்தோன்றும் கிராமம் அல்லவோ எங்கள் ஊர்.

அன்று ஆடி வெள்ளிக்கிழமை. கோயிலில் அம்பாளுக்குச் சந்தனக் காப்பு சாத்தி விசேஷ அலங்காரங்களுடன் காணக் கண் கொள்ளாத காட்சியாக இருக்கும். முன்பெல்லாம் ஆடி வெள்ளிக்கிழமை என்றால் கர்ப்பக்கிருகத்தின் நிசப்தத்தையே கருதியாக அமைத்துக் கொண்டு அத்துடன் இழைந்த கனீரென்ற குரலில் சுந்தர தீட்சிதர் ராகபாவம் கொஞ்ச, பக்திப் பரவசம் பொங்கத் தோத்திரம் இசைத்துத் தேவியை வழிபடும் காட்சியிலே லயித்து நான் எப்படி மயிர்சிலிர்த்திருக்கிறேன் !

சுந்தர தீட்சிதரைப்பற்றி நினைக்கையிலேயே அவருடைய தோற்றம் கண்முன் நிழலாடியது. செக்கச் சிவந்த மேனி முச்சூடும் பட்டை பட்டையாய்த் திருநீற்றுப் பூச்சு. கருகருவென்று முடிந்திருந்த கட்டுக் குடுமி. இடையிலே பஞ்சகச்சம் வைத்து உடுத்திய துல்லியமான வெள்ளைச் சோமன். செவிகளிலே சுடர்விடும் சிவப்புக் கல் கடுக்கன். கழுத்திலே ருத்திராட்ச மாலை. வயதிலே சிறியவர்தான் என்றாலும் பக்தி விளைவில் முதிர்ந்த தேஜசுடன் கூடிய முகம். இத்தகைய தோற்றம் காட்டி அவர் தம் வெண்கலத்தொனியிலே தெளிவான உச்சரிப்புடன் அம்பாளுக்கு அர்ச்சனை செய்யும்போது அந்தச் சூழ்நிலை முற்றிலுமே தெய்வ சாந்நித்யம் வியாபித்துக் கொண்டு விடும்.

இத்தனை காலமாக நான் இங்கிருந்து எவ்வளவோ தொலை தூரத்தில் இருந்த போதிலும்கூட எத்தனையோ நாட்கள் இந்தக் காட்சியைக் காண ஏங்கி மானசீகமாக உணர்ந்து அனுபவித்திருக்கிறேன். அப்படியிருக்க இன்று எதிர்பாராத விதமாக நேரிலே பார்த்தும் கேட்டும் மகிழ ஒரு சந்தர்ப்பம் கிட்டியிருப்பது என்னுடைய பாக்கியம் அல்லவா ?

ஆர்வத்துடன் ஆலயத்துக்கு விரைந்தேன்.

வெள்ளை அடிக்கப்படாத அதே கருங்கல் சுவர்கள்; கரேலென்று பிசுக்கேறிய அதே கல் தூண்கள். பொக்கையும் வெள்ளையுமாய்ச் செப்பனிடப்படாத அதே தரை; எண்ணெய் வழியும் விக்கிரகங்களும் முன்பு இருந்தவையே. அதோ அம்மன் சந்நிதியிலே ஓயாது திரளும் பக்தகோடிகளுக்கு முகம் மலர தேவியை தரிசனம் செய்து வைத்துக் கொண்டிருப்பதும் சாட்சாத் சுந்தர தீட்சிதரேதான் !

ஆனால் இது என்ன விந்தை !

உயிரற்ற ஜடப் பொருள்களாகிய இவற்றிலேதான் எவ்வித மாற்றமும் இல்லையென்றால் சதையாலும் ரத்தத்தாலும் உருவாக்கப்பட்ட சுந்தர தீட்சிதர்...? வருடங்கள் பதினைந்து கழிந்து விட்ட பின்னரும்கூட அவர் எள்ளளவு மாறுதலும் இல்லாமல் அப்படியே அன்று கண்ட மேனியாக இருப்பது அதிசயமாக அல்லவா இருக்கிறது !

ஒருவேளை தெய்வத் திருப்பணியிலே தம்மை மறந்து ஈடுபட்டவர்களை நெருங்க முதுமைகூட அஞ்சி நடுங்கி ஓடிவிடுமோ !

இவ்வாறு எண்ணி வியந்தவாறே கூட்டமும் கலைந்திருக்கவே சற்று முன்னேறினேன். இந்தா தீபாராதனைத் தட்டுடன் வரும் தீட்சிதரும் என்னைப் பார்க்கிறாரே ! ஆனால் இதென்ன ? என்னை அடையாளம் புரிந்து கொண்ட பாவனையில் அவர் அதரங்களில் ஒரு புன்னகைக் கீற்றுக்கூட அரும்பக் காணோமே! ஏன்...? ஏன்...?

மீண்டும் மீண்டும் இதே கேள்வி எழுந்து என் சிந்தனையைக் குழப்பியது.

சிறிது நேரத்துக்குப் பிறகுதான் என் உள்ளம் தெளிந்து எனக்கு உண்மை புலனாகியது. இறைவனுக்குப் பணி

செய்து அதனால் அருள் பெற்ற தீட்சிதர் தான் இளமை மாறாமல் மார்க்கண்டேயனைப் போல் நித்தியத்துவம் அடைந்தவராகக் காணப்படுகிறார் என்றால் இத்தனை வருடங்களில் நானும் கூடவா மாறாமல் அப்படியே இருப்பேன்? ஆமாம்! இதனால்தான் அவரால் என்னைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

இவ்வித முடிவுக்கு வந்த என்னை அர்ச்சகரின் குரல் சுயஉணர்வு பெறச் செய்தது. ''உங்களுக்கென்ன அர்ச்சனை பண்ணவேண்டுமா? அஷ்டோத்தரம்தானே? சீட்டு வாங்கி வந்து விட்டீர்களா? பேர் நட்சத்திரம் சொல்லுங்கள்'' என்று என் கையிலிருந்த அர்ச்சனைச் சாமான்களை வாங்கிக் கொண்டார் அவர். அவர் கேட்ட விவரங்களைக் கூறி விட்டு அவர் முகத்தையே வைத்த கண் வாங்காமல் ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தேன் நான்.

அர்ச்சனை ஆரம்பமாகியது. மலை உச்சியிலிருந்து கடகடவென்று இறங்கும் நீர் வீழ்ச்சியின் வேகத்துடன் அவர் இனிய கண்டத்திலின்றும் வெளிப்பட்ட நாமாவளிகள் பக்தியிலே தோய்ந்து ராகமாலிகையாகக் குழைந்து என் இதயத்திலே பாய்ந்து மெய் சிலிர்க்க வைத்தன.

அன்று போலவே இன்றும்கூட அன்னையின் திரு முகத்திலே அருள் வடிகிறது!


உள்ளத்தை நெகிழ்த்தும் அதே உருக்கமான சூழ்நிலைதான்!

அர்ச்சிப்பவரும்கூட முன்பு இருந்தவரேதான்! இருந்தும்கூட இதென்ன! எத்தனையோ தடவைகள் கேட்டுக் கேட்டு அப்படியே இசைத் தட்டைப் போல் மனத்திலே பதிவாகியிருந்த அந்தக் குரலிலேதான் யாருக்குமே புரியாத ஏதோ மாற்றம் இருப்பதுபோல என் நுட்பமான அறிவுக்குப் புலப்படுகிறதே!

சட்டென்று பொறி தெறித்தாற் போல் ஒரு விஷயம் என் நினைவுக்கு வந்தது. இப்படியும் இருக்கலாமோ? நான் ஊரை விட்டுப் போகும்போதே தீட்சிதருக்குப் பத்துப் பன்னிரண்டு வயதில் ஒரு மகன் இருந்ததாக ஞாபகம். ஒரு வேளை இப்போது நம் கண்முன் இருப்பவர் வாட்ட சாட்டமாக வளர்ந்து விட்ட அவர் பிள்ளையாக இருக்குமோ? அதனால்தான் அவர் நம்மை யாரென்று புரிந்து கொள்ளவில்லையோ? ஆமாம். அப்படித்தான் இருக்க வேண்டும்!

இந்தச் சிறிய விஷயம் இத்தனை நேரமாக நம் மூளைக்கு எட்டவில்லையே என்று என் மடமையை எண்ணி எனக்குள்ளேயே சிரித்துக் கொண்டேன். இதே தருணத்தில் அர்ச்சனை முடிந்து தீபாராதனையாகி, அர்ச்சகர் பிரசாதங்களைக் கொண்டு வந்து கொடுக்கவே அவைகளைப் பெற்றுக் கொண்டு நகர்ந்தேன்

கர்ப்பக்கிருகத்தை விட்டு வெளியே வந்ததும் சில்லென்ற காற்று மேலே பட்டு உடலுக்கு இதமாக இருந்தது. ஆனால் உள்ளத்திலே மட்டும் 'அப்படியானால் சுந்தர தீட்சிதர்



என்ன ஆனார்?" என்ற கேள்வி புழுவாய்க் குடைந்து எடுத்துக் கொண்டிருந்தது.

• • •

வெளிப்பிராகாரத்தைத் தாண்டும்போது எதிர்ப்பட்டார் பண்டாரி சங்கர ஐயர். நெற்றியைச் சுருக்கி, புருவத்தை நெரித்து, விழிகளினால் என்னை ஒருகணம் ஊடுருவியவர், "அட மங்களத்தம்மாள் பிள்ளை கோபு இல்லே நீ? எப்போ வந்தே? அடையாளமே தெரியாம வளர்ந்துட்டியே! வடக்கே போய் ரொம்ப நாளாச்சு இல்லே?" என்று கேள்வி மேல் கேள்வியாகக் கேட்டு நிறுத்தினார்.

"ஆமாம். இன்று காலையிலேதான் வந்தேன். இன்று ஆடி வெள்ளிக்கிழமையாயிருக்கவே அம்பாளையும் தரிசித்து விட்டு அப்படியே சுந்தர தீட்சிதரின் வாயினால் அர்ச்சனை செய்து கேட்க வேண்டுமென்ற என் நெடுநாள் ஆசையையும் தணித்துக் கொள்ளலாம் என்றுதான் வந்தேன். ஆனால் கைங்கரியம் கைமாறி விட்டது போலிருக்கிறது."

இடைமறித்தார் பண்டாரி. "என்ன சொன்னாய்? தீட்சிதரின் குரலிலா அர்ச்சனை செய்து கேட்க வேண்டும் என்கிறாய்? விட்டு விடப்பா அந்த ஆசையை. உனக்கு இன்னும் விஷயம் தெரியாது போலிருக்கு. இனி அடுத்த ஜன்மத்தில்தான் அவர் குரலைக் கேட்க முடியும்..."

"பண்டாரி! நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? எனக்கு ஒன்றுமே விளங்கவில்லையே! அடுத்த ஜன்மத்தில்தான் அவர் குரலைக் கேட்க முடியுமா? அப்படியானால் தீட்சிதர் பரகதி அடைந்து விட்டாரா? அவரால் சேவை செய்யப்படும் பாக்கியம் அம்பிகைக்குத் தீர்ந்து விட்டதா?"

"என்னப்பா கோபு, இவ்வளவு பதற்றப் படுகிறாயே! நீ நினைப்பது போல் அப்படியெல்லாம் ஒன்றும் நேர்ந்து விடவில்லை; கவலைப்படாதே! ஆனாலும் ஒரு விதத்திலே நீ சொல்லுவதும் கூடப் பொருத்தம்தான். எப்படி என்றால் நீ ஊரை விட்டுப் போவதற்கு முன்பு பக்தியும் பணிவும் ஆசாரமும் அனுஷ்டானமுமாக இருந்த அந்தப் பழைய தீட்சிதர் இறந்துதான் விட்டார். இப்போது இருப்பவர்..." இவ்வாறு கூறிக் கொண்டே வந்தவரின் திருஷ்டி தற்செயலாகக் கோபுர வாசற் பக்கம் திரும்பவே மேற்கொண்டு சொல்ல வந்ததை முடிக்காமல் சம்பாஷணையை அத்துடனேயே நிறுத்தினார்.

அவருடைய திடீர் மௌனத்துக்குக் காரணம் விளங்காமல் விழித்த என்னை வாசற் பக்கம் பார்க்குமாறு சைகை காட்டினார்.

அவர் சுட்டிக்காட்டிய பக்கம் பார்வையைச் செலுத்தினேன்.

என்ன ஆச்சரியம்! அங்கே வருபவர் யார்? தீட்சிதரேயல்லவா வந்து கொண்டிருக்கிறார்! ஆனால் இவர் தீட்சிதர்தானா? என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லையே!

இடையிலே அதே பஞ்சகச்சம்தான்; ஆனால் ஜரிகைப் பட்டு வேஷ்டி. நெற்றியிலே பழைய மாதிரி திருநீறு தரித்திருந்தார். ஆனால் அவற்றின் மத்தியிலே பளபளத்தது ஜவ்வாதுப் பொட்டு. கழுத்திலேயும் ருத்திராட்ச மாலைக்குப் பதிலாக அவ்விடத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது தங்கச் சங்கிலி. விரல்களில் டாலடித்தன வைர மோதிரங்கள். தோளிலிருந்து தொங்கிக் கொண்டிருந்தது விசிறி மடிப்பு உத்தரியம். முதுமையின் சின்னமாய் அங்கொன்றும் இங்கொன்றுமாக நரையோடியிருந்த தலை முடியினின்றும் தைல வாசனை கமழ்ந்தது.

இதோடு மட்டுமா!

பக்கத்திலே சென்றாள் பாவை ஒருத்தி. பக்குவமான வயது. பளிச்சென்று பால்வடியும் முகம். பார்த்த மாத்திரத்திலேயே மனத்தைக் கவ்வும் வசீகரமான பார்வை. பதத்துக்கு அபிநயம் பிடித்துப் பழக்கப்பட்டது போன்ற மலர்ப் பாதங்களும், அங்க அசைவுகளும் அவளை, பரதக் கலையைப் பரிபூரணமாகக் கற்றுத் தேர்ந்தவளாக எண்ணச் செய்தன.

வியப்பினின்று விடுபடுமுன்னரே என் விழிகளைச் சூன்யமாக்கி விட்டு என்னைக் கடந்து சென்று மறைந்தனர் அவ்விருவரும். அவர்கள் சென்ற பின்பும்கூட அத்தரின் மணம் என் நாசியை விட்டு அகலவேயில்லை.

தீட்சிதரின் தோற்றத்தின் மாற்றமே என்னை அதிசயக் கடலில் ஆழ்த்தியதென்றால், கூடச் சென்ற மங்கையையும் கண்டவுடன் என் ஆச்சரியம் கரைகடந்ததாகி விட்டது.

அவரைப்பற்றித் தெரிந்துகொள்ளவேண்டும் என்ற ஆர்வமும் பரபரப்பும் உந்த பண்டாரியிடம் மீண்டும் பேச்சுக் கொடுத்தேன்.

"இது என்ன அநியாயம், பண்டாரி? எப்படி இருந்தவர் எப்படி மாறிவிட்டார்? இரண்டு கண்களாலேயும் நேரிலே பார்த்த பிறகும் கூட மனசு நம்ப மறுக்கிறதே!"



"உங்கபேரு?"
"ராம்லிங்!"
"தொழில்?"
"மோர்சிங்!"



"நம்ப கப்புவும் குப்புவும் சேர்ந்து பிராக்டீஸ் பண்ணுறாளாமே?"
"அப்படியா?"
"ஆமாம்! கப்பு ஒரு டாக்டர்; குப்பு உயில் எழுதுகிற வக்கீல்!"

"விதி யாரை விட்டதப்பா? ஆளுனப்பட்ட விசுவாமித்திரரையே ஓர் ஆட்டு ஆட்டித் தானே விட்டது! அப்படியிருக்க, தீட்சிதர் மட்டும் இதற்கு விலக்கா என்ன? ஊரே திமிலோகப்படுகிறது ஏழெட்டு மாதங்களாய். எங்கு கண்டாலும் யாரைப் பார்த்தாலும் இதேதான் பேச்சு...."

அது சரி; இந்தப் பெண் யார்? எந்த ஊர்? தீட்சிதருக்கு இவளுடன் எப்படித் தொடர்பு ஏற்பட்டது?"

"பாரேன்; போன வருஷம் புரட்டாசி மாசம்தான் என்று நினைக்கிறேன். நவராத்திரி உற்சவம் முடிந்து விஜயதசமி அன்று இதே அம்பாள் சந்நிதியில் இப்போது பார்த்தாயே, அந்தப் பெண்ணின் சதிர்க் கச்சேரிக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள் கோவில் தேவஸ்தானத்திலே. இந்தப் பெண் பக்கத்து ஊரிலே புதிதாகக் குடி புகுந்து ஒரு வருஷம் தானாகிறதாம். எங்கேயோ இவளுடைய நாட்டியத்தைப் பார்த்து விட்டு வந்த ஊர் ஜனங்கள் ஒரு முகமாகச் சிலாகித்துப் பேசவே இங்கேயும் இவள் கச்சேரிக்கு ஏற்பாடு செய்தார்கள்.

"அன்றைக்கு இவள் ஆடியிருக்கிறாள் பார், ஓர் ஆட்டம். தேவலோக ரம்பை ஊர்வசியெல்லாம் இவளிடத்தில் ஜதி பிடிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். நிமிஷத்துக்கு ஒரு முறை மாறும் முகபாவமும், விழிச் சுழற்றலும், ஒய்யார நடையையும் கண்டு அத்தனை ஜனங்களும் திறந்த வாய் மூடாமல் மகுடிக்குக் கட்டுப்பட்ட நாகம் போல் அமர்ந்திருந்தார்கள். அத்தனை பெரிய கூட்டத்திலே ஓர் ஊசி விழுந்தால் சத்தம் கேட்கும் அவ்வளவு அமைதி. அப்படி அன்றைக்கு அவள் ஆடிய ஆட்டம்தான் பிறகு தீட்சிதரின் உள்ளத்தையும் அதனால் அவருடைய குடும்ப கௌரவத்தையுமே ஆட வைத்துவிட்டது.

"முதலில் கொஞ்ச நாட்கள் வரையில் இந்த விஷயம் ரகசியமாக இருந்தது. பிறகு ஜனங்கள் கசமுச என்று பேசிக் கொள்ள ஆரம்பித்தார்கள். கொஞ்சம் கொஞ்சமாகத் தீட்சிதர் கோயில் கைங்கரியத்திலேயே அசிரத்தை காட்ட ஆரம்பித்த போதுதான் மெய்யோ பொய்யோ என்று சந்தேகமாக இருந்த இந்தச் செய்தி உண்மைதான் என்று ஊர்ஜிதமாகியது. இவர் வராத அன்றைக்கெல்லாம் இவர் பிள்ளை வந்து முறையைக் கவனித்துக் கொள்வான். இதைக் கண்ட ஊர் பெரிய மனிதர்களும் தீட்சிதரின் ஆப்த சிநேகிதர்களும் கூட மெள்ள ஜாடையும் மாடையுமாய் அவர் இப்படி நடந்து கொள்வது நன்றாக இல்லை என்று பொருள்படும்படி அவரிடம் பிரஸ்தாபித்தார்களாம். ஆனால் அவரோ, "இது என் சொந்த விஷயம். இதில் ஒருவரும் தலையிட வேண்டாம்!" என்று நிர்த்தாட்சிண்யமாகச் சொன்னதோடல்லாமல், இப்போது பார்த்தாயே நீ, அது போல் பகிரங்கமாகவும் இருக்க ஆரம்பித்துவிட்டார். இதனால் எல்லோருக்கும் ஏக வருத்தம்."

"வீட்டிலே யாரும் இதுபற்றி அவரை ஒன்றுமே கேட்கவில்லையா, பண்டாரி?"

"கேட்பதற்கு யார் அப்பா இருக்கிறார்கள்? மனைவியோ மானி பாவம், மகா உத்தமி. ஏற்கனவேயே அதிகம் வெளிவராத அவள் இப்போது கோயில் குளத்துக்குக் கூட வருவதில்லை. இத்தனை தூரம் தீட்சிதர் நெறிகெட்டு நடக்கும் கூட, அந்த அம்மாள் கண்ணீர் சிந்தியோ, அவரைப் பற்றிக் கடிந்து பேசியோ யாரும் கேட்டதில்லை. இவ்வளவு பொறுமையாக இனிமேல் யாராலும் இருக்க முடியாது. அப்பா. அவருடைய பிள்ளை பரமசிவனோ, தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்னும் பண்பிலே ஊறி வளர்ந்தவன். எனவே அப்பாவைப் போய் இதையெல்லாம் கேட்க முடியுமா? அதனால் இப்போது கைங்கரியத்தைத் தானே ஏற்றுக்கொண்டு அவருக்கு மேல் பக்தி சிரத்தையோடு செய்து கொண்டு வருகிறான். இனிமேலும் அப்படியே யிருக்க அந்த அம்பிகைதான் அருள் புரிய வேண்டும்.

"அம்பாளுக்குத் தீட்சிதர் மேல் ஏன்தான் இவ்வளவு கோபமோ? பூஜையும் புனஸ்காரமும் நேமமும் நிஷ்டையுமாக நன்றாய் இருந்தவரை நலம் கெட்டு நாலு பேர்கள் சிரிக்க வைத்து வேடிக்கை பார்க்கிறாள்...."

இந்த விவரங்களைக் கேட்டவுடன் என் மனத்திலே என்னையு மறியாமல் ஒரு சோர்வு. கனத்த இதயத்துடன் வீடு திரும்பலுற்றேன். தீட்சிதரின் அவலம் என் இதயத்தின் ஆழத்திலே காரணமற்ற வேதனையைக் கிளறி விட்டது. உள்ளத்து உணர்ச்சி உடல் இயக்கத்தைச் சோர்வடையச் செய்ததாலோ என்னவோ, சற்றே தளர்ந்து மனம்போன போக்கில் பாதையில் நகர்ந்து கொண்டிருந்தேன். தெரு மூலையை அடைந்து விட்டதை உணராமல் என் கால்கள் திசை திரும்பாமல் நடந்தன. அப்படியே எதிரே இருந்த வீட்டு வாசற்படிக்கட்டின் மேலேயே போய் மோதிக் கொண்டிருப்பேன். ஆனால் சட்டென்று அதற்குள் எனக்கு வெகு அருகில் ஏழெட்டு குரல்கள் சேர்ந்தாற் போல் ஏதோ கூச்சலிட்ட ஓர் ஒலம் புறப்பட்டு என் காதைப் பிளக்கவே என் கால்கள் தாமாக நின்றன.

"ஐயோ, மாடு! மாடு....!" மீண்டும் அலறினர் ஜனங்கள்.


துணுக்குற்றுத் திரும்பினேன்.



எட்டாம் நம்பர் வீட்டில் தேவானை குடி விருந்து விட்டுப் போன நிகழ்ச்சி எங்கள் தெருவின் சரிதையிலேயே ஒரு ஒரு முனைத் திருப்பம். அந்தப் பெண் காலடி வைத்த மகிமையால்தான் . . .


. . . வேப்பந்தெரு விழித்தெழுந்தது!

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பும் எங்கள் வேப்பந் தெரு தினமும் காலையில் விழித் தெழுவதுண்டு—ஆனால் தினந்தினம் இரண்டு மணி நேரம் தாமதமாக. தெருத் திண்ணைகளில் சால்வைப் புழுக்களாக பற்பல உருவங்கள் முடங்கியிருக்கும். வீட்டு வாசலில் கோலம் போடவில்லையே என்று என் மனைவியை நான் கோபிப்பதில்லை: அது யார் வீட்டு வாசலிலும் காணப்பட்டதில்லை; வெடி மருந்து யுகம் வந்தபிறகு இந்தத் தெருவில் அவ்வப்போது டி.டி.டி மருந்து கிடைத்தாலும் கிடைக்குமேயொழிய பசிக்கு அரிசி மாவு கிடைக்காது என்று எறும்புகளுக்குத் தெரியும். "நல்ல காலம் வருகுது!" என்று அன்ருடம் முதல் குரல் கொடுக்கும் குடுகுடுப்பாண்டி, எங்கள் வீட்டுக்கு எதிரே காலியாகக் கிடந்த எட்டாம் நம்பர் வீட்டை எட்டிகூடப் பார்க்காமல் நகருவான். "எந்தப் பாவியோ புரளி கிளப்பினான். ஒரு வருஷ காலமா வீட்டை அண்டுவாரில்லே" என்று ஏங்குவார், வீட்டின்



DL/P.3A-19 TM

சொந்தக்காரர். அதற்கும் பதிலளிப்பார் தெருக்கோடியிலிருந்த டாக்டரய்யா:
"அறியாமைப் பேயைத்தான் விரட்டணும் முதலிலே. அப்படிப்பட்ட காலம்—பாருங்களேன், நம்ப டிஸ்பென்ஸரிலே ஒரு நாளுக்கு எத்தனை கேஸ்கள் வருது! அதிலே பாதிக்கு மேலே அநாவசியந்தான், சத்துக் குறைவு நோய்க. சாப்பாட்டு விஷயத்திலேயே அறியாமைப் பேய் தாண்டவமாடறபோது மத்த விஷயங்களிலே கேக்கணுமா?"
பிறகு, திடீரென ஒரு நாள் விழித்துக்கொண்டது எட்டாம் நம்பர் வீடு. வாட்டசாட்டமான ஒரு அழகியும் அவள் கணவரும், ஒரு தள்ளாத கிழவியுமாகத் தங்கள் சாமான்களை வீட்டுக்குள் இறக்குமதி செய்த காட்சியை நாற்பது ஜோடிக் கண்கள் கழுகுகளைப் போல் கவனித்தன. பற்பல நாக்குகள் சூள்கொட்டின.
"மட்டையிருக்கிறதே கையில்; டென்னிஸ் ஆட்டக்காரியோ?" என்றது ஒரு பெண் குரல்.
"நிச்சயம் பரதநாட்டியம் தெரிந்தவளாக இருக்கவேண்டும். அளந்து வைத்தாற்போல் இருக்கிறதே அந்தத் தேகக்கட்டு! என்று திண்ணையிலே துள்ளினர் ஒரு கலாவிசிறி.
மறுநாட் காலை எட்டாம் நம்பர் வீட்டு வாசலில் ஓர் அழகான கோலம் தென்பட்டது. "நன்ளுகத் தூங்கினீர்களா?" என்று தேவானையை விசாரித்தாள் என் மனைவி. அயர்ந்து தூங்கியெழுந்த ஆரோக்கியத்தின் மெருகுமின்ன தேவானையின் வதனம் 'ஆம்' என்பதற்கு அடையாளமாகப் புன்னகைப் பூத்தது.
"கோலம் போட்டிருக்கிறீர்களே. வீட்டில் ஏதாவது விசேஷமோ?"
"இல்லையே, தினந்தோறுமே நான் கோலம் போடுவது வழக்கம்!" என்றாள் தேவானை.
இந்தத் தெருப் பெண்மணிகளா இதை நம்பப்போகிறார்கள்? டென்னிஸ் ஆடும் கைதான் கோலம் போடுமோ, சமைக்குமோ. எல்லாமே அந்த வீட்டுக் கிழவியின் வேலையாயிருக்குமென்று வம்பளந்தனர். ஆனால் வம்புக்கும் தும்புக்கும் விடிவு வராமலா போகும்?
ஒரு நாள் காலை விடியுமுன்னே விழித்துக்கொண்ட நான், ஜன்னல் வழியாகத் தென்பட்ட காட்சியை வியப்புடன் கண்டு, மனைவியை எழுப்பிக் காண்பித்தேன்.
விடிவெள்ளிக்கு முன் எழுந்து வீட்டு முகப்பிலே விளக்கமிட்டு, மாவெடுத்து இழை திரித்துச் சித்திரமெழுதியது அப் பத்தினியாளின் பைந்தளிர் விரல்கள். அவ் விரல்களுக்குக் கீழ்ப்படிந்த அரிசிமாவு விழித்தெழுந்த விசித்திரக் கோலமாக விரிவடைந்தது." . . . தொழுதன் தொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை" என்ற வான் புகழ் வள்ளுவரின் வாக்கை வாழ்வாக்குவோர் முன்னிலையில் எந்தப் பேய்தான் துணிந்து நிற்கும்!
அவ் வருடம் வள்ளலைப் போல் பொழிந்தது வானம். அவதூறும் அகந்தையும் மழை நீரோடு கரைந்தோடி. உள்ளங்களும் தெருவைப் போலப் பளிச்சிடத் தொடங்கின. "தேவானை சொல்கிறாள்" "தேவானை செய்கிறாள்." என்று அவளைப் பலரும் பின்பற்றலாயினர்.
ஒருநாள் நான் ஆபீசுக்குக் கிளம்புங்கால் என் மனைவி சொன்னாள்: "தேவானை ஒரு துளசிச் செடி வைத்திருக்கிறாள், பார்த்தீர்களா 'டால்டா' டப்பாவிலே. நம்ப அலமாரியிலே ரொம்ப நாளா தவங்கிடக்கே ஒரு 'டால்டா' டின், அதிலே இன்னும் கொஞ்சம் 'டால்டா' பாக்கியிருக்கு. ஏதாவது பட்சணம் பொரிச்சு அதைத் தீர்த்துப்புட்டேன்னா நானும் ஒரு செடி வைக்கலாம். அதனாலே இன்னிக்கு நீங்க ஆபீஸிலிருந்து வந்ததும் சோமாசி!"
அன்று நான் ஆபீஸிலிருந்து வந்ததும் வாசலில் ஈர மண்ணடைத்து வைத்திருந்த 'டால்டா' டின் கண்ணில் பட்டது. ஆனால் இரவுவரை எவ்வித சோமாசியும் கிடைக்காததைப் பற்றிக் கேட்டதும் அவள் கூறினாள்: "பொரிப்பதற்கும் தித்திப்புப் பண்ணுவதற்கும்தான் 'டால்டா' என்று நினைத்திருந்தேன். இன்றுதான், தேவானை சொன்னாள். எல்லா சமையலுக்கும் உபயோகிக்கலாமாம். தேரிலே ருசிபார்த்த பிறகு நம்பினேன். இன்னிலேருந்து எல்லா சமையலுக்கும் 'டால்டா'தான். வைட்டமின்கள் இருக்காமே அதிலே?"
"ஆமாம்தான், கண்ணுக்கும் பல்லுக்கும், எலும்புக்கும் ஆரோக்கியம் தருகிற வைட்டமின்கள் 'ஏ' 'டி' இரண்டுமிருக்கு 'டால்டா'விலே. இனிமேலே அந்த வைட்டமின்கள் நம்ப அலமாரியிலே டின்னுக்குள்ளே தூங்கவேண்டியதில்லையே!" என்றேன். அன்றுமுதல் ருசிருசியாக நானாவித ஆகாரங்கள் மூலமாக உடம்புக்கு நிறைய அளவிலே வைட்டமின்கள் கிடைக்கலாயின.



மேலும் ஒரு வருடம்! அதன் பன்னிரு மாவிரல்கள் எங்கள் தெருவிலே எத்தனையோ மாறுதல்களைச் செய்து சென்றன. அப்புறம் ஒரு நாள் . . .
. . . எட்டாம் நம்பர் வீடு காலியாகியது. வேறிடம் சென்றுவிட்டாள் தேவானை. பேரிச்சை மரப் படமிட்ட மஞ்சள் நிற டப்பாவில் மங்களகரமான துளசிச் செடியொன்று பின்தங்கியிருந்தது. ஆம். அவள் விதைத்த நல் வித்து ஆரோக்கியமாக உருவெடுப்பதன் சின்னம், அந்தச் சின்னத்திலே மிளிருகிறது . . .
. . . எங்கள் வேப்பந்தெரு விழித்தெழுந்த கதை . . .
. . . "விசேட நாட்களுக்குமட்டுமல்ல, அன்றாடமும் காட்சி தருவேன்" என்ற பாவனையில் வீட்டுவாசல் தோறும் அன்றாடம் காலை விழித்தெழும்பிய கோலங்களாக விழித்தெழுந்த வீதியின் வித்தைக் கதை!

அம்மம்மா, என்ன பயங்கரம்!

அதோ....வாயிலே நுரை தள்ள, விழிகள் பிதுங்க, மூச்சு துருத்தி போல் இறைக்க, குளம்புகள் வீதிக் கற்களில் பொறி தட்டிப் பதிய, கூரிய கொம்புகளை மேலும் கூர்மையாக ஆக்ரோஷத்துடன் ஆட்டிய வண்ணம் வெறி கொண்ட வேங்கையெனத் தறிகெட்டுப் பாய்ந்தோடி வந்து கொண்டிருந்தது கொழுத்த கோவில் காளை! முன்னால் அதன் பாதையிலே சுந்தர தீட்சிதர்!

அவரும் அப்போது தான் ஜனங்களின் கூக்குரலைக் கேட்டாரோ என்னவோ, திடுக்கிட்டு நின்று திரும்பிப் பார்த்தார். நாற்கால் பாய்ச்சலில் குதிபோட்டு மிரண்டு வரும் காளையைக் கண்டதுதான் தாமதம்; பக்கத்தில் வந்த அந்தப் பெண்மணியைக் கரம் பற்றி இழுத்துக் கொண்டு விலகி ஓட எத்தனித்தார்.

அதே சமயம்....ஐயோ! என்ன அநியாயம்! அத்தனை ஜனங்களும் இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருக்கும்போதே பாழும் விதி அவரது கால்களைத் தடுக்கி விட்டது.

அவ்வளவுதான்; அந்தப் பெண்மணி உடனே கையை உதறி விடுவித்துக் கொண்டு ஒரே எட்டில் நடைபாதைக்கு ஓடி வந்து விட்டாள். தனித்து நின்ற தீட்சிதரோ, பாவம், கணநேரம் தடுமாறி, கால்கள் தளர, மறு விநாடி நட்ட நடுவீதியிலே கீழே விழுந்தார்!

'ஐயோ! ஐயோ!' என்று அலறினார்கள் ஜனங்கள்.

திடீரென்று நேர்ந்த விபரீத சம்பவத்தின் அதிர்ச்சியிலே எல்லோரும் ஸ்தம்பித்து விட்டனர். ஆனால் எனக்கு மட்டும் பாய்ந்து போய்த் தீட்சிதரை அந்தக்காளையின் பாதையிலிருந்தும் அப்புறப்படுத்த வேண்டுமென்ற ஓர் ஆவேசம்! இதோ...வீதியிலே இறங்கியும் விட்டேன்.

ஆனால் இரண்டு அடிகள் எடுத்து வைப்பதற்குள் எனக்குத் தலையைச் சுற்றியது! அடி வயிற்றைக் கலக்கியது! நெஞ்சைக் கசக்கிப் பிழிந்தது! விழி நரம்புகள் தெறித்தன! நொடிப் போது இமை மூடினேன்!

நொடிப்போதுதான்! ஆனால் அதற்குள்...

ராட்சத வேகத்துடன் தலையைக் கொடும் லாகவமாகச் சாய்த்துக் கொண்டு சீறிப் பாய்ந்த காளையின் கொம்புகள் தீட்சிதரின் மார்பிலே ஒரு முறை ஆழப் புதைந்து இரத்தக் களரியாக வெளி வந்து விட்டன! என்ன கோரம்!

இதற்குமேல் இந்தப் பயங்கரக் காட்சியைக் காணச் சகிக்காமல் பீதியிலே என் உடல் சிலிர்த்தது. கண்களை இருட்டிக் கொண்டு வந்தது. சுவாசமே நின்று விடும்போல் இருதயம் அசுர வேகத்தில் 'பட் பட்' என்று அடித்துக் கொண்டது. கால்களுக்குக் கீழே தரை நழுவி எங்கோ அதலபாதாளத்துக்கு இட்டுச் செல்வது போன்ற உணர்ச்சி.

இவ்வளவுதான் எனக்குத் தெரியும்!

மீண்டும் நான் உணர்வு பெற்றுக் கண் விழித்த போது ஏதோ ஒரு வீட்டுத் திண்ணையில் கிடத்தப்பட்டிருந்தேன். இங்கு எப்படி வந்தோம் என்று வியப்புடன் சுற்றுமுற்றும் நோக்கினேன். எனக்கு முற்றிலும் அறிமுகமில்லாத யாரோ ஒருவர் விசிறிக் கொண்டிருந்தார். இதனால் சற்றுச் சங்கோசமடைந்தவனாக எழுந்திருக்க முயன்றேன்.

இதைக் கண்ட அவர், "பரவாயில்லை, சார்! எழுந்திருக்க வேண்டாம்" என்று உரிமையுடன் உபசரித்தார்.

"சார்! தீட்சிதர் என்ன ஆனார்?" என்று பதற்றத்துடன் கேட்டேன்.

"அவரை அப்போதே வீட்டுக்குக் கொண்டு சேர்த்து விட்டார்களே! அவர் இனிமேல் பிழைக்கிறது ஏது, சார்? இதைப் பற்றி நீங்கள் எதற்காக வீணாக மனத்தை அலட்டிக் கொள்கிறீர்கள்? பேசாமல் வீட்டிலே போய்ப் படுத்து 'ரெஸ்ட்' எடுத்துக் கொள்ளுங்கள், சார்!" என்று அலட்சியமாக வெறுப்பு தொனிக்கக் கூறினார்.

என்றாலும் அப்படி அசுவாரஸ்யமாக இருக்க முடியவில்லை. தீட்சிதரைப் பார்க்காமல் போனால் மனம் சமாதானப் படாதுபோலிருந்தது. அந்த மனிதருக்கு நன்றி தெரிவித்து விட்டுப் புறப்பட்ட நான் தீட்சிதரின் வீட்டை நோக்கி நடந்தேன்.

நான் அங்கே போய்ச் சேர்ந்தபோது, கூடத்தில் நெருக்கமாகத் திரண்டிருந்த ஒரு சிறு கூட்டத்துக்கு மத்தியிலே கட்டிலில் கிடத்தப்பட்டிருந்தார் தீட்சிதர். மார்பிலே காயத்தின் மீது கட்டியிருந்த துணி இரத்தக் கறையை யெல்லாம் உறிஞ்சிக்கொண்டு கோரமாகக் காட்சி அளித்தது. ரணத்தின் உபாதை தாளாமல் வேதனையுடன், 'அம்மா...அப்பா' என்று அரற்றிக் கொண்டிருந்தார் அவர். கட்டிலின் அருகிலே அழுது வீங்கிய முகத்திலே மேலும் கண்ணீர் அருவியாய்ப் பெருகி வழிய, துக்கத்தை அடக்க மாட்டாதவளாக, சோகச் சிலையாய் அமர்ந்திருந்தாள் அவர் மனைவி. அடிக்கொரு முறை அந்த அம்மாளிடமிருந்து நெஞ்சைத் துளைத்துக் கொண்டு பீறிட்டுக் கிளம்பிய கேவல் ஒலி அங்கிருந்த அத்தனை உள்ளங்களிலும் வலியை உண்டாக்கியது.

இந்தச் சத்தம் தீட்சிதரின் காதிலும் விழுந்ததோ என்னவோ, நோவிலே முனகியவண்ணம் தம்மைச் சுற்றிலும் பார்வையைச் செலுத்திக் கொண்டே வந்தவரின் திருஷ்டி அவர் மனைவியின்மேல் பட்டவுடன் அங்கேயே அப்படியே நிலைத்து நின்று விட்டது. இருபத்தி ஐந்து வருடங்களுக்கும் மேலாக, பெற்றோரையும் உற்றாரையும் துறந்து, தமது இன்ப துன்பங்களில் ஈடு கொடுத்து, நிழல் போல் உலவிய அவள் முகத்திலே அவர் எதைக் கண்டாரோ? என்ன கூறித் தேற்ற ஆசைப்பட்டாரோ?

அவர் உதடுகள் துடித்தன. கண்கள் பரிதாபமாக இறைஞ்சின. தமக்கு அருகில் வருமாறு மனைவிக்குச் சைகை காட்டியவர் வந்தவுடன் நடுங்கும் கரத்தினால் அவள் கன்னங்களை வருடினார். நெஞ்சத்து எண்ணங்களை ஒரே மூச்சில் பேசித் தீர்த்துவிட விழைபவர் போல் சில நிமிஷங்கள் வாயைத் திறந்து திறந்து மூடினார். ஆனால், பாவம், தொண்டைக் குழியில் குரல் தொனிக்கவில்லை.

பேச முடியாத இந்த ஏமாற்றத்தினால் முகம் கருக, யாரையோ தேடுவது போல் விழிகளைக் குழுமியிருந்தவர்கள் மீதெல்லாம் சுழற்றினார். அதைக் கவனித்த அவர் மனைவி,

"ஐயோ, சிவராமனைத் தேடுகிறாற்போலிருக்கிறதே! யாராவது போய்க் கோவிலில் அவனுக்குச் சொல்லிவிட்டு வரமாட்டீர்களா?" என்று பதறினாள்.

அடுத்த கணம் — நாங்கள் நான்கைந்து பேர்கள் இளைப்பாறியிருப்போம். ஆனால் அதற்குள்ளாக ஆவேசம் வந்தவர் போல் கணீரென்று ஒலித்த தீட்சிதரின் குரல் கேட்டு எல்லோரும் ஸ்தம்பித்து நின்று விட்டோம்.

பின் இதென்ன அதிசயம்! சற்று முன் பேச நாவெழாமல் துடித்தவருக்கு இப்போது திடீரென்று இவ்வளவு காத்திரத்துடன் குரல் எழுப்புவதற்கு எப்படிச் சக்தி பிறந்தது? வெளி வந்த வார்த்தைகளில்தான் எவ்வளவு அழுத்தம்!

"வேண்டாம், காமாட்சி, வேண்டாம்! சிவராமனை அழைத்து வர நீ யாரையும் அனுப்பாதே. அம்பாளுக்குச் சேவை செய்து முடித்த பின் ஆற அமர அவன் தானாகத் திரும்பும்போது திரும்பட்டும். அதற்குள் என் மூச்சுப் பிரிந்து விட்டாலும்கூட நான் பரம நிம்மதியுடன் சாவேன். ஏனென்றால் அவன் இன்னும் தெய்வத் திருப்பணியிலிருந்து திரும்பவில்லை என்று கேட்ட இந்தச் செய்தியே என் காதிலே இன்பத் தேனைப் பாய்ந்து இதயத்தைக் குளிர வைக்கிறது...."

"ஐயோ! ஏன் இப்படி ஏதேதோ சொல்கிறீர்கள்? எனக்குப் பயமாயிருக்கிறதே!" என்று அலறினாள் அவர் மனைவி.

"பயப்படாதே, காமாட்சி! சிவராமனைக் கூப்பிட வேண்டாம் என்கிறேனே என்பதனால் எனக்கு மூளை குழம்பி விட்டதோ என்று எண்ணிக்கொண்டு விடாதே. கொஞ்சம் யோசித்துப் பார், காமாட்சி! நமக்குக் கலியாணமாகி நாட்களாகியும் குழந்தைப் பேறு கிட்டாமல் போகவே வழி வழியாகக் கோவில் முறையை ஏற்று நடத்தி வந்த நம் வம்சம் எனக்குப் பின்னால் இந்தப் புனித கைங்கரியத்தைச் செய்ய வாரிசு இல்லாமல் என்னோடு மறைந்து விடுமோ என்று எத்தனை நாட்கள் மனத்துக்குள்ளேயே மறுகி இருப்போம்? கடைசியில் ஒரு நாள் எல்லை மீறிய மன வியாகுலத்தில் நாம் இருவரும் மனமுருகி எங்கள் பிள்ளைக் கலி தீர்க்க ஒரு குழந்தையைக் கொடுக்கா விட்டாலும் உனக்குச் சேவை செய்யவாவது ஒரு மகனைக் கொடு என்று வேண்டிக் கொண்டதும் உனக்கு நினைவில்லையா? அது போகட்டும்; அடுத்த வருஷமே நமக்குச் சிவராமன் பிறந்ததும் கோயில் தொண்டுக்குக் குழந்தை கிடைத்த மகிழ்ச்சியில் பக்தியையும் பண்பையும் ஊட்டி அவனை நாம் வளர்த்தோமல்லவா? அப்படியிருக்க இப்போது அவன் தெய்வப் பணியை அரைகுறையாய் விட்டு விட்டு வரும்படி நாமே அழைக்கலாமா?......" ஏதோ ஓர் உத்வேகத்தில் அவர் மடமடவென்று பேசி விட்டாரே தவிர, பேசியதனால் ஏற்பட்ட ஆயாசத்தினால் மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்கியது.

அந்தக் கடைசி நிமிஷத்தில் தம் நெஞ்சின் அந்தரங்கங்களை வெளியிட வேண்டுமென்று அவர் தீர்மானித்து விட்டாரோ?

"காமாட்சி! சத்தியமாகச் சொல்லுகிறேன். உனக்குத் துரோகம் செய்ய வேண்டும் என்று நான் கனவில் கூட எண்ணியதில்லை. அம்பாள் எனக்கு ஏற்படுத்திய சோதனை அது. இல்லாவிட்டால், பக்தி அனுஷ்டானங்களைத் தவிர வேறு எவ்விதப் பொழுது போக்கிலும் நாட்டம் செலுத்தாத எனக்குச் சென்ற விஜய தசமி அன்று மட்டும் அம்பாள் சந்நிதியில் நடந்த அவள் சதிர்க் கச்சேரிக்குப் போகத் தோன்றுவானேன்? பகல் முழுவதும் முறை பார்த்து மிகவும் களைத்துப் போயிருந்த நான் அன்றைக்கு சந்தியா கால தீபாராதனை முடித்தவுடனேயே முறையைக் குருசாமி தீட்சிதரிடம் ஒப்படைத்து விட்டு வெளியே வந்து கொண்டிருந்தேன்.


கொலு மண்டபத்தில் சதிர்க் கச்சேரி அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது. என்னையும் அறியாமல் ஓர் ஆவல். கிட்டே போய் எட்டிப் பார்த்தேன். கூட்டத்தில் இருந்த அத்தனை ஜனங்களும் உருக்கி வார்த்த மெழுகுச் சிலை போல், சுவாசிப்பதைக் கூட மறந்து, இமை அசைக்காமல் ஆட்டத்திலே ஒரேயடியாக அப்படி லயித்திருந்தார்கள்.

"அவ்வளவு சுவாரஸ்யமாகத்தான் அவளும் அபிநயம் பிடித்துக் கொண்டிருந்தாள். அன்றைக்கென்று பிரமாத அலங்காரத்துடன் வந்திருந்தாள். வாட்ட சாட்டமான தேகம். நல்ல நிறம். களையான முகம். பாட்டின் அர்த்தத்தை பாவ பூர்வமாய்ப் படம் பிடித்துக் காட்டும் கண்களும், உதடுகளும் மனத்தை மயக்கின. சாஸ்திரோக்தமாக ஜதி பிடிக்கும் அழகான கால்கள் பம்பரமாகச் சுழன்று பார்ப்போர் மனங்களையும் சுழற்றின.

ஆனால் எனக்கு மட்டும் ஆட்டத்தில் மனம் ஈடுபடவில்லை. அவளது அங்க லாவண்யம் எனக்கு அச்சத்தை அளித்தது. 'அடேயப்பா...! பிரம்ம சிருஷ்டியிலே இவ்வளவு அழகும் உண்டா?' என்று வியந்தேன்! கண்டவுடனேயே உள்ளத்திலே கிளர்ச்சியை உண்டாக்கி, மனிதர்களைப் பித்தாக்கும் கட்டழகு படைத்திருந்தாள் அவள். என் அச்சத்துக்கிடையிலே இவளால் கெடப் போகும் குடிகள் எத்தனையோ என்ற எண்ணம் தோன்றி என் உடல் ஒரு முறை பீதியில் சிலிர்த்தது.

"பரபரப்புடன் கூட்டத்திலே மீண்டும் ஒரு முறை பார்வையைச் செலுத்தினேன். ஆமாம்; என் ஊகம் தவறில்லை என்பது போல் முன் வரிசையிலே ஒரு யுவன். வயது இருபத்தி ஐந்தேதான் இருக்கும். குழந்தையைப் போல் குறுகுறுத்த முகம். அறிவுச் சுடர் தெறிக்கும் கண்கள். அதிலே அன்பு சொட்டும் பார்வை. நேர்மையைப் பறைசாற்றும் எடுப்பான நாசி. உதடுகளிலே ஓயாத சிரிப்பு. உருண்டு திரண்ட தோள்களும், அகன்ற மார்பும் கொண்ட ஆணழகனாகத் தோன்றினான். அவனைப் பார்க்கும்போது ஏதோ உத்தமமான காரியத்தைச் செய்யவே, கடவுள் அவனைப் பிறப்பித்திருக்கிறார் என்று எண்ணத் தோன்றியது.

"அத்தகைய தோற்றம் படைத்த அவனோ வைத்த விழி வாங்காமல் மேடையையே பார்த்துக் கொண்டிருந்தான். ஆட்டத்துக்கு ஏற்ப அவனுடைய முக பாவமும் மாறிக் கொண்டிருந்தது. ஒருவாறாக ஆட்டமும் முடிந்தது. எல்லோருக்கும் முன்னால் மடமடவென்று இவன்தான் கையைத் தட்டினான்.



அப்போது அந்தப்பெண் இவன் பக்கம் திரும்பி இலேசாகச் சிரித்தாள். இவன் முகத்தைப் பார்க்க வேண்டுமே; ஏதோ இந்திர பதவியே கிட்டிவிட்டது போன்ற பெருமிதம்!

''அன்று இரவு வீட்டுக்கு வந்து படுத்து நெடு நேரம் வரையில் தூக்கம்வராமல்புரண்டு கொண்டிருந்தேன். அந்தப் பையனின் முகமும் அவள் அவனைப் பார்த்துச் சிரித்தசிரிப்பும் கண்முன் தோன்றிக் கொண்டிருந்தன. என் மனத்துக்குள் ஏதோ ஒன்று இது நிச்சயம் பெரிய விபரீதத்தில்தான் கொண்டுவிடப் போகிறது என்று சொல்லிக் கொண்டிருந்தது.

''அப்படி மட்டும் நடந்து விட்டால்..., அடடா! என்ன அநியாயம்! அந்தப் பையனைப் பார்த்தால் அவன் ஏதோ உத்தமமான சேவைக்காகப் பிறந்திருப்பவனைப் போல் காண்கிறானே! அவனையா மீள முடியாத படுகுழியிலே பாழும் விதி தள்ளப் பார்க்கிறது? புனிதமான பணி புரியப் பிறந்த கள்ளம் கபடமற்ற இந்த வாலிபனை வழி தவறிச் செல்லும்படி விதி சதி செய்கிறது? இல்லை; அது நடக்கக் கூடாது. அப்படி நடக்குமானால் அதைத் தடுக்க முயலுவதே என் கடமை.

அதன் பிறகு ரொம்பவும் உன்னிப்பாக அவ்வாலிபனைக் கவனித்து வரலானேன். அந்தப் பெண்ணின் கச்சேரி ஒன்று விடாமல் போகலானேன். நான் எதிர்பார்த்தது நடந்தது. முதல் வரிசையில் தவறாமல் அந்த வாலிபனும் ஆஜராகி விருப்பான். ஒவ்வொரு நாளும் அதே கை தட்டல், அவளும் ஒரு நாளாவது புன்னகையை வீச மறந்ததில்லை. இப்படிச் சில நாட்கள் கழிந்தன. கடைசியில் ஒருநாள் மேடையிலேயே அவளுக்கு எதையோ அவன் துணிந்து பரிசாக அளித்தபோது எனக்குத் தூக்கி வாரிப்போட்டது! 'இனியும் சும்மா இருந்தால் காரியம் மிஞ்சிவிடும்; இதற்கு ஏதாவது ஒரு வழி கண்டுபிடித்தே தீரவேண்டும்' என்று தீர்மானத்துடன் வீட்டுக்கு வந்தேன்.

''ஒரு வாரம் இரவு பகல் ஓயாமல் சிந்தித்தேன். ஒரு வழியும் புலப்படவில்லை. ஐந்தாம் நாள் இரவு. அன்று ஏனோ மனமே சரியாக இல்லை. நித்திரையும் வரவில்லை. மெள்ள எழுந்திருந்து ஏதோ வெறி பிடித்தவன் போல் அவள் வீட்டை நோக்கி நடந்தேன்.

''அவள் இருக்கும் தெருவை அடைந்த போதே அவள் வீட்டிலே விளக்கு எரிவது நன்றாகத் தெரிந்தது. அந்த நிசப்தமான இரவிலே 'ஜல் ஜல்' என்ற சதங்கையின் சீரான ஒலி காற்றிலே கலந்து வந்தது. இன்னும் சற்று நெருங்கித் திறந்திருந்த ஜன்னல் வழியே உள்ளே நடப்பதைக் கவனித்தபோது, ஒரு சோபாவில் அந்த வாலிபன் தன்னை மறந்து அமர்ந்திருப்பது தெரிந்தது. அவள் அவனுக்காகவே அந்த நள்ளிரவில் பிரத்தியேகமாக ஆடிக் கொண்டிருந்தாள்!

''எனக்கு நெஞ்சு கொதித்தது. சீற்றம் நரம்புகளைப் புடைத்தெழச் செய்தது. அப்போதே உள்ளே திடும் பிரவேசம் செய்து அவள் கன்னத்தில் நான்கு அறைகள் விட்டு, கழுத்தைப் பிடித்துத் தள்ளி அவனை அங்கிருந்து அப்புறப்படுத்த வேண்டும் போல் ஓர் ஆத்திரம்.

''ஆனால் அடுத்த கணம் மனம் தெளிவு பட்டது. ஏற்கனவே அவள் அழகிலே அந்தப் பிள்ளை இவ்வளவு தீவிரமாக மனத்தைப் பறி கொடுத்து விட்டிருக்கும்போது என் அதிகாரத்துக்குக் கீழ்ப்படிய மாட்டான் என்பதை உணர்ந்து கொண்டேன்.

''வழக்காடி வெற்றி பெற முடியாது. இளமைக் கிளர்ச்சியிலே இறுகி விட்ட அவன் மனத்தை, வாதப் பிரதிவாதங்களுக்குப் பதில் அதிர்ச்சி வைத்தியத்துக்கே உட்படுத்த வேண்டும். இதன் மூலம் அவன் மனச்சாட்சி மட்டும் விழித்துக் கொள்ளுமானால், பிறகு இப்போது மட்டுமல்ல, இனி எந்தக் காலத்திலும் இம்மாதிரி அற்ப அநுபவங்கள் மீது அவனுக்கு வெறுப்பு பிறப்பது திண்ணம்! ஆனால் அந்த அதிர்ச்சி வைத்தியம்தான் என்ன? எனக்குத் தெரியவில்லை.

''இருளே சாட்சியாகப் பதுங்கி நின்று கொண்டிருந்த நான் கடைசியில் மெள்ள என்னையும் மீறிய ஓர் ஆவேசத்தின் வசப்பட்டேன். கால்கள் தாமாகவே இயங்கத் தொடங்கின. அந்த நடுநிசியில் தனியாகக் கோவிலுக்கு விரைந்தேன். கர்ப்பக்கிருகத்தின் தாக்கோல் என் மடியிலேயே இருந்தபடியால் கதவைத் திறந்து கொண்டு அம்பிகையின் சந்நிதியில் போய் நின்றேன். நிசப்தம் நிலவிய அந்தச் சூழ்நிலையில் உள்ளம் கனிந்துருக, உடல் உணர்விழக்க, கண்கள் நீர் சொரிய மௌனமாகப் பிரார்த்தனை செய்யலுற்றேன்.

''ஒற்றைத் தீபத்தின் ஒளிக்கற்றைகள் தேவியின் திருமுகத்திலே விழ அருள் வடிவாக நின்றாள் அன்னை. பார்த்துக் கொண்டிருக்கும்போதே சட்டென்று அம்பிகையின் நேத்திரங்களிலே சுடர் தெறித்தாற் போல் ஒரு பிரமை! அவ்வளவுதான்; என் அறிவிலேயும் அதே சமயம் ஓர் அதிர்ச்சி! அதைத் தொடர்ந்து, தோன்றிய மாத்திரத்திலேயே வயிற்றைக் கலக்கிய ஒரு விபரீத எண்ணம்!

''அதாவது அந்த இளைஞனுக்குப் போட்டியாக அவளைக் காட்டிலும் அதிகமாகப் பணத்தை வாரியிறைத்து நானே அந்தப்

பெண்ணின் சிநேகத்தைக் கைப்பற்றி விட்டால்....? ஐயோ! இதென்ன பயங்கர யோசனை? பிறகு என் காமாட்சியின் கதி...? உள்ளம் வெதும்ப, உடல் பதற, ஜகன் மாதாவின் முகத்தை மறுபடியும் நிமிர்ந்து நோக்கினேன். ஊஹூம்! தேவியின் திருவுளம் இளகவில்லை. அந்தச் செம்பவழ அதரங்களின் ஓரத்திலே பதுங்கியவாறு என்னைப் பார்த்து எள்ளி நகையாடிய குறும்புச் சிரிப்பு குறையவே இல்லை!

''பிறகு வேறு என்ன?

''அன்றைக்கு மூன்றாம் நாள் இரவு இளைஞன் வழக்கம் போல் அந்தப் பெண்ணின் வீட்டை அடைந்தபோது அங்கே அவள் அறையில் ஏற்கனவே விளக்கு எரிந்து கொண்டிருக்கக் கண்டான்! அதோடு மட்டுமல்ல; 'ஜல் ஜல்' என்று சதங்கை ஒலி வேறு சப்திப்பதையும் கேட்டான்! வீட்டுத் தாதி ஒருத்தி அதே சமயம் அவனை நடுக்கூடத்திலேயே சந்திக்க, உள்ளே எந்தக் கௌரவ விருந்தாளி அமர்ந்திருக்கிறார் என்பதையும் இரகசியமாக உரைக்கக் கேட்டான்! அவ்வளவுதான்; பேயறைந்து விடப்பட்டவன் போல் சில நிமிடங்கள் அவன் அப்படியே சிலையாகச் சமைந்து நின்றான். பிறகு ஏதோ வெறி பிடித்தாற் போல் தலைமயிரை விரல்களால் பற்றிப் பிய்த்தவாறு, 'அட தெய்வமே!' என்று ஒருமுறை வாய்விட்டு அலறிவிட்டுப் பரபரப்புடன் வெளியே ஓடிவிட்டான்!

'' அவன் சென்ற சற்றைக்கெல்லாம் நான் நடந்த விவரத்தைத் தாதியிடம் விசாரித்து அறிந்து கொண்டேன். பிறகு அதற்குமேல் அங்கிருக்கப் பிடிக்காமல் அந்தப் பெண்மணியிடம் அடுத்த தினம் மறுபடியும் வருவதாகச் சொல்லிவிட்டு வெளிப்பட்டேன். மனத்தில் ஒரே குழப்பம். விரக்தியினால் அந்தப் பையன் ஏதேனும் விபரீதமாகச் செய்து கொண்டு விடப் போகிறானே என்று ஒரு பயம். அவனுக்காக அன்னையிடம் கதறிப் பிரார்த்திக்க வேண்டும் போல் ஒரு வேகம். கோவிலுக்கு விரைந்தேன். ஆனால் எனக்கு மட்டும்தான் தெய்வ சந்நிதானத்தை அணுகுவதற்கே அருகதை அற்றவாறு உடம்பில் ஏதோ அழுக்கு ஒட்டிக் கொண்டு விட்டாற் போன்ற உணர்வு; தயக்கத்துடன் எப்படியோ இனி மண்டபத்தை அடைந்து விட்டேன். மேலே நடப்பதற்குள் சட்டென்று என் கண்கள் எதிரே ஓர் உருவம் தென்படுவதைக் கண்டு விட்டன. உற்றுக் கவனித்தேன். அந்த இளைஞன் தான்!

'' என்ன ஆச்சரியம்! நெடுங்காலம் நிஷ்டையில் அமர்ந்து சமாதி நிலையை அடைந்து விட்ட சித்தரைப் போல் அல்லவா அசைவற்று அமர்ந்து பிரார்த்தனையில் லயித்திருக்கிறான்! அப்படியானால் இனி அவனுக்காகத் தேவியிடம் நான் கதறவேண்டியது அவசியமே இல்லை என்பதை உடனே உணர்ந்து கொண்டு நான் மறு விநாடி மெள்ள அங்கிருந்து ஓசையின்றி வெளியே நழுவினேன்.

''இதுதான் காமாட்சி, நடந்த விவரம். இதன் பிறகு தினமும் நான் அவனைச் சந்திக்க நேரிடும் ஒவ்வொரு தடவையும் அவன் விழிகள் கட்டெரித்து விடுவனபோல் என்மீது ஒரு கணம் அனல் கக்கும். ஆனால் மறு கணம் அதற்கும் தகுதியற்ற அற்ப ஜந்து நான் என்று பார்ப்பதே போல் அவன் திருஷ்டியிலே வெறுப்பு ஒழுகும். தேகத்தின்மீது ஒட்டிக் கொண்ட புழுவை எடுத்து எறியும்போது உடல் கூச முகத்தைச் சுளித்துக் கொள்கிற மாதிரி அவனும் புருவங்களை நெருக்கி, இமைகளைத் தாழ்த்தி, வெடுக்கென்று கழுத்தைத் திருப்பிக் கொண்டு அப்பால் நகர்ந்து விடுவான். அவன் என்னை வெறுத்தது வேதனை அளித்தாலும், அவன் திருந்தி விட்டான் என்று ஆனந்தமடைந்தேன். திருத்திவிட்டேன் என்று பெருமைப்பட்டேன். இருந்தாலும் எனக்கு ஒரே ஒரு குறை, காமாட்சி! கள்ளம்கபடமற்ற உனக்கு மனத்தினால் இல்லாவிட்டாலும் தேகத்தினால் துரோகம் செய்து விட்டோமே என்பதுதான் அது! உன்னிடம் உள்ளதைச் சொல்லி உன் மன்னிப்பையாவது பெறவேண்டுமென்று என் மனம் எத்தனை தடவைகள் துடித்திருக்கிறது தெரியுமா?''

தீட்சிதர் கூறி முடித்தவுடன் சொல்லிவைத்தாற்போல் வாசலில் ஏதோ பரபரப்பு ஏற்பட்ட சத்தம் கேட்டது. நான் துணுக்குற்றுத் திரும்பிப் பார்த்தேன். ஒரு வண்டியிலிருந்து, டாக்டரை அழைத்து வரும் பொருட்டுப் பக்கத்து டவுனுக்கு அனுப்பி இருந்த ஆளும் அவன் பின்னால் மருந்துப் பெட்டியுடன் டாக்டரும் கீழே குதித்து அவசரமாக உள்ளே வந்தார்கள். ஆனால் அவர்கள் கட்டிலை நெருங்குவதற்குள் மீண்டும் வெளியே பரபரப்பு! 'சிவராமன், சிவராமன்!' என்று இரண்டொருவர் தணிவாகப் பேசிய சத்தம் பிறந்தது. அது காதில் விழுந்தவுடன் உள்ளே கட்டிலைச் சுற்றிக் குழுமி இருந்தவர்கள் விலகி வழிவிட்டு நின்றனர்.

அதோ சிவராமன்! ஆனால்...ஆச்சரியம்! தந்தை அடிபட்டுக் கிடக்கிறாரே என்று கலவரமடைந்த வேகத்தையே காணோமே அவன் நடையில்! 'அப்பா...' என்று ஒரு குரல்கூட எழுப்பாமல் மௌனமாக வருகிறானே! முகத்தில்தான் எவ்வளவு கடுமை! கட்டிலை அணுகித் தந்தையின்மீது திருஷ்டி வீசிய அவன் பார்வையில் என்ன வெறுப்பு! இதோ அதற்குள் வெடுக்கென்று அப்பால் திரும்பிக்கொண்டு விட்டானே! திரும்பிய முகத்திலே உதடுகள் ஏன் இப்படிச் சுளித்துக் கொள்கின்றன. உடலில் ஒட்டிக் கொண்ட புழுவை எடுத்து எறிபவனைப் போல்....?

தூக்கிவாரிப் போட்டது எனக்கு!

பின் இதென்ன? என் நினைவிலே தோன்றிய இதே வார்த்தைகளையே அல்லவா தீட்சிதரும் உபயோகித்தார்! அப்படியானால்....

என்னால் மேலே சிந்திக்க முடியவில்லை. என்னைச் சுழற்றியிலே பிறந்த கேள்வியைப் பார்வைக்குள் தேக்கித் தீட்சிதரை நோக்கினேன். அந்தச்சமயம் டாக்டர் கட்டில் அருகே சென்று, அவருடைய மார்புக் காயத்தின் கட்டை அவிழ்ப்பதற்காகக் குனிந்து கொள்ளவே அவர் என் பார்வையினின்றும் அகன்றார். எனினும் அவர் முகம் மட்டும் சற்றே ஒரு முறை எனக்குப் புலப்பட்டது. அடேயப்பா! அவர் உள்ளுணர்வில் ஏதோ ஒளி வீச, அந்தப் பிரகாசம் கண்களினூடே பிரதிபலிப்பது போல் அவர் விழிகள் எப்படி மின்னின!

Printed and Published by R. Ananthanarayanan for the Proprietors Messrs. Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk Madras 10
Managing Editor, T. Sadasivam.

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

